# ரா.பி. சேதுப்பிள்ளை

பதிப்பாசிரியர்
கரு.அழ. குணசேகரன்
த. பூமிநாகநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை – 2

# ரா.பி. சேதுப்பிள்ளை

பதிப்பாசிரியர்

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 2
ரா.பி. சேதுப்பிள்ளை (கருத்தரங்க நாள் 30-03-2005)



| | | |
|---|---|---|
| Title of the Book | : | rā. pi. cētuppiḷḷai |
| Editors | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies,<br>Tharamani, Chennai - 600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Tharamani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 593 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 240 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 70/- (Rupees Seventy Only) |
| Printing | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Biographical & Critical Studies on rā. pi. cētuppiḷḷai |



---

கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## அணிந்துரை

தனித்தனியாக வாழ்ந்த மாந்தர் தம்முள் கூடி வாழத் தலைப்பட்ட காலத்தில் மரத்தினடியிலோ குகைகளிலோ மற்றும் பாதுகாப்பான இடங்களிலோ தங்கினர்.

தாம் தங்கிய இடங்களில் வெயில், மழை போன்றவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இலை, தழைகளாலும், புற்களாலும் வேய்ந்தும், பின் கடினமான பொருள்களால் கூரைகள் அமைத்தும் அவற்றின் கீழ்த் தங்கினர்.

இவ்வாறு மாந்தர் தங்கிய இடங்கள் அவை அமைந்துள்ள பின்னணியின் அடிப்படையில் பெயரிட்டு அழைக்கப்பட்டன.

கல், ஊர், சேரி, பாக்கம், பட்டணம் எனப் பழங்காலத்தில் மாந்தர் தங்கிய இடங்கள் பெயர் பெற்றுப் பல்கின.

நிலத்துக்குத் தக்கவாறு இயற்கையாகவும், காரண அடிப்படையிலும், தொழில்கள், வினைகள் தொடர்பாகவும் அமைந்த ஊர்கள் காலஞ் செல்லச் செல்லத் திரிந்தும், வேறாகவும் மாற்றம் பெற்றன. சான்றாக,

> ஏர்த்தொழிலாகிய பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரைத் தேக்கிவைக்கும் நிலையம் ஏரி எனப்பெறும். ஏரியின் அருகே எழுந்த ஊர்கள் தமிழ்நாட்டில் பல. சித்தூர்நாட்டில் பல்லவனேரி என்பது பல்லவனால் ஆக்கப்பட்ட ஓர் ஊர். பாண்டிய நாட்டில் மாறநேரி என்பது பாண்டியன் பெயர்களுள் ஒன்றாகிய மாறன் என்ற பெயரால் அமைந்த ஊர். தொண்டைநாட்டில் உள்ள தென்னேரியும் அதன் அருகே உள்ள குறுநில

மன்னன் திரையனால் அமைக்கப்பெற்ற திரையன் ஏறி என்பது சிதைந்து தென்னேரி என்பது ஆயிற்று என்பர். கொங்கு நாட்டில் வீரபாண்டிய அரசனால் ஏற்படுத்தப்பெற்ற ஊர் வீரபாண்டியப்பேர் ஏரி என்பதாகும். (பக். 11)

ஊர்ப்பெயராய்வு எனும் ஆய்வுத் துறை அண்மையில் தமிழில் அமைந்த துறையாகும். இதற்கு முன்னோடி யானவர்களுள் முதலாமவர் அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆவார்.

இவர் இவ்வாய்வுமுறையன்றி, பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். உரைநடை கைவந்த வல்லாளர். சிறந்த இலக்கியப் பேராசிரியர். அதனாலே சொல்லின் செல்வர் போன்று பலவாறாகப் பாராட்டப் பெற்றவர்.

இவ்வாறு பல்துறைச் சிறப்பு வாய்ந்த அறிஞர் சேதுப்பிள்ளையின் பன்முகப் பரிமாணங்களை ஒருசேரக் காண்பதற்காக அவர்தம் படைப்புகள் அனைத்தும் பதினொரு தமிழறிஞர்களால் இங்கு ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர்கள் குறித்த **ஊரும் பேரும்** என்ற நூலும், அன்னாரின் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் பறைசாற்றும் அவரின் பிற நூல்களும் இங்கு ஆய்வு செய்யப் பெற்றுள்ளன.

அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை மொழி ஆய்வு, வரலாற்றாய்வு, ஊர்ப்பெயர் ஆய்வு, இலக்கிய ஆய்வு, சமய ஆய்வு, இலக்கண ஆய்வு எனப் பல துறை ஆய்வுக்கு முன்னோடியாக விளங்குகிறார்.

இளம் ஆய்வாளர்களுக்கு இந்நூல் பல்வேறு துறைகளில் ஆய்வு செய்திட முன்னோடி நூலாக அமையும் என்பதில் ஐயமில்லை. பல்வேறு தலைப்புகளில் ஆய்வு செய்து கட்டுரைகளைத் தந்துள்ள அனைவருக்கும் எமது நன்றி.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழறிஞர்களின் அளப்பரிய தமிழ்ப் பணிகளைப் பாராட்டும் வகையில் ஏற்படுத்தப்பெற்று நடைபெற்ற திங்கள் தொடர் கருத்தரங்குகள் ஒன்றில் தமிழ் அறிஞர்களில் ஒருவரான ரா.பி. சேதுப்பிள்ளை பற்றி வழங்கப்பெற்ற இக் கட்டுரைகள்

அனைத்தும் தொகுக்கப்பெற்று, செம்மைசெய்யப் பெற்று, இப்போது நூலாக்கம் பெற்றுள்ளது. இதற்குக் காரணமாக அமைந்த இந்நிறுவன மேனாள் இயக்குநர்களான முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், கட்டுரையாளர்களுக்கும், இக்கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கட்டுரைகளைத் தொகுத்த இந்நிறுவன ஆராய்ச்சி உதவியாளர் த. பூமிநாகநாதன் அவர்களுக்கும் பாராட்டுகள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் களுக்கும், இந்நூலின் மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதனுக்கும், கணியச்சுச் செய்த திருமதி பி.கௌசல்யா மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# கட்டுரையாளர்

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்
தமிழூர், அடைக்கலபட்டணம் அஞ்சல்
நெல்லைமாவட்டம்-627 808

முனைவர் சு. தமிழ்வேலு
அ.வ.அ. கல்லூரி (தன்னாட்சி)
மன்னன் பந்தல், மயிலாடுதுறை-609 305

முனைவர் கு. கதிரேசன்
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்-628 215

முனைவர் சு. நயினார்
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி - 626 124

திரு ந. அறிவுராஜ்
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620 024

திரு இரா. தமிழ்ப்பிரியன்
177/72, சிவன்படை வீதி
எண்ணூர், சென்னை-600 057

முனைவர் நா. உஷாதேவி
ம.தி.தா. இந்துக் கல்லூரி
பேட்டை, திருநெல்வேலி

முனைவர் மு. சுப்பிரமணியன்
1, பெருமாள்புரம் தெரு
புதுக்கிராமம், தூத்துக்குடி-627 003

திரு அ. கவிதா ஜெயக்குமார்
11/6 உலகப்பன் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-600 005

திரு ச. இரமேஷ்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்

திரு வை. சிவநேசன்
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600 005

# பொருளடக்கம்

பக்கம்

1. தமிழகம் ஊரும் பேரும் 1
   ச.வே. சுப்பிரமணியன்

2. ஊர்ப்பெயராய்வுகள்- ஓர் ஆய்வு 46
   சு. தமிழ்வேலு

3. தமிழில் ஊர்ப்பெயராய்வு முன்னோடி 56
   கு. கதிரேசன்

4. படைப்புக்கலை 90
   சு. நயினார்

5. படைப்புகள்-ஒரு மதிப்பீடு 112
   ந. அறிவுராஜ்

6. படைப்புத்திறன் 136
   இரா. தமிழ்ப்பிரியன்

7. கருத்துப்புலப்பாட்டு நெறி 159
   நா. உஷாதேவி

8. உரைநடைக் கூறுகள் 179
   மு. சுப்பிரமணியன்

9. விடியல்கள் ஒருபார்வை 185
   அ. கவிதா ஜெயக்குமார்

10. ஒப்பீட்டுக் கட்டுரைகள்- ஓர் ஆய்வு 202
    ச. இரமேஷ்

11. தமிழ்த் தொண்டு 228
    வை. சிவநேசன்

# தமிழகம் ஊரும் பேரும்

திருநெல்வேலி மாவட்டத்தில் இராசவல்லிபுரம் கிராமத்தில் பிறவிப் பெருமாள் பிள்ளைக்கும் சொர்ணாம்பாளுக்கும் பிறந்தவர் ரா.பி. சேதுப்பிள்ளை *(25-4-1896).*[1]

பிள்ளை அவர்கள் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி, நெல்லை இந்துக்கல்லூரியில் பயின்ற பின்பு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில், சட்டம் பயின்று நெல்லையில் வழக்குரைஞர் ஆனார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஆறு ஆண்டுகளும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் 25 ஆண்டுகளும் தமிழ்ப்பணியாற்றினார். சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற நிலையில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் உயர்வூதியம் பெற்ற பெருமை உடையவர்.

சொல்லாராய்ச்சியில் வல்லவர். எதுகை மோனையை இணைத்துப்பேசும் ஆற்றல் உடையவர். மொழி ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். எழுத்திலும் பேச்சிலும் இணையற்ற ஆற்றல் உடையவர். **Tamil words and their significance** என்ற நூலும் செந்தமிழும் கொடுந்தமிழும் **(Tamil Literary and colloquial)** என்ற நூலும் மொழிநிலையில் குறிப்பிடத்தக்கன.

சொல்லின் செல்வர், செந்தமிழ்க் கிள்ளைச் சேதுப்பிள்ளை என்று போற்றப்பெற்றவர். **தமிழ் இன்பம்** என்ற நூலுக்கு முதல்முதல் சாகித்திய அக்காதெமி பரிசு பெற்றவர். **திருவள்ளுவர் நூல்நயம், சிலப்பதிகார நூல்நயம், வீரமாநகர், தமிழ் விருந்து, வேலும் வில்லும், கடற்கரையிலே, கிருத்துவத் தமிழ்த்தொண்டர் கால்டுவேலர், தமிழ்நாட்டு நவமணிகள், தமிழக ஊரும் பேரும்** போன்ற 25 நூல்களை எழுதியுள்ளார்.

---

1. தன்தாய் சொர்ணாம்பாள் பெயரால் சென்னை, அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

பொழுதுபோவதே தெரியாத வகையில் உரையாடுவதில் வல்லவர். இலக்கியக் கடிதங்கள் எழுதுவதில் சிறந்த ஆற்றல் உடையவர். காட்சிக்கு எளியவர்; கருத்துக்கு இனியர். வள்ளுவர், இளங்கோ, கம்பர், பாரதி, நால்வரிடத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். இடைக்காலத்தில் கம்பராமாயண எரிப்புப் போராட்டம் என்ற நிலையில் தீபரவட்டும் என அண்ணாதுரை அவர்கள் எழுச்சிபெற்றபோது எதிர்த்துப் போராடிப்பேசியவர். கம்பராமாயணத்தில் மிகுதியான ஈடுபாடு உடையவர். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவின் போது அவருக்கு டிலிட் பட்டம் வழங்கப்பெற்றது. சிறந்த 'பேச்சாளர். உயர்ந்த எழுத்தாளர். காலங்களைத் தாண்டி நிற்கும் கருத்துவளம் உடையவர். அந்நிலையில் தமிழகம் ஊரும் பேரும் என்ற நூல் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று.

இந்நூல் 1940ல் தாம் எழுதிய ஒரு கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பெற்ற நூல் என்று சேதுப்பிள்ளை அவர்கள் தன் நன்றியுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 30-6-1946ல் வெளிவந்துள்ளது. அவர்களின் சொந்த வெளியீடாகவே இந்நூல் காணப்பெறுகிறது. நூல் வெளியீட்டாளர் யாராலும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை. அந்நூலுக்கு 16-5-1946ல் திரு.வி.க. அவர்கள் முகவுரை தந்துள்ளார். நூல் 1. தமிழகமும் நிலமும், 2. நாடும் நகரமும், 3. குடியும் படையும், 4. குலமும் கோவும், 5. தேவும் தலமும், 6. தமிழகம் அன்றும் இன்றும், 7. இணைப்பு. அடுத்து, பெயரகராதி 20 பக்கங்களில் அமைந்துள்ளது. இறுதியாகப் பிழைதிருத்தமும் ஒருபக்கத்தில் தரப்பெற்றுள்ளது. இந்நூல் கிடைக்கும் இடம் அல்லியன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை என்று பின் அட்டையில் குறிப்பிடப்பெற்றுள்ளது.

நூல் எழுதப்பெற்று ஏறத்தாழ 60 ஆண்டுகள் ஆகின்றன. மிகவும் கடுமையாக உழைத்துக் கல்வெட்டுக்கள் பலவற்றைப் பார்த்து மரபு வழி நின்று எழுதப்பெற்ற நூல். படிப்போருக்கு மிகுந்த சுவையையும் இன்பத்தையும் தரும் நிலையில் அமைந்துள்ளது.

1. ஊர்ப்பெயர்களின் அணுகுமுறையை, முதலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்நிலப்பகுப்பின் அடிப்படையில் விளக்கியுள்ளார்.

2. தமிழக வரலாற்றை ஊர்ப்பெயர்களின் அடிப்படையில் அறிவதற்கு இந்நூல் பல நிலைகளில் துணைபுரிகிறது.

3. நாயன்மார்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், (மாணிக்கவாசகர்) இவர்கள் ஊர் ஊராகச் சென்று இறைவனை வழிபட்டனர். அவர்கள் வழிபட்ட கோயில்கள் பெயராலும் ஊர்ப்பெயர்கள் வழியும், ஊர்ப்பெயராய்வு தெளிவுபெறுவதற்குரிய வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன.

4. பெயரகராதியில் ஏறத்தாழ 1460 ஊர்ப்பெயர்களைத் தந்துள்ளார்.

5. தமிழ்நாட்டுத்தலங்கள் என்ற அட்டவணை, தலப்பெயர் வழங்கும்பெயர், வட்டம், குறிப்பு என்ற நிலையில் அமைந்துள்ளது. திருநெல்வேலி திருவிதாங்கூர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், காரைக்கால், தென்னார்க்காடு, புதுச்சேரி, செங்கற்பட்டு, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களின் அடிப்படையில் அமைத்து 500 ஊர்ப்பெயர்களைத் தந்துள்ளார்.

6. கல்வெட்டுச்சான்றுகள், இலக்கியச்சான்றுகள், முடிந்த அளவு, நிறைவாகத் திரட்டித்தந்துள்ளார்.

7. இந்நூலை அடித்தளமாக அமைத்துத் தற்காலத் திறனாய்வுகளை இணைத்து, ஊர்ப்பெயர்க் களஞ்சியம் உருவாக்கி வெளியிட்டால், தமிழக வரலாறு இன்னும் தெளிவாகும்.

## 1. தமிழகமும் நிலமும்

### குறிஞ்சி நிலம்

தமிழகமும் நிலமும் என்ற முதல் பகுதியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நில அமைப்பினைத் தந்துள்ளார். குறிஞ்சி நிலத்தின் ஊர்ப்பெயர்களை முதலில் தருகிறார். தமிழகத்தின் வட எல்லையாக அமைந்துள்ள திருவேங்கடமலையை வடமலை என்று கூறுவர். பாண்டிய

நாட்டில் மதுரைக்கு அருகே இருக்கும் ஆனைமலை, சிறுமலை, பசுமலை, சென்னைக்கு அருகிலிருக்கும் பரங்கிமலை, திருச்சிக்கு அருகில் இருக்கும் பொன் மலையையும் குறிப்பிட்டுக் குறிஞ்சி நிலத் தெய்வமான முருகன் வீற்றிருக்கும் பழநி மலையையும் சுவாமி மலையையும் தணிகை மலையையும் குறிப்பிடுகிறார்.

மலையின் முடியைக் கோடு என்ற சொல் குறிக்கும் என்று கூறி, திருச்செங்கோடு ஊர் பற்றிக் கூறுகிறார்.

தமிழ் இலக்கிய மரபில் மலை என்னும் சொல் ஓங்கி உயர்ந்த பர்வதத்தைக் குறிக்கும் என்றும் மலையில் குறைந்தது குன்று என்றும் குன்றிலும் குறைந்தது பாறை என்றும் அறை என்றும் கல் என்றும் பெயர் பெறும் என்று கூறுகிறார்.

குன்று எனப் பெயர்கொண்ட ஊர்களாகப் பாண்டிய நாட்டுத் திருப்பரங்குன்றத்தையும் தொண்டை நாட்டுத் திருக்கழுங்குன்றத்தையும் குறிப்பிடுகிறார். ஆர்க்காட்டு நாட்டில் உள்ள நெற்குன்றம் நெடுங்குன்றம் பூங்குன்றம் என்பன நெற்குணம் நெடுங்குணம் பூங்குணம் என மருவி வந்துள்ளதையும் குறிப்பிடுகிறார். குன்றை அடுத்துள்ள ஊர் குன்றூர் என்றும் குன்றத்தூர் என்றும் குன்றக்குடி என்றும் கூறிக் குன்றம் குன்னம் என்றும் மருவியும் வழங்கும் என்று கூறி நீலகிரி மலையில் உள்ள குன்னூரைக் குறிப்பிடுகிறார். தொண்டைநாட்டுக்குன்றத்தூரும் குன்னத்தூர் என்று வழங்குவதையும் பாண்டிய நாட்டுக்குன்றக்குடி குன்னக்குடி என வழங்குவதையும் குறிப்பிடுகிறார்.

குன்றில் இருந்து வந்த பாறை என்ற சொல்லால் அமைந்த ஊர்களாகப் பூம்பாறை, சிப்பிப்பாறை, தட்டப்பாறை, குட்டைப்பாறை என்ற ஊர்கள் தமிழகத்தில் உள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

பாறையில் இருந்து வந்த அறை என்ற சொல் வைணவ உலகம் போற்றும் திருவெள்ளாறை என்ற ஊரைக் குறிப்பிடுவதாகக் கூறுகிறார். பாறையில் இருந்து வந்த கல் என்னும் சொல்லால் அமைந்த திண்டுக்கல்லையும் நாமக்கல்லையும் குறிப்பிட்டு நாமக்கல்லின் பழைய பெயர் ஆரைக்கல் என்றும் குறிப்பிடுகிறார்.

மலையைக் குறிக்கும் வடசொல்லாகிய கிரி என்னும் பெயரால் சிவகிரி, வெள்ளியங்கிரி, புவனகிரி, போன்ற பெயர்களும் அசலம் என்ற பெயரால் விருத்தாசலம் என்ற ஊரும் வேதாசலம் வேங்கடாசலம் தணிகாசலம் முதலிய பெயர்களும் வழங்குவதைக் குறிப்பிடுகிறார். சைலம் என்ற சொல்லும் அத்திரி என்ற சொல்லும் வடமொழி அடிப்படையில் அமைந்ததைக் கூறி, சிவசைலம் என்ற ஊரையும் நாங்குநேரிக்குத் தோத்தாத்திரி என்ற வடமொழிப் பெயர் உண்டு என்பதையும் உணர்த்துகிறார்.

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் அவ்விடங்களைக் குறிச்சி என்று குறிப்பிடுவதைக் கூறி, கள்ளக்குறிச்சியையும், பிராமணக்குறிச்சியையும் குறிப்பிடுகிறார்.

## முல்லை நிலம்

பழங்காலத்தில் தமிழ் நாட்டில் மரம் செழித்த காடுகள் மலிந்திருந்தன. அவ்வப்பகுதியை ஆண்ட அரசர் காடு கொன்று நாடாக்கி வளம்பெருக்கினர். பாடல்பெற்ற தலங்களாகிய சிதம்பரம் தில்லைவனமாக இருந்தது. மதுரை கடம்பவனமாக இருந்தது. திருநெல்வேலி வேணுவனமாக இருந்தது.

ஊர்ப்பெயர்கள் ஆர்க்காடும், ஆலங்காடும், வேற்காடும், களக்காடும், ஏர்க்காடும் பிறகாடுகளும் இருந்தன. ஆர் என்பது ஆத்தி மரத்தைக் குறிக்கும். ஆத்திமாலையை அணிந்தவன் சோழன். அதனால் ஆரங்கண்ணிச் சோழன் என்று குறிப்பிடப்பெற்றான். ஆர்க்காடு என்ற சொல் நாட்டுக்கும் நகருக்கும் பெயராக வழங்குகின்றது. சோழநாட்டின் பழைய தலைநகரம் ஆர் ஊர் என்பது பின்பு திருவாரூர் ஆயிற்று. திருவாலங்காடு, பழவேற்காடு, சேலத்தின் அருகே உள்ள ஏர்க்காடு, நெல்லைப்பகுதியில் உள்ள பச்சையாற்றுப்பகுதி, களாச்செடி நிறைந்த இடம், களக்காடு என்றும் பெயர் பெற்றன.

கா என்ற சொல் சோலையைக் குறிக்கும். கா காவு ஆயிற்று. மேற்குத் தொடர்ச்சி மலையில் செங்கோட்டைக்கு அருகில் ஆரியங்காவூ என்ற ஊர் உள்ளது. ஆரியன் என்பது ஐயனார்க்குரிய பெயர்களில் ஒன்று. ஐயனாரை மலைநாட்டார் ஐயப்பன் என்று வழங்குவர். தொண்டைநாட்டில் திருமாலுக்கு உள்ள திருப்பதிகளுள் ஒன்று திருத்தண்கா என்பது. அதனைத் திருமங்கை ஆழ்வார் பாடியுள்ளார். கா வளம்பாடி என்பது சோழநாட்டில் திருமால் திருப்பதிகளுள் ஒன்று. அதனையும் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார்.

கா என்ற சொல் சோலையைக் குறிப்பது போன்று மரங்களும் செடி கொடிகளும் செழித்தோங்கி வளரும் சோலையைப் பொழில் என்றும் அழைத்தனர். ஆலமரங்கள் மிகுதியாக இருந்த இடத்தை ஆலம்பொழில் என்று திருஞானசம்பந்தர் பாடுகின்றார். குற்றாலத்திற்கு அருகே உள்ள மலையின் அடிவாரத்தில் இருக்கின்ற அழகிய ஊரின் பெயர் பைம்பொழில் என்பது இன்று பம்புளி என்று மருவி விளங்குகின்றது.

தண்டலை என்ற சொல்லும் சோலையைக் குறிக்கும். தண் குளிர்ச்சி; குளிர்ச்சியான மரங்களை உடைய இடம் என்று கொள்ளலாம். திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த குழித்தலை என்னும் ஊர் குழித்தண்டலை என்று முந்நாளில் வழங்கிற்று. தொண்டைநாட்டில் பூந்தண்டலம் பழந்தண்டலம் பெரும்தண்டலம் போன்ற ஊர்கள் காணப்படுகின்றன. அவ்வூர்கள் சோலைசூழ்ந்த ஊர்களாக முற்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

சோலை என்ற பெயரிலேயே மதுரையின் அருகே உள்ள அழகர்கோவில் பழங்காலத்தில் திருமால் இருஞ்சோலை என்ற பெயரைக் கொண்டிருந்தது. முருகப் பெருமான் அறுபடை வீட்டில் ஒன்றாகிய பழமுதிர்சோலையும் அதற்கடுத்து உள்ளது. சேலம் நாட்டில் தலைச்சோலை என்பது ஒரு ஊரின் பெயர். திருச்சிராப்பள்ளிக்கு அருகே திருவளர்சோலை என்ற ஊரும் உள்ளது.

சோலைகள் தோப்பாகவும் இருந்தன. மரம்செடிகொடிகளின் தொகுப்பு தோப்பாகின்றது. நெல்லை மாவட்டத்தில் மந்தித்தோப்பு என்ற ஊரும் இராமநாதபுரத்தில் மாந்தோப்பு என்ற ஊரும் தஞ்சையில் நெல்லித்தோப்பு என்ற ஊரும் தென்னாற்காட்டில் வௌவால் தோப்பு என்ற ஊரும் அமைந்திருக்கின்றன.

காடு என்ற பொருளைக் குறிக்கச் சுரம் என்ற சொல்லும் பயன்பட்டது. தொண்டைநாட்டில் திருச்சுரம் என்பது திரிசூலம் எனவும் திருவிடைச்சுரம் என்பது திருவடிசூலம் என்றும் திரிந்துவிட்டன.

காட்டைக்குறிக்கும் வடசொற்களாக வனம் ஆரண்யம் என்ற இரண்டு சொற்கள் பயன்படுகின்றன. புன்னைவனம்,

கடம்பவனம், திண்டிவனம் போன்ற ஊர்ப்பெயர்களில் வனம் உள்ளது. வேதாரண்யம் என்ற ஊர்ப்பெயரில் ஆரண்யம் அமைகின்றது.

மரப்பெயர்களாலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. கரவீரம் என்பது பொன்னிறப் பூக்களைத் தருகின்ற ஒருமரம். பொன் அலரி என்றும் அதனைக் குறிப்பது உண்டு. கரவீரம் என்பது பாடல்பெற்ற சிவத் தலங்களில் ஒன்று. மரப்பெயர்களால் அமைந்த ஊர்களோடு கோவில் தலவிருச்சங்களாகவும் மரங்கள் அமைந்தன. தேவாரத்தில் குறிக்கப்பெறும் பைஞ்ஞீலி என்பது பசுமையான வாழையைக் குறிக்கும் வாழைகள் சிறந்து விளங்கும் ஊரைப் பைஞ்ஞீலி என அழைத்தனர். அது பின்பு திருப்பைஞ்ஞீலி ஆயிற்று.

இவ்வாறு வாகையூர் புன்னைக்காடு போன்ற ஊர்களும், தமிழகத்தில் ஆல், அரசு, அத்தி, ஆத்தி, புளி, புன்னை, பனை, தென்னை, மா, வேம்பு போன்ற பல மரங்கள் மிகுதியாக இருந்தன; இந்நிலையில் மரங்களில் அடிப்படையிலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. நாவல் என்ற மரத்தின் பெயரால் அமைந்த நாவலூரில் தோன்றியவர் சுந்தரர். திருநாவலூர் ஆனது பின்பு திருநாமநல்லூர் ஆயிற்று.

கெடில நதியின் தென்கரையில் பாதிரி மரங்கள் மிகுதியாக இருந்ததால் புலியூர் திருப்பாதிரிப் புலியூர் என்ற பெயரைப் பெற்றது. விருத்தாசலத்திற்குத் தெற்கே மற்றொரு புலியூரில் எருக்கஞ்செடிகள் மிகுதியாக இருந்ததால் எருக்கத்தம் புலியூராயிற்று. அத்தம் என்பது காடு. எருக்கஞ்செடிகள் மிகுதியாகக் காடு போன்று வளர்ந்து இருந்ததால் எருக்கத்தம் புத்தூர் ஆயிற்று.

முல்லை நிலத்தில் தோன்றிய ஊர்கள் பாடி என்ற பெயரால் அழைக்கப்பெற்றன. சண்டேஸ்வர நாயனார் பசுக்களை மேய்த்து ஈசனுக்குப் பூசனை புரிந்த இடம் திருஆப்பாடி என்று தேவாரம் கூறுகின்றது. கண்ணன் பிறந்து வளர்ந்த கோகுலத்தை ஆயர்பாடி என்று தமிழ் நூல்கள் குறிக்கின்றன. வடஆர்க்காட்டின் முன்பு வேலப்பாடி என்னும் குடியிருப்பு உண்டாயிற்று. வேலமரங்கள் மிகுதியாக இருந்ததும் ஒரு காரணம். வேலப்பாடியின் அருகே வேலூர் தோன்றிற்று.

பட்டி என்ற சொல்லும் முல்லை நிலத்து ஊர்களைக் குறிக்கும். தமிழ்நாடு முழுவதும் பட்டி என்ற ஊர்ப்பெயர்கள் மிகுதியாகக் காணப்படினும் தென்பாண்டி நாட்டில் மிகுதியாகப் பட்டி என்ற பெயருடைய ஊர்கள் உள்ளன. கோயிற்பட்டி

முல்லை நிலத்தின் தொழிலாக ஆடுமாடுகள் மேய்த்தல் அமைகின்றது. வடஆர்க்காட்டில் வெண்மந்தை, புஞ்சை மந்தை முதலிய ஊர்கள் உள்ளன. நீலகிரி மலையில் தோடர் என்னும் வகுப்பார் குடியிருக்கும் இடத்திற்கு மந்து என்று பெயர். மாடுமேய்த்தலையே தொழிலாகக்கொண்ட தோடர்கள் உண்டாக்கிய ஊர்களில் சிறந்தது ஒத்தக்க மந்து. அது ஒட்டக மண்டு என்று பிரிந்து ஊட்டி என்று இப்போது வழங்கி வருகிறது. ஒத்தைக்கல் மந்தை என்பதுதான் இவ்வாறு பல நிலைகளில் திரிந்தது.

### மருத நிலம்

பண்டைத் தமிழர் ஆற்றுநீர் பாயும் நிலப்பரப்பைப் பண்படுத்திப் பயிர்செய்து மருதநிலமாக்கினார்கள். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்று கூறுவது மரபு. காவிரியாற்றைப் பொன்னி ஆறு என்றும் வைகை ஆற்றைப் பொய்யாக் குலக்கொடி என்றும் போற்றினார்கள். நாகரிகங்களுள் சிறந்த நாகரிகமாக ஆற்றங்கரை நாகரிகம் அமைந்துள்ளதை உலகம் முழுவதிலும் பார்க்கலாம். மேல்நாடுகளில் பேராறுகள் பெரிய நகரங்களில் நடுவே ஓடுகின்றன. ஆறில்லா ஊருக்கு அழகில்லை.

முற்காலத்தில் சிறந்து விளங்கிய நகரங்களும் துறைமுகங்களும் ஆற்றை அடுத்தே உண்டாயின. காவிரிக் கரையில் அமைந்துள்ள உறையூர் பழங்காலச் சோழர்களின் தலைநகரமாக இருந்தது. காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் காவிரிப்பூம்பட்டினம் இருந்தது. வைகைக் கரையில் மதுரை மாநகரம் இருக்கின்றது. இன்று தாமிரபரணி என்று கூறப்பெறும் பொருனை ஆறு கடலொடு கலக்கும் இடத்தில் கொற்கை என்னும் துறைமுகம் இருந்தது. வேளாண்மைக்கும் வாணிப வளத்திற்கும் ஆறுகளே சிறந்த சாதனங்களாக அமைந்தன. தொண்டை நாட்டின் வழிச்செல்லுகின்ற ஆற்றுக்குப் பெயர் பாலாறு. பால் சுரக்குமே தவிர, பெருக்கெடுத்து ஓடாது. அதுபோன்று பாலாற்றில் பெருக்கெடுத்துத் தண்ணீர் ஓடாது. நீர்வளம் குறைந்த சேது நாட்டின் வழியாகச் செல்லும்

ஆற்றுக்குப் பெயர் **தேனாறு**. தேனாற்றங்கரையில் குன்றக்குடியில் கோவில் கொண்டுள்ள ஈசனைத் தேனாற்று நாயகர் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. சேரநாட்டில் நெய்யாறு என்ற ஆறு ஓடுகின்ற கரையிலிருக்கின்ற ஊர் நெய்யாற்றின்கரை என்று அழைக்கப்பெறுகிறது.

நெல்லை மாவட்டத்தில் ஓடும் மற்றொரு ஆற்றிற்குப் பெயர் **கருணை ஆறு**. தென்னார்க்காட்டில் விருத்தாசலம் வழியாகச் செல்லும் ஆறு **மணிமுத்தாறு**. இவ்வாறு நாட்டின் உயிராக விளங்கும் ஆறுகளின் பெயர்களால் சில ஊர்கள் அமைந்துள்ளன. சோழநாட்டில் ஓடும் ஐந்து ஆறுகள் இணைந்து ஓடுகின்ற இடத்தினை ஐயாறு என்று அழைக்கின்றனர். அது திரு **ஐயாறு** என்று கூறப்பெற்றுத் திருவையாறு என்று இன்று கூறப்பெறுகிறது. தொண்டைநாட்டில் ஓடும் சேயாற்றின் கரையில் உள்ள ஊர் சேயாறு என்று அழைக்கப்பெற்றது. செங்கற்பட்டில் உள்ள செண்பாக்கத்து ஏரியில் நின்றும் புறப்பட்டுச் சென்னை வழியாகச் சென்று கடலோடு கலக்கும் ஆறு **அடையாறு** என்று பெயர்பெற்றது.

திருக்குற்றால மலையினின்றும் புறப்பட்டுச் செல்லுகின்ற சித்திரா நதியில் ஒரு சிறு நதி வந்து கலக்கின்றது. அதனைப் புராணக்கதையின் அடிப்படையில் கோதண்டஇராமநதி என்று கூறினர். வனவாசம் செய்த இராமர் சீதையின் தாகத்தைத் தீர்க்கும் பொருட்டுக் கோதண்டத்தைத் தரையில் ஊன்றித் தண்ணீர் ஊற்றெடுத்து ஓடச்செய்த காரணத்தால் கோதண்டர் இராமநதி என்று பெயர்பெற்றதாகக் கூறுவர். அவ்வாற்றின் பழம்பெயர் கயத்தாறு. கயம் என்றால் ஆழமான நீர்நிலை. அத்தகைய நீர்நிலைக்கு ஆதாரமாய் ஊற்றினின்னும் புறப்படுகின்றதைக் கயத்தாறு என்று அழைத்தார்கள். இன்றும் கயத்தாறு என்ற ஊர் நெல்லை நகரத்துக்கு வடக்கே உள்ளது.

ஆற்றின் அருகே அமைந்த ஊர் ஆற்றூர் என்று அழைக்கப்பெற்றது. தமிழ்நாட்டில் ஆற்றூர் என்ற பெயரில் சேலம் அருகே உள்ள ஆற்றூரும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஆற்றூரும் இராமநாதபுரத்தில் உள்ள ஆற்றங்கரை என்ற ஊரும் தஞ்சைநாட்டில் உள்ள ஆற்றுப்பாக்கம், திருச்சி நாட்டில் உள்ள ஆற்றுக்குறிச்சியும், வடஆர்க்காட்டில் உள்ள ஆற்றுக்குப்பமும் உள்ளன.

ஆறுகளில் மக்கள் இறங்கி நீராடுதற்கேற்ற இடங்கள் துறை என்று அழைக்கப்பெறும். காவிரி ஆற்றின் இருமருங்கும் அமைந்த செழுஞ்சோலைகளில் மயில்கள் தோகைவிரித்தாடும். மந்திகள் கொஞ்சிக் கூத்தாடும். இங்ஙனம் மயில்கள் ஆடும் துறையை மயிலாடுதுறை என்றும் குரங்குகள் ஆடும் துறையைக் குரங்காடு துறை என்றும் அழைத்தனர். காவிரியின் வடகரையில் ஒரு குரங்கு ஆடுதுறையும் தென்கரையில் ஒரு குரங்காடு துறையும் உண்டு. இன்று தென்குரங்காடுதுறை ஆடுதுறை என்றே வழங்குகின்றது. இன்னும் காவிரியாற்றில் கடம்பம் துறை, மாந்துறை என்னும் பல துறைகள் பாடல் பெற்ற பதிகளாக விளங்குகின்றன. தண்பொருனை ஆற்றின் குறுக்கே உள்ள துறை குறுக்குத்துறை எனவும், பூக்கள் சிந்துகின்ற துறை சிந்துபூந்துறை எனவும் அழைக்கப்பெறுகின்றன.

ஆற்றின் நடுவே இடைக்குறையாக உள்ள இடத்தை அரங்கம் என்று அழைத்தனர். தமிழில் துருத்தி என்று கூறினர். திருச்சியில் திருவரங்கம் அமைந்ததை நாம் அறிவோம். தஞ்சை நாட்டில் உள்ள குற்றாலத்தின் பழம்பெயர் திருத்துருத்தி என்பதாகும். அத்திருத்துருத்தியினை நாவுக்கரசர் பாடியுள்ளார்.

**பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும்**
**துன்னியதுருத்தியானை தொண்டனேன் கண்டவாறே!**

கல்வெட்டுக்களில் இவ்வூர் வீங்குநீர் துருத்தி எனக் குறிக்கப்பெறுகின்றது. தமிழ்நாட்டில் உள்ள மற்றொரு ஊர் திருப்பூந்துருத்தியாகும்.

ஆறுகள் கூடுகின்ற இடத்தைக் கூடல் என்று அழைத்தனர். தொண்டைநாட்டில் பாலாறும் சேயாறும் கம்பையாறும் சேறுகின்ற இடத்தில் உள்ள ஊர் திருமுக்கூடல் என்று பெயர்பெற்றது. நெல்லை நாட்டில் தாமிரபரணி ஆறும் சித்திரா நதியும், கோதண்ட இராமநதி என்னும் கயத்தாறும் ஒன்று சேருகின்ற இடம் முக்கூடல் என அழைக்கப்பெற்றது. அவ்வூரில் தோன்றிய சிறந்த இலக்கியம் முக்கூடற்பள்ளு என்பதாகும். சோழநாட்டில் கெடிலநதியும் உப்பாறும் கலக்கின்ற இடத்திற்கு அருகே அமைந்த ஊர் கூடலூர் எனப் பெயர் பெற்றது. தென்னார்க்காட்டில் வெள்ளாறும் முத்தாறும் கூடுகின்ற இடத்தில் கூடலையாற்றூர் அமைந்துள்ளது. அது தேவாரப்பாடல் பெற்ற தலமாகும்.

முற்காலத்தில் தமிழ்மன்னர் ஆற்று நீரை அணைகட்டி, தடுத்து, கால்வாய்களின் வழி ஏரிகளிலும் குளங்களிலும் நிரப்பினர். அவ்வாறு அமைந்த அணைகளின் அருகு ஊர்கள் எழுந்தன. அவ்வூர்கள் அணை என்ற பெயரைப் பெற்றன. தென்னார்க்காட்டில் கரடி அணை என்பது ஒரு ஊரின் பெயர். இராமநாதபுரத்தில் கண்ணணை என்பதும் திருச்சிராப்பள்ளி அருகே வெள்ளியணை என்பதும் உள்ளன.

அணைகளைப் போலவே கால்வாய்களின் அருகே எழுந்த ஊர்களும் உண்டு. நெல்லைநாட்டில் உள்ள வெள்ளக்கால், பள்ளக்கால், இராமநாதபுரத்தில் உள்ள தலைக்கால், திருச்சிராப்பள்ளியில் அருகு உள்ள மணற்கால், தஞ்சைநாட்டில் உள்ள குவளைகால் வடஆர்க்காட்டில் உள்ள மான்கால், இவை எல்லாம் குறிப்பிடத்தக்கன. நெல்லை நாட்டில் கால்வாய் என்ற பெயரே ஓர் ஊரின் பெயராக அமைந்துள்ளது.

இயற்கையாக ஓடுகின்ற கால்வாய்க்கு ஓடை என்ற பெயரும் உண்டு. நெல்லை நாட்டில் மயிலோடை என்ற ஊரும் இராமநாதபுரத்தில் பாலோடை என்ற ஊரும் தஞ்சை நாட்டில் செம்போடை என்ற ஊரும் உள்ளன.

கால்வாய்களிலும் குளங்களிலும் கட்டப்பெற்ற மதகுகள் மடை என்று பெயர்பெறும். மடைகளின் வழியே தண்ணீர் வயல்களில் சென்று பாயும். இவ்வாறு அமைந்த ஊர்கள் நெல்லை நாட்டில் பத்தல்மடை என்ற பத்தமடையும் பாலாமடையும் மதுரையில் உள்ள மேலமடையும் இதற்குச் சான்றுகளாகும்.

ஏர்த்தொழிலாகிய பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரைத் தேக்கிவைக்கும் நிலையம் ஏரி எனப்பெறும். ஏரியின் அருகே எழுந்த ஊர்கள் தமிழ்நாட்டில் பல. சித்தூர்நாட்டில் பல்லவனேரி என்பது பல்லவனால் ஆக்கப்பட்ட ஓர் ஊர். பாண்டிய நாட்டில் மாறநேரி என்பது பாண்டியன் பெயர்களுள் ஒன்றாகிய மாறன் என்ற பெயரால் அமைந்த ஊர். தொண்டைநாட்டில் உள்ள தென்னேரியும் அதன் அருகே உள்ள குறுநில மன்னன் திரையனால் அமைக்கப்பெற்ற திரையன் ஏறி என்பது சிதைந்து தென்னேரி என்பது ஆயிற்று என்பர். கொங்கு நாட்டில் வீரபாண்டிய அரசனால் ஏற்படுத்தப்பெற்ற ஊர் வீரபாண்டியப்பேர் ஏரி என்பதாகும்.

தெய்வப்பெயர்தாங்கிய ஏரிகளும் தமிழ்நாட்டில் பல உண்டு. நெல்லை மாவட்டத்தில் உள்ளது ஆறுமுகநேரி. மலையாள மன்னனால் வெட்டப்பெற்ற ஏரி பத்மநாபன் ஏரி. இன்று பதுனனேரி என்று வழங்கப்பெறுகிறது.

பேரேரி என்ற சொல் சுருங்கிப் பேரி ஆகி'அப்பெயரோடு இணைந்த பல பெயர்கள் தமிழகத்தில் உண்டு. நெல்லைநாட்டில் சீவலப்பேரி, கண்டியப்பேரி, அலங்காரப்பேரி, விசுவநாதப்பேரி, மதுராந்தகப்பேரேரி, சுந்தரசோழப்பேரேரி. இவ்வாறு பல. நெல்லை நாட்டில் சீவலப் பேரியின் பழம்பெயர் பேரி முக்கூடல் என்பதாகும். ஸ்ரீவல்லவன் என்ற பாண்டியன் அவ்வூரை உருவாக்கியதால் சீவல்லவப்பேரேரி என்று அதற்குப் பெயரிட்டான். அப்பெயர் சிதைந்து சீவலப்பேரி ஆயிற்று. கன்னடநாட்டில் உள்ள செல்வன் ஒருவன் நெல்லை நாட்டுப் பகுதியில் அணைகட்டி நீர்பாய்ச்ச உதவினான். அவன் பெயரால் அமைந்த அணைக்கட்டு கன்னடியின் அணை. அதன்வழியாகச் செல்லுகின்ற ஆற்றுக்குப்பெயர் கன்னடியன் கால். அவன் அமைத்த ஏரிக்குப் பெயர் கன்னடியப்பேரேரி. இன்று கண்டியப்பேரி என வழங்குகிறது. ஏரி மிக அழகாக அமைந்ததால் அலங்காரப்பேரி என்றும் அழைக்கப்பெற்றது.

பெரிய ஏரியின் மற்றொரு பெயர் கோட்டகம் என்பது. காவிரி நாட்டில் பல கோட்டகங்கள் உண்டு. தஞ்சை நாட்டில் உள்ள புதுக்கோட்டகம், மானம் காத்தான் கோட்டகம் இதற்குச் சான்று.

ஏரிக்கு அடுத்தபடியாக வேளாண்மைக்கு உதவுவது குளம். குளம்தொட்டு வளம்பெருக்கி என்று கூறுவர். அரசர்கள் பல குளங்களை வெட்டி வளத்தைப் பெருக்கினார்கள். தமிழ்நாடு முழுவதும் குளங்கள் நிறம் பற்றியும் அளவு பற்றியும் மரங்களோடு இணைந்தும் காணப்பெறுகின்றன. நெல்லை நாட்டில் உள்ள கருங்குளமும் திருச்சி நாட்டில் உள்ள செங்குளமும் நீரின் நிறத்தைக்காட்டுகின்றன. மதுரையில் உள்ள பெருங்குளம் பெரியதோர்க் குளத்தின் அருகே எழுந்தது. தஞ்சை நாட்டுப் பூங்குளமும் தென்னார்க்காடு புதுக்குளமும் அக்குளங்களின் தன்மையைப் புலப்படுத்துகின்றன. ஆலங்குளம், துத்திகுளம் போன்ற ஊர்கள் நினைக்கத்தக்கன.

பெரிய ஏரிகள் கடல்போல் பெரிதாகத் தோன்றியதால் சமுத்திரம் என்று பெயர் பெற்றன. இராசராச சோழன் வெட்டிய

பெருங்குளம் ஒன்று சோழசமுத்திரம் என்று கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது. தமிழ் நாட்டில் உள்ள ஊர்ப்பெயர்களில் சமுத்திரம் என்ற சொல் பெரும்பாலும் ஏரியின் பெயராகக் கொள்ளலாம். சான்று : அம்பாசமுத்திரம். அது பழங்காலத்தில் இளங்கோக்குடி என்று அழைக்கப்பெற்றது. அதன் அருகே எழுந்த குளம் அம்பாள் சமுத்திரம் என்று பெயர் பெற்றது.

முன்னாளில் ஏரி என்று பெயர்பெற்றிருந்த நீர்நிலை பெருமழையால் உடைந்து பெரிதாகிப் பின்பு அது கட்டப்பெற்று, கட்டப்பெற்றவர் பெயரால் சமுத்திரம் ஆயிற்று. திரையன் ஏரி என்பது தாதா சமுத்திரம் ஆயிற்று என்று கல்வெட்டு கூறிகிறது.

சிறிய ஏரியை ஏந்தல் என்றும் தாங்கல் என்றும் அழைத்தனர். இளவரசன் ஏந்தல், செம்பியன் ஏந்தல் இவ்வாறு அமைந்த ஊர்கள் ஆர்க்காட்டில் உள்ள ஆலந்தாங்கலும் செங்கற்பட்டில் உள்ள வளவன் தாங்கலும் இவ்வாறு பெயர்பெற்றன.

ஆவி, வாவி என்பன குளத்தின் பெயர்கள். இராமநாதபுரத்து நீராவி என்ற ஊரும் சேலம் நாட்டுக் கல்லாவி என்ற ஊரும் மதுரையைச் சார்ந்த கோடல் வாவி என்ற ஊரும் இந்நிலையில் அமைந்தன.

ஆழமான நீர்நிலை மடு எனப்படும். அச்சொல்லைக் கொண்ட நீர்ப்பெயர்கள் நெல்லை நாட்டுக் கல்மடுவும், தஞ்சை நாட்டு முதலை மடுவும் தென்னார்க்காட்டு ஆனைமடுவும் சேலம் நாட்டுச் செம்மடுவும் ஆகும்.

இலஞ்சி என்ற சொல்லும் நீர்நிலையைக் குறிக்கும் சொல். தென்காசிக்கு அருகே உள்ள இலஞ்சி என்ற ஊர் பொன்னிலஞ்சி என்றும் அழைக்கப்பெற்றது.

இயற்கையில் அமைந்த நீர்நிலை பொய்கை என்று கூறப்பெற்றது. தமிழகத்தில் பொய்கையார் என்று ஒரு தமிழ்ப்புலவரும் இருந்தார். ஆழ்வார்களுள் முதல் ஆழ்வாராகப் பொய்கை ஆழ்வார் என்பவரும் இருந்தார் என்பதை அறிவோம். பொய்கை என்ற பெயருடைய ஊர் ஒன்று வடஆர்க்காட்டில் உள்ளது.

உண்பதற்கு நீர்நிறைந்த குளம் ஊருணி எனப்பெறும். ஊருணி என்ற பெயரால் அமைந்த பேரூரணி; நெல்லை நாட்டிலும் மயிலூரணி; இராமநாதபுரத்திலும் புரசூர் அணி தஞ்சை நாட்டிலும் காணப்பெறுகின்றன.

செறு என்பது குளத்தைக் குறிக்கும் பழம் தமிழ்ச் சொல். சித்தூர் நாட்டில் இராயலசெருவு என்ற சிற்றூர் உள்ளது. விஜயநகரப் பெருமன்னன் கிருஷ்ண தேவராயன் பெரிய ஏரியைக் கட்டி இராயர் செரு என்று பெயர் அமைத்ததாகக் கூறுவர்.

ஆற்று நீராலும் வான மாரியாலும் நிறைந்து பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் நீர்நிலைகள் ஊற்று என்று அழைக்கப்பெற்றன. அவ்வாறு ஊற்றின் பெயரால் அமைந்த ஊர்களில் நெல்லை நாட்டில் உள்ள தாழையூற்றும், அத்தியூற்று என்ற கிராமமும், இராமநாதபுரத்தில் உள்ள அத்தியூற்றும், திருச்சி நாட்டில் உள்ள கண்ணூற்றும், சேலம் நாட்டில் உள்ள மாவூற்றும் குறிப்பிடத்தக்கன.

ஊற்றால் நிறைபவை கேணியும், கிணறும். அவ்வாறு அமைந்த பெயர்கள் சென்னை மாநகரில் உள்ள திருவல்லிக்கேணியும் நெல்லை நாட்டில் உள்ள நாரைக்கிணறும் ஆகும்.

நீர்வளத்தால் நிலவளம் அமைந்த ஊர்களை நிலம் என்ற பெயராலும் அழைத்தனர். அவ்வாறு அமைந்த ஊர் நன்னிலம் என்பதாகும்.

புலம் என்ற சொல்லும் நிலத்தைக் குறிக்கும். தஞ்சை நாட்டில் உள்ள தாமரைப்புலம், கருவப்புலம், செட்டிப்புலம் போன்றன குறிக்கத்தக்கன.

பற்று என்பது நன்செய் நிலமாகும். அது தென்னாட்டில் பத்து (பற்று) என்றும் வடநாட்டில் பட்டு என்றும் திரிந்து வழங்கும். திருக்கோயிலுக்கு நிவந்தமாக விடப்பட்ட நிலங்களைக் கோவில் பற்று என்று கூறினர். இராமநாதபுரத்தைச் சார்ந்த ஓர் ஊர் பெருங்கருணைப் பற்று என்று அழைக்கப்பெறுகிறது. செங்கல்பட்டு என்ற ஊர் செங்கழுநீர்ப்பற்று என்னும் அழகிய சொல்லின் சிதைவே ஆகும். சித்தூர் நாட்டில் பூத்லைப்பற்று என்று முன்பு குறிக்கப்பெற்ற ஊர் இப்போது பூதலப்பட்டு என்று

வழங்குகின்றது. வடஆர்க்காட்டு வந்தவாசி வட்டத்தில் தெள்ளாற்றுப் பற்று என்ற ஊர் இப்போது தெள்ளாரப்பட்டு என மருவியுள்ளது.

பண்ணை என்ற சொல் வயலைக்குறிக்கும். நெல்லை நாட்டில் செந்திலான் பண்ணை என்ற ஊரும் சாத்தூருக்குத் தென்மேற்கே 8 மைல் தூரத்தில் ஏழாயிரம் பண்ணை என்ற ஊரும் உள்ளன.

பழனம் என்ற சொல்லும் கழனி என்ற சொல்லும் வயல்களைக் குறிக்கும். திருப்பழனம் என்ற பாடல்பெற்ற தலம் திருப்பயணமாயிற்று. ஆர்க்காட்டில் உள்ள தென்பழனி புதுப்பழனி, தஞ்சை நாட்டில் காற்கழனி, நெல்லைப்பகுதி கழனிக்குளம் என்ற ஊரும் இங்கே குறிக்கத்தக்கன. கழனிக் குளம் இன்று கழுநீர்க்குளம் எனத் திரிந்துள்ளது.

வயல் என்ற சொல்லால் அமைந்த பெயர்களும் உள. புதுவயல், நெடுவயல் போன்றவை குறிக்கத்தக்கன. விளை என்ற சொல்லும் புலங்களைக் குறிக்கும். வாகை விளை, திசையன்விளை போன்ற ஊர்கள் குறிக்கத்தக்கன.

நிலத்தின் அளவைக் குறிக்கும் பெயர்கள் வேலியும், காணியும் ஆகும். பாண்டிய நாட்டுத் திருநெல்வேலியும், தஞ்சை நாட்டு ஐவேலி, ஒன்பது வேலி போன்ற ஊர்களும் மதுராந்தக வட்டத்தில் உள்ள பெருவேலியும் நிலத்தின் அளவால் அமைந்த பெயர்கள். அதுபோன்றே நெல்லை நாட்டில் உள்ள முக்காணி, சங்காணி போன்ற பெயர்கள் அளவால் பெற்ற பெயர்கள்.

இன்றும் ஒரு மரக்காலைக் குருணி என்று வழங்குகின்ற மரபு உள்ளது. நாழி என்பதும் அளவுப்பெயர். மதுரை நாட்டில் உள்ள சோழங் குருணி என்ற ஊரும் எட்டு நாழி என்ற ஊரும் நினைக்கத்தக்கன.

வளம்மிகுந்த நிலத்தை நஞ்சை என்றும் வளம் குறைந்த நிலத்தைப் புஞ்சை என்றும் கூறுவது மரபு. தஞ்சை நாட்டில் உள்ள நனிபள்ளி என்னும் தலம் இப்போது புஞ்சை என வழங்குகின்றது.

ஊற்று நீரை இறைத்துத் தோட்டப்பயிர் செய்யும் வழக்கம் தமிழ் நாட்டில் இன்றும் உண்டு. அதனால் தோட்டம்

என்ற சொல்லுடைய ஊர்கள் பல உள்ளன. தஞ்சை நாட்டில் பூந்தோட்டம் இவ்வாறு அமைந்தது. தோட்டம் கொல்லை கிளார் என்பன ஒருபொருள் சொற்கள். அந்நிலையில் அமைந்த ஊர் தென்னார்க்காட்டில் உள்ள இஞ்சிக்கொல்லையும் கருப்புக்கிளாரும் ஆகும்.

ஊர் என்னும் பெயர் எல்லா நிலங்களில் அமைந்தாலும் மருதநில ஊர்களைச் சிறப்பாகக் குறிக்கும் மரப்பெயரோடு அமைந்த ஊர்ப்பெயர்கள் பல. மருத மரத்தின் அடியாகப்பிறந்த ஊர் மருதூர். நாவல் அடியாகப் பிறந்த ஊர் நாவலூர். தேவாரப்பாடல் பெற்ற தலமாகிய தெங்கூரும், பனையூரும், பாகூரும், கடம்பூரும், மரங்களால் பெற்ற ஊர்ப்பெயர்கள். பறவைகளால் பெற்ற பெயர்களும் உள்ளன. அன்னத்தின் பெயரைப்பெற்ற குருகூர் என்பதும், சென்னையில் உள்ள மயிலோடு தொடர்புள்ள மயிலாப்பூரும், நாரையோடு தொடர்புள்ள திருநாரையூரும், கோழியோடு தொடர்புள்ள கோழியூரும், கொக்கைக் குறிக்கும் வண்டானம் என்ற ஊரும் குறிக்கத்தக்கன.

விலங்குகளால் அமைந்த பெயர்களும் உண்டு. அதில் புலியூர் என்ற பெயர் மிகுதியாக உள்ளது. புலியூர் திருப்பாதிரிப்புலியூர், எருக்கத்தம் புலியூர் போன்றவை பாடல்பெற்ற தலங்கள். திருச்சி நாட்டில் பெரும்புலியூர், குறும்புலியூர் போன்று உள்ளன. பெரும்புலியூர் பெரம்பலூர் என்றும் குறும்புலியூர் குறும்பலூர் என்றும் இக்காலத்து வழங்கப்பெறுகின்றன. மயிலாடுதுறைக்குத் தெற்கே சிறுபுலியூர் என்ற ஊர் உள்ளது.

சில ஊர்களை நல்லூர் என்றும் புதிதாகத் தோன்றிய ஊரைப் புத்தூர் என்றும் கூறுவது மரபு. சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட ஊர் திருவெண்ணை நல்லூர் என்று அழைக்கப்பெற்றது. சைவ சமய ஞானநூலாகிய சிவஞான போதத்தை அருளிய மெய்கண்ட தேவர் பிறந்த ஊரும் திருவெண்ணை நல்லூரே! கும்பகோணத்திற்கு அருகே நல்லூர் என்ற ஓர் ஊர் உள்ளது. அமர்நீதி நாயனார் தொண்டு செய்து சிவப்பேர் பெற்ற ஊர் என்று சேக்கிழார் கூறுகிறார். மண்ணியாற்றங்கரையில் முருகவேள் பெயரால் அமைந்த ஊர் சேய் நல்லூர் இப்போது சேங்கனூர் என்று

அழைக்கப்பெறுகிறது. வடஆர்க்காட்டில் உள்ள மற்றொரு சேய் நல்லூர் சேனூர் என அழைக்கப்பெறும்.

தமிழ் நாட்டை ஆண்ட அரசர் பலர் தம் பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உண்டாக்கினார்கள். பாண்டிய நாட்டில் வீரபாண்டிய நல்லூர், அரிகேசரி நல்லூர், மானாபரண நல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டிய குலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன. சோழநாட்டில் உள்ள முடிகொண்ட நல்லூர், அனபாய நல்லூர், திருநீற்றுச் சோழநல்லூர் திருத்தொண்டத்தொகை நல்லூர், சிவபாதசேகர நல்லூர், கலிகடிந்த சோழ நல்லூர் முதலிய ஊர்கள் சோழமன்னருடைய விருதுப்பெயர்கள் பெற்ற ஊர்களாகும்.

பாண்டிய நாட்டில் உள்ள திருப்புத்தூர் என்ற ஊரையும் அரிசில் ஆற்றங்கரையில் எழுந்த அரிசிற்கரைப் புத்தூர் என்ற ஊரையும் கடுவாய் நதிக்கரையில் உள்ள கடுவாய்க் கரைப்புத்தூர் என்றும் தேவாரப்பதிகம் குறிக்கின்றது. வைணவர் போற்றும் சிறந்த ஊர் திருவில்லிபுத்தூர் என்ற ஸ்ரீவில்லிபுத்தூர். சுந்தரர் திருமணம் செய்யப்போந்த புத்தூர் மணம் வந்தபுத்தூர் ஆயிற்று. கொங்கு நாட்டின் பேரூருக்கு அருகே கோவன் என்ற தலைவன் பெயரால் அமைந்த ஊர் கோவன் புத்தூர் என்று ஆகி இப்போது கோயம்புத்தூர் என்று உள்ளது.

### நெய்தல் நிலம்

தமிழ்நாடு நெடிய கடற்கரையை உடையது. சோழநாட்டுக் கடற்கரை சோழமண்டலக் கரை என்று வழங்கப்பெற்றது. அது ஐரோப்பியர் நாவில் சிதைந்து கோரமண்டல் கரையாயிற்று. பாண்டிய நாட்டுக் கடலில் நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக நல்முத்து விளைந்தமையால் அக்கரை முத்துக்கரை என்று பிறநாட்டாரால் குறிக்கப்பெற்றது. சேரநாட்டுக்கடற்கரை மேல்கரை எனப் பெயர்பெற்றது. இப்போதும் மேக்கரை என்ற ஊர் உள்ளது.

பாண்டிய நாட்டில் கீழக்கரை என்பது ஓர் ஊரின் பெயர். சீதக்காதி என்ற மகமதிய வள்ளல் வாழ்ந்தது அவ்வூரில் வையை ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த ஊர் ஆற்றங்கரை என்பது. இராமேஸ்வரத்துக்கு அண்மையில் உள்ள ஊரின் பெயர் கோடிக்கரை. அது தாலமி முதலிய யவன ஆசிரியர்களாலும் குறிக்கப்பெற்றுள்ளது.

கடல்வாணிபத்திற்குச் சாதனமாகிய இடம் துறை எனப் பெயர்பெறும். இப்போது துறைமுகம் என வழங்குகின்றனர். பண்டைத் துறைமுகங்கள் பெரும்பாலும் ஆற்றுமுகங்களில் அமைந்திருந்தன. குமரி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் குமரித்துறை இருந்ததாகப் பழங்காலத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. குமரித்துறை கடலால் கொள்ளப்பட்டு அழிந்தது. கொற்கைத்துறை தென்னாட்டுத்துறைமுகமாக இருந்தது. பாண்டிய அரசன் கொற்கைத் துறைவன் என்றும் கொற்கைக்கோமான் என்றும் அழைக்கப்பெற்றான். தாமிரபருணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கைத்துறை இருந்தது. அது பிற்காலத்தில் தூர்ந்துபோயிற்று. 13ஆம் நூற்றாண்டின் அளவு காயல் என்பது சிறந்ததோர் நகரமாக விளங்கிற்று. இத்தாலிய தேசத்தினராகிய மார்க்கோபோலோ என்பவர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது காயல் துறையின் செழுமையைக் கண்டு மகிழ்ந்தார் அதுவும் பிற்காலத்தில் தூர்ந்து போயிற்று. இன்று அவ்வூர் புன்னைக்காயல் என வழங்குகின்றது.

கடற்கரையில் உண்டாகும் நகரங்களின் பெயர்கள் பட்டினம் என அழைக்கப்பெற்றன. காவிரிப்பூம்பட்டினம் தமிழ் நாட்டில் இருந்த சிறந்த ஊர்களுள் ஒன்று. அதன் அடிப்படையில் அமைந்த இலக்கியமே பட்டினப்பாலை. இவ்வூர் பூம்புகார் எனவும் அழைக்கப்பெற்றது. காவிரிப்பூம்பட்டினத்தைப் பெருமையாகப் பேசுகின்ற தமிழ் இலக்கியங்கள் மிகுதியாக உள்ளன. மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரண்டு பிரிவுகளைக்கொண்டிருந்தது. நாகூர் என்று அழைக்கப் பெறுகின்றது நாகபட்டினம். இதைக் கடல்நாகை என்று திருப்பாசுரங்கள் போற்றுகின்றன.

சேர நாட்டில் அமைந்த முசிறிப்பட்டினம் குறிக்கத்தக்கது. அவ்வூரின் ஒருபகுதி கொடுங்கோளூர் எனவும் மற்றொரு பகுதி மடிகோதைப்பட்டினம் எனவும் வழங்கியதாகத் தெரிகிறது. பாண்டிய நாட்டில் காயல்பட்டினம்; குலசேகரப்பட்டினம் என்ற ஊர்கள் குறிக்கத்தக்கவை.

கடற்கரைச் சிற்றூர்களைப் பாக்கம் என்ற பெயரால் அழைத்தனர். சென்னை மாநகரின் அருகே உள்ள கோடம்பாக்கம், மீனம்பாக்கம், வில்லிவாக்கம் போன்றவை குறிக்கத்தக்கன. இப்போது புதுப்பாக்கம், புரசபாக்கம், சேப்பாக்கம், நுங்கம்பாக்கம் போன்றவையும் உள்ளன.

நெய்தல் நிலம் உப்புத்தரையாக இருக்கும். அதனைக் களர்நிலம் என்று கூறுவர். உப்பு விளையும் இடம் அளம் என அழைக்கப்பெறும். திருக்களர் என்ற தலம் தேவாரப்பாடல் பெற்ற இடம். தஞ்சைநாட்டில் உள்ள பேரளம் என்பது கடற்கரையூர். நெய்தல் நிலத்தில் வாழ்பவர் வலையர், செம்படவர், பரதவர் என அழைக்கப்பெற்றனர். அவர்கள் வாழும் ஊர்கள் குப்பம் என்று அழைக்கப்பெற்றன. காட்டுக்குப்பம், கருங்குடிக்குப்பம், நொச்சிக்குப்பம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

### பாலை நிலம்

தொல்காப்பியரின் எண்ணத்தின்படிப் பாலைநிலம் என்று ஒன்று தனியாக இல்லை. பிற்காலத்தில் இளங்கோவடிகள் முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும் என்று கூறுகிறார். முல்லைநிலமும், குறிஞ்சி நிலமும் திரிந்து பாலைநிலம் தோன்றுகிறது. பாலைநிலம் வறட்சியாக இருப்பதால் பிறர்பொருளைக் கொள்வோர் அல்லது கள்வர் குடியிருப்பர். அவர்கள் தெய்வம் கொற்றவை எனப்பட்டது. கொங்குநாட்டில் வடஎல்லையாகப் பெரும்பாலை என்னும் நிலம் குறிக்கப்படுகிறது. சேலம் நாட்டில் பெரும்பாலை என்பது இன்றும் ஓர் ஊர்ப்பெயராக வழங்குகின்றது. சிதம்பரத்திற்குக் கிழக்கே திருக்களிப்பாலை என்ற சிவஸ்தலம் இருந்தது. அதனைத் தேவாரம் பாடிய மூவரும் போற்றியுள்ளனர். கொள்ளிட நதியிலே பெருகிவந்த வெள்ளம் அக்கோயிலை அழித்துவிட்டது. பாண்டிய நாட்டுப் பாலவனத்தம் என்றொரு ஊர் உண்டு. அதன் பழம்பெயர் பாலைவன நத்தம் என்பது. தொண்டைநாட்டு ஊற்றுக்காட்டுக் கோட்டத்துப் பண்டைநாளில் பாலையர் என்று பெயர்பெற்றிருந்த ஊர், இக்காலத்தில் செங்கற்பட்டு வட்டத்தில் பாலூராக விளங்குகின்றது. திருப்பாலைவனம் என்ற பதியும் அந்நாட்டில் உண்டு.

நெல்லை நாட்டின் செக்கச்சிவந்த மணற்பாங்கான சில இடங்கள் தேரி என்று பெயர்பெற்றுள்ளன. கோடைக்காற்றில் தேரியின் தோற்றம் மாற்றமடையும். இடையன்குடித் தேரியும், குதிரைமொழித் தேரியும், சாத்தான் குளத்தேரியும் 100 அடிக்குமேல் 200 அடிவரை வளர்ந்த அகன்ற மணல் மேடுகளாகும்.

# 2. நாடும் நகரமும்

நாடு என்ற சொல் முன்பு மனிதர் வாழும் நிலத்தைக் குறித்தது. தமிழர் வாழும் நாடு தமிழ்நாடு என்றாயிற்று. சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்ற பெயர்கள் அரசர்களின் பெயரால் வந்த பெயர்கள். கொங்குநாடு, தொண்டை நாடு என்பன பகுதியால் வந்த பெயர்கள்.

ஊர்ப்பெயர்களாகவும் நாடு என்ற சொல் உள்ளது. பாண்டிமண்டலத்தைச் சேர்ந்த முரப்புநாடு, வல்லநாடு, போன்றவை குறிக்கத்தக்கன. மயிலாடுதுறைக்கு அணித்தாக உள்ள குரநாடு என்ற ஊர் கூறைநாடு என்ற சொல்லின் திரிபாகலாம். பட்டுக்கோட்டை வட்டத்தில் கானாடும், மதுராந்தக வட்டத்தில் தொன்னாடும் உள்ளன. கானாடு காத்தான் என்ற ஊர் கானாடு என்பதிலிருந்து தோன்றி இருக்கலாம்.

சிறந்த ஊர்களை நகரம் என்று சொல்கிறோம். நகரியாகவும் அது வழங்கப்பெறுகிறது. நம்மாழ்வார் பிறந்த இடமாகிய குருகூர், ஆழ்வார் திருநகரியாகத் தற்போது அழைக்கப்பெறுகிறது. பாண்டிய நாட்டில் உள்ள விருதுபட்டி வர்த்தகத்தால் மேம்பட்டு இன்று விருது நகராக விளங்குகின்றது. சமீபகாலத்தில் தோன்றிய புத்தூர்கள் நகரம் என்ற பெயரைப் பெற்றுள்ளன. சென்னையின் அருகு எழுந்துள்ள தியாகராய நகரமும், சிதம்பரத்திற்கு அண்மையில் அமைந்த அண்ணாமலை நகரமும், தஞ்சையில் தோன்றிய கணபதி நகரமும் இன்று நகர் என்று அழைக்கப்பெறுகின்றன.

புரம் என்ற சொல்லும் நகரங்களைக் குறிக்கின்றது. தொண்டைநாட்டின் முந்தைய தலைநகரம் கச்சியாக இருந்து, காஞ்சியாக மாறி, இப்போது காஞ்சிபுரம் என்று அழைக்கப்பெறுகிறது. பல்லவர்கள் வாழ்ந்த காலத்தில் பல்லவபுரம் பின்பு பல்லாவரம் என்று அழைக்கப்பெற்றுள்ளது. சோழ நாட்டை ஆண்ட பெருமன்னன் இராசராசன் உண்டாக்கிய ஊரின் பெயர் ஜெயங்கொண்ட சோழபுரம். இப்போது ஜெயங்கொண்டான் என அழைக்கப்பெறுகிறது. ஜெயங்கொண்டான் இராசராசனது பட்டப்பெயர்களுள் ஒன்று.

புரம் என்ற விகுதிப்பெயர் புரி என்றும் ஆகின்றது. தேவாரத்தில் திருநெல்வாயில் என்று குறிக்கப்பெற்ற ஊர்

சிவபுரியாக இருக்கின்றது. ஆண்டாள் பிறந்த ஊராகிய ஸ்ரீவில்லிபுத்தூர், வைணவ உலகத்தில் கோதைபுரி என்றும் குறிக்கப்பெறுகிறது.

வாழ்வும் தாழ்வும் நாடு, நகரங்களுக்கும் உண்டு. முன்னாளில் சிறப்புற்று விளங்கிய சில நகரங்கள் இக்காலத்தில் பொலிவிழந்து உள்ளன. பின்னாளில் தோன்றிய சில, ஊர்கள் இப்பொழுது பெருமையுற்றுத் திகழ்கின்றன. சங்க காலத்தில் சோழநாட்டின் தலைநகராக இருந்த உறந்தை என்ற உறையூர் ஒரு காலத்தில் சிறப்பாக இருந்தது. அப்போது சிற்றூராக இருந்த திருச்சிராப்பள்ளி இப்போது பேரூராகிவிட்டது. உறையூரின் பெருமை குறைந்துள்ளது.

இராசேந்திரன் தோற்றுவித்த கங்கைகொண்ட சோழபுரம் ஒரு காலத்தில் தலைநகராக இருந்தது. அதைச் சுற்றிலும் கோட்டை, கொத்தளங்கள். அப்பெருநகரம், அதன் உருக்குலைந்து பாழ்பட்டுக்கிடக்கின்றது. பெரிய ஏரி பேணுவாரற்றுத் தூர்ந்து போயிற்று. அரண்மனை இருந்த இடம் மாளிகை மேடு என்று அழைக்கப்பெறுகின்றது. நீரற்ற ஏரி பொன்னேரி என்று குறிக்கப்பெறுகிறது. இடைக்காலச் சோழர் ஆட்சியில் அந்நகரம் எய்தியிருந்த பெருமை எல்லாம் கனவில் கண்ட காட்சியாகிறது.

சேரநாட்டின் தலைநகராகிய வஞ்சி என்ற ஊரைத் தேடித்திரியவேண்டிய நிலை உள்ளது. கொச்சிநாட்டில் உள்ள திருவஞ்சைக்களமே வஞ்சிமாநகரம் என்றும் திருச்சிநாட்டைச் சேர்ந்த கரூரே வஞ்சி என்றும் திருவனந்தபுரத்தில் உள்ள வஞ்சியூரே வஞ்சி என்றும் அலைகடலில் பட்ட துரும்புபோல் ஆராய்ச்சி உலகத்தில் அலமரும் நிலை இன்று வஞ்சிமாநகரத்திற்கு வந்துவிட்டது.

இன்று காணப்பெறுகின்ற சென்னை மாநகரம் 300 ஆண்டுகளுக்கு முன்பு கடற்கரைத் துறைமுகம் இல்லாமல் இருந்தது. கோட்டை இல்லை. அன்று பெருமை பெற்றிருந்த ஊர் மயிலாப்பூர். அதில் உள்ள கபாலீச்சுரம் என்னும் சிவன் கோவில் மிகப் பழமை வாய்ந்தது. திருஞான சம்பந்தர் அதனைப் பாடியுள்ளார்.

திருமயிலைக்கு அருகே உள்ள திருவல்லிக்கேணி முதல் ஆழ்வார்களால் பாடப்பெற்றுள்ள அல்லிக்கேணி என்பது தான்.

திருஅல்லிக்கேணி என்று அடைபெற்றது. இன்று மண்ணடி என்னும் இடம் மேட்டின் அடியில் பெரும் பள்ளமாக அந்நாளிலே காணப்பெற்றது. ஆங்கிலக் கம்பெனியார் கோட்டை கட்டி வர்த்தகம் செய்யக் கருதிய போது ஒரு நாயக்கருக்கு உரியதாக இருந்த இடங்களை அவரிடம் இருந்து வாங்கினர். அந்நாயக்கர் பெயர் சென்னப்ப நாயக்கர். அது சென்னப்பட்டணம் என ஆயிற்று.

மண்ணடியின் அருகே இருந்த பெருமேடு தணிந்து, பெத்து நாயக்கன் பேட்டை ஆயிற்று. கம்பெனியார் ஆதரவில், சிந்தாதரிப் பேட்டை, தண்டையார் பேட்டை முதலிய ஏற்பட்டன.

## 3. குடியும் படையும் - குடி

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு என்ற திருக்குறளில் உள்ள படை குடியைக் குடி, படை ஆக்கியுள்ளார் சேதுப்பிள்ளை. பழங்காலத்தில் தமிழகத்தில் எழுந்த குடியிருப்புக்களும் அதனைப் பாதுகாக்க எழுந்த படை இருப்புக்களும் ஊர்ப்பெயர்களாக விளங்குகின்றன.

இல் என்ற சொல், தற்போது வீட்டைக் குறிக்கின்றது. முற்காலத்தில் ஊரைக் குறித்தது. திருச்சி நாட்டில் அன்பில் என்றொரு ஊர் உண்டு. தேவாரப்பாடல் பெற்ற ஊர்களில் திருப்பாச்சில் என்பது இப்போது திருவாசி என்று அழைக்கப்பெறுகிறது. செந்தில் என்ற ஊர் திருச்செந்தில் ஆகித் திருச்செந்தூர் ஆயிற்று. இடைமருதில் என்ற ஊர், திருவிடைமருதூர், திருப்புடைமருதூர் என்று ஆயிற்று. தொண்டைநாட்டு 24 கோட்டங்களில் மணவிற்கோட்டத்தின் தலைநகரம் மணவில் இப்போது மணவூர் ஆகியுள்ளது.

சங்ககாலப் புலவர்கள் பெயர்களில் ஊர்ப்பெயர்கள் இணைந்து கூறப்பெற்றன. அரிசில் கிழார், அஞ்சில் ஆந்தையார், பொருந்தில் இளங்கீரனார், கள்ளில் ஆத்திரையன் என்ற பெயர்கள் இல் என்னும் இணைப்போடு அமைவதை அறிகிறோம்.

அகம் என்ற சொல்லும் இல்லைக் குறிக்கும். வீட்டுக்கு அமைந்த சொல் ஊருக்கும் ஆவதைப் பின்பு காண்கிறோம். ஏரகம்

என்ற முருகன் படைவீடுகளுள் ஒன்று திருஏரகம் ஆயிற்று. பாண்டி நாட்டில் வைகை ஆற்றங்கரையில் ஏடகம் என்ற ஓர் ஊர் திருஏடகம் ஆயிற்று. இராமநாதபுரத்தில் மருதகம், கையகம் போன்ற ஊர்கள் உள்ளன. திருச்சி நாட்டில் கல்லகம் என்பது ஓர் ஊரின் பெயராய் உள்ளது.

உள் என்ற சொல்லும் ஊர்ப்பெயராக அமைந்துள்ளதை எவ்வுள் என்பதில் காண்கிறோம். ஆழ்வார்கள் பாடிய எவ்வுள் திருஎவ்வுளூர் என்றாகி, திருவள்ளூர் என்று வழங்குகின்றது.

வாயில் என்ற சொல் வீட்டின் வாசலைக் குறிக்கும். கோச்செங்கட் சோழன் ஒரு சேரமன்னனைக் குடவாயில் கோட்டத்தில் சிறைசெய்தான் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. குடவாயில் என்ற பாடல் பெற்ற தலம் தஞ்சை நாட்டில் உள்ளது. இளங்கோவடிகள் குணவாயில் கோட்டத்தில் இருந்ததாகச் சிலப்பதிகாரப் பதிகம் கூறுகின்றது. வாயில் என்பது வாசலாவது இயல்பு. தஞ்சை நாட்டு மன்னார்குடிக்கருகே மேலவாசல் என்ற ஊர் உள்ளது. சேலநாட்டில் தலைவாசல் என்னும் ஊர் காணப்படுகின்றது. புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் பெருவாயில் நாடு சிறுவாயில் நாடு வாடவாயில் நாடு என்னும் ஊர்ப்பெயர்கள் வருகின்றன. பெருவாயில் நாடு இக்காலத்து பெருமாநாடு என்று குறிப்பிடப்பெறுகிறது. அன்னவாயில், புன்னைவாயில், காஞ்சிவாயில் என்ற ஊர்ப்பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. கொற்றவாயில் என்ற ஊர்ப்பெயரும் காணப்பெறுகின்றது. மன்னனுக்குரிய மாளிகை தலைவாசல் பெரும்பாலும் கொற்றவாசல் என்னும் பெயரால் குறிக்கப்பெறுகின்றது. பெரம்பலூர் வட்டத்தில் கொத்தவாசல் என்ற ஊரும் வடமதுரைக்கு அருகே கொத்தவாசல் சேரி என்ற ஊரும் உள்ளன.

தொண்டை நாட்டில் பிலவாயில் என்று ஓர் ஊர் பெயர் பெற்றிருந்தது. நாளடைவில் பிலவாயிலூர் என்று ஆயிற்று. அப்பெயர் குருகி வாயிலூர் என வழங்கிற்று. இப்போது வயலூர் எனச் சிதைந்து உள்ளது.

வாயிலைப் போன்றே முற்றம் என்ற சொல்லும் சில ஊர்ப் பெயர்களில் அமைந்திருக்கக் காணலாம். கும்பகோணத்திற்கு நான்கு மைல் தூரத்தில் சக்தி முற்றம் என்ற ஊர் உள்ளது.

சத்திமுற்றப்புலவர் நாரையைக் குறித்துப் பாடிய பாடல் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது.

குடி என்ற சொல் குடியிருப்பை உணர்த்தும். தஞ்சை நாட்டில் பேரளத்திற்கு அருகே சிறுகுடி என்னும் ஊர் உள்ளது. இளையான் குடியில் தோன்றியவர் இளையான் குடி மாறனாயனார். சிறுதொண்டர் பிறந்த ஊர், செங்காட்டங்குடி. தேவாரத்தில் கற்குடி, கருக்குடி, விற்குடி, வேள்விக்குடி போன்ற பெயர்கள் காணப்பெறுகின்றன.

நெல்லை நாட்டில் திருக்குறுங்குடி என்ற ஊர் உள்ளதை நாம் அறிவோம். திராவிடமொழிகளின் தந்தை என்று கூறப்பெறும் கால்டுவெல் ஐயர் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்த இடம் இடையான் குடி என்பதாகும்.

இருப்பு, இருக்கை என்ற சொற்களும் ஊர்ப்பெயர்களில் காணப்பெறுகின்றன. தஞ்சை நாட்டில் புன்னை இருப்பு, வேட்டைக்காரன் இருப்பு முதலிய குடியிருப்புகள் உண்டு. தொண்டைநாட்டில் உள்ள ஓரிருக்கை என்ற ஊரின் பெயர் ஓர் இரவு இருக்கை என்று சிதைந்துள்ளது என்று சொல்லப்பெறுகின்றது.

வாழ்வு, வாழ்க்கை என்னும் பெயர்களும் ஊர்ப்பெயர்களாக உள்ளன. பழநி மலைக்கு வழங்கும் பல பெயர்களுள் ஒன்று சித்தன் வாழ்வு என்ற ஒன்றாகும். தஞ்சை நாட்டுப் பாபநாசம் வட்டத்தில் சித்தன் வாழூர் என்றொரு ஊர் இருக்கின்றது.

குடிகள் சேர்ந்து வாழுமிடம் சேரி எனப்பெற்றது. தொல்காப்பியத்தில் இச்சொல் உண்டு. பார்ப்பனச் சேரி, ஆயர்சேரி, பறைச்சேரி, பள்ளச்சேரி எனத் தற்காலத்தும் அமைகிறது. புதுச்சேரி, ஐரோப்பியரால் பாண்டிச்சேரி என அழைக்கப்பெற்றது. இப்போது தாழ்ந்தவர் வசிக்கும் இடத்தைச் சேரி என்று கூறுகின்றனர். பயிர்த்தொழிலே பழந்தமிழ் நாட்டின் பழுதற்ற தொழிலாகக் கருதப்பெற்றது. தொழில் அடிப்படையில் ஊர்ப் பெயர்கள் அமைந்ததும் உண்டு. கூறை என்ற சொல் ஆடையைக் குறிக்கும். நெய்யும் தொழில் மிகுதியாக நடைபெற்ற பகுதி கூறைநாடு எனப்பெற்றது. இப்போது கொரநாடு எனத் திருந்தி வழங்குகின்றது. நெய்யும் தொழிலைச் செய்வோர் சாலியர்

எனப்பெறுவர். தஞ்சாவூர்க்கருகே சாலியமங்கலம் என்ற ஊர் உள்ளது.

தொழில்களால் சிறப்புற்ற ஊர்கள் பேட்டை எனப்பெறும். சேலத்தின் மேல்பாகத்தில் செவ்வாய்ப் பேட்டை என்றொரு ஊர் உள்ளது. செவ்வாய்க் கிழமைகளில் சந்தைகூடும் இடம் ஆதலால் அப்பெயர் பெற்றது. நெல்லைக்கு அருகிலும் பேட்டை என்ற ஊர் உண்டு. போர்த்துக்கீசியரைப் பரங்கியர் என்று தமிழ்நாட்டார் அழைத்தனர். சிதம்பரத்திற்கு வடக்கே பரங்கியர் வணிகம் செய்த ஊர் பரங்கிப்பேட்டை என்று அழைக்கப்பெறுதை நாம் அறிவோம்.

சென்னை மாநகரத்திலும் தண்டையார்பேட்டை, வண்ணார்பேட்டை, சிந்தாதரிப்பேட்டை போன்று பல பேட்டைகள் உள்ளன. தஞ்சை நாட்டில் உள்ள அய்யம்பேட்டையும் அம்மாப்பேட்டையும் நெசவுத் தொழிலாளர்கள் நிறைந்திருக்கும் ஊர்கள். மன்னார் கடற்கரையில் முத்துப்பேட்டை என்ற ஊர் உள்ளது. கடலில் முத்தெடுப்போர் மிகுதியாக வாழ்ந்து இருந்ததால் அது முத்துப்பேட்டை என அமைந்தது. வடஆர்க்காட்டில் வாலாஜாபேட்டை என்ற நகரத்தில் 18 பேட்டைகளை அது கொண்டுள்ளதைக் கூறுவர்.

சாலை என்ற பெயரில் அமைந்த ஊர்களும் உள்ளன. கொற்கைத் துறைமுகத்திற்கு அருகே நாணயம் அச்சடிக்கும் இடம் அக்கசாலை என அழைக்கப்பெற்றது. முதல் குலோத்துங்கன் கல்வெட்டில் அக்கசாலை ஈச்சுரம் முடையார் என்ற ஊர் இருந்ததாகத் தெரிகிறது.

பழமையும், புதுமையும் ஊர்களில் அமைவது இயல்பு. நெல்லை நாட்டில் பழவூர் என்றோர் ஊர் உண்டு. தேவாரத்தில் பழையாறை என்ற ஊர் பாடப்பெற்றுள்ளது. இராமநாதபுரத்தில் பழையகோட்டை என்னும் ஊர் உண்டு. புதிதாகத் தோன்றிய ஊர்களுக்குப் புத்தூர் என்று பெயர் தருவது உண்டு. புதுக்கோட்டை, புதுச்சேரி, புதுக்குடி, புதுக்குளம், புதுப்பேட்டை, புதுவயல் போன்ற ஊர்கள் அந்நிலையில் அமைந்தவை.

திசைகளின் பெயராலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. ஜெயங்கொண்ட சோழபுரத்துக்கு 10 மைல் கிழக்கே குணவாசல்

என்ற ஊர் உள்ளது. தஞ்சை நாட்டில் குடவாசல் என்ற ஊர் உள்ளதையும் நாம் அறிவோம். குணக்கு கிழக்கையும், குடக்கு மேற்கையும் குறிக்கும். நாகபட்டினத்திற்கு அருகே உள்ள வேளூர், கீழ்வேளூர் என்று அழைக்கப்பெற்றது. இப்போது கீவளூர் என்று சிதைந்துள்ளது. மலாடு என்ற பழைய நாட்டின் தலைநகராக விளங்கியது கீழூர் என்பதாகும். பாண்டிய நாட்டுக் கடற்கரையில் கீழக்கரை என்ற ஊர் உண்டு. மதுரையின் அருகே கீழக்குடி என்ற ஊரும் வடஆர்க்காட்டில் உள்ள மேல்பாடியும் நினைக்கத்தக்கன.

சங்க இலக்கியத்தில் வடதிசையில் வாழ்வோரை வடுகர் என அழைத்தனர். வடபாதி மங்கலம், தென்காசி, தென்திருப்பேரை போன்ற ஊர்கள் திசை அடிப்படையில் அமைந்தவை.

ஊர்களின் அமைப்பைக் கருதித் தலை, இடை, கடை என்ற அடைமொழிகள் இணைந்த ஊர்கள் உள்ளன. தலையாலங்கானம், தலைச்செங்காடு, தலைவாசல், தலைக்காடு, தலைவாய் நல்லூர் போன்றவை நினைக்கத்தக்கன. இடை என்ற சொல்லின் அடிப்படையில் திரு இடைமருதுர், திருஇடைச்சரம், இடைக்காடு, இடையாற்றங்குடி எண்ணத் தக்கன. அதேபோன்று நடு என்ற சொல்லோடு இணைந்த நடுவக்குறிச்சி, நடுக்காவேரி என்ற ஊர்ப்பெயர்களும் உள்ளன.

கடை என்ற சொல்லால் அமைந்த ஊர்கள் சேலம் நாட்டில் உள்ள கடைக்கோட்டூரும் தென்னார்க்காட்டில் உள்ள கடைவாய்ச்சேரி, நெல்லை நாட்டில் உள்ள கடையமும் உள்ளன.

பெரிய ஊர்களைப் பேரூர்கள் என்றும் சிறிய ஊர்களைச் சிற்றூர் என்றும் அழைக்கும் மரபும் இருந்தது. கோவையில் பேரூரும், பேரளமும், திருச்சிராப்பள்ளியை அடுத்த பெரும்புலியூரும் குறிப்பிடத்தக்கன. அதேபோன்று சித்தூர் என்ற ஊரும் வடஆர்க்காட்டில் சிற்றாமூர் என்ற ஊரும் எண்ணத்தக்கன. பழைய சிவதலங்களில் ஒன்று சிற்றேமம் என்று பெயர் பெற்றது. திரு என்ற அடை கொண்டு திருச்சிற்றேமம் ஆகிப் பின்பு திருச்சிற்றம்பலம் ஆயிற்று.

சில ஊர்களுக்கு நெடுமையும் குறுமையும் அடிப்படையாக அமைந்துள்ளன. நெடுங்களம் என்ற ஊர் தேவாரத்தில் பாடப்பெற்ற ஊர். நடுங்களமாநகர் என்று

நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். இப்போது திருநெடுங்களம் என வழங்குகின்றது. மயிலாடுதுறைக்கு அருகே நீடூர் என்ற ஊரும் உள்ளது. நெல்லை நாட்டில் குறுங்குடி என்பது திருக்குறுங்குடி ஆயிற்று. திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த குறும்புலியூரும் தொண்டை நாட்டின் குறுங்கோழியூரும், குறுமை என்ற அடிப்படையில் அமைந்தன.

செம்மை, கருமை போன்ற நிறங்கள் அடிப்படையிலும் ஊர்ப்பெயர்கள் உள்ளன. தஞ்சை நாட்டில் உள்ள செங்காட்டங்குடி என்பது அத்தகையது. காவேரிப் பூம்பட்டினத்தின் அருகே தலைச்செங்கானம் என்ற ஊர் உள்ளது. இது சங்க இலக்கியத்திலும் தேவாரத்திலும் குறிக்கப்பெறுகிறது. சேலம் நாட்டில் உள்ள செங்குன்று செங்கோடு என்று ஆயிற்று. நம்மாழ்வாரால் பாடப்பெற்ற செங்கனூர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருவண்ணாமலையின் மறுபெயராகச் செங்குன்றம் என்பதைக் கூறுவர். செங்குழம், செங்களக்குறிச்சி, கருங்குளம், கார்குறிச்சி போன்ற ஊர்ப்பெயர்கள் கருமையின் அடிப்படையில் அமைந்தன. கரிசல் என்ற பெயரும் சின்னக்கரிசில், குலையன் கரிசில், கருமையின் அடிப்படையில், செவல், கீழச்செவல், முள்ளிச்செவல் போன்ற ஊர்களும் உள்ளன. வெண்மையின் அடிப்படையில் திருவெண்காடு, திருவெண்பாக்கம், திருவெள்ளாறை முதலிய ஊர்ப்பெயர்கள் உள்ளன.

மேடுபள்ளம் என்ற நிலையிலும் ஊர்கள் அமைந்துள்ளன. கள்ளிமேடு, மேட்டுப்பாளையம், மேட்டிலிருந்து திட்டை திடல் என்ற நிலையிலும் ஊர்ப்பெயர்கள் தோன்றின. தஞ்சை நாட்டில் திட்டை என்ற ஊர்க்குச் சான்று நடுத்திட்டு. மாளிகைத்திடல், பிள்ளையார் திடல், கருந்திட்டைக்குடி போன்ற ஊர்களும் உள்ளன. பள்ளம் என்ற சொல்லோடு பெரும்பள்ளம், இளம்பள்ளம், ஆலம்பள்ளம், எருக்கம்பள்ளம், முன்னீர்ப்பள்ளம், பள்ளத்தூர் போன்ற ஊர்கள் உள்ளன.

பள்ளத்தில் இருந்து குழி என்ற நிலையில் கருங்குழி, ஊற்றுக்குழி, அல்லிக்குழி, பள்ளக்குழி, குழித்தலை போன்ற ஊர்கள் அமைந்துள்ளன. பள்ளத்தைத் தாழ்வு என்று குறிக்கின்ற நிலையில் தாழ்வு, தாவு ஆகி, கருங்குழித்தாவு, பணிக்கத்தாவு போன்ற ஊர்ப் பெயர்களும் உள்ளன.

மரங்களின் அடியில் ஊர்கள் இருந்ததால் தாழ், அடி என்ற பெயர்களுடைய ஊர்கள் வந்தன. திருப்பனந்தாள், முருக்கந்தாள், ஆலந்தாள், ஈச்சந்தாள், கருவந்தாள் என்ற பெயர்களும் மாவடி, ஆலடி, இலவடி, மூங்கிலடி போன்ற ஊர்களும் உள்ளன.

ஊர்ப்பொதுவாக அமைந்த இடம் நத்தம் என்று அழைக்கப்பெற்றது. கீழநத்தம், மேலநத்தம், திருப்பணி நத்தம், பெரிய நத்தம் என்பன உள்ளன.

களம் என்ற சொல்லால் அமைந்த திருவேட்களம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இருப்பிடமாக உள்ளது. களத்தூர், புகழேந்தி பிறந்த ஊர். வெளி என்ற சொல்லில் அமைந்த ஊர்ப்பெயர் வடக்கு வேளி எருமை வெளியனார் வீரைவெளியனார் எனும் புலவர் பெயர்களால் தெளிவாகிறது.

### படை—அரணும் அமர்க்களமும்

எயில் என்ற சொல் அரணைக்குறிக்கும். காஞ்சியை எயிற்பதி என்று சேக்கிழார் குறித்துள்ளார். சோழநாட்டில் உள்ள பேரெயில் ஊர் இப்போது பேரையூர் என வழங்குகின்றது. கானப்பேரெயிலுக்கு அணித்தாக ஏழெயில் என்னும் கோட்டை ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. இராமநாதபுரத்துச் சிவகங்கை வட்டத்தில் எழுபொன் கோட்டை என வழங்கும் ஊரே பழைய ஏழெயில் என்று கூறுவர். ஆழ்வார்திருநகரிக்கு அருகே பேரெயில் இருந்ததாகத் தெரிகின்றது. அது திருப்பேரெயில். பின்பு திருப்பேரை என்று ஆயிற்று. சேலம் நாட்டு ஆற்றூர் வட்டத்தில் உள்ள ஆறகழூர் என்பது அகழி என்ற சொல்லின் அடிப்படையில் அமைந்த ஊராகத் தோன்றுகிறது.

இஞ்சி என்ற சொல் கோட்டையின் மதிற்சுவரைக் குறிக்கும். பாண்டியநாட்டில் வடபழஞ்சி, தென்பழஞ்சி, நெல்லைநாட்டில் நாங்குநேரிக்கு அருகே பெரும்பழஞ்சி, சிறுபழஞ்சி போன்ற ஊர்கள் உள்ளன. இக்காலத்தில் பெரும்பழஞ்சிக்கு வழங்கும் தளபதி சமுத்திரம் என்ற பெயரும் அவ்வூரின் வீரப்பான்மையைக் குறிக்கும்.

ஆரை என்ற சொல் மதில் உறுப்பின் ஒரு பகுதியைக் குறிக்கும். சேலநாட்டில் ஆரைக்கல் என்ற கோட்டை உண்டு. ஆரைக்கல் என்ற பெயர் நாமக்கல் என்பதாயிற்று என்பது கருத்து.

அகழி சூழ்ந்த கோட்டையைக் கிடங்கில் என்றும் கூறுவது உண்டு. சிறுபாணாற்றுப்படையில் நல்லியக்கோடனைப் பாடும்போது கிடங்கிலின் சிறப்பைக் கூறுகிறார் புலவர். அது இன்று திண்டிவனம் அருகே கிடங்கால் என்னும் பெயரோடு வழங்குகிறது.

அரசனுக்குரிய படைகள் அமைந்த இடம் படைவீடு எனப்படும். நெல்லை நாட்டில் உள்ள படைவீடு மணப்படை வீடு. இப்போது மணப்படை என வழங்கும். அவ்வூரின் அருகே கொட்டாரம், செப்பறை போன்ற சிற்றூர்களும் உள்ளன. பாண்டிய நாட்டின் பண்டைத் துறைமுகமான கொற்கைக்கு மணப்படைவீடு சிறந்த பாதுகாப்பாக அமைந்திருந்தது.

படைவீரர்க்குரிய ஊர் பாளையம் எனப்பெறும். தமிழகம் முழுவதும் பாளையங்கள் காணப்படுகின்றன. பாளையங் கோட்டை, மேட்டுப்பாளையம், கோபிச்செட்டிப்பாளையம், உத்தமபாளையம், உடையார்பாளையம், மேலப்பாளையம் என்ற பெயர்கள் நினைக்கத்தக்கன.

வல்லம் என்ற சொல்லும் அரணுடைய ஊரைக் குறிப்பதாகத் தெரிகிறது. வடஆர்க்காட்டில் உள்ள திருவல்லம் என்னும் ஊர் பாணமன்னர்களுக்குரிய கோட்டைகளில் ஒன்றாக விளங்கியது. தஞ்சாவூருக்குத் தென்மேற்கே ஏழுமைல் தூரத்தில் வல்லம் என்ற ஊர் உண்டு.

கோட்டை என்ற சொல்லால் அமைந்த ஊர்களும் உள்ளன. நிலக்கோட்டை, திருமங்கலத்துக்கு அண்மையில் உள்ள கீழக்கோட்டை, மேலக்கோட்டை, நடுக்கோட்டை என்ற ஊர்களும் உள்ளன. தொண்டைமான் குலத்தினர் ஆளும் புதுக்கோட்டையும், தலைவன் கோட்டை, உக்கிரன்கோட்டை என்ற ஊர்ப்பெயர்களும் நினைக்கத்தக்கன.

மலைகளில் அமைந்த கோட்டை துர்க்கம் என்று பெயர் பெறும். வடஆர்க்காட்டு வள்ளிமலைக்கு அருகே உள்ள கோட்டை மகிமண்டலதுர்க்கம் என்று குறிக்கப்பெறுகின்றது.

கோட்டையைக் காப்பது காவலாகும். கோயம்புத்தூரைச் சேர்ந்த நடுக்காவல் என்னும் ஊரும் செங்கல்பட்டு என்னும் ஊரில் கோட்டையும், உத்தர கெடிக்காவலும், இந்நிலையில் பெயர்பெற்றன.

காவலுக்கு ஆண்மை தேவை. ஆண்மையூர் என்ற ஊர் கல்வெட்டுக்களில் காணப்பெறுகிறது.

வீரவிருதுகளாலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. செய்யாற்று வென்றான், பாலாற்று வென்றான், என்று மன்னர் பாராட்டப் பெற்றனர். இந்நிலையில் நெல்லைமாவட்டத்தில் எப்போதும் வென்றான் என்ற ஊர் உள்ளது. வீரர்கள் பிறர் வீரத்தை அடக்கி வென்ற போது காத்தான் என்று அவன் அழைக்கப்பெறுகிறான். அந்நிலையிலும் ஊர்ப்பெயர்கள் உள்ளன. தென்னார்க்காட்டில் உலகம் காத்தான் என்ற ஊரும் பாண்டி நாட்டில் கானாடு காத்தான், மானங்காத்தான் போன்ற ஊர்களும் எண்ணத்தக்கன.

ஏனாதி என்ற விருதினை அரசனிடம் இருந்து சிலர் பெற்றனர். ஏனாதி மங்கலம் என்ற ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூர் வட்டத்தில் உள்ளது. விருத்தாசல வட்டத்தில் ஏனாதி மேடு என்ற ஊர் உண்டு.

வீரத்தின் அடிப்படையில் அமைந்த பெயர்களாக வீரமங்கலம், பரிவீரமங்கலம், கொற்றமங்கலம், செருமங்கலம் போன்ற ஊர்கள் அமைந்துள்ளன.

### 4. குலமும் கோவும்

நாகர் என்ற ஓர் இனத்தினர் தமிழகத்தில் வாழ்ந்தனர். தலைச்சங்கத்தின் முறைஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் சங்கப்புலவருடன் வீற்றிருந்து முத்தமிழை வளர்த்தார் என்று கூறப்பெறுகின்றது. நாகன் என்ற சொல் பல புலவர்களின் பெயர்களில் காணப்பெறுகிறது: நன்னாகன், இளநாகன், வெண்நாகன். இவற்றின் அடிப்படையில் அமைந்த ஊர்ப்பெயர்களாக நாகர்கோவில் என்பதும் நாகபட்டினம் என்பதும் அமைந்தன என்று கூறலாம்.

அருவர் என்று ஓர் இனத்தார் ஆந்திரா நாட்டிற்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே சில பகுதிகளை ஆண்டுவந்தனர். ஆந்திர நாட்டார் தென்பகுதியினரை அருவர் என்றே அழைத்தனர். தமிழ்மொழியைத் தெலுங்கர் அரவம் என்று கூறினர். இந்நிலையில் தோன்றிய ஊரே! அரவக்குறிச்சி என்பதும் நீலகிரிமலையிலுள்ள அரவங்காடு என்பதும்.

மழவர் என்பது சிறந்த படைவீரரைக் குறித்தது. மழவர் உருவாக்கியது மழவர் பாடி என்று ஆயிற்று. அது பின்பு மழபாடி என்று வழங்கிற்று.

திரையர் என்னும் பழந்தமிழ் வகுப்பார் இருந்தனர். திரையிலிருந்து தோன்றியவன்தான் இளந்திரையன் என்ற தொண்டைநாட்டை ஆண்ட அரசன். அவன்பெயரால் திரையனேரி என்ற ஊர் உண்டாயிற்று. இப்போது அது தென்னேரி என விளங்குகின்றது.

முத்தரையர் என்ற இனத்தார் படைவீரராகத் தமிழகத்தில் வாழ்ந்தனர். கல்வெட்டுக்களில் சத்துரு பயங்கர முத்தரையன், பெரும்பிடுகு முத்தரையன் இவர்களின் வீரச்செயல்கள் குறிக்கப்பெறுகின்றன. இராமநாதபுரத்தில் உள்ள முத்தரசன் என்னும் ஊரும் தஞ்சை நாட்டில் உள்ள முத்தரசபுரம் என்ற ஊரும் திருச்சி நாட்டில் உள்ள முத்தரச நல்லூர் என்ற ஊரும் முத்தரசர் பெருமையை உணர்த்துகின்றன.

முனையர் என்போர் ஓர் இனத்தார். அதன் வழி வந்தது திருமுனைப்பாடி நாடு. பாணர் என்றும் வாணர் என்றும் பெயர் பெற்ற குடியினர் தமிழ்நாட்டின் சில பகுதிகளை ஆண்டனர். பெரும்பாணப்பாடி, வாணபுலம் போன்ற பெயர்களும் வடஆர்க்காட்டில் உள்ள சோழிங்கர்க்கு அண்மையில் உள்ள பாணவரும் என்ற ஊரும் பாணர் குடியை நினைவூட்டுகின்றன.

அதியர் என்ற மற்றொரு குலத்தார் தமிழகத்தில் இருந்தனர். அதியமான், அதியகோமான், அதியமான் நெடுமான் அஞ்சி என்றெல்லாம் அழைக்கப்பெற்றவன் அக்குலத்தைச் சார்ந்தவன். அதமன் கோட்டை என்ற ஊர் அதிகமானால் கட்டப்பட்டது என்பதை நாம் அறிவோம். சேலம் நாட்டில் உள்ள அதகப்பாடியும் செங்கல்பட்டில் உள்ள அதிகமான் நல்லூரும் அவ்வரசனோடு தொடர்புடையனவாகத் தோன்றுகின்றன.

ஆவியர் குலம் என்ற மற்றொரு தமிழ்க்குலத்தினர் பழனிமலைப்பகுதியை ஆண்டுவந்தனர். ஆவியர்கோமான் என அவன் அழைக்கப்பெற்றான். கடையேழு வள்ளல்களில் ஒருவனான பேகன் அக்குலத்தலைவர்களுள் ஒருவன். திருஆவினன் குடி என்பது பழனியின் ஒரு பெயர்.

ஆவியரைப்போல ஓவியர் என்னும் வகுப்பாரும் தமிழகத்தில் இருந்தனர். சிறுபாணாற்றுப்படையில் பாட்டுடைத்

தலைவனாகிய நல்லியக்கோடன் அவ்வகுப்பைச் சார்ந்தவன். ஓவியர் நாடே ஒயுமா நாடே எனச் சிதைந்திருத்தல் கூடும்.

வேளிர் என்ற இனத்தார் முன்னாளில் தமிழகத்தில் விளங்கினர். அவர் இருக்குவேளிர் எனப் பெயர்பெற்றுப் புதுக்கோட்டை நாட்டில் உள்ள கொடும்பாளூர் என்னும் ஊரில் வாழ்ந்துவந்தனர். புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் அதன் அடிப்படையில் வந்ததுதான்.

குறுக்கயர் என்ற வேளாளர் குலத்தைச் சார்ந்த பழங்குடிகள், பழங்குடிகளுள் ஒருவர். திருநாவுக்கரசர் அக்குடியைச் சேர்ந்தவர் என்பது சேக்கிழார் பாட்டால் விளங்குகின்றது. திருப்பிடவூர் நாட்டுக்குறுக்கை இப்பொழுது பெரிய குறுக்கை என்னும் பெயரோடு திருச்சி நாட்டு லால்குடி வட்டத்தில் உள்ளது. திருநாரையூர் நாட்டுக்குறுக்கை என்று கல்வெட்டில் கூறப்பெறுவது கொறுக்கை என்னும் பெயர்கொண்டு கும்பகோணம் வட்டத்தில் காணப்படுகின்றது.

## முடிமன்னர் குடி

சோழர் செம்பியன், வளவன், சென்னி முதலிய பெயர்களால் அழைக்கப்பெற்றனர். வட ஆர்க்காட்டில் உள்ள செம்பிய மங்கலம், தஞ்சை நாட்டில் உள்ள செம்பிய நல்லூர், பாண்டிய நாட்டில் உள்ள செம்பியன் ஏந்தல் முதலிய ஊர்கள் செம்பியன் பெயரைத் தாங்கி நிற்கின்றன. தஞ்சை நாட்டில் உள்ள செம்பங்குடி செம்பியன் குடியாக இருந்திருக்கலாம். தென்னார்க்காடு வளவனூர், வடஆர்க்காட்டு வளைத்தூர் என்னும் வளவன் ஆற்றூர், தஞ்சை நாட்டில் உள்ள வளவநல்லூர், செங்கல்பட்டில் உள்ள வளவன் தாங்கல் முதலிய ஊர்ப்பெயர்களில் வளவன் என்னும் சொல் காணப்பெறுகின்றது. தஞ்சை நாட்டில் சென்னிவனம், சென்னியநல்லூர், சென்னிய விடுதி போன்ற ஊர்கள் உள்ளன.

பாண்டிய மன்னனுக்குத் தென்னவன், மீனவன், மாறன், செழியன் எனப் பல சிறப்புப் பெயர்கள் உள்ளன. அதன் அடிப்படையில் அமைந்த தென்னன்குடி, தென்னன்பட்டி, தென்னவ நல்லூர், தென்னவநாடு முதலிய ஊர்கள், தென்னவனோடு தொடர்புடையன. மாறன் என்ற பெயரால் மாறனேரி, மாறமங்கலம் மாறனூத்து, போன்ற பெயர்களும்

காண்கிறோம். நெல்லை நாட்டில் உள்ள செழியநல்லூர், செழியன் பெயரைப் பெற்றுள்ளது.

ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் என்று ஒரு பாண்டியன் இருந்தான். அவனைப் புலவர் பாராட்டியுள்ளனர். தென்திருவிதாங்கூர் தேசத்தில் பூதப்பாண்டி என்றொரு ஊர் உண்டு. அழகியபண்டியபுரம் என்றொரு ஊரும் உள்ளது. 7ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மதுரைமாநகரில் அரசாண்டவன் சேந்தன் என்னும் செழியன். அவனைச் சிலைத்தடக்கைச் செழியன், செங்கோல்சேந்தன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. சேந்தமங்கலம் என்ற ஊர் பாண்டிய நாட்டில் உண்டு. திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்திருந்த பாண்டியன் அரிகேசரி மாறவர்மன் மகனாகிய கோச்சடையன் பல்லவனை வென்று புகழ்பெற்று வாழ்ந்தான். இராமநாதபுர நாட்டில் கோச்சடை என்ற ஊர் அவன் பெயர் தாங்கி நிற்கின்றது.

வரகுண பாண்டியன் என்பவன் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்தான். அவன் பெயரால் ஏற்பட்டது வரகுணன் ஏரி என்பது. அது வரகநேரி என மருவி, திருச்சிராப்பள்ளிக்கு அருகே உள்ளது. வீரநாராயணன் என்ற விருதுப் பெயர் கொண்ட பாண்டியன் சேரகுல மங்கையைத் திருமணம் செய்து கொண்டான். அவன் பெயரால் சேரவன் மாதேவி என்ற பெயர் இன்று சேரன்மாதேவி எனத் திரிந்து வழங்குகின்றது.

சோழன் தலைக்கொண்ட கோ.வீரபாண்டியன் என்று ஒருவன் வாழ்ந்தான். அவன் சோழாந்தகன் எனவும் அழைக்கப்பெற்றான். அவன் பெயரால் சோழாந்தக சதுர்வேதி மங்கலம் என்ற ஓர் ஊர் இருந்தது. சோழாந்தகன் என்ற பெயர் சோழவந்தான் என மறுவியுள்ளது. அவ்வீரபாண்டியன் பெயரால் நெல்லை நாட்டில் நான்குநேரி வட்டத்தில் வீரபாண்டியன் நல்லூர் என்ற ஊர் இருந்தது. அது வீரபாண்டியம் என இப்போது வழங்கப்படுகிறது.

சோழர்கள் தமிழகத்தை ஆண்டபோது தென்பகுதியில் பாண்டியர்கள் பல முறை சோழர்களை வெல்லமுயன்று போர்செய்தனர். அவர்களுள் மானாபரணனும் வீரகேரளனும் போர்க்களத்தில் இறந்தனர். அவர்கள் பெயரால் மானாபரணநல்லூர் என்றும் வீரகேரளன்புதூர் என்றும்

அவர்களது உரிமைப் போராட்டத்தின் நினைவாக ஊர்ப்பெயர்கள் உள்ளன.

பாண்டிய நாட்டில் உள்ள ஊர்களில் மாறனேரி என்ற ஓர் ஊர் உண்டு. அது மாறமங்கலம் என முன்பு வழங்கப்பெற்றதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. அதேபோன்று சுந்தரபாண்டியன் நல்லூர், சுந்தரபாண்டீச்சரம் போன்ற பெயர்கள் பாண்டியர்களின் பெயரை நினைவூட்டுகின்றன. இராசகம்பீரன் என்பது பாண்டியனது விருதுப்பெயர்களுள் ஒன்று. இராசகம்பீர சதுர்வேதி மங்கலம் என்ற ஊரை அவன் உண்டாக்கினான். இக்காலத்தில் இராமநாதபுரத்தில் சிவகங்கை வட்டத்திலுள்ள இராசம்பீரமே அவ்வூர்.

ஸ்ரீவல்லபன் என்ற பாண்டியன் செம்பினால் மதில் கட்டி, கோட்டை கட்டி இருந்த ஊர் இன்று செப்பரை என்று வழங்குகின்றது. அதற்கு அண்மையில் இராசவல்லிபுரம் என்பது அவன் பெயரால் அமைந்துள்ளது. (அவ்வூரில்தான் ரா.பி.சேதுப்பிள்ளை தோன்றினார்.)

பாரதநாட்டில் இந்துக்கள் போற்றும் புண்ணியதலம் காசியாகும். அப்பதியின் பெயரால் பல காசிகள் தென்பகுதியில் தோன்றின. அவை தென்காசியும் சிவகாசியும் ஆகும்.

பாண்டியருக்குப் பின்பு விசயநகரப்பேரரசர்களின் சார்பாக நாயக்கர்கள் அப்பகுதியை ஆண்டனர். அவர்களுள் ஒருவன் கிருஷ்ணப்ப நாயக்கன். அவன் பெயரால் அமைந்த ஊர் கிருஷ்ணாபுரம் என்பது. அது பாளையங்கோட்டைக்கு அருகே உள்ளது. அவன் பெயரால் அமைந்தது. திருமலை நாயக்கன் படுகை என்ற ஊரும் திருச்சிக்கு அருகே உள்ள திருமலை. சமுத்திரம் என்ற ஊரும் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கன் பெயரில் ஏற்பட்ட ஊர்கள். நாயக்கர்கள் மதுரையில் அரசு புரிந்தபோது பெருந்துணை புரிந்தவர் அரியநாத முதலியார். அவர் பொருநை ஆற்றில் அணை கட்டி நாட்டை வளம்கொழிக்கச் செய்தார். அவர் பெயரால் அவ்வணை அரியநாத முதலியார் அணை என்று இன்றும் அழைக்கப்பெறுகின்றது. அதோடு அரியநாயகிபுரம் என்ற ஊரும் இப்போது நெல்லை மாவட்டத்தில் உள்ளது.

வீரராகவ முதலியார் என்பவர் அவருக்கு உதவிய காரணத்தால் வீரராகவபுரம் என்ற ஊர் நெல்லைப் பகுதியில் உள்ளது.

திருவேங்கடநாதன் என்பவர் நாயக்கரது பிரதிநிதியாக நெல்லை நாட்டில் நிருவாகத்தை நடத்தி வந்தார். அவர் பெயரால் அமைந்த ஊர் திருவேங்கடநாதபுரம் என்பது.

விசயநகரப் பேரரசில் பல தொல்லைகள் ஏற்பட்டபோது அங்குள்ள நாயக்கர்கள் தென்பகுதிக்கு வந்தும் ஆட்சிபுரிந்தனர். அவ்வாறு ஆட்சிபுரிந்த எட்டப்ப நாயக்கர் ஆட்சி செய்த ஊர்தான் எட்டயபுரம். அதேபோன்று போடியநாயக்கனூர் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்லவர்கள் தமிழகத்தைப் பல ஆண்டுகள் ஆண்டனர். அவர்கள் பெயராலும் பல ஊர்கள் அமைந்தன. வடஆர்க்காட்டில் உள்ள மகேந்திரவாடி என்பது மகேந்திர பல்லவன் பெயரால் அமைந்த ஊர். சென்னைக்கு அருகில் உள்ள பல்லவபுரமே பல்லாவரம் ஆயிற்று என்பதை நாம் அறிவோம். மாமல்லன் என்ற மறுபெயருடைய நரசிங்கவர்மன் தொண்டை நாட்டின் பண்டைத்துறைமுகமாகிய கடல்மல்லையைத் திருத்தினான். அவன் பெயரால் அமைந்தது மாமல்லபுரம்.

நந்திவர்ம பல்லவனுக்கு உதவிய உதயசந்திரன் என்ற போர்வீரன் பெயராலும் வடஆர்க்காட்டுக் குடியாத்தம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர் உதேந்திரம் ஆகும்.

சோழர்கள் ஆட்சி செய்த காலத்திலும் சோழர்களின் விருதுப்பெயர்களால் பல ஊர்கள் அமைந்தன. இராசகேசரி என்ற பெயரில் அமைந்த ஊரே இராசகிரி என்று கூறுவர். பராந்தகன் என்ற சோழனின் விருதுப்பெயர்களில் ஒன்று வீரநாராயணன் என்பது. அவன் பெயரால் அமைந்ததுதான். வீரநாராயணன் ஏரி வீராணத்தேரி- வீராணம் என வழங்கும். மதுரை அரசர்களை முடிவுக்குக் கொண்டுவந்ததால் மதுராந்தகம் என அவன் அழைக்கப்பெற்றான். அவன் பெயரால் அமைந்த ஊர்தான் மதுராந்தகம் என்பது. சோழர்குடியில் சீலத்தால் சிறந்தவள் செம்பியன் மாதேவி. அவள் பெயரால் அமைந்த ஊர் செம்பியன் மாதேவி. உத்தமசோழன் பெயரால் அமைந்த உத்தமசோழபுரம் சிதம்பரம் வட்டத்தில் காணப்படுகிறது. உத்தமசோழ மங்கலம் ஆகும். மதுராந்தக வட்டத்தில் உள்ள உத்தம நல்லூர், சேலம் நாட்டில் உள்ள உத்தம சோழபுரம் போன்றவை இவன் பெயரால் அமைந்த ஊர்கள்.

இராசராசசோழன் சோழர்களில் பேரரசனாக வாழ்ந்தவன். தேவாரத்திருப்பாசுரங்களைத் தொகுத்தவன். இராசராசனது விருதுப்பெயர்கள் மிகப்பல. பட்டுக்கோட்டை வட்டத்தில் உள்ள சோழபுரம் என்ற ஊர் இவன் பெயரால் அமைந்துள்ளது. நாஞ்சில் நாட்டில் நாகர்கோயிலுக்கு அருகு உள்ள கோட்டாறு ஓர் ஊர் பழங்காலத்தில் மும்முடிச்சோழ நல்லூர் இவன் பெயரால் வழங்கியது. மும்முடிச்சோழ மங்கலம் (திருச்சி), மும்முடிக்குப்பம் (செல்கல்பட்டு), மும்முடிச்சோழகன் (தென்னார்க்காடு) போன்ற ஊர்கள் இவனது பெயரால் அமைந்தவை.

நெல்லை நாட்டில் உள்ள இராதாபுரம் இவன் பெயரால் அமைந்தது. அது இராயராயபுரம் எனக் கல்வெட்டில் வழங்கப்பெறுகின்றது. ஜெயங்கொண்ட சோழபுரம் என்பது ஜெயங்கொண்டான் என்று இன்றும் வழங்குகின்றது. கங்கைகொண்டான் என்ற ஊரும் தென்பகுதியில் உள்ளது. சோழவந்தான், சோழபுரம் போன்ற பல ஊர்கள் தென்பகுதியில் உள்ளன.

குலோத்துங்கசோழன் தேவியாகிய தீனசிந்தாமணி என்ற பெயரால் அமைந்த ஊர்கள் சிந்தாமணி என்ற பெயரில் தென்னார்க்காட்டிலும் நெல்லை மாவட்டத்திலும் அமைந்துள்ளன. மூன்றாம் குலோத்துங்க சோழனின் விருதுப்பெயரால் அமைந்த ஊர் திரிபுவனம் என்பது. அவன் சிறப்புப் பெயர்களுள் ஒன்று திரிபுவன வீரன் என்பது. இரண்டாம் இராசராசன் காலத்தில் பெருமான் நம்பிப் பல்லவராயன் என்பவர் தலைமை அமைச்சராக இருந்தார். அவர் பெயரால் அமைந்த ஊர் பல்லவராயன் பேட்டை என்பது. பரகேசரி என்ற பட்டம் சோழர்களுக்கு உண்டு. அவ்வாறு அமைந்த ஊர்தான் பரகேசரி நல்லூர் என்பது.

சோழமன்னர் காலத்தில் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் பலர் இருந்தனர். கொங்குராயன், சேதிராயன், மழவராயன், பல்லவராயன் என அவர்கள் அழைக்கப்பெற்றனர். தென்னார்க்காட்டில் உள்ள கொங்குராய பாளையம், நெல்லைநாட்டில் உள்ள கொங்குராயக்குறிச்சியும் இவர்கள் பெயரால் அமைந்தன என்பதை நினைவூட்டுகின்றன. தென்னார்க்காட்டில் உள்ள சேதிராயன் நல்லூர் மழவராயன்

ஊர், மழவராயன் நல்லூர் போன்ற பெயர்கள் இவைகளை நினைவுபடுத்துகின்றன.

சோழர் ஆட்சிக்குப்பின்பு 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் மராட்டிய மன்னர் தஞ்சையை ஆண்டனர். அவர்கள் பெயராலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன, சரபோஜி ராஜபுரம் துளசாபுரம், துளசேந்திரபுரம் போன்றவை அவர்கள் பெயரால் அமைந்த ஊர்கள்.

சங்க காலத்தில் வாழ்ந்தவன் பாரி. பறம்பு நாட்டில் அவன் வாழ்ந்தான். அது இன்று பிரான்மலை எனப்படுகின்றது.

பொதியை மலைக்கு அண்மையில் ஆய் அண்டிரன் வாழ்ந்தான். அது ஆய் குடி எனப்பெற்றது. மலையமான் திருமுடிக்காரி சேலம்பகுதியில் ஆட்சிபுரிந்தான். அங்கு மாரிமங்கலம் என்ற ஓர் ஊர் உண்டு. ஓரி என்று ஒரு கொடைவள்ளல் வாழ்ந்தான். அவன் பெயரால் கோவை நாட்டுப் பவானி வட்டத்து ஓரி சேரி என்ற ஓர் ஊர் உள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள வடஆர்க்காடு வட்டத்தில் மகமதிய தலைவர்கள் பெயரால் அமைந்த ஊர்கள் சில உண்டு. அவ்வாறு அமைந்த ஊர் வாலாஜாபேட்டை என்பது. வாலாஜாபாத் என்னும் முகமது அலியின் பெயரைத்தாங்கி நிற்கின்றது. தேசிங்குராசன் மகமதிய நவாப்பாகிய சாதுல் லாத்கான் என்பவனோடு போரிட்டு மடிந்தான். அவன் இராணி உடன்கட்டை ஏறினாள். அவன் பெயரால் அமைந்த சென்னை அருகில் உள்ள சைதாபேட்டை, வடஆர்க்காட்டில் உள்ள ஜாவர்பேட்டை, ஊர்தானாப் பேட்டை போன்ற ஊர்கள் மகமதிய சம்பந்தமுடைய ஊர்கள்.

தமிழ்நாட்டில் மகமதிய வகுப்பாரைக் குறிக்கும் ராவுத்தர், மரக்காயர் முதலிய பெயர்களுள் ஊர்ப்பெயர்களில் புகுந்தன. தென்னார்க்காட்டில் உள்ள ராவுத்த நல்லூரும் இராமநாதபுரத்தில் மரக்காயர் பட்டினமும் இதற்குச் சான்றாகும்.

வடஆர்க்காட்டு வேலூருக்கு அருகே உள்ள ஊசூர் என்பது ஊசேனூர் என்று திரிந்துள்ளது.

திருச்சி நாட்டில் உள்ள லால்குடி என்னும் ஊருக்கு அப்பெயரிட்டவர் முகமதியரே. முன்னாளில் தவத்துறை என்பது

அதன் பெயர். அங்குள்ள செங்கோபுரத்தைக் கண்டு லால்குடி எனப்பெயரிட்டனர். பாரசீக மொழியில் லால்குடி என்பதற்குச் செம்பதுமை என்பது பொருளாம்.

கிறித்தவர்கள் சார்பாகவும் பல ஊர்ப்பெயர்கள் அமைந்தன. நெல்லை நாட்டில் உள்ள நாசரேத்து, சுவிசேசபுரம், மெஞ்ஞானபுரம், ஆரோக்கியபுரம், சந்தோசபுரம், நீதிபுரம் போன்றவை குறிக்கத்தக்கன. வீரமாமுனிவர் திருக்காவலூர் என்ற பெயரை அமைத்தார். வீரமாமுனிவரின் வேதியர் ஒழுக்கம் என்ற நூலின் அடிப்படையில் வேதியர்புரம் என்ற ஊர் தஞ்சாவூருக்குத் தென்கிழக்கே எட்டு மைல் தூரத்தில் உள்ளது. சான்றோர் பெய்ர்களாலும் ஊர்ப்பெயர்கள் அமைந்தன. ஆவ்வூர்களில் நம்மாழ்வார் நாவீறுடையார் என்று அழைக்கப்பெற்றார். அவர்பெயரால் அமைந்த நாவீறுடையபுரம். சிறுத்தொண்டர் நாயனார் பெயரால் அமைந்த ஊர் சிறுத்தொண்ட நல்லூர். சண்டேசுவரநாயனாரால் அமைந்த பெயர் தண்டேசுவரநல்லூர். அதுசிதம்பரம் வட்டத்தில் உள்ளது. சோமாசிமாறநாயனார் பெயரால் அமைந்த ஊர் சோமாசி என்பது இராமநாதபுரத்துப் பரமக்குடி வட்டத்தில் உள்ளது.

மாணிக்கவாசகர் திருவாத ஊரில் பிறந்ததால் அவர் திருவாத ஊரர் ஆயினார். திருமொழிசை என்ற ஊரில் திருமொழிசை ஆழ்வார் பிறந்தார்.

### புலவரும் ஊர்ப்பெயரும்

பொதும்பியல் கிழார், பொதும்பில் வில்லாளம் கண்ணியார், என்பன சங்ககாலப் புலவர் பெயர்கள். பாண்டிய நாட்டு மதுரை வட்டத்தில் உள்ள பொதும்பு என்னும் ஊரே பொதும்பில் என்பர்.

காவிதி, குலபதி பட்டம் பெற்ற புலவர்கள், காவிதிப் பெருங்கொற்றனார், காவிதி கீரங்கண்ணனார், குலபதி நக்கண்ணனார் என ஊர்ப் பெயரால் பெயர் பெற்றனர். கிடங்கில் என்னும் ஊர் கிடங்கால் என்ற பெயரோடு திண்டிவனம் அருகே உள்ளது.

நொச்சி நியமங்கிழார் என்பார் நொச்சி என்ற ஊரைச் சார்ந்தவர். இப்பொழுது அப்பெயர் நொச்சியம் என மருவி விளங்குகின்றது.

கிள்ளி என்ற ஊரில் பிறந்தவர் மங்கலம் கிழார். இப்போது அவ்வூர் கிண்ணிமங்கலம் என மருவி வழங்குகின்றது. பிசிராந்தையார் என்ற புலவர் பிசிர் என்ற ஊரைச்சார்ந்தவர். அவ்வூர் இராமநாதபுரம் நாட்டில் பிசிர்குடி என வழங்கப்பெறுகின்றது.

முடமோசியார், மோசி கீரனார், மோசி கொற்றனர், மோசி சாத்தனார், மோசி கண்ணத்தனார் என மோசி என்ற ஊரில் பிறந்த புலவர் பலர். இராமநாதபுரத்துச் சிவகங்கை வட்டத்தில் மோசுகுடி என்றொரு ஊர் உள்ளது. அழிசி நச்சாத்தனார் என்ற புலவர் அழிசி என்ற ஊரில் தோன்றியவர். அது அழிசிகுடி எனச் சிதம்பரம் வட்டத்தில் உள்ளது. இவ்வாறு பழங்காலத்தில் புலவர்கள் ஊர்ப்பெயரை இணைத்துத் தம்பெயரைக் கூறினர். அவ்வழக்கு இப்போதும் உள்ளது.

## ஆட்பெயரும் ஊர்ப்பெயரும்

கீரனூரில் தோன்றியவர் நக்கீரர். இளங்கோவடிகளின் தந்தையின் பெயர் சேரலாதன். ஆதன் என்பது ஊர்ப்பெயர். கோடன் என்ற ஆட்பெயர் கோடநூர் என்று வழங்கி தற்போது கோடகநல்லூர் என வழங்கிவருகிறது.

டோனா என்ற ஜெர்மனிநாட்டைச் சேர்ந்த பெருஞ்செல்வர் நன்கொடை அழித்து மருத்துவமனை ஏற்படுத்திய இடம் டோனாவூர் என வழங்குகின்றது. சாயர் என்ற போர்ச்சுக்கீசிய வணிகர் வாங்கி உருவாக்கிய இடம் சாயர்புரம் என அழைக்கப்பெறுகிறது. காசாமேசர் என்ற ஆங்கிலநாட்டு வர்த்தகர் குற்றாலத்துக்கு அருகே தோட்டக்கலை வளர்த்து வாழ்ந்தார். அவர் வாழ்ந்த இடம் காசமேசர் புரம் என்று அழைக்கப்பெற்று இன்று காசிமேசர்புரம் ஆகின்றது.

சேலம் நாட்டில் மகுடம் சாவடி என்பது ஓர் ஊரின் பெயர். மேக்டனால் என்ற படைத்தலைவன் சிலகாலம் பாசறைகொண்டிருந்த இடம் மேக்டனால் சாவடி. அது மகுடம் சவடி என மருவி வழங்குகின்றது.

## தேவும் தலமும்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் ஊர்ஊராகச் சென்று தெய்வத்தை வழிபட்டனர். தெய்வங்களும் அதன் இருப்பிடங்களும் பல சூழல்களால் பெயர்பெற்றன.

காவிரிக்கரை பெருஞ்சோலையில் ஆனை வழிபட்டதலம் ஆனைக்கா ஆயிற்று. அது பின்பு திருவானைக்கா என ஆயிற்று. நெல்லிவனம் மிகுந்த இடத்தில் இறைவன் உறைந்த இடம் நெல்லிக்கா ஆயிற்று. வைத்தீஸ்வரன் கோயிலுக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள குரக்குக்கா என்பது மந்திரச்சோலை அமைந்தஇடம். அதுபோன்று திருமறைக்காடு திருவெங்காடு போன்ற ஊர்கள் வழிபாட்டு நிலையில் பெற்ற பெயர்கள். தலையாலங்காடு, சாய்க்காடு, திருக்கொள்ளிக்காடு, திருஆலங்காடு, பனங்காடு, திருவேற்காடு, திருக்காரைக்காடு போன்றவை இறைவனை வழிபட்ட நிலையில் அமைந்த ஊர்கள்.

மலை, குன்றம் என்ற சொற்களும் இறைவன் இருக்கின்ற தல அமைப்பில் உள்ளன. திருஈங்கோய் மலை திருக்கைலாய மலை, திருக்கோணமலை, காளத்திமலை, திருவாற்போக்கிமலை, பொதியமலை, குடுமியான்மலை போன்றனவும் திருமுருகுன்றம், திருக்கழுக்குன்றம், திருப்பரங்குன்றம், செங்குன்றம், நெற்குன்றம் போன்றனவும், குன்றக்குடி கற்குடி போன்றவையும் மலை, குன்று, கல் இவற்றின் பெயரால் ஆன ஊர்கள்.

ஆறுகுளம் போன்ற ஊர்களும் இறைவனோடு இணைந்த பெயராக அமைந்துள்ளன.

**நள்ளாறும் பழையாறும் கோட்டாட்டாறு**
**நலந்திகழும் நாலாறும் திருவையாறும் தெள்ளாறும்**

எனத் திருநாவுக்கரசர் பாடுகிறார். திருநள்ளாறு, பழையாறு, கோட்டாறு, திருவையாறு, தெள்ளாறு ஆகிய ஊர்களை இவை குறிக்கின்றன. குடிக்குளம், வழைக்குளம், இடைக்குளம், திருவரங்குளம், பெருங்குளம் போன்றவை நினைக்கத்தக்கன.

துறை என்ற சொல்லும் இறைவன் உறையும் துறைகளோடு பொருந்தி உள்ளது. திருப்பறைத்துறை, திருப்பாலைத்துறை, திருத்துவசத்துறை, திருவெண்துறை, குயிலாந்துறை, திருச்சோற்றுத் திருப்பெருந்துறை, மயிலாடுதுறை, கடம்பந்துறை, திருஆவடுதுறை, திருமாந்துறை, திருச்செந்துறை, திருப்பாற்துறை, திருவெண்ணை நல்லூர் அருட்துறை, திருநெல்வாயில் அரத்துறை, அன்பின் ஆலந்துறை, ஏமப்பேரூர் ஆலந்துறை, இடையாறு மருதன்துறை, குரக்குத்துறை, திருச்சாலைத்துறை, இவ்வாறு பல.

இவ்வாறு அட்டானமும் அம்பலமும் என்ற பெயர்களும் மாடமும், மயானமும் என்ற பெயர்களும், கோயிலும் வாயிலும் என்ற பெயர்களும், தளியும் பழியும் என்ற பெயர்களும், ஈச்சுரம் என்ற பெயர்களும், அரசரும் ஈச்சுரமும் இணைந்த பல்லவன் ஈச்சுரம், குணதர ஈச்சுரம், இராசசிம்மஈச்சுரம், பல்லவேச்சுரம், ஆதித்தேச்சுரம், இராசராசேச்சுரம், தாராசுரம் போன்ற பெயர்களும் உள்ளன.

## பயன்பட்ட கட்டுரைகள்


1. இடப்பெயராய்வு, கி. நாச்சிமுத்து, ஆய்வுமலர், கேரளப்பல்கலைக்கழகம், தமிழ்த்துறைப் பழைய மாணவர் மன்ற வெளியீடு, தொகுதி-1, 1972.

2. உறையூர் அழிந்த வரலாறு, மயிலை சீனி. வேங்கடசாமி, செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 22, பரல் 11, சூலை 1948.

3. ஊர்ப்பெயர் மாற்றங்கள், மா. நயினார், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், பத்தாவது கருத்தரங்கு, ஆய்வுக் கோவை, 1978.

4. ஊர்ப்பெயர்கள், சா. கணேசன் கையேடு, கலைக் காட்சிக்குழு, இரண்டாவது உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, 1968.

5. ஊர்ப்பெயரும் மக்களும், சிவ. மணிகண்டராமன், இ.ப.க.த.ம. கருத்தரங்கு ஆய்வுக் கோவை, 1976.

6. கொற்கை, புலவர் இரா. இளங்குமரன், செந்தமிழ்ச்செல்வி, சிலம்பு 56, பரல்-1, 1981.

7. பழனி, ஊர்ப்பெயராய்வு, பா. அ. மணிமாறன், இ.ப.க.த.ம. 14வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி-3, 1982.

8. மதுரை பெயர்ஆராய்ச்சி, மெ. சுந்தரம், இ.ப.க.த.ம. 9வது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, 1977.

9. விலங்குகளும் ஊர்ப்பெயர்களும், பா.அ. மணிமாறன், இ.ப.க.த.ம., 11வது கருத்தரங்கு, ஆய்வுக்கோவை, தொகுதி-3, 1979.

10. வஞ்சிமா நகர், ஸி.எஸ். செலுவையர், செந்தமிழ், தொகுதி 21, பகுதி-4, 1923.

11. ஊர்ப்பெயர்க் களஞ்சியம், டாக்டர் கு. பகவதி, உலகத் தமிழ்ச் கல்வி இயக்கம், தமிழூர், 1985. சிறப்பு மலர்.

12. வரலாற்றுத் தெளிவிற்கு ஊர்ப்பெயர்கள், கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்கம், பூண்டி, திருச்சி, 2002.

13. ஊர்ப்பெயராய்வும் வரலாற்று விளக்கமும், கடல் கொண்ட தென்னாடு, கு. பகவதி, இடப்பெயராய்வு கருத்தரங்கு, தஞ்சாவூர், 1990.

14. ஊர்ப்பெயர்கள் வரலாற்று மூலம், கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு, 1990.

15. இடப்பெயராய்வும் வரலாற்றுத் தெளிவும், கு. பகவதி, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1988.

16. அலைவாய்- செந்தில், திருச்செந்தூர், கு. பகவதி, தமிழாய்வு மன்றம் 2வது கருத்தரங்கு, திருச்செந்தூர், 1998.

17. வசவ சமுத்தரம்-துறைமுகம்? கு. பகவதி, இ.ப.க.த.ம. கருத்தரங்கு, 2003.

18. குடிபெயர்தலும் ஊர்ப்பெயர்களும், கு. பகவதி, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1986.

19. ஊர்ப்பெயராய்வுச் சிக்கல்கள், கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1989.

20. ஊர்ப்பெயராய்வும் புதிய விளக்கமும், கு. பகவதி, தமிழ்க்கலை, தமிழ் 6 கலை 3-4, டிசம்பர், 1988.

## ஆங்கில நூல்கள்

1. Gnanamuthu, S. Place names of Kerala, Trivandrum District, M. Litt., Dissertation, Kerala University, 1965 (unpublished).

   Place names of Kanyakumari District, Ph.D. Dissertation, Kerala University, 1973 (unpublished).

2. Nachimuthu, K. Place names of Coimbatore District, Ph.D. Dissertation, Kerala University, 1973 (unpublished).

3. Historic place names of Tamilakam upto 10th century A.D., Chockalingam, A. M.Phil. Thesis, Madras University, Madras.

4. Place names Stories, Tradition and values Dr. K. Viswanatha Reddy. The Third All India conference of the place names society of India, Bhopal, 1981.

5. Plant place names in Tamil : Dr. S. V. Subramanian and Dr. K. Bhagavathy. The Third All India conference of the place names society of India Bhopal, 1981.

6. Study of some place names, S. Velusamy, The First All India conference of the place names society of India, Udipi, 1979.

7. The influence of Vijayanagar Empire on Tamil Nadu Place names. P. Shanmugam. The First All India conference of the place names society of India, Udipi, 1979.

8. Place names of Agriculture Region, R.P. Sethu Pillai, Tamil Culture, Vol. No. 4, 1958.

9. Place Naming Practices, K. Nachimuthu, Research Papers-Vol. Department of Tamil, University of Kerala, Trivandrum, 1974.

10. The place names in Early Tamil Literature, Dr. S.V.S. All India Conference of place names Society of India, Mysore, 1984.

11. English Place Names, Kenneth Cameron, Methien & Co. Ltd., New Felter lane, London, 1969.

12. Studies in Indian Place names (Bharatiya Sthalanama patrika) volume Three, The place Names society of India, Teetha Book House, Mylapore.

13. Nannan of North Malabar, P.L. Samy, Tamil Civilization, Thanjavur, Vol. 1 No. 1.

14. Seminar Papers, First All India Conference of the place Names Society of India, Udipi.

Papers :

1. Personal Names in the Study of place Names. Dr. K. Bhagavathi, Sixth Annual Conference of the place Names Society of India, at Nagarjuna University at Andhra Pradesh, 3-5th January, 1985.

2. Religious Place Names in Bakthi Literature, Dr. K. Bhagavathi IV & V conference of the place names Society of India, Mysore, 20-22nd April, 1984.

## பயன்கொண்ட நூல்கள்

1. ரா.பி. சேதுப்பிள்ளை, **தமிழகம் ஊரும் பேரும்**, அல்லையன்ஸ் கம்பெனி, சென்னை, 1946.

2. மது.ச. விமலானந்தம், **தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1987.

## பார்வை நூல்கள்

1. **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்**, தொகுதி-I, ஆர். ஆளவந்தார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1984.

2. **இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள்**, தொகுதி-II, கு. பகவதி, 1984.

3. **செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்**, கரு. நாகராஜன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1985.

4. **தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்**, இரா. சந்திரசேகரன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1983.

5. **சென்னை 1639-க்கு முன்பின்**, கு.பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1995.

6. **தமிழ் இடப்பெயராய்வு**, கி. நாச்சிமுத்து, சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில், 1983.

7. **தமிழக ஊர்ப் பெயர்கள்**, கு. பகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1986.

8. **தமிழகம்-இலங்கை ஊர்ப்பெயர்கள் ஒப்பாய்வு**, குபகவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1991.

9. **பேரும் பெருமையும்**, மா.நயினார், சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில், 1976.

10. **கல்வெட்டுகளில் ஊர்ப்பெயர்கள்**, ஆர். ஆளவந்தார், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1956.

11. **ஊர்ப்பெயர்களின் உண்மைக் காரணம்**-பரமசிவம், த.கோ. ஆய்வுக்கோவை-3, இப.க.தம., 14ஆவது கருத்தரங்கு, 1982.

12. இடப்பெயர் வரலாறு மட்டக்களப்பு மாவட்டம், ம.சற்குணம், 4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்ச்சிகள், யாழ்ப்பாணம், 1974.

13. இலங்கை இடப்பெயராய்வு-1, இ. பாலசுந்தரம், காங்கேசன் கல்வி வட்டாரம், அப்புத் துறை மணிவிழா வெளியீடு, 1988.

14. ஈழத்து இடப்பெயர் ஆய்வும் அதன் அவசியமும்-கலாநிதி, இ. பாலசுந்தரம், 1987.

15. ஈழ நாட்டு இடப்பெயர்களில் தமிழின் ஆளுமை, தி.க.இராசேசுவரன், 5ஆம் உலகத் தமிழ் மாநாட்டு விழா மலர், மதுரை, 1981.

16. ஊர்ப்பெயராய்வும் புதிய விளக்கமும், மதுரை, ஈழம், தமிழ்க்கலை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1990.

17. தமிழ் இடப்பெயராய்வு, டாக்டர் கி. நாச்சிமுத்து, கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம், 1984.

18. தமிழ்நாடு பெயர் மாற்ற வரலாறு, புலவர் த. சுந்தரராசன், வளரைசுப் பதிப்பகம், சென்னை, 1986.

19. ஊரும் பேரும் (ஆ-ர்), டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1946.

# ஊர்ப்பெயராய்வுகள் - ஓர் ஆய்வு

மனிதன் ஒரு சமூக விலங்கு. இவன் கூடி வாழ்ந்த பொழுதே குடியிருப்புகளை வடிவமைக்கத் தொடங்கினான். அத்தகைய குடியிருப்புகள் வகை தொகை இல்லாமல் மரப்பொந்து, மலைக்குகை, ஆற்றங்கரை என அமைந்திருக்கும். இந்தப் படிநிலையில் பல இடையூறுகளைச் சந்தித்துத் திட்டமிட்டு வகுத்துக் கொள்ளக் கூடிய வரையறைகளுடன் கூடிய குடியிருப்பு வளாகங்களை வடிவமைத்திருப்பான். சான்றுக்குச் சங்க இலக்கியங்கள் கூறும் பாடி வீடுகளையும் போர்ப்பாசறைகளையும் ஒப்பு நோக்கலாம். ஒரு சில நாட்கள் மட்டும் தங்கும் இடத்தையே அவ்வளவு கூர்ந்த மதியுடன் திட்டமிட்ட தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்நாள் இடத்தை எங்ஙனம் திட்டமிட்டு இருப்பார்கள் என்பது கற்பனைக்கு எட்டா இடமாகும்.

மனிதன் ஓரிடத்தில் நிலையான குடியிருப்புகளை வடிவமைத்துத் தங்கத் தொடங்கியவுடன் அவ்விடத்திற்கு அக் குழுவினரால் பெயர் சூட்டப்பட்டிருக்கும். அப்பெயரையே அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பொழுது அது ஊர்ப்பெயராக அமைந்து விடுகின்றது. அவ்வூர்ப்பெயர்கள் அவ்வந் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே ஏற்பட்டிருப்பதைக் (மலையூர், வயலூர், நெய்தலங்கானம், பாலையூர், காட்டூர் முதலானவை) காண முடிகின்றது.

ஏன் இப்படிப்பட்ட பெயர்களை இவ்வூர்களுக்கு வைத்தார்கள் என்று காரண, காரிய அடிப்படையில் சிந்திப்பதே ஊர்ப்பெயராய்வுகள் முகிழ்க்கக் காரணமாய் அமைந்திருக்கும். அவ்வகையில் தமிழகம் ஊரும் பேரும் என்னும் நூலில் ஆராய்ந்துள்ள ஊர்ப்பெயர்களை மேலாய்வுக்கு உட்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஊர்ப்பெயராய்வு முன்னோடிகள்**

18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியினால் பல துறைகளில் மறுமலர்ச்சி ஏற்பட்டது. அவற்றுள்

இடப்பெயராய்வு என்பதும் ஒன்றாகும். இத்துறையைத் தனியாக ஏற்படுத்திய பெருமை கோட் பிரைடுவில் ஹெல்ம் லெய்ப்னிஷ் என்பவரைச் சேரும். ஜெ.ஜெ. எஜிலி என்பார் 19ஆம் நூற்றாண்டில் இத்துறையை அறிவியல் அடிப்படையில் உற்று நோக்கித் தனித்தன்மையுடன் வளர்த்தெடுத்தவர் என்று கூறலாம். இவரைத் தொடர்ந்து ஜெர்மன், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா முதலான நாடுகளிலுள்ள மொழிநூல் வல்லுநர்கள் இவ்வாய்வை முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

1923ஆம் ஆண்டு பெல்ஜியம் லூவெய்ன் நகரில் கத்தோலிக்கப் பல்கலைக்கழகத்தில் வான்டே வேயர் என்பவர் தனி நிறுவனத்தைத் தொடங்கினார். பிரிட்டனில் நாட்டிங்காம் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இடப்பெயராய்வுக் கழகம் தொடங்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு யுனஸ்கோ சார்பில் அனைத்துலகப் பெயர் ஆய்வுக்குழு ஒன்று தொடங்கப்பட்டது. இதில் 50க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொண்டன.

இந்தியாவைப் பொறுத்தவரை ஒரு சில முயற்சிகள் நடைபெற்றுள்ளனவே தவிர, சிறந்த ஆய்வு என்பது 70களில் தான் தொடங்கியுள்ளது. ஆய்வு முன்னோடிகள் என்று பி.ஸி. லேன், காசிநாத் லட்சுமணன், மதிலா சரண் பாண்டேய, அகர்வாலா, விஸ்வநாத ரெட்டி, அச்சுத மேனன், சி.எம். இராமச்சந்திரன் முதலானோரைக் குறிப்பிடலாம்.

1972இல் திராவிட இடப்பெயராய்வுக்கழகம், 1979இல் இந்திய இடப்பெயராய்வுக்கழகம் என்பன தொடங்கப்பெற்ற பின் நிலையான பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன எனக் கூறலாம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இராமலிங்க அடிகளார், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சி.எம். இராமச்சந்திரன் என்போர் முன்னோடியாய்ச் சில பதிவுகளைச் செய்துள்ளனர். எனினும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமிழக ஊர்ப்பெயராய்வின் தந்தை எனப் போற்றப் பெறுபவர். இவருக்குப் பின் நீண்ட இடைவேளைக்குப் பின் 1973இல் கேரளப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கி.நாச்சிமுத்துவின் ஆய்வேடும் கட்டுரைகளும் இத்துறைக்கு வளம் சேர்த்தன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கல்வெட்டில் ஊர்ப்பெயர்கள், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், மாவட்ட

ஊர்ப்பெயர்கள் என்னும் ஆய்வுகளைத் தொடங்கியது. அவற்றில் சில நூல்களாகவும் வெளிவந்துள்ளன. கு.பகவதி, ஆளவந்தார், கரு. நாகராசன் முதலானோர் குறிக்கத்தக்கவர்கள்.

பல்கலைக்கழக அளவில் கேரளம், அண்ணாமலை, மதுரை, சென்னை முதலான பல்கலைக் கழகங்கள் பெயராய்விற்கு முன்னுரிமை கொடுத்துப் பல ஆய்வேடுகளும் கட்டுரைகளும் வெளியிட்டுள்ளன. (300க்கும் மேற்பட்ட ஆய்வுகள் நடந்துள்ளன).

## தமிழகம் ஊரும் பேரும் – இடம்

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் **தமிழகம் ஊரும் பேரும்** என்னும் நூல் 1946ஆம் ஆண்டு திரு.வி.க. அவர்களின் முகவுரையுடன் வெளிவந்துள்ளது. தமிழில் தோன்றிய முதல் முயற்சி. முத்தான முயற்சி எனப் பாராட்டலாம். 428 பக்கங்களில் தெள்ளத்தெளிவாக அழகாக வெளியிட்டுள்ள பான்மை சிறப்பிற்குரியது. 24 பக்கங்களில் தமிழ்நாட்டுத் தலங்களின் பட்டியலைப் பின்னிணைப்பாகக் கொடுத்து ஏறக்குறைய 1400 ஊர்ப்பெயர்களைத் தம்முடைய நூலில் ஆய்விற்குரியதாக அமைத்துள்ளார். முன்னோடி ஆய்வு முதல் ஆய்வு என்பதற்கிணங்கப் பகுப்பு முறையிலும் விளக்கவியல் அடிப்படையிலும் வரலாற்றியல், சமயவியல் சிந்தனைகளுடன் இந்நூல் முகிழ்த்துள்ளது.

சென்னை தொடங்கி, கன்னியாகுமரி வரையிலும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊர்களை நிலம், மலை, காடு, வயல், ஆறு, கடல், நாடு, நகரம், குடி, படை, கோ, தலம், தெய்வம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஊர்ப்பெயராய்வினைச் செய்துள்ள பான்மை சிறப்பிற்குரியது.

தமிழ்நாட்டின் சில ஊர்ப்பெயர்கள் சிதைந்தும் திரிந்தும் போய் இருந்த நிலைமை உண்டு. அந்நிலையை மாற்றியமைக்க இவருடைய நூல் பெரும்பங்காற்றியுள்ளது என்றால் மிகையன்று.

உன்னைப் புரிந்து கொள்; உன் ஊரின் புகழை அறிந்து கொள்; நாட்டின் திறனை மதிப்பிட்டுக் கொள்; என்ற வாக்கிற்கிணங்க ஊரின் பெருமையையும் இருப்பையும் அறிந்து கொள்ள இந்நூல் பெருந்துணையாய் அமைகின்றது என்றால் வியப்பில்லை.

முன்னோடி நூலாக இருப்பதனால் பின்வந்த பல நூல்களுக்கு மூல நூலாக அமைந்திருக்கின்றது. சென்னைப்

பல்கலைக்கழக ஆய்வு இதழான தமிழியலில் 1940ஆம் ஆண்டில் எழுதிய ஒரு கட்டுரையின் விரிவாக்கமே இந்நூல் என்று நன்றியுரையில் குறிப்பிட்டுள்ளார். ஒரு சிறு பொறி பெருந்தீப்பந்தமாய் மாறியுள்ளது என்னும் செய்தி பெருமிதம் கொள்ளச் செய்கின்றது.

## உள்ளடக்க ஆய்வு

தமிழகம் ஊரும் பேரும் - இந்நூல் ஆறு தலைப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது. அவை தமிழகமும் நிலமும், நாடும் நகரமும், குடியும் படையும், குலமும் கோவும், தேவும் தலமும், தமிழகம் அன்றும் இன்றும் என்பனவாகும்.

## தமிழகமும் நிலமும்

மூவேந்தர்கள் ஆண்ட தமிழகத்தில் நிலம் நானிலமாகவும் ஐந்நிலமாகவும் பகுக்கப்பட்டிருந்தது. அந்நிலப்பாகுபாட்டு அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அடுக்கு முறையில் தமிழக ஊர்களைப் பாகுபாடு செய்துள்ளார்.

மலை, கோடு, குன்று, பாறை, அறை, கல், கிரி, அசலம், சைலம், அத்திரி, குறிச்சி என்று மலையைக் குறிக்கும் பல சொற்களில் ஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதைப் பகுத்துப் பட்டியலிட்டுள்ளார்.

காடு, காவு, பொழில், தண்டலை, சோலை, தோப்பு, சுரம், வனம், ஆரண்யம் எனக் காடுகளின் (முல்லை) பெயரில் ஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதைத் தொகுத்திருப்பதோடு மரங்களின் பெயரிலும் பாடி, பட்டி, மந்தை என அந்நிலத்தோடு தொடர்பு கொண்டும் பெயர்கள் அமைந்திருப்பதைப் பகுத்தாய்ந்துள்ளார்.

ஆறுகளின் பெயர் ஊர்களுக்கு ஆயினமையை விளக்குவதோடு துறை, அரங்கம், துருத்தி, கூடல், அணை, கால், ஓடை, மடை, ஏரி, பேரேரி, கோட்டகம், குளம், சமுத்திரம், ஏந்தல், தாங்கல், ஆவி, வாவி, மடு, இலஞ்சி, பொய்கை, ஊருணி, சேறு, ஊற்று, கேணி, கிணறு, நிலம், புலம், பற்று, பண்ணை, பழனம், கழனி, வயல், விளை, நில அளவு, புன்செய், தோட்டம், ஊர், நல்லூர், புத்தூர் முதலான பெயர்களில் நீர்வளத்தையும் நிலவளத்தையும் அடிப்படையாகக் கொண்டு மருதநில

ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்று இருக்கும் பான்மையை விளக்குகின்றார்.

கரை, கறை, பட்டினம், பாக்கம், களர், அளர், குப்பம் என்ற சொற்களை அடிப்படையாகக் கொண்டு உருவான ஊர்ப்பெயர்களை விளக்குகின்றார்.

இவ்வாறாகப் பண்டைத் தமிழக நானிலக் கோட்பாட்டு அடிப்படையில் உருவான தமிழக ஊர்ப்பெயர்களை வகுத்தும் பகுத்தும் தந்துள்ளார்.

## நாடும் நகரமும்

நாடு, நகரம், புரம் என்ற சொற்களைக் கொண்டு சில ஊர்கள் தமிழகத்தில் உருப்பெற்றமையை இத்தலைப்பில் விளக்குவதோடு தமிழகப் பண்டைத் தலைநகரங்கள் அழிந்து பட்ட நிலையில் பெயரளவில் நிலைத்துநிற்கும் தன்மையில் உள்ள செய்தியை விளக்கியுரைத்துள்ளார். புதிய தலைநகரமான சென்னையைப் பற்றி விரிவாகப் பேசுகின்றார்.

## குடியும் படையும்

அரசனுக்கு வேண்டிய ஆறு அங்கங்களுள் குடியும் படையும் முக்கியமானவை. அவற்றையொட்டிய பெயர்களில் தமிழக ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன. அவற்றை ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தொகுத்துள்ள பாங்கு பாராட்டுக்குரியது.

இல், அகம், உள், வாயில், முற்றம், குடி, இருப்பு, இருக்கை, வாழ்வு, வாழ்க்கை, சேரி, பேட்டை, சாலை, புதுமை, மேடு, பள்ளம், தாளும் அடியும், நத்தம், களம், வெளி, குடியிருப்பு, இல்லம் முதலான இருக்குமிடத்தையொட்டி ஊர்ப்பெயர்கள் பதிவாகியுள்ளன.

எயில், அகழி, இஞ்சி, கிடங்கில், படைவீடு, பாளையம், வல்லம், கோட்டை, துர்க்கம், காவல், விருதுப்பெயர்கள், வெண்ணி, தலையாலங்கானம் எனப் படையோடு தொடர்புடைய பெயர்களில் தமிழகத்தில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களைப் பதிவு செய்துள்ளார்.

## குலமும் கோவும்

தமிழகத்தை அரசாண்ட குடிகளின் பெயராலும் சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் பெயராலும் ஊர்ப்பெயர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

நாகர், அருவர், மழவர், திரையர், முத்தரையர், முனையர், பாணர், அதியர், ஆவியர், ஓவியர், வேள், குறுக்கையர் எனப் பழங்குடிகளின் வாழ்ந்த இடங்களிலும் அரசாண்ட நிலப்பகுதிகளிலும் இப்பெயர்களில் ஊர்கள் உருப்பெற்றுள்ளமையை அறிய முடிகின்றது.

செம்பியன், வளவன், சென்னி, விசயாலயன், ஆதித்தன், பராந்தகன், வளவன் மாதேவி, கண்டராதித்தன், செம்பியன் மாதேவி, அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன், அருண்மொழி, மும்முடிச் சோழன், இராசராசன், ஜெயங்கொண்டான், ஜனநாத சோழன், சிவபாத சேகரன், உய்யக் கொண்டான், உலகமாதேவி, திரிபுவன மாதேவி, சோழ மாதேவி, முடிகொண்ட சோழன், கங்கை கொண்ட சோழன், கடாரம் கொண்டான், குலோத்துங்க சோழன், தீன சிந்தாமணி, அநபாய சோழன், திரிபுவன வீரன், பல்லவராயன் பரகேசரி, வானவன், மாதேவி எனச் சோழ குல மன்னர்களின் விருதுப் பெயர்களாலும் அவர்களுடைய இல்லப் பெண்கள் பெயர்களாலும் நிவந்தமாகவும் முற்றூட்டாகவும் கொடுக்கப்பட்ட நிலைங்களை அடிப்படையாகக் கொண்டு ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன.

பூதப்பாண்டியன், அழகிய பாண்டியன், சேந்தன், கோச்சடையன், வரகுணன், சேரன் மாதேவி, வீரபாண்டியன், சுந்தர பாண்டியன், குலசேகரன், ஸ்ரீவல்லபன், பராக்கிரம பாண்டியன் என மன்னர்களின் பெயர்களினால் ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன.

பல்லவர்கள், மராட்டியர்கள், நாயக்கர்கள், பாளையப்பட்டுகள், விசயநகர மன்னர்கள், பண்டைத் தமிழகக் குறுநில மன்னர்கள், இசுலாமியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், சங்கப் புலவர்கள் என இவர்களோடு தொடர்புடைய பெயர்களிலும் ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றையும் இத்தலைப்பின் கண் விரிவாக ஆய்வு செய்துள்ளார்.

## தேவும் தலமும்

இத்தலைப்பு மலையும் குன்றும், ஆறும் குளமும், துறையும் நெறியும், அட்டானமும் அம்பலமும், மாடமும் மயானமும், தலமும் கோயிலும், கோயிலும் வாயிலும், தளியும் பள்ளியும், ஈச்சுரம், அரசரும் ஈச்சுரமும், திருமேனியும் தலமும், இறைவரும் உறைவிடமும், திருவாக்கும் ஊர்ப்பெயரும், இதிகாசமும் ஊர்ப்பெயரும், வைப்புத்தலங்கள், இறையும் அறமும், தானமும் தருமமும், திருமாலும் திருப்பதிகளும், சமணமும் சாக்கியமும் என்னும் உட்தலைப்புகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள புகழ்பெற்ற இறைத்தலங்கள் எல்லாம் இப்பகுதியில் பதிவு பெற்றுள்ளன. அப்படிப் பதிவு பெறும் பொழுது அவ்வூர் குறித்த புகழ்ச் செய்திகளும் பதிவாகியுள்ளன.

கா எனவும் காடு எனவும் பொழில் எனவும் பின்னொட்டுக்களைக் கொண்ட ஊர்ப்பெயர்கள் முதல் தலைப்பின்கண் விளக்கப்பெற்றுள்ளன.

மலை, குன்றம், கற்குடி, பருப்பதம், கந்தமாதனம் முதலான சொற்களை அடிப்படையாகக் கொண்ட ஊர்ப்பெயர்களை மலையும் குன்றும் என்னும் தலைப்பில் அறிமுகம் செய்துள்ளார்.

ஆறு என்றும் குளம் என்றும் முடியும் ஊர்ப்பெயர்கள் ஆறும் குளமும் என்னும் தலைப்பில் பதிவாகி உள்ளன.

துறை என்றும் நெறி என்றும் முடியும் ஊர்ப்பெயர்கள் துறையும் நெறியும் என்னும் தலைப்பில் விவாதிக்கப்பட்டுள்ளன.

சிவபெருமானின் வீரச் செயல்களைப் பதிவு செய்யும் வீர அட்டானங்கள் எட்டு ஊர்களின் பெயர்களையும் அம்பலம் என்று சுட்டப்பெறும் ஐந்து சபைகளில் இரண்டின் பெயரினையும் விரிவாக விளக்கமுடன் விவரித்துள்ள செய்திகளை அட்டானமும் அம்பலமும் என்னும் தலைப்பில் விளக்கியுள்ளார்.

கோயில் வகைகளில் மாடக்கோயில்கள் என்பதும் ஒன்று. மயானம் என்ற நிலையிலும் கோயில்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவ்விரண்டு நிலையிலும் ஊர்ப்பெயர்கள் தோற்றம்

பெற்றுள்ளன. அவற்றைப் பற்றி இப்பகுதியில் குறித்துக் காட்டுகின்றார்.

ஊர்ப்பெயரும் கோயிலும் இணைந்த தலங்களை அடுத்த பகுதியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாடக்கோயில், பெருங்கோயில், கரக்கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், ஆலக்கோயில், அம்புக்கோயில் எனக் கோயில் வகைகளின் அடிப்படையில் ஊர்கள் பெயர் பெற்றுள்ளன. வாயில் என்ற பின்னொட்டோடு சில ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்றுள்ளன. அப்பெயர்கள் எல்லாம் கோயிலும் வாயிலும் என்னும் இப்பகுதியில் விளக்கம் பெற்றுள்ளன.

தளியும் பள்ளியும் என்னும் இத்தலைப்பில் தளி என்றும் பள்ளி என்றும் பின்னொட்டாகக் கொண்டுள்ள ஊர்ப்பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

ஈச்சுரம் என்ற தலைப்பில் ஈச்சுரம் என்று முடியும் சிவத்தலங்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. அரசரும் ஈச்சுரமும் என்னும் தலைப்பில் அரசர்களால் சுட்டப்பட்டுள்ள சிவத்தலங்களைப் பற்றிய செய்திகள் பதிவாகியுள்ளன.

இறைவனின் திருக்கோல வடிவமும் இயல்பும் ஊர்ப்பெயராகிப் போன சூழல் திருமேனியும் தலமும் என்னும் தலைப்பில் செய்தியாகி உள்ளது.

இறைவர்களின் பெயரும் அவர்களின் இயல்புகளும் ஊர்ப்பெயராகி வந்த செய்தியை அடுத்த பகுதி விளக்குகின்றது.

இதிகாசமும் ஊர்ப்பெயரும் என்னும் இத்தலைப்பில் இராமாயண மகாபாரத நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஊர்ப்பெயர்கள் விளக்கப்பெறுகின்றன. அதோடு மருவி வழங்கப்பெறும் தமிழக ஊர்ப்பெயர்களும் விளக்கப் பெற்றுள்ளன.

வைப்புத் தலங்கள் என்னும் தலைப்பில் தேவாரப் பாடலடிகளில் இடம்பெற்றுள்ள ஊர்ப்பெயர்களையெல்லாம் விளக்கியுரைத்துள்ளார்.

அரசர்கள் மானியமாகக் கொடுத்த அகரம், மங்கலம், சத்திரம், சாவடி, தானம் முதலான பெயர்களில் அமைந்துள்ள ஊர்களை இப்பகுதியில் தெளிவு படுத்தியுள்ளார்.

திருமாலும் திருப்பதியும், சமணமும் சாக்கியமும் என்னும் தலைப்பில் அமைந்துள்ள பகுதியில் திருமாலின் கோயில் அமைந்துள்ள ஊர்களும் சமணப்பள்ளிகளும் பௌத்த விகாரைகளும் அமைந்த ஊர்ப்பெயர்கள் விளக்கப்பெற்றுள்ளன.

ஊரும் பேரும் என்னும் நூலில் சமயம் சார்ந்த ஊர்ப்பெயர்கள் இப்பகுதியில் பெரிதும் விளக்கப்பெற்றுள்ள பான்மை சிறப்புக்குரியது.

## தமிழகம் அன்றும் இன்றும்

இந்நூலுக்கு முடிப்புரை போன்று பண்டைத் தமிழகத்தின் எல்லையினையும் இன்றைய தமிழகத்தின் எல்லையையும் குறித்துக் காட்டிக் குறைந்து போன நிலச்சூழலை மனநெகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நூலமைப்பு

**தமிழகம் ஊரும் பேரும்** என்னும் நூல் உள்ளடக்கத்தில் மிகச் சிறந்து விளங்குகின்றது. முன்னுக்குப் பின் முரண் என்று எந்த இடத்திலும் சுட்டிக்காட்ட முடியாது. ஆனால் சில ஊர்ப்பெயர்கள் இரு வேறு இடங்களில் பதிவாகி உள்ளன. அவ்வவ் இடங்களில் பேச வேண்டிய தன்மை இருப்பதனால் அந்நிகழ்வு ஏற்பட்டிருக்கலாம்.

24-பக்கங்களில் தமிழ்நாட்டுத் தலங்களின் (சிவன், திருமால், முருகன், சமணம்) பட்டியல் ஒன்றினை இணைத்துள்ளார். இறைச் சிந்தனையாளர்களுக்குப் பயன்படும் வகையில் தலப்பெயர், வழங்கும் பெயர், எந்த மாவட்டத்தில் / வட்டத்தில் உள்ளது; அத்தலத்தினைப் பற்றிய குறிப்பு எனப் பகுத்தும் வகுத்தும் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

20-பக்கங்களில் ஊர்ப்பெயரகராதி ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது இந்நூலின் பார்வைக்குப் பெரிதும் பயன்தரக்கூடியது.

தெளிவான அச்சு, அழகான அடுக்குமுறை, பிழையற்ற தன்மை என்ற கூறுகளும் பாராட்டுக்குரியன.

## ஆய்வுத்தன்மை

ஊர்ப்பெயர்களைப் பதிவு செய்யும் பொழுது நிதானித்துச் சிந்தித்துத் திடப்படுத்திக்கொண்டு செயல்பட்டுள்ள தன்மையை இந்நூலில் பரக்கக் காணலாம். இந்நூல் விளக்கவியல் ஆய்வுத் தன்மையோடு இயங்குகிறது என்ற பொழுதிலும் மேற்கோள்களை எடுத்துக்காட்டி விளக்கும் தன்மை வியப்புக்குரியது.

கல்வெட்டியல் தொகுதிகள், மாவட்ட கெசட்டியர், மாவட்ட மானுவல், வரலாற்று ஆய்வு நூல்கள், தல புராணங்கள், சங்க இலக்கியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், மக்கள் வழக்காறுகள் என்று எல்லா நிலைகளிலும் சான்றாதாரங்களை எடுத்துக்காட்டி விளக்கும் தன்மை இவருடைய ஆய்வியல் கூறுகளை வெளிப்படுத்தக் கூடியதாகும்.

ஒரு செய்தியை நிறுவுதற்காகப் பல சான்றாதாரங்களை அடுக்கிக்காட்டும் தன்மை சிறந்த ஆராய்ச்சியாளருக்குரிய பண்பினை வெளிப்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது.

எச்செய்தியை வலியுறுத்துவது என்றாலும் இறையியலுக்கு முதன்மை அளிப்பதும் அதிலும் சைவ நெறியியலுக்கு முதன்மை கொடுப்பது என்பதும் மிகைப்படுத்தப் பட்டதாக உள்ளது.

நிறைவாகத் தமிழகத்துப் புதிய ஆய்வுக் களனை உருவாக்கித் தந்த ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் ஊரும் பேரும் என்னும் நூலே பிற்காலத்திய பல நூல்களுக்கு மூல நூலாக அமைந்துள்ளது. இன்றைக்கும் ஊர்களைப் பற்றி அறிந்து கொள்ள ஒரு பார்வை நூலாக உள்ளது என்று சொல்லலாம்.

### பயன்பட்ட நூல்கள்

1. ஆர். ஆளவந்தார், இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும் பேரும்.

2. கரு. நாகராஜன், செங்கை மாவட்ட ஊர்ப்பெயர்கள்.

3. K. Nachimuthu, Perspectives in Place Name Studies.

4. K. Nachimuthu, Studies in Dravidian Place Names.

# தமிழில் ஊர்ப்பெயராய்வு முன்னோடி

மக்களின்கலை, இலக்கியம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, சடங்குகள், வாழ்க்கை முறைகள் உள்ளிட்ட பல்வேறு வழக்காறுகளை அடிப்படையாகக் கொண்ட நாட்டுப்புறவியல் ஆய்வுத்துறையில் புதிதாகத் தோன்றிய ஆய்வுக் களமே பெயராய்வுத் துறையாகும். இப்பெயராய்வுத் துறையில் ஒரு பகுதியே ஊர்ப் பெயராய்வுத் துறையாகும். இவ்வகை ஆய்வு வாயிலாக, மக்களின் காரண, காரிய அடிப்படையிலான அறிவுசார் பண்பினையும் கற்பனைத் திறனையும் வாழ்வியல் கூறுகளின் வழித்தடங்களையும் இனம் காணலாம். அந்த வகையில் ஊர்ப் பெயர்களை ஆய்வு செய்து பல உண்மைகளைக் கண்டறியும் போக்கு தோன்றி வளர்ந்தது. இவ் ஆய்வின் நன்மை கருதிப் பல பண்பாட்டு ஆய்வாளர்கள் இத்துறையில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

ஊர்களுக்குப் பெயரிடுகின்ற மரபு தொன்று தொட்டே தமிழரிடம் இருந்து வருகிறது. ஆயினும் அப்பெயர்களை ஆய்வு செய்து வெளியிடும் நிலை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஏற்பட்டது. இவ் ஆய்வு வளர்வதற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் சொல்லின் செல்வர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆவார்.

## ஊர்ப்பெயர் தகவல் சேகரிப்பு

தமிழகத்தின் மக்கள் வாழிடம் பற்றிய வரலாற்றினை அறிய வேண்டும் என்னும் வேட்கையும் அதற்கான காரண காரியத் தேவையும் கருதியே தம் நூலுக்கு "ஊரும் பேரும்" என்னும் பெயர் வைத்துள்ளமை அறியலாம்.

ஊர்ப் பெயரின் இன்றியமையாப் பண்பினாலேயே இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

ஊரும் பேரும் என்னும் தலைப்பு விழுமியது. அஃது ஆழ்ந்த பொருண்மையுடையது. சுரங்கம் போன்றது.

> முழு முதற் பொருள் ஊரில்லாதது - பேரில்லாதது என்று ஆன்றோர் பலர் அருளிப் போந்தனர். ஊர் பேர் இல்லாத முழுமுதற்கு வழிபாடு நிகழ்ந்து வருகிறது. ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேனங் கொட்டோமே என வரும் திருவாசகம் இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது. ஊரும் பேரும் இறைக்குத் தேவையாதலை உணர்க: ஊர் பேர் மாண்பே மாண்பு. (ஊரும் பேரும்-முன்னுரை)

திரு.வி.க.வின் இக்கருத்து ரா.பி. சேதுபிள்ளையின் ஊர்ப் பெயர் தகவல் சேகரிப்பு உணர்வின் இயல்பினை எடுத்தியம்புவதாக அமைகிறது.

> வாழ்க்கைக்குப் பல துறைகள் தேவை. அவற்றுள் ஆவி போன்றவை ஊரும் பேரும். இவை வாழ்க்கையை இயக்கி வளர்ப்பன என்று கூறல் மிகையாகாது. ஊர்ப் பேரால் உலகம் இயங்கல் வெள்ளிடைமலை. ஊர்ப் பேரே உலகம்; வாழ்க்கை; எல்லாம் எல்லாம். இன்னோரன்ன சிறப்புக்கள் பெற்ற ஊரும் பேரும் என்பதே இதற்குத் தலைப்பாக அமைந்தது.

என்கிறார் திரு.வி.க. மேலும் அவர்,

> சில நாடுகளின் ஊரும் பேரும் அடங்கிய ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்து உலவுகின்றன. அத்தகைய உலாவைத் தமிழ் நாட்டில் காண்டல் அருமையாயிருந்தது. அவ் அருமையைப் போக்கும் வாய்ப்பு அறிஞர் சேதுப்பிள்ளை அவர்கட்குக் கிடைத்தது.

என்கிறார். இச்செய்தி வாயிலாக ரா.பி. சேதுப்பிள்ளை ஊர்ப் பெயர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவதற்கான அடிப்படைச் சூழலினை விளங்கிக் கொள்ள முடியும்.

> ஆசிரியர், நிலம் - மலை - காடு - வயல் - ஆறு - கடல் - நாடு - நகரம் - குடி - படை - கோ - தேவு - தலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர் பேர் ஆராய்ச்சியும்

> ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புகளும் பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெரு விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் சில ஊர்ப் பேர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந்நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை. இந்நூலுள் யொலி தரும் சில ஊர்ப் பெயர்களின் வரலாறு சாம்பியும் சேம்பியும் நலிந்தும் மெலிந்தும் கிடக்கும் நம் மக்கட்கு அமிழ்தாகிப் புத்துயிர் வழங்கல் உறுதி. நூலின் நடைக்கண் நடம்புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் கவலையை நீக்கி அதன்மாட்டு வேட்கையை எழுப்பி, அதை ஊக்குவனவாகும்.

ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊரும் பேரும் நூலுக்கு 16.7.1946 இல் திரு.வி.க. வழங்கிய முன்னுரையில் கூறியிருக்கும் இக்கருத்துகள் அவரை ஊர்ப்பெயர் ஆய்வின் முன்னோடி என்பதை அடையாளப்படுத்துகின்றன.

ஊர்ப்பெயரிடுகின்ற வழக்கம் தமிழர்களிடம் சங்க காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. ஆனால் அந்த ஊர்ப் பெயர்களில் புதைந்து கிடக்கும் வரலாறு மற்றும் பண்பாட்டு உண்மைகளை அறிந்து கூறும் நிலை இருபதாம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டது. மேலை நாடுகளில் ஏற்பட்ட இம்முயற்சியினை அடியொற்றியே ரா.பி. சேதுப்பிள்ளை 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இம்முயற்சியைத் தமிழில் மேற்கொண்டார். தமிழில் இம்முயற்சிக்கு முன்னதாக ஊர்ப் பெயர் ஆய்வு பற்றிய சிந்தனை வலுப்பெற்றதாகத் தெரியவில்லை.

1950 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டின் கடற்கரைப் பட்டணங்களுடன் தொடர்புடைய இருபது பெருமக்களைப் பற்றிய கட்டுரைத் தொகுப்பினைக் "கடற்கரையிலே" என்னும் நூலாக வெளியிட்டார். இந்நூலில் கடற்கரைப் பட்டணங்கள் பற்றிய பல அரிய செய்திகளைத் திரட்டித் தந்துள்ளார். தொடர்ந்து 1961 ஆம் ஆண்டில் "ஆற்றங்கரையினிலே" என்னும் நூலை வெளியிட்டு ஆற்றங்கரையில் உள்ள முக்கிய ஊர்களைப் பற்றிய அரிய செய்திகளைக் குறிப்பிட்டுச் சொன்னார். அந்நூலின் கருத்துகள் அடங்கிய கட்டுரைகள் முதலில் 'கல்கி' இதழில்

தொடராக வெளிவந்தன. தொடர்ந்து ஆசிரியர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் பணி நிறைவைப் போற்றும் வகையில் வெள்ளி விழா மலராக "ஆற்றங்கரையினிலே" என்னும் பெயரில் வெளியிடப்பட்டது. அதன் பின் 1961இல் பழனியப்பா பிரதர்ஸ் புத்தக நிறுவனம் 'ஆற்றங்கரையினிலே' என்னும் நூலாக வெளியிட்டது.

ஆறுகளே பல்வேறு நாகரிகங்கட்கும் உறைவிடமாக அமைந்துள்ள பான்மையை, உலக வரலாறு உணர்த்தும். இவ்வுண்மையை விளக்கும் வகையில் ஆற்றங்கரையினிலே நூல் அமைந்துள்ளது.

> இலக்கியச் சுவையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த இக்கட்டுரைகள் தொண்டை நாட்டின் பழந்தலைநகராகிய காஞ்சி மாநகரம் முதலாக ஈழ நாட்டின் புகழ் பெற்ற தலமாகிய கதிர்காமம் ஈறாக நாற்பத்தெட்டு ஊர்களின் பெருமையைப் பேசும் அருமை உடையன. சிறப்பாக, உறையூர், திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், திருவானைக்கா பற்றிப் பேராசிரியர் அவர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் அவ்வூர்களோடு நெருங்கிய தொடர்புடைய எனக்குப் பேரின்பம் பயப்பனவாகும். மேலும், ஆற்றங்கரையினிலே வடநாட்டுப் பகுதிகளும் ஈழ நாட்டுப் பகுதிகளும் தக்க இடம் பெறுவது தமிழ்ப் பண்பாட்டின் நீர்மைக்கு ஏற்றம் அளிப்பதாகும்

என்னும் திரு.மு. நாராயணசாமிப் பிள்ளையின் (ஆற்றங்கரையினிலே: அணிந்துரை) கருத்து ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர் ஆய்வுப் பணியின் ஆழத்தையும் அகலத்தையும் அறிவுறுத்துவதாக அமைகிறது.

> பேராசிரியர் சேதுப்பிள்ளை தமிழகத்திற்குப் படைத்து வழங்கிய உரைநடை நூல்கள் பதினேழு. அவற்றுள்ளே அப்பெருமானது பேரிலக்கியமாய் (Master piece) வாழ்க்கைப் பெரு நூலாய் (Life work) முற்றி முதிர்ந்த ஆராய்ச்சி முழு நூலாய் ஒளி வீசுவது "தமிழகம் - ஊரும் பேரும்" என்னும் தலையாய தமிழ் நூலாகும். இந்நூல் தமிழகத்து முன்னோர் தாம்

> வாழ்ந்த ஊர்களுக்கு அழகிய பெயர்கள் அமைப்பதில் மேற்கொண்ட கொள்கைகளை விளக்குவதாகும். ஊர்களின் பெருமை, வரலாற்று அருமை, இயற்கைச் சூழல் முதலிய உண்மைகளைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் இனிது விளக்குகின்றது. ஆதலின் இதனைத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்று நூல் என்றே கூற வேண்டும். தமிழகத்தின் ஊரெல்லாம் சேதுப்பிள்ளையின் கோதிலாப் புகழ் பரவுதற்கு உற்றதொரு காரணமாயது இப்பெருநூலே என்றும் பேசலாம்

என்னும் அ.க. நவநீத கிருட்டினனின் கருத்து (டாக்டர் சேதுப்பிள்ளை : கழக வெளியீடு, 1961: 143, 144) பிள்ளை அவர்களின் ஊர்ப்பெயர் தகவல் சேகரிப்புப் பணியின் இயல்பினை எடுத்தியம்புவதாக அமைகிறது.

மேற்குறித்த கருத்துகள் வழி ஆராயும்பொழுது ரா.பி. சேதுப்பிள்ளை மேலை நாட்டு உரைநடைக் கருத்தாக்கங்களை அடியொற்றித் தமிழில் யாரும் நுழையாத புதுத் துறையான ஊர்ப்பெயர்களைத் திரட்டி வரலாற்றுப் பண்பாட்டு உண்மைகளை வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்டிருந்தது புலனாகிறது. அதுவே பின்பு ஊர்ப் பெயர் ஆய்வுக்கு அடிப்படையாகவும் அமைந்து விட்டமை அறியலாகிறது.

## ஊர்ப்பெயராய்வு வரலாறு

மக்கள் குடியிருக்கும் குடியிருப்புப் பகுதிகள் பாக்கம், பட்டினம், நகர், ஊர் எனும் பல பெயர்களில் வழங்கப்பட்டன. சிறிய அளவில் மக்கள் குழுவாக வாழும் இடத்தை ஊர் என்னும் சொல்லால் குறிப்பிட்டனர். சான்றாக மூதூர், பேரூர், சிற்றூர் எனும் சொற்களைக் குறிப்பிடலாம். இவ்வூர் மக்கள் வாழும் பகுதியை உணர்த்தும் பொதுச் சொல்லாகும். இவற்றை வேறுபடுத்தி அடையாளம் காண, கருத்துப் புலப்பாட்டிற்கு இடையூறு இல்லாமல் வெளிப்படுத்த வழங்கப்பட்ட பெயரே ஊர்ப்பெயர் ஆகும். எவ்விதக் காரணமும் இல்லாமல் இடுகுறியாகவோ காரண காரிய அடிப்படையிலோ ஊர்ப் பெயர்கள் சூட்டப்படுவதைக் காணலாம். சங்க காலத்திற்கு முன்பே தமிழகத்தில் ஊர்ப்பெயர்கள் சூட்டப்பட்டு வந்திருப்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இப்பெயர்களின்

பண்பு காலத்திற்கேற்பப் பல மாற்றங்களைப் பெற்று வளர்ந்துள்ளது. இம்மாற்றங்களை இனம் காண்பதும் பல்வேறு காலத்திய மக்களின் வாழ்வியல், வரலாறு, வழக்காறு முதலியவற்றை ஆராய்ந்து அறிவதுமான தேவை கருதி இப்பெயர்களை ஆய்வு செய்யும் போக்கு வளர்ந்துள்ளது.

ஊர்ப் பெயராய்வு என்னும் பிரிவு பெயராய்வு என்னும் பகுப்பிற்குள் அடங்குகிறது. இப்பெயராய்வு "பெயரிடல்" என்னும் பண்பின் அடிப்படையில் நிகழ்கிறது. இந்நிலையில் மக்களுக்குப் பெயரிடுதல், பட்டப் பெயரிடுதல், ஊர்ப் பெயரிடுதல் முதலிய பிரிவுகள் உள்ளன. இவற்றில் மக்கள் பெயரிடுதலும் பட்டப் பெயரிடுதலும் வாழும் மனிதர்களை அடிப்படையாகக் கொண்டவை. ஊர்ப் பெயரிடுதல் இடத்தையோ அல்லது இடத்தில் உள்ள பெரும் மனிதர்களையோ அடிப்படையாகக் கொண்டவை. இத்தகைய ஊர்ப் பெயர்களை ஆராய்ந்து அறியும் போக்கு இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேகமாக வளரத் தொடங்கியது.




மேற்காணும் அட்டவணையின் வாயிலாகப் பெயராய்வின் பிரிவுகளை விளங்கிக் கொள்ளலாம். இப்பிரிவுகளுள் ஊர்ப் பெயராய்வு தனிச்சிறப்பிடம் பெறுவதை அறியலாம்.

மக்கள் பெயராய்வில் நிலத்தில் வசிக்கும் மனிதர்களுக்கும் தேவர்கள், நரகர்களுக்கும் பெயர் சூட்டி வழங்கும் தன்மையே மக்கள் பெயரிடுதல் ஆகும். இத்தகைய பெயரே இயற்பெயர் ஆகும்.

அது போன்றே மக்களுக்கு இயற்பெயர்கள் இருக்க, அதை விடுத்து, ஒருவருக்கொருவர் காரண காரிய அடிப்படையில் நல்லதாகவோ இழிவானதாகவோ ஒரு பெயரைச் சூட்டி வழங்கி வருவதைப் பட்டப்பெயர் என்பர். இத்தகைய பட்டப் பெயர்களைச் சேகரித்து ஆய்வு செய்து மக்களின் உளவியல்

மற்றும் உணர்வுகள் தொடர்பான உண்மைகளை வெளிக் கொணரும் ஒருவகை ஆய்வு செய்வது பட்டப் பெயர் ஆய்வு ஆகும்.

உலகில் கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு வகையான பொருட்களுக்கும் ஒவ்வொரு முறையில் பெயரிடப்படுகின்றது. அப்பெயர்களைப் பற்றி ஆய்வு செய்வதும் ஒரு வகையாகக் கொள்ளப்படுகிறது.

அடுத்ததாக ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்து உண்மைகளை அறிவதும் ஒருவகை ஆய்வு முறையாகும்.

இவ்வாறு நான்கு வகையான கூறுகளைப் பெயராய்வு என்னும் நிலையில் அடக்கிப் பார்க்கலாம். இவற்றில் மக்கள் பெயராய்வும் ஊர்ப்பெயராய்வும் மட்டும் செல்வாக்குப் பெற்றன. இரண்டினும் ஊர்ப்பெயராய்வே மிகுந்த செல்வாக்குப் பெற்று வளர்ந்தது. அதற்குக் காரணம் ஊரும் பேரும் என்னும் நூலை எழுதிய ரா.பி. சேதுப்பிள்ளையே ஆவார். ஊர்ப்பெயராய்வின் பயன்பாடும் இன்றியமையாத் தேவையும் பல அரிய உண்மைகளை வெளிக்கொணரும் ஆய்வுக்களமாக விளங்கும் தன்மையும் இவ்வகை ஆய்வுகள் அதிகம் நிகழக் காரணமாக அமைந்தன. இந்தப் பின்னணியில் தமிழில் ஊர்ப்பெயர் ஆய்வுகள் பல நிகழ்ந்தன. அத்தகைய ஆய்வு வரலாற்றுப் பின்புலத்தை அறிவது ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர் ஆய்வு முனைப்பிற்கான பின்னணியை அறியத்தரும்.

முதன் முதலில் ஐரோப்பா கண்டத்திலேயே இவ்வகை ஆய்வுகள் நிகழ்ந்தன. பிரிட்டன் முதலிய நாடுகளில்தான் இவ்வகை ஆய்வுகள் தொடங்கின. மேலை நாடுகள் இவ்வாய்வில் வளர்ச்சியுற்ற அளவில் இன்று நாம் வளர்ச்சி பெறவில்லை. நம் நாட்டினர் சில ஆண்டுகளாகவே இவ் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பார் மெய் சந்திரசேகரன் (தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள்: 1983:5). பழமையான தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தினையும் வழக்காறுகளையும் விளக்கும் ஊர்ப்பெயர்களைப் பற்றிய ஆய்வில் மேலை நாட்டினர் மிகவும் வளர்ச்சியுற்றிருக்கின்றனர். அங்கு மன்றங்கள், சங்கங்கள், ஆய்வரங்குகள் முதலிய அமைப்புகளை உருவாக்கி அவற்றின் வாயிலாக ஆய்வு நிகழ்த்தி வருகின்றனர். அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வுத் தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இங்கிலாந்தில் உள்ள "ஆங்கில இடப்பெயராய்வுக் கழகம்" ஊர்ப்பெயராய்வு வெளியீடாக ஐம்பதுக்கும் மேற்பட்ட தொகுதிகளை வெளியிட்டுள்ளது. மேலும் அமெரிக்கா, ஸ்காட்லாந்து ஆகிய நாடுகளில் பெயராய்வுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1949ஆம் ஆண்டு பெல்ஜியத்தில் லூவெய்ஸ் என்னும் இடத்தில் அனைத்துலகப் பெயராய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டது. இதில் 48 நாடுகள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றன. இதன் வாயிலாக மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை பெயராய்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. இதில் உலகெங்கிலுமுள்ள பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன. மேலும் 'Onoma' என்னும் ஆய்விதழ், பல நாடுகளில் நடைபெறும் பெயராய்வு பற்றிய செய்திகளைத் தொகுத்து 'Bibliographical and information Bulletin' என்னும் பெயரில் பெயராய்வுத் தொகுதிகளை வெளியிட்டு வருகிறது. இவ்வாறு உலகளாவிய நிலையில் பெயராய்வுத்துறை பரவலாகப் பரவியுள்ள பாங்கினையும் விரிவாக வளர்ந்துள்ள தன்மையினையும் விளங்கிக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஊர்ப்பெயர்கள், பக்தி இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஊர்ப்பெயர்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஊர்ப் பெயர்கள், நவீன இலக்கியங்களான கட்டுரை, சிறுகதை, புதினங்களில் சுட்டப்படும் ஊர்ப்பெயர்கள் எனத் தமிழ் இலக்கியக் கடலில் ஊர்ப்பெயர்ப் பதிவுகள் பரவலாக இடம் பெற்றுள்ளன. சான்றாக, பக்தி இலக்கியங்களையும் புதினங்களையும் குறிப்பிடலாம். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆழ்வார்கள் முதலிய பக்தி இயக்கப் பாசுறையாளர்கள் தம் பாசுரங்களில் தாம் சென்று வணங்கிய ஆலயங்கள் அவை உள்ள தலங்களைப் பற்றியும் இடங்கள் பற்றியும் அவற்றின் சிறப்புப் பற்றியும் மிகத் தெளிவாகவும் விரிவாகவும் படம்பிடித்துக் காட்டுகின்றனர். புதினங்களைத் தீட்டும் எழுத்தாளர்கள் தம் கதையில் குறிப்பிடும் இடங்களைத் தெளிவாகவும் சுவைபடவும் விளக்கிக் கூறுகின்றனர். சான்றாக, மு. வரதராசனாரின் புதினங்களைக் கூறலாம். இவர்தம் புதினங்களில் வரும் இடங்களைப் பற்றி விரிவாக விளக்கிச் செல்லும் போக்கினை இனம்காண முடியும். இவ்வாறு தமிழ் இலக்கியங்களும் இலக்கிய வாதிகளும் பெயராய்விற்குக்

குறிப்பாக ஊர்ப்பெயராய்விற்கு மிகப் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

இந்தப் பின்னணியில் தமிழில் பல ஆய்வேடுகளும் கட்டுரைகளும் வெளிவரத் தொடங்கின. 1973, 74களில் கேரளப் பல்கலைக்கழகத்தில் கி.நாச்சிமுத்து, மா.நயினார், ஆ.சுப்பிரமணியன் ஆகியோர் முறையே கோவை மாவட்டம், சுசீந்திரம் கல்வெட்டு, திருநெல்வேலி மாவட்ட ஊர்ப் பெயர் ஆய்வுகளை மேற்கொண்டு நிறைவேற்றினர். 1984ல் சொ. சண்முகானந்தம் ஸ்ரீசேஷகன் அண்ணாமலைக் கல்லூரி ஆண்டு மலரில் "திருவையாறு பெயர்க் காரணம் - ஓர் ஆய்வு" என்னும் கட்டுரையை எழுதி வெளியிட்டார். ச. சந்திரபோசு, புலமை இதழில் (10.:2: 30-45) "தமிழில் பெயராய்வு" முறைகளும் மக்கள் பெயராய்வும் என்னும் கட்டுரையை எழுதினார். வை. விநாயகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கடலூர் வட்ட மக்கள் பெயராய்வு என்னும் பெயரில் எம்.பில். ஆய்வு செய்தார். 1987இல் கனகராசு, அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் முதல் ஆய்வுக் கோவையில் (தொகுதி 2: 376-380) நிலவியல் நோக்கில் புதுச்சேரி ஊர்ப்பெயர்கள் என்னும் கட்டுரையை எழுதினார். 1982இல் த.கோ. பரமசிவம் 14வது கருத்தரங்க ஆய்வுக் கோவையில் ஊர்ப் பெயர்களின் உண்மைக் காரணம் (தொகுதி 3) என்னும் கட்டுரையை எழுதி வெளியிட்டார். இரா. சுகந்தி இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் 19வது ஆய்வுக் கோவையில் (தொகுதி 3: 258-263 : 1987) "நீலகிரி மாவட்ட ஊர்ப் பெயராய்வு" என்னும் கட்டுரையை எழுதினார். மு. முத்தையா இந்திய நாட்டுப்புறவியல் கழகம் வெளியிட்ட நாட்டுப்புறவியல் ஆய்வுக் கோவையில் (தொகுதி 2: 750 - 760 : 1987) மக்கட் பெயரில் சடங்கு முறை நம்பிக்கைகள் என்னும் கட்டுரையினையும் மதுரை-நாட்டுப்புறவியல் கருத்தரங்கில் "மக்கட் பெயரில் நம்பிக்கைகள்" என்னும் கட்டுரையினையும் எழுதினார்.

1980களுக்குப் பின்பு மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல்துறை, எம்.பில், பிஎச்.டி. ஆய்வாளர்களுக்குப் பெயராய்வுத் துறையைச் சிறப்பாக முன்னிறுத்தியது. முனைவர் தமிழண்ணல் தம் சீரிய முயற்சியால் பெயராய்வு வளரப் பல வழிகளில் பாடுபட்டார். ஆய்வாளர்களிடம் இவ்வகை ஆய்வுப் பொருளைப் பரிந்துரைத்து ஆய்வு நிகழக் காரணமாக இருந்ததுடன் பல கருத்தரங்குகளையும் நடத்திப் பெயராய்வு

வளர உழைத்தார். அதோடு பெயராய்வுத் துறையுடன் தொடர்புடைய வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்து ஆய்வு செய்து அரிய பல உண்மைகளைக் கண்டறியும் முயற்சியிலும் ஈடுபட்டார். மைசூரில் திரு. இராமேசு என்பவர் Place Name Society of India என்னும் அமைப்பை ஏற்படுத்தி அதன் வாயிலாகப் பல கோணத்தில் ஊர்ப்பெயராய்வுப் பணியாற்றி வருகிறார்.

மேலும் செந்தமிழ்ச் செல்வி இதழ், ஊர்ப்பெயராய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தது. இவ்விதழில் அவ்வப்போது பல ஊர்ப்பெயராய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன. இது ஊர்ப் பெயராய்விற்கு முன்னோடியாக அமைந்தது. மேலும் 'குமர குருபரன்', ஞானசம்பந்தம் ஆகிய சமய இதழ்களில் ஒவ்வொரு ஊரைப் பற்றியும் வெளிவந்த ஆய்வுரைகள், பிற செய்திகள், கட்டுரைகள் முதலியவை ஊர்ப்பெயராய்விற்குப் பெரிதும் உதவின.

## ஊர்ப்பெயராய்வின் இயல்புகளும் அவசியமும்

> வாழ்க்கைக்குப் பல துறைகள் தேவை. அவற்றுள் ஆவி போன்றவை ஊரும் பேரும். ஊரும் பேரும் வாழ்க்கையை இயக்கி வளர்ப்பன என்று கூறல் மிகையாகாது. ஊர் பேரால் உலகம் இயங்கல் வெள்ளிடை மலை. ஊர் பேரே உலகம்; வாழ்க்கை; எல்லாம் எல்லாம்

என்னும் திரு.வி.க.வின் கருத்து (ஊரும் பேரும் : முன்னுரை 1946) ஊர்ப்பெயர் ஆய்வின் அவசியத்தை அறிந்து கொள்ளத் துணை செய்கிறது.

> இப்பரந்த அழகிய உலகை என்னுள்ளே தொடர்பு படுத்தும் கருவி ஒன்றுள்ளது. அஃது உள்ளம். உள்ளம் ஓர் அகக் காரணம். அது, புலன்கள் வழியே தன் கடனை ஆற்றுகிறது. ஊர், பேர் இல்வழி உள்ளம் என் செய்யும்? அஃது எதனுடன் தொடர்பு கொள்ளும்? எக்கடனை ஆற்றும்? ஊரும் பேரும் இல்லையேல் உள்ளம் உறங்கியே போகும். ஊரும் பேரும் உள்ள நிகழ்ச்சிக்கு இன்றியமையாதன

என அவர் கூறும் கருத்து ஊர்ப்பெயருக்கும் உள்ளத்திற்கும் உள்ள தொடர்பினை எடுத்துக்காட்டுவதுடன் ஊர்ப்பெயரின் இன்றியமையாமையை உணர்த்தி ஊர்ப் பெயரின் அவசியத்தை அறிவுறுத்துவதாக அமைகிறது. "ஊர்ப்பெயர்கள் ஆய்வு என்பது ஆய்வு உலகில் ஒரு பெரும் முயற்சி - புது முயற்சி என்னும் இதனால் விளையும் - விளைந்த பல்வேறு விதமான நன்மைகள் ஆய்வுலகிற்கும், சமுதாயத்திற்கும் பெரும் முன்னேற்றம் தருவனவாகும்"

என்னும் மெய். சந்திரசேகரனின் கருத்து (தஞ்சை மாவட்ட ஊர்ப் பெயர்கள் : 1983 : 121) ஊர்ப்பெயராய்வின் அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறது. இவ்வகை ஆய்வுகள், அரசுகள், ஆட்சி செய்த மன்னர்கள், ஆட்சித் திறம் பற்றிய வரலாற்று உண்மைகளைக் கண்டறியவும் பிறவழி அறிந்தவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவும் உதவுகின்றன. மேலும் சமுதாய அமைப்பு, பண்பாட்டுப் பின்புலம், இயற்கை அமைப்பு, பண்டைத் தமிழர்களின் கூர்த்த அறிவு, மொழியியல் நோக்கில் எழும் பல்வேறு மாற்றங்கள் முதலிய பல்வேறு கூறுகளை அறிவதற்குத் துணைசெய்வதால் இவ்வகை ஆய்வுகள் மிகவும் அவசியமாகின்றன.

> ஊர்ப் பெயராய்வு தனிப்பட்ட ஒரு பெயரின் ஆய்வாக, விளக்கமாக மட்டுமல்லாது எவ்வாறு ஒரு இடத்தின் வரலாற்றையும் விளக்கும் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ முடியும் என்பதை இவ் ஆய்வு புலப்படுத்துகிறது. ஊர்ப்பெயர்கள் காலந்தொறும் சமுதாயம் போன்ற பல சூழல்களுக்கும் ஏற்ப எவ்வாறு மாறுபடும் என்பதுடன், தமிழகத்தின் நிலையை, மக்கள் உணர்வைப் புரிந்து கொள்ளவும் இவ் ஆய்வில் இடம் அமைகிறது

என்னும் ச.வே. சுப்பிரமணியனின் கருத்து (முன்னுரை : இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் : 1984) ஊர்ப்பெயர் ஆய்வின் தனித்தன்மையையும் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்புகிறது.

ஊர்ப்பெயரின் அவசியத்தை ராபி. சேதுப்பிள்ளை தம் ஊரும் பேரும் நூலில் தெளிவு படுத்துவதைக் காணலாம்.

> நிலமும் உயிரும், "உயிரும் பேரும்" பெற்றமை என்க. ஊரும் பேரும் உலகை வாழ வைக்கும் பெற்றமை உடையன என்பதை உன்னுக" (முன்னுரை : 1946)

என்னும் கூற்று மேற்கூறிய கருத்தினை உறுதி செய்கிறது.

> பழங்காலத்தில் வாழ்ந்த இனங்கள் குடிகள் பற்றியும் சாதி சமய வரலாறு பற்றியும் நில அமைப்பு பற்றியும் அக்கால இலக்கியங்கள் பற்றியும் தொல் பொருள் ஆய்வுக்குத் துணை செய்யும் வகையில் நாடு, நகரங்கள் பற்றியும் நன்கு அறிய முடிகிறது

என்கிறார் மெய். சந்திரசேகரன்.

"ஊரும் பேரும்" என்ற நூல் தமிழ் நாட்டில் சிதைவுபட்டுக் கிடந்த ஊர்ப்பெயர்களைத் திருத்தி அமைக்க உதவுவதாயிற்று. சிதம்பரம் வட்டத்திலுள்ள "ஆரூர்" என்பதை "நர்த்தனபுரி" என வேறோரு மொழியில் ஆக்கி, அதற்கேற்ப ஒரு புராணம் கட்டிவிட்டனரே என அவர் புலம்பியுரைத்துள்ளார் என்பது டாக்டர் அ.சிதம்பர நாதனின் கருத்து (அ.க. நவனீத கிருஷ்ணன்: டாக்டர் சேதுப்பிள்ளை: 1961: 204) ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயராய்வு மறைந்துகிடக்கும் பல புதிய செய்திகளை வெளிக்கொண்டு வருவதுடன் பல புதிய உண்மைகளைப் பதிவு செய்யும் முயற்சியினை அடையாளம் காட்டுவதாக அமைகிறது. இது அவரை ஊர்ப்பெயராய்வின் முன்னோடியாக அறிமுகம் செய்வதை உணரலாம்.

ஊர்ப்பெயர் ஆய்வு வாயிலாகப் பழமையான வரலாற்று உண்மைகள், பெயர்கள், கல்வெட்டுப் பெயர்கள், அக்கால அமைப்பு, நிர்வாகப் பிரிவுகள், அரசர்களின் காலம், நாட்டின் நிலைமை முதலியவற்றை அறிய முடிகிறது. ஊர்ப்பெயர்களுடன் தொடர்புடைய புராணம், இதிகாசம், இலக்கியம், கலை, கலைஞர்கள், கொடை, புகழ், சாதி, சமயம், நில அமைப்பு, இயற்கைப் பின்னணி, பறவைகள், விலங்குகள், தாவரங்கள், வீரர்கள், தலைவர்கள், வீரத்தாய்மார்கள், இசைக்கலை, தொழில் நிலை, மொழியின் இயல்பு, நாட்டுப்புறக் கதைகள், சடங்குகள்,

விழாக்கள், பாடல்கள், பழமொழிகள், நினைவுப் போற்றுதல்கள், வீரத்தின் நினைவுகள் முதலிய பல்வேறு நிகழ்வுகளைப் பற்றிய செய்திகளையும் கூறுகளையும் அறியலாம்.

இதுகாறும் கூறப்பட்ட ஊர்ப்பெயராய்வு கருத்தாக்கங்கள் வாயிலாக மொழி, இனம், சாதி, சமயம், பண்பாட்டு வளர்ச்சி, நாகரிக வளர்ச்சி, அரசியல் அமைப்பு, சமுதாய நிலை, மறைந்த சமுதாய அமைப்பு, மறைந்த பல உண்மைகள் உள்ளிட்ட பல செய்திகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. இக்கருத்தாக்கங்கள் தமிழாய்வு உலகில் ஊர்ப் பெயர் ஆய்வின் அவசியத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

## ரா.பி.சே. நூல்களில் ஊர்ப்பெயராய்வுக் கூறுகள்

ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய **ஊரும் பேரும்** (1946) **கடற்கரையிலே** (1950) **ஆற்றங்கரையினிலே** (1961) என்னும் நூல்கள் ஊர்ப்பெயராய்வுக் கூறுகளை உள்ளடக்கியவை என்பது அறியத்தக்கது. இம்மூன்று நூல்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ, பத்து ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளியில் வெளி வந்தவை. இக்கால இடைவெளிக்கு ஏற்பச் சில மாற்றங்கள் ஒவ்வொரு நூலிலும் இருப்பதைக் காணலாம். மூன்றும் மூன்று விதமான கோணத்தில் ஊர்ப்பெயர்களை விளக்குவனவாக உள்ளன. பொருண்மை அடிப்படையிலும், நடை அடிப்படையிலும் தகவல்களின் அடிப்படையிலும் பல வேறுபாடுகள் உள்ளன.

முதலில் வந்த ஊரும் பேரும் என்னும் நூல், அனைத்து முக்கிய ஊர்களையும் உள்ளடக்கியதாக, பொதுவானதாக, கருப்பொருள் அடிப்படையில் வகை தொகைப் படுத்துவதாக, ஒவ்வொரு ஊரைப் பற்றியும் மிகச் சுருக்கமான குறிப்புகளை, எளிமையாகவும், தெளிவாகவும், இனிமையாகவும் கூறுவதாக, பொருண்மை அடிப்படையில் வகைப்பாடு செய்யப்பட்டதாக, படிக்கத் தூண்டுவதாக, செய்திக் கருவூலமாக அமைந்துள்ளது.

பின் வந்த கடற்கரையினிலே என்ற நூல் தமிழகம் மட்டுமல்லாது இலங்கையிலும் தமிழுடன் தொடர்புடைய கடற்கரைப் பட்டணங்களைப் பற்றிய குறிப்புகளைத் திரட்டி ஒவ்வொன்றைப் பற்றியும் சிறு சிறு கட்டுரைகளாக இருபது

கட்டுரைகளுடன் அமைந்துள்ளது. இந்நூலின் சிறப்பு இக்கட்டுரைகள் ஒவ்வொன்றும் அந்த ஊர்ப்பெயரைத் தலைப்பாகக் கொள்ளாமல் அவ்வூரில் உள்ள புகழ் பெற்ற மாந்தரைத் தலைப்பாகக் கொண்டுள்ளன. இதில் கடற்கரைப் பட்டணங்களில் பிறந்த அல்லது வாழ்ந்த கவிஞர்களையோ, மன்னர்களையோ, எடுத்துரைக்கும் கோணத்தில் அவர்கள் சார்ந்துள்ள கடற்கரைப் பட்டணத்தின் அருமையும் பெருமையும் பேசப்படுவதைக் காணலாம். சான்றாக, பாரதியாரைப் பற்றிய கட்டுரையை எடுத்துக் கொண்டால் அவர் பிறந்த எட்டயபுரத்திற்கும் கடலுக்கும் தொடர்பில்லை. ஆயினும் பாரதியுடன் தொடர்புடைய கடற்கரைப் பட்டணமான திருவல்லிக்கேணி பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் இலக்கிய வரலாற்றுச் சான்றுகளுடன் இனிமையாக எடுத்துரைத்திருப்பதை அறிய முடிகிறது. இது ஊர்ப்பெயராய்வின் ஒருவகை இயல்பினைப் பெற்றுள்ளது. ஒரு கட்டுரையில் ஒரு கடற்கரைப் பட்டணத்தைப் பற்றியும் அதனுடன் தொடர்புடைய மாந்தரைப் பற்றியும் அறிந்து கொள்ளும் வகையில் புதிய உத்தியைக் கையாண்டு இந்நூலைப் படைத்திருப்பதை அறிய முடிகிறது.

அடுத்து வந்த ஆற்றங்கரையினிலே என்னும் நூல் அதிலிருந்து சற்று வேறுபட்டு ஆற்றங்கரைகளில் அமைந்த நகரங்களைப் பற்றிச் சிறு சிறு கட்டுரை வடிவில் விளக்கிச் செல்கிறது. இந்நூலில் ஊர்ப்பெயர்கள் நேரடியாகத் தலைப்பிடப்பட்டு விளக்கப்பட்டாலும் அவ்வூர்களுடன் தொடர்புடைய தெய்வம், மன்னன் உள்ளிட்ட மாந்தரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் எடுத்துரைப்பதாக உள்ளது. பழங்காலத்து நாடுகளின் அடிப்படையில் ஊர்கள் வகைதொகைப் படுத்தப்பட்டுக் குறிப்பிடப்படுகின்றன. அந்த வகையில் தமிழகம் மட்டுமல்லாது கேரளம், ஆந்திரம், வடக்கில் காசி, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் உள்ள ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள நகரங்களைப் பற்றி இலக்கிய வரலாற்றுச் செய்திகள் இனிமையாக எடுத்துரைக்கப் படுகின்றன. இந்நூல் முந்தைய நூல்களிலிருந்து வேறுபட்டுள்ளது. ஊர்ப் பெயரைத் தலைப்பாகக் கொண்டு அமைந்தாலும் ஊர்ச் சிறப்புடன் தொடர்புடைய தெய்வங்கள், தொடர்புடைய மன்னர்களைப் பற்றிய வரலாற்றுச் சிறப்புகளையும் இலக்கியச் சன்றுகளையும்

வரலாற்று ஆதாரங்களையும் எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். எனவே இந்நூல் ஊர்ச் சிறப்புகளுடன் அவ்வூருடன் தொடர்புடைய நாடு, தெய்வம், மன்னன் உள்ளிட்ட மாந்தரின் சிறப்பையும் விளக்கிக் காட்டும் கண்ணாடியாக அமைந்துள்ளது.

மொத்தத்தில் மூன்று நூல்களும் ஊர்ப்பெயர்களையே ஆய்வு செய்து கூறினாலும் மூன்றும் மூன்று கோணத்தில் ஊர்ப் பெயர் ஆய்வுச் செய்திகளைத் தருகின்றன. இத்தகைய வேறுபாடான வெளிப்பாட்டு முறை நூலாசிரியரின் வேறுபட்ட வெளிப்பாட்டுத் திறனையும் உத்தியினையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது. படிப்பதற்குச் சுவையூட்டும் வகையிலும் பல புதிய செய்திகளை இனம்கண்டு கூறும் நோக்கிலும் வெவ்வேறு கோணத்தில் வெளிப்பட்டிருக்கும் இம்மூன்று நூல்களுமே ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர் ஆய்வுச் சிந்தனையையும் திறனையும் இலக்கிய - வரலாற்று - பண்பாட்டு மூலங்களையும் அறியத்தரும் கருவூலமாகவே திகழ்கின்றன.

## ஊர்ப்பெயர்களைத் தொகுக்கும் திறம்

ரா.பி. சேதுப்பிள்ளை ஊர்ப்பெயர்களைத் தொகுத்து ஆய்வு செய்யும் நிலையில் அவற்றை வகைப்படுத்தும் பொழுது தமக்கே உரிய புதிய உத்தியைக் கையாள்கிறார். மூன்று சூழல்களில் வந்த மூன்று நூல்களில் மூன்று விதமாக தொகுத்திருப்பதைக் காணமுடிகிறது.

முதலில் வந்த ஊரும் பேரும் நூலில் ஊர்ப்பெயர்கள் திணை வேறுபாட்டுக் கூறுகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஊர்ப்பெயர்கள் வெளிப்படுத்தும் கருப்பொருள் அதாவது உணர்த்தும் பொருண்மை அடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் தமிழகமும் நிலமும், நாடும் நகரமும் குடியும் படையும், குலமும் கோவும், தேவும் தலமும், தமிழகம் அன்றும் இன்றும், விடுபட்ட புதிய செய்திகளின் இணைப்பு எனும் ஏழு நிலைகளில் ஊர்ப்பெயர்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கணம் குறிப்பிடும் பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் ஐவகை நிலங்களின் அடிப்படையிலும், நாடு, குடிகள், மன்னன், தெய்வம், கோயில் உள்ளிட்ட கருப்பொருட்களின்

அடிப்படையிலும் வகைப்பட்டிருப்பதைக் காணலாம். இறுதியில் தமிழ்நாட்டுக் கோயில்களின் பெயரகராதி ஒன்றும் தொகுத்துக் கூறப்பட்டிருப்பது ஆய்வாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

கடற்கரையிலே என்னும் நூலில் திருவள்ளுவர், இளங்கோவடிகள், நக்கீரர், பரணர், சாத்தனார், புனிதவதி, திருநாவுக்கரசர், திருமங்கை மன்னன், பட்டினத்தார், பண்டித சோழன், கண்டி மன்னன், கம்பர், தாயுமானவர், மார்க்கப்போலர், ஆனந்தரங்கர், உமறுப்புலவர், கால்டுவெல், பரிதிமாற் கலைஞர், சிதம்பரனார், பாரதியார் என்னும் இருபது தலைமாந்தர்களுடன் தொடர்புடைய கடற்கரைப் பட்டணங்களைத் தொகுத்திருக்கும் புதுமையைக் கையாண்டுள்ளார் ரா.பி. சேதுப்பிள்ளை. கடற்கரையில் நடந்த நிகழ்வுகளாகக் கடற்கரைப் பட்டணங்கள் பற்றிய இலக்கிய, வரலாற்றை, பண்பாட்டுக் கூறுகளைச் சான்றுகளுடன் கூறி, தலைமாந்தருடன் தொடர்பு படுத்திப் பேசியுள்ளார். இதில் தலைமாந்தர் பெயரில் அவர் தொடர்பு கொண்ட இடம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. இவ்வகைத் தொகுப்பு புதுமையான ஒருவகை உத்தி.

ஆற்றங்கரையினிலே என்னும் ஆய்வு நூலில் ஆற்றங்கரைகளில் அமைந்துள்ள ஊர்களை நாடுகளின் அடிப்படையில் தொகுத்துள்ளார். இந்நூலில் முதலில் ஆறும் ஊரும் பற்றிய இலக்கிய நயம் மிகுந்த கட்டுரை உள்ளது. பின் தொண்டை நாடு, நடுநாடு, சோழ நாடு, பாண்டி நாடு, நாஞ்சில் நாடு, சேர நடு, வடநாடு, ஈழ நாடு எனப் பல்வேறு நாடுகளின் வகைப்பாட்டிற்கேற்ப அந்தந்த நாடுகளில் பாயும் நதியையும் அந்நதிகளின் கரையில் அமைந்த நகரங்களையும் இலக்கிய வரலாற்றுப் பண்பாட்டு ஆதாரங்களுடன் தொகுத்திருக்கும் பாங்கு வேறுபட்டதும் சிறப்புடையதும் ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் அமைந்திருக்கும் நகரங்களைப் பற்றிய செய்திகளைக் கூற விளைந்த ஆசிரியர், அதன் எல்லை விரிந்து செல்லும் என்பதால் ஆற்றங்கரைகளில் உள்ள நகரங்கள் என எடுத்துக் கொண்டு எல்லையைச் சுருக்கியதுடன் ஆறுகளின் சிறப்பையும் இணைத்துக் கூறியிருப்பது ஆசிரியரின் தனித்தன்மையையும் ஊர்ப்பெயர் ஆய்வின் உத்தியினையும் அறிவுத் திறனையும் இனம் காட்டுகிறது.

## ஊர்ப்பெயர்களைப் பகுத்திருக்கும் போக்கு

பெரும்பாலும் ஊர்ப்பெயர்கள் பொதுப்பெயர் சிறப்புப் பெயர் என இருவகைப் பெயர்களுடன் இணைந்தே காணப்படும். இது மிகவும் நுட்பமாகவே புலப்படும். இந்த நுட்பமான தன்மை அடிப்படையில் ஊர்ப்பெயர்களைப் பகுத்து விளக்கும் இயல்பை இனம் காண முடிகிறது. இது தொடக்க காலத் தமிழியல் ஆய்வின் இயல்பினை அடியொற்றி எழுந்த ஆய்வுமுறை உத்தியாகவே படுகிறது.

பொதுவாக, சிறப்புப்பெயர் என்பது ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணகாரிய அல்லது இடுகுறி அடிப்படையில் எழுந்த பெயராக அமையும். குறிப்பாக அந்த இடத்திற்கு மட்டுமே உரிய சிறப்புக் கருதி வழங்கப்பட்ட பெயர்களாக இருக்கும். பல ஊர்களுக்கும் பொதுவான இடத்தை அல்லது மக்கள் வாழிடத்தை உணர்த்தும் பெயர்கள் பொதுப்பெயராக இணைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு சிறப்புப் பெயரும் பொதுப் பெயரும் இணைந்த இருபெயரொட்டுப் பண்புத் தொகையாகவே பெரும்பாலான ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன! எனவே இரு பெயரொட்டுப் பண்புத்தொகை அடிப்படையில் பொதுப் பெயரை மையமாக வைத்துப் பகுத்துக் கொண்டுள்ள தன்மையை ரா.பி. சேதுப்பிள்ளையிடம் காணமுடிகிறது.

இருபெயரொட்டுப் பண்புத் தொகையின் இயல்பு, சிறப்புப் பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் ஒட்டி வருவதாகும். சான்றாக, சாரைப்பாம்பு, வாழைப் பழம், அவரைப் காய், அல்லிப்பூ முதலியவற்றைக் கூறலாம். இந்தப் பின்னணியில் ஊர்ப்பெயர்களும் இருபெயரொட்டுப் பண்புத் தொகை இயல்பிற்கேற்பச் சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் இணைந்து வந்துள்ளன. சான்றாக வாடிப்பட்டி, வையம்பட்டி, நடுப்பட்டி, தொப்பநாயக்கன்பட்டி, தூத்துக்குடி, உடன்குடி, இடையன்குடி, இராமன்குடி, இடலாக்குடி, சூரங்குடி, இட்டமொழி, தச்சமொழி, ஆரல்வாய்மொழி, நங்கைமொழி, முதுமொத்தன்மொழி, தோகைமலை, நாகமலை, சென்னிமலை, கழுகுமலை முதலிய பெயர்களைக் கூறலாம்.

### வகுத்துக் கூறும் திறம்

இருபெயர் ஒட்டாக அமைக்கப்பட்டுள்ள பெரும்பாலான ஊர்கள் அவற்றுடன் தொடர்புடைய இயற்கைக் கூறுகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு, அப்பெயர்களில்

உள்ள பொதுப்பெயர்களின் அடிப்படையில் பகுக்கப்பட்டு, சிறப்புப் பெயர்களின் அடிப்படையில் வகுக்கப்படும் இயல்பினை ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயராய்வில் காணலாம்.

சிறப்புப் பெயர்கள் என்பது காரண காரிய அடிப்படையிலோ இடுகுறியாகவோ அமைந்திருக்கும். இவற்றை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவது கடினம். பொதுவாக, இடத்திற்கு ஏற்ப, நாட்டிற்கு ஏற்ப, இயற்கை அமைப்பிற்கேற்ப, ஆட்சி செய்த மன்னர்களுக்கு ஏற்ப, வழிபடப்படும் தெய்வங்களுக்கு ஏற்ப இறந்துவிட்ட வீரர்களுக்கு ஏற்ப, தலைவர்களுக்கு ஏற்ப, ஊரைத் தோற்றுவித்தவருக்கு ஏற்ப, வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ப, பண்பாட்டு மரபிற்கேற்ப, இயற்கைப் பின்னணிக்கேற்ப, வாழும் மக்களுக்கு ஏற்ப, சாதி, சமய, பாகுபாடுகளுக்கு ஏற்ப, இலக்கிய ஆதாரங்களுக்கு ஏற்ப, புராணக் கூறுகளுக்கேற்ப, கோயில்களுக்கு ஏற்ப, கடல், ஆறு, மலைகளுக்கு ஏற்ப, தொழிலுக்கு ஏற்ப எனப் பல்வேறு நிலைகளில் சிறப்புப் பெயர்கள் அமைந்து விளங்குவதைக் காணலாம்.

ஊர்ப்பெயர்களில் இச்சிறப்புப் பெயர்கள் பகுதியே மிக மிக இன்றியமையாத பகுதியாகும். இப்பகுதியிலேயே ஊர்ப்பெயர் உணர்த்தும் செய்திகள் அத்தனையும் பொதிந்து கிடக்கின்றன. இவ்வூர்ப் பெயர்களிலேயே இலக்கியம், வரலாறு, பண்பாடு உள்ளிட்ட அனைத்துக் கூறுகளையும் இனம்காண முடியும். எனவே இச்சிறப்புப் பெயர்களைச் சரியாகப் பதிவு செய்து கொண்டு, சரியாக ஆய்வு செய்தால் மட்டுமே சரியான உண்மைகளை வெளிக்கொணர முடியும்.

ரா.பி. சேதுப்பிள்ளை தமது நூல்களில் இவ்வகைச் சிறப்புப் பெயர்கள் உணர்த்தும் கருப்பொருளை ஆராய்ந்து அதனுடன் தொடர்புடைய இலக்கியச் சான்றுகள், வரலாற்றுக் குறிப்புகள், பண்பாட்டுப் பிரதிபலிப்புகள் முதலியவற்றை வெளிப் படுத்தியுள்ளார். அதோடு மறைந்து போன வரலாறு மற்றும் இயற்கை அமைப்பு உண்மைகளை ஊர்ப்பெயர் உதவியுடன் இனம்காட்டும் முயற்சியினையும் மேற்கொண்டுள்ளார். பல ஊர்ப் பெயர்கள் மாறியும் திரிந்தும் புது வடிவம் பெற்றும் விளங்குவதை அறியத்துணை செய்யும் வகையிலும் இவ் ஆய்வு அமைந்துள்ளது.

ஒரு பொதுப்பெயரைப் பின் ஒட்டி, பல சிறப்புப் பெயர்களுடைய ஊர்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றின்

பொருண்மையையும் சிறப்புப் பெயரே உணர்த்தி நிற்பதைக் காணலாம். அந்த வகையில் பல வகையான பொருண்மைகளையும் உள்ளடக்கிய பல சிறப்புப் பெயர்கள் ஒரு பொதுப்பெயருடன் காணப்படும் தன்மையினை அறிய முடிகிறது. சான்றாக, சிலவற்றைக் கூறலாம். பாறை என்னும் பொதுப் பெயருடன் சிறப்புப் பெயர் இணைந்து, பூம்பாறை, சிப்பிப்பாறை, தட்டைப்பாறை, குட்டைப்பாறை, மணப்பாறை, பன்னம்பாறை, வழுக்கம் பாறை, கீரிப்பாறை முதலிய ஊர்ப் பெயர்கள் அமைந்துள்ளன. புரம் என்னும் பொதுப் பெயருடன் சிறப்புப் பெயர் இணைந்து காந்திபுரம், விழுப்புரம், ராமகிருஷ்ணாபுரம், பிள்ளையார்புரம், லெவிஞ்சிபுரம் முதலிய ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ளன. கோவில் என்னும் பொதுப்பெயருடன் இணைந்து நாகர்கோவில், குமாரகோவில், கிருஷ்ணன் கோவில், சங்கரன் கோவில், காளையார் கோவில் முதலிய ஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம். பட்டினம் என்னும் பொதுப் பெயருடன் சிறப்புப் பெயர் இணைந்து குலசேகரன்பட்டினம், நாகபட்டினம், காவிரிப்பூம்பட்டினம், பட்டினப்பாக்கம், காயல்பட்டினம் முதலிய ஊர்கள் அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு நிலம், கருப்பொருள், ஆறு, கடல் முதலிய பொருண்மைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட ஊர்ப் பெயர்கள் பொதுப் பெயர்களின் அடிப்படையிலும் நாடு, நகரம், மாந்தர்களின் அடிப்படையிலும் பகுக்கப்பட்டன. அத்தகைய பெயர்களுக்கு ஆதாரமாக ஒவ்வொரு சிறப்புப் பெயர்களையும் கொண்டதான, காரண காரிய விளக்கங்களை உள்ளடக்கியதான ஊர்ப்பெயருக்கு அடிப்படையான சிறப்புப்பெயர்களின் அடிப்படையில் வகுத்துக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

மேற்கூறிய கருத்துகள் வாயிலாக ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர்கள் பற்றிய ஆய்வு நூல்களில் இடம்பெறும் தொகுப்பு முறைகளையும் பகுப்புப் பாங்கினையும் வகுத்துக் கூறும் தன்மையினையும் விளங்கிக் கொள்ளலாம். இதன் வாயிலாக ரா.பி. சேதுப்பிள்ளை ஊர்ப்பெயராய்வின் முன்னோடி என்னும் கருத்தின் நிலைப்பாட்டிற்கான வழியும் தெளிவும் ஏற்படுவதை உணர முடிகிறது.

### வெளிப்படுத்தப்படும் பொருண்மையும் பழமையும்

பொதுவாக ஊர்ப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒன்றோ, பலவோ செய்திகளை உட்பொதிந்ததாகவோ

வெளிப்படுத்துவதாகவோ அமைந்திருக்கும். காரண காரிய அடிப்படையில் ஏதோ ஒரு சூழலில் உருவாக்கப்பட்டதாக அமைந்திருக்கும். அவ்வாறு உருவாக்கப்படும் பொழுது முதலில் யார் உருவாக்கியவர் என்பதை அறிய முடியாது. காலம் காலமாக வழங்கப்பட்டு வந்து, பின்பு பதிவு செய்யப்பெறும். இந்நிலையில் பல மாற்றங்களையும் பெறும். ஆனால் இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான உண்மையினை உணர்த்துவனவாக உள்ளன. ஒவ்வொரு ஊரிலும் பல புகழ் பெற்ற மாந்தர்கள் பிறந்து வளர்கின்றனர். பல புகழ் பெற்ற திருக்கோயில்கள் தோன்றி வழிபடு தலமாகின்றன. பல தொழில் நகரங்களாகின்றன. இத்தகைய காரணிகளினால் அந்த ஊர் மிகப் புகழ் பெற்ற ஊராகி விடுகிறது. அதனால் வரலாற்று மூலங்களான கல்வெட்டு, செப்பேடுகள், சுவடிகள், இலக்கியங்கள், ஆவணங்கள் முதலியவற்றில் பதிவு செய்யப்பட்டு விடுகின்றன. அவ்வாறு பதிவு பெறும் ஊர்கள் அதன் பழமையை உணர்த்தி நிற்கும் சான்றுகளால் பெருமை பெறுகின்றன. அவை ஊர்ப்பெயர் ஆய்வுக்கு ஆதாரங்களாக, பழமையையும் பண்பையும் விளக்கும் களங்களாக அமைந்து விடுகின்றன. இந்தப் பின்னணியில் அமைந்துள்ள ஊர்ப்பெயர்களில் வரலாற்றுச் செய்திகள், இலக்கியச் செய்திகள், பண்பாட்டுக் கூறுகள், பொது அறிவுக்கூறுகள் மருவியதற்கான காரணங்கள், பழமையான வடிவங்கள் எனப் பல கூறுகளை இனம் கண்டு கூறியுள்ளார் ரா.பி. சேதுப்பிள்ளை. அவற்றைச்சான்று காட்டி விளக்குவதன் வாயிலாக ஊர்ப்பெயர்களில் வெளிப்படுத்தப்படும் பொருண்மையினையும் பழமையினையும் இனம் காணலாம்.

காடு என்னும் பொதுப் பெயர் உடைய ஊர்களில் தலையாலங்காடு என்பது தலையாலங்கானம் என இலக்கியங்களில் சுட்டப்படுகிறது. "பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் ஏனைய தமிழரசருக்கும் பெரும் போர் நிகழக் கண்ட காடு தலையாலங்காடாகும்" என்கிறார். இதனை அடிக்குறிப்பின் வாயிலாக விளக்குகின்ற பொழுது, "தலையாலங்கானம் எனவும் வழங்கும். அங்கு நிகழ்ந்த போரில் வெற்றி பெற்ற பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் எனச் சங்க இலக்கியத்தில் பாராட்டப்படுகிறான்" எனக் குறிப்பிடுகிறார். இதன் வாயிலாகத்

தலையாலங்காடு என்னும் ஊர்ப்பெயர் உணர்த்தும் வரலாற்றுச் செய்தியினை விளங்கிக் கொள்ளலாம்.

"பேரி என்னும் சொல்லை இறுதியாகவுடைய ஊர்ப் பெயர்கள் சில உள்ளன. நெல்லை நாட்டில் சீவலப்பேரி, கண்டியப்பேரி, அலங்காரப்பேரி, விசுவநாதப்பேரி முதலிய பேரிகள் உண்டு. பேரி என்பது பேரேரி என்பதன் சிதைவாகும். பெரிய ஏரிகள் பேரேரி என்று பெயர் பெற்றன. இதற்குச் சான்றுகளைச் சாசனங்களிற் காணலாம். மதுராந்தகன் என்னும் மன்னன் ஆக்கிய பேரேரி மதுராந்தகப் பேரேரி என்றும் ஆர்க்காட்டில் சுந்தர சோழன் கட்டிய ஏரி சுந்தர சோழப் பேரேரி என்றும் கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலியிலுள்ள சீவலப்பேரியின் பழம் பெயர் முக்கூடல் என்பதாகும். இஃது அவ்வூருக்கு இயற்கையாக அமைந்த பெயர். பிற்காலத்தில் ஸ்ரீவல்லபன் என்னும் பாண்டியன் அவ்வூரில் பேரேரி ஒன்று உண்டாக்கி, சீவல்லவன் என்று அதற்குப் பெயரிட்டான். அப்பெயர் சிதைந்து சீவலப்பேரியாயிற்று" (ரா.பி. சேதுப்பிள்ளை: ஊரும் பேரும் : 1946 : 21) என்னும் பகுதியில் வரலாற்றுக் குறிப்பினை இனம் காணலாம். அதோடு ஸ்ரீவல்லபனால் முன்னேற்றமடைந்த ஊராதலின் ஸ்ரீவல்லபமங்கலம் என்னும் பெயரும் அதற்குண்டு. அப்பெயர் சீவலனாடு எனவும் சீவலமங்கை யெனவும் முக்கூடற்பள்ளு நாடகத்தில் வழங்கும் (முக்கூடற்பள்ளு 5:18) என அடிக்குறிப்பு விளக்கத்தையும் கொடுத்து விளக்கிச் செல்கிறார். இது ஊர்ப்பெயர் தரும் வரலாற்று உண்மை வெளிப்பாட்டிற்கு ஆதாரமாகவும் ரா.பி. சேதுப்பிள்ளையின் வரலாற்று ஆய்வுத் திறனை வெளிப்படுத்தும் சான்றாகவும் அமைகிறது.

"இல் என்னும் பெயருடைய சில ஊர்கள் பண்டைப் புலவர்கள் பெயரொடு இணைத்துச் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன. அரிசில் என்னும் ஊரில் பிறந்த புலவர் அரிசில் கிழார் என்றும் அஞ்சில் என்னும் ஊரிலே தோன்றியவர் அஞ்சில் ஆந்தையார் என்றும் பொருந்தில் என்ற ஊரைச் சார்ந்தவர் பொருந்தில் இளங்கீரனார் என்றும் கள்ளில் என்ற ஊரில் பிறந்தவர் கள்ளில் ஆத்திரையரென்றும் பழைய நூல்களில் குறிக்கப்படுகின்றனர்" (ஊரும் பேரும் : 57) என்னும் ஊர்ப்பெயர் செய்தியைக் கூறவந்த ஆசிரியர், அதற்கு அடிக்குறிப்பு விளக்கம்

தருமிடத்து, புதுக்கோட்டை நாட்டிலுள்ள அழும்பில் என்னும் ஊர் அப்புக் கோயிலெனவும் சோழ நாட்டிலுள்ள வெண்ணில், கோயில் வெண்ணி எனவும் இக்காலத்தில் வழங்கும்" என அடிக்குறிப்பு விளக்கம் தருகிறார். அதைப் போலவே முத்தரையர் குலத்தைச் சேர்ந்த வள்ளல்களின் பெருமையை நாலடியார் விளக்குவதையும் அவர்கள் குண நலன்களை வியந்து "முத்தரையர் கோவை" என்ற நூல் இயற்றப்பட்டதையும் குறிப்பிடுகிறார். சாசனங்களில் சத்துரு பயங்கர முத்தரையன், பெரும்பிலி முத்தரையன் முதலியோரின் வீரச் செயல்கள் குறிக்கப்படுகின்றன. இராமநாதபுரத்திலுள்ள முத்தரசன் என்னும் ஊரும் தஞ்சை நாட்டிலுள்ள முத்தராசபுரமும் திருச்சி நாட்டிலுள்ள முத்தரச நல்லூரும் அக்குலத்தாரது பெருமையைக் காட்டுவனவாகும் என விளக்குகிறார். அதோடு தஞ்சை நாட்டு முத்தரையரைப் பற்றி நீலகண்ட சாஸ்திரியார் எழுதிய "சோழர்" முதற்பாகம் 133, 134 ஆம் பக்கங்களில் காண்க" என அடிக்குறிப்பு விளக்கமும் தருகிறார்.

இராமநாதபுரம் நாட்டிலுள்ள கோச்சடை என்னும் ஊருக்கு விளக்கம் கூற வந்த ஆசிரியர், திருஞான சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்திருந்த பாண்டியன் அரிகேசரி மாறவர்மன், அவனுக்குப்பின் அவன் மகனாகிய கோச்சடையன் அரசனானான். நாற்பதாண்டுகள் அரசு வீற்றிருந்த அம்மன்னன் பல்லவனோடு போர் புரிந்து பல நாடுகளை வென்று புகழ் பெற்றான் எனும் வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுகிறார். அதோடு அரிகேசரி மாறவர்மனைச் சுந்தர பண்டியன் என்றும், நெடுமாறன் என்றும் புராணங்கள் கூறும். நெல்லை நாட்டிலுள்ள அரிகேசரி நல்லூர் இவன் பெயரால் அமைந்தது போலும்; இப்பொழுது அஃது அரிகேச நல்லூர் என வழங்கும் என அடிக்குறிப்பு விளக்கமும் தருகிறார். வரகுணன் ஏரி என்ற பெயரே வரகனேரி என மருவிற்று என்றும் இவ்வூர் வரகுண பாண்டியன் பெயரைத் தாங்கி நிற்கிறது என்றும் குறிப்பிடுகிறார். இம்மன்னன் சின்னமனூர் செப்பேடுகளில் தொழுகழற்கால் கோவரகுண மகாராசன் என்று புகழப்பட்டுள்ளதாகவும் பட்டினத்தடிகள் திருவிடை மருதூர் மும்மணிக்கோவையில் இவருடைய சிவபக்தியின் பெருமையைப் பாராட்டியுள்ளார் என்றும் பெரிய அன்பின் வரகுணதேவா என்பது அவர் வாக்கு என்றும் குறிப்பு விளக்கம் தருவதைக் காணலாம்.

"வானவன் மாதேவியின் பெயரால் எழுந்த நகரம் வானவன் மாதேவிபுரம் ஆகும். இந்நூலில் தென்னார்க்காடு என வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிடுமிடத்து ஆசிரியர், "வானவன் மாதேவி என்ற பெயருடைய அரசமாதேவியர் பலர் (1) சுந்தர சோழன் தேவியும் முதல் இராசராச சோழன் தாயும் ஆகிய வானவன் மாதேவி (2) உத்தமசோழன் தேவியாகிய வானவன் மகாதேவி (3) இராசராசன் தேவியும் இராசேந்திரன் தாயுமாகிய வானவன் மாகதேவி (4) இராசேந்திரன் தேவியாகிய வானவன் மகாதேவி" என வானவன் மாதேவி பற்றிய பரம்பரைப் பெயர் ஆளுமையைச் சுட்டுகிறார்.

'காரி' எனும் பெயர்ப்பகுதி வரும் ஊர்ப் பெயர் விளக்கம் கூறுமிடத்து, கடை வள்ளல் எழுவரில் 'காரி' என்பவன் ஒருவன். அவன் சிறந்த குதிரைவீரன். சங்க இலக்கியத்தில் மலையமான் திருமுடிக்காரி என்று அவன் குறிக்கப்படுகிறான். சேலம் நாட்டைச்சேர்ந்த நாமக்கல் வட்டத்திலுள்ள காய்குடி என்னும் ஊர் அச்சிற்றரசனோடு தொடர்புடையதாகத் தெரிகிறது. சாசனங்களில் அவ்வூர் திருக்காரிகுடி என்று வழங்குகின்றது" (ப: 129) எனக் குறிப்பிடும் சேதுப்பிள்ளை காரிக்குடிக் கயிலாசமுடைய நாயனார்க்கு வடகரைக் கரிகால சோழ வள நாட்டைச் தேர்ந்த ஊற்றக்கரையென்னும் அழகிய கூத்தநல்லூரைச் சித்திரைத் திருநாட்சிறப்புக்காக வழங்கிய செய்தியைக் கூறுவது இச்சாசனம்" எனக் குறிப்பு விளக்கம் தருகிறார்.

மேலும் ஊரும் பேரும் என்னும் நூலில் இடம்பெறும் குலமும் கோவும் என்னும் பகுப்பில் முழுமையான வரலாற்று நிகழ்வுகளையும் சான்றுகளையும் செய்திகளையும் சேதுப்பிள்ளை சுட்டிக் காட்டியிருப்பது அறியத்தக்கது. இப்பகுப்பின் உட்பிரிவுகளாக நாகர், அருவர், மழவர், திரையர், முத்தரையர், முனையர், பாணர், அதியர், ஆவியர், ஓவியர், வேளிர், குறுக்கையர், சோழர், பாண்டியர், பூதப்பாண்டியன், அழகிய பாண்டியன், சேந்தன், கோச்சடையன், வரகுணன், சேரவன் மாதேவி, வீரபாண்டியன், மூன்றுபண்டியர், சுந்தரபாண்டியன், குலசேகரன், ஸ்ரீவல்லபன், பராக்கிரம பாண்டியன் கிருஷ்ணப்பநாயக்கன், திருமலை நாயக்கன், அரியநாத முதலியார், வீரராகவ முதலியார், திருவேங்கடநாதன், நாயக்கர், சிம்ம விஷ்ணு, மகேந்திர நரசிங்கர், பரமேஸ்பரன், நந்திவர்மன், உதய

சந்திரன், வயிரமேகன், விசயாலயன், ஆதித்தன், பராந்தகன், வளவன் மாதேவி, உத்தமசீலி, கண்டராதித்தன், செம்பியன் மாதேவி, அரிஞ்சயன், சுந்தரசோழன், உத்தமசோழன், இராசராசன், விருதுப் பெயர்கள், அருண்மொழி மும்முடிச் சோழன், சயங்கொண்டான், ஜனநாத சோழன், சிவபாத சேகரன், உய்யக் கொண்டான், உலகமாதேவி, திரிபுவன மாதேவி, சோழமாதேவி, இராசேந்திர சோழன், குடிகொண்ட சோழன், கங்கை கொண்ட சோழன், அனபாய சோழன், மூன்றாம் குலோத்துங்கன், திரிபுவன வீரன், பல்லவராயன், பரகேசரி, மராட்டிய மன்னர், விசயநகர மன்னர், குருநில மன்னர்களான பாரி, ஆய், காரி, ஓரி, குமணன், வள்ளலூர், பூதன், வாலாஜா, கான்சாகிப், உசேன், சான்றோர்களான சிறுத்தொண்டர், சண்டேச்சுரர், திருநாவுக்கரசர், திருமழிசையாழ்வார், செயின்ட் தாமஸ், கிள்ளிமங்கலத்தார், பிசிர் ஆந்தையார், மோசியார், குறுங்கோழியார், பெருந்தலைச் சாத்தனார், ஒட்டக்கூத்தர், பொய்யாமொழியார் முதலிய பல்வேறுபட்ட மாந்தர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அடங்கிய சான்றுகளையும் செய்திகளையும் தொகுத்துக் கூறியிருப்பது ரா.பி. சேதுப்பிள்ளையின் வரலாற்றுக் கூறுகளைத் திரட்டித் தரும் பாங்கிற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

ஊர்ப்பெயர் ஆய்வில் சேதுப்பிள்ளை தம் கருத்திற்கு வலு சேர்ப்பதற்காகப் பரவலாகவும் அதிகமாகவும் பொருத்தமாகவும் இலக்கியச் சான்றுகளைக் காட்டி விளக்கியிருப்பதைக் காணலாம். இலக்கியப் பாடல்கள், நூல்கள் கூறும் கருத்துகள், இலக்கியக் கர்த்தாக்கள் எனப் பல்வேறு கூறுகளை நேரடியாகவும் குறிப்புப் பொருளாகவும் சுட்டிச்செல்கிறார். இத்தன்மை அவரது இலக்கிய அறிவிற்கும் திறத்திற்கும் சான்று பகர்வதுடன் இலக்கிய ஆதாரங்களை வெளிப்படுத்தும் போக்கினை விளக்குவதாகவும் அமைகிறது. சான்றாக, சிலவற்றைக் குறிப்பிடலாம்.

பழங்காலத்தில் பாலை ஒரு தனி நிலமாகக் கருதப் படவில்லை. சுடுவேனிற் காலத்தில் முல்லையும் குறிஞ்சியும் வறண்டு கருகிப் பாலை என்னும் படிவம் கொள்ளுமென்று சிலப்பதிகாரம் கூறுமாற்றால் இவ்வுண்மை விளங்கும், **(ஊரும் பேரும்:37)** எனக் கூறியிருப்பது இலக்கியத் தரவுகளின் வழிபட்ட **ஊர்ப்பெயராக** அமைந்திருக்கிறது.

"குடியும் படையும் நாடாளும் அரசனுக்குரிய அங்கங்கள் என்று திருவள்ளுவர் கூறியருளினார். ஆதியிலிருக்கும் தமிழகத்தில் எழுந்த குடியிருப்பும் அதனைப் பாதுகாக்க எழுந்த படையெடுப்பும் ஊர்ப்பெயர்களால் ஒருவாறு விளங்கும் (**ஊரும் பேரும் : 56**) எனக் குறிப்பிடப்படுகிறது. இது திருக்குறள் முதலிய இலக்கியச் செய்திகளைக் கலந்து உரை எழுதும் பாங்கு சேதுப்பிள்ளையின் இலக்கிய வெளிப்பாட்டிற்குத் தக்க சான்றாகும்.

மழவர் என்பார் மற்றொரு பழைய குலத்தார் ஆவர். அன்னார் சிறந்த படைவீரர் (85:90) என்பதை இலக்கியச் சான்றுகளுடன் தெளிவுபடுத்துகிறார். முடிவேந்தர்களும் அவர் உதவியை நாடினர். அக்குலத்தார்க்கும் உறவு முறையும் இருந்ததாகத் தெரிகிறது.

மேலும் ஊர்ப்பெயர்களை விளக்கும்பொழுது இடையே அவற்றுடன் தொடர்புடைய இலக்கிய மேற்கோள்களை எடுத்தாண்டு தம் கருத்திற்கு வலுசேர்க்கும் பாங்கினைச் சேதுப்பிள்ளையிடம் காண முடிகிறது. சான்றாக, கடற்கரைப் பட்டணமான திருச்செந்தூர் பற்றிக் கூறும் பொழுது நக்கீரர் பாடிய பாடல்களிலிருந்து சான்று காட்டி அவரையும் சிறப்பித்துச் செல்கிறார் ஆசிரியர்.

இவ்வாறு எடுத்தாளப்பட்டிருக்கும் இலக்கியச் சான்றுகள் பெரும்பாலும் சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள், நீதிநெறி இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், வரலாற்று ஆவணங்கள், கல்வெட்டு, செப்பேடுகளாகவே அமைந்துள்ளன. இது ரா.பி. சேதுப்பிள்ளையின் பழந்தமிழ் இலக்கண - இலக்கியப் புலமையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகிறது.

பல புதிய செய்திகளை இணைத்துக் கூறும் இயல்பினைத் தம் ஊர்ப்பெயராய்வில் கையாளுவதைக் காண முடிகிறது. நூலின் இடையிலோ அடிக்குறிப்பிலோ தொடர்புடைய பல பொது அறிவுச் செய்திகள் இடம் பெற்றுள்ளன. இதனைச் சான்று காட்டுவதன் வாயிலாக ஆசிரியரின் ஊர்ப்பெயராய்வு நோக்கினையும் போக்கினையும் இனம் காணலாம். ஆறுகள் கூடுந்துறைகளைப் புனிதமான இடங்களாகக் கருதிப் பண்டைத் தமிழர் கொண்டாடினார்கள். அவற்றைக் கூடல் என்று அழைத்தார்கள். தொண்டை நாட்டில் பாலாறும் சேயாறும்

கம்பையாறும் சேருகின்ற இடத்தில் அமைந்த ஊர் திருமுக்கூடல் என்று பெயர்பெற்றது. நெல்லை நாட்டில் தாமிரபரணியும் சித்திரா நதியும் கோதண்டராம நதி என்னும் கயத்தாறும் ஒன்று சேர்கின்ற இடம் முக்கூடல் என முற்காலத்தில் சிறந்திருக்கிறது. முக்கூடற்பள்ளு என்னும் சிறந்த நாடகம் அவ்வூரைப் பற்றி எழுந்ததே" **(ஊரும் பேரும் : 18, 19)** எனக் கூறுமிடத்துக் கூடல் என்பது பற்றிய புதிய பொது அறிவுச் செய்தியை அறிய முடிகிறது. மேலும் அதற்குக் குறிப்பு விளக்கம் தரும்பொழுது, "இரு நதிகள் சேரும் இடம் கூடல் என்றும் மூன்று நதிகள் சேரும் இடம் முக்கூடல் என்றும் வழங்கும். காவேரியும் பவானியும் கூடும் இடம் பவானிக் கூடல் என்று இக்காலத்தில் வழங்கும். துங்கையும் பத்திரையும் சேர்ந்து துங்கபத்திரையென்று பெயர் பெறும் இடத்தில் அமைந்த ஊருக்குக் கூடலி என்று பெயர் **(Mysore Vol.II : 459)**" எனப் புதிய பொது அறிவுச் செய்தியை எடுத்துக் கூறி விளக்குகிறார்.

மேலும் ஊர்ப்பெயர் விளக்கம் தருமிடத்துக் கூற வந்த ஊர்ப்பெயருடன் தொடர்புடைய பிற ஊர்களையும் பிறமொழிப் பெயர்களையும் பொருத்திக் காட்டும் நெறியை அறிய முடிகிறது. பழவேற்காடு என்னும் ஊர்ப்பெயரைப் பற்றிக் கூறுமிடத்துக் கருவேலமரங்கள் நிறைந்திருந்த பழமையான காடு பழவேற்காடு எனப்பட்டது போலும். அவ்வூரில் வந்து குடியேறிய ஐரோப்பியர் அதனைப் புலிக்காடாக்கி விட்டனர். **(ஊரும் பேரும் : 7)** எனக் குறிப்பிடுகிறார். இதற்குக் குறிப்பு விளக்கம் கூறுமிடத்து, ஆங்கிலத்தில் வழங்கும் பெயர் 'Pulicat' என்பதாகும் எனக் குறிப்பிடுகிறார். வேதாரண்யம் என்பதற்கு விளக்கம் தரும் இடத்தில் மறைக்காடு என்பதற்கு நேரான வடசொல் வேதாரண்யம் எனக் குறிப்பு விளக்கம் தருகிறார். இதனைச் சேதுப்பிள்ளையின் பிறமொழிப் பெயர்கள் பொருத்தி விளக்கும் நெறிக்குச் சான்றாகக் கொள்ளலாம்.

"இக்காலத்தில் சில ஆற்றுப் பெயர்கள் மாறி விட்டாலும் அவற்றை ஊர்ப்பெயர்களால் உணர்ந்து கொள்ளலாம். திருக்குற்றால மலையினின்று புறப்பட்டுச் செல்கிற சித்ரா நதியோடு ஒரு சிறுநதி வந்து சேர்கிறது. புராணக் கதையில் அது கோதண்டராம நதி என்று கூறப்படுகிறது. **(ஊரும் பேரும் : 16)** பாண்டி நாட்டில் திண்டுக்கல் என்னும் ஊரின் பெயரை விளக்கும் பொழுது அவ்வூரின் மேல் பக்கத்திலுள்ள பாறையின் பெயரே

ஊருக்கு அமைந்ததாகத் தெரிகின்றது எனக் கூறி அடிக்குறிப்பில், "சுமார் ஆயிரத்து இருநூற்று இருபதடி உயரமும் நானூறடி நீளமும் முந்நூறடி அகலமும் உள்ள அப்பாறையின் மீது ஒரு கோட்டை கட்டப்பட்டுள்ளது. அதன் உச்சியில் பழுதுற்ற கோயில் ஒன்று காணப்படுகிறது எனப் புள்ளி விவர விளக்கம் கூறிச் செல்லும் தன்மை ஊர்ப்பெயராய்வினை ஒரு தகவல் களஞ்சியமாகவே அடையாளம் காட்டுகிறது. ஊர்ப்பெயர்களின் சிறப்பினை ஆங்காங்கே சுட்டிச் செல்லும் தன்மையினை மேற்குறித்த சான்று வாயிலாக அறியலாம்.

ஊர்ப்பெயரின் பொருள் விளக்கத்தைக் கூறி, அது இடம் பெற்றுள்ள இலக்கிய ஆதாரத்தைக் குறிப்பிட்டு அது அழைக்கப்பட்ட விதத்தையும் கூறி அதனோடு தொடர்புடைய பிற பெயர்கள் எவ்வாறெல்லாம் அமையும் என்பதனையும் விளக்குவது ஆசிரியரின் பொருண்மை விளக்கப் பாணியாக அமைந்துள்ளது. இதனை ஒரு சான்று காட்டி விளக்கலாம். பைஞ்ஞீலி என்று பழந்தமிழர் அழைத்தனர். (இவ்வூர் திருப்பங்கிலி என்ற பெயருடன் திருச்சி நாட்டு லால்குடி வட்டத்தில் உள்ளது). இன்னும் வாகையும் புன்னையும் வட ஆர்க்காட்டில் ஊர்ப் பெயர்களாக வழங்குகின்றன. சிவகங்கை வட்டத்தில் காஞ்சிரமும், கருங்காலியும் இரண்டு ஊர்களின் பெயர்களாக அமைந்துள்ளன. தமிழகத்தில் ஆலும் அரசும் அத்தியும் ஆத்தியும் புளியும் புன்னையும் பனையும் தென்னையும் மாவும் வேம்பும் மற்றும் பல மரங்களும் செழித்து வளர்ந்ததால் அவற்றின் பெயர்கள் எல்லாம் ஊர்ப்பெயர்களாக ஆங்காங்கு வழங்கக் காணலாம். (ஊரும் பேரும் : 11) என வரும் பகுதியை மேற்குறித்த கருத்திற்குச் சான்றாகக் கொள்ளலாம்.

ஊர்ப்பெயர்கள் அமைந்துள்ள இடம், அவை தொடர்பான விளக்கம், அவை மருவி விளங்கும் தன்மை முதலியவற்றைச் சுட்டிச் செல்லும் போக்கு சேதுப்பிள்ளையிடம் பரவலாகக் காணப்படுகிறது. களக்காடு என்னும் ஊரை விளக்கும் குறிப்பில், மேற்குத் தொடர் மலையின் அடிவாரத்தில் பச்சை ஆற்றங்கரையில் உள்ளது இவ்வூர் என்றும் சேதுநாடுபற்றிக் கூறுமிடத்து சேதுநாடு என்பது இராமநாதபுரம் பகுதி எனக் குறிப்பிட்டும் செங்கல்பட்டு பற்றி அடையாளம் கூறுமிடத்து பொன்னேரி வட்டத்தில் உள்ளது எனக் குறிப்புத் தருகிறார். மேலும் ஊர்ப்பெயர்கள் வழியாகத் தமிழர் பண்பாடு - நாகரிக

வாழ்க்கை, பழக்க வழக்கம் வெளிப்படுவதை இனம்கண்டு கூறுகிறார் ஆசிரியர். அதற்குப் பல சான்றுகள் காட்டலாம். ஆயினும் ஒரு சான்றினைச் சுட்டுவது அதனைப் பற்றிய தெளிவிற்கு வழிவகுக்கும். “கங்கை கோதாவரி போன்ற பெரிய ஆறுகள் தமிழ்நாட்டில் இல்லை. ஆயினும் சிறிய நதிகளைச் சிறந்த வகையிற் போற்றிய பெருமை தமிழ் நாட்டார்க்கு உரியது. ஆற்று நீரின் அருமையறிந்த தமிழரது ஆர்வம் அன்னார் நதிகளுக்கு இட்டு வழங்கிய பெயர்களா ல் அறியப்படும். பாலாறு என்பது ஓர் ஆற்றின் பெயர். அது தொண்டை நாட்டின் வழியாகச் செல்கின்றது. அந்நதியில் தண்ணீர் சுரக்குமேயன்றிப் பெரும்பாலும் பெருக்கெடுத்து ஓடுவதில்லை. (ஊரும் பேரும் : 15) எனும் செய்தி தமிழர் தம் நாகரிகப் பண்பாடு தொடர்பான புதிய செய்தியை அறிந்து கொள்ளத் துணை செய்கிறது. இதன் வாயிலாக ரா.பி. சேதுப்பிள்ளை, பல புதிய தகவல்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் இனம் கண்டு கூறும் பாங்கினை அறியலாம்.

பல ஊர்ப்பெயர்கள் பின்னாளில் மருவி வந்துள்ளன என்பதைப் பரவலாகக் குறிப்பிட்டு அதன் வாயிலாகப் பல உண்மைகளை வெளிக்கொண்டு வருகிறார் ஆசிரியர். ஆர்க்காடு நாட்டில் குன்றம் என்பது குணம் என மருவி வழங்கும். நெற்குன்றம், நெடுங்குன்றம், பூங்குன்றம் என்னும் பெயர்கள் முறையே நெற்குணம், நெடுங்குணம், பூங்குணம் என மருவி உள்ளன எனக் கூறி அதற்குக் குறிப்பு விளக்கம் தருகிறார். “குன்றம் என்பது, குன்னம் எனவும் குணம் எனவும் தமிழ்நாட்டில் மருவி வழங்கும். ஒன்று என்னும் சொல் ஒன்னு என்றும் ஒண்ணு என்றும் பேச்சுத் தமிழில் வழங்குதல் காண்க. குன்றம், குண்ணம் என்றாகிப் பின்பு குணம் எனக் குறுகிற்று. நெற்குன்றம் என்பது வட ஆற்காடு வந்தவாசி வட்டத்தில் உள்ளது. அது நெற்குணம் என வழங்குகிறது” என வரும் பகுதியைச் சான்றாகக் கூறலாம். ‘கயத்தாறு’ எனும் பெயரை விளக்குமிடத்து “கசத்திலாறு என்பது கசத்தலாறு என மருவியது போலும்”, எனக் குறிப்பிடுகிறார். திண்டிவனத்தின் பெயர் விளக்கம் கூறும் ஆசிரியர், திந்திருணி என்பது புளிய மரத்தைக் குறிக்கும் வட சொல். திந்திருணிவனம் (புளியங்காடு) திண்டிவனம் என மருவிற்று என்று விளக்கம் தருகிறார் ஆசிரியர். இவ்வாறு ரா.பி. சேதுப்பிள்ளை தமது ஊர்ப்பெயர் ஆய்வில் பல்வேறுபட்ட பொருண்மைகளைப் பல்வேறு கோணத்தில் நுண்மாண் நுழைபுலத்துடன் விளக்கிச்

சென்றிருக்கும் பாங்கினை இனம் காணலாம். இச்சான்றுகளின் அடிப்படையில் விரிவாக ஆராய்ந்தால் அவரது ஊர்ப் பெயராய்வு ஓர் அறிவுக் கருவூலம் என்பது தெளிவுபடும்.

### ஊர்ப்பெயராய்வு முறைகளும் உத்திகளும்

ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயராய்வுப் பணியினை ஆராய்ந்தால் அவருக்கே உரித்தான சில ஆய்வு முறைகளையும் உத்திகளையும் எடுத்தாண்டிருப்பதை அறிய முடியும். அதன் மூலம் அவரது ஆய்வு நெறிமுறைகளையும் திறனையும் விளங்கிக் கொள்ள முடியும். இதனைச் சில சான்றுகளைக் காட்டி நிறுவலாம்.

ஊர்ப்பெயர்களைத் திரட்டி வகை தொகைப்படுத்திப் பகுத்தும் தொகுத்தும் விரித்தும் விளக்கம் கூறுவதில் தனிப்பாணியைக் கையாண்டிருப்பதைக் கட்டுரையின் முதல் பகுதி தெளிவுபடுத்துகிறது. ஊரும் பேரும் நூலில் ஊர்ப் பெயர்களைத் தொகுத்துப் பகுத்திருக்கும் நிலையில் தேவும் தலமும் என்னும் ஒருவகைப் பகுப்பினைக் கூறி அதனுள் பல உட்பகுப்புகளைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் தனித்தனியாக அடிக்குறிப்புச் சான்றுகளுடன் விளக்கியிருப்பதைக் காணலாம். அந்த வகையில் மலையும் குன்றும் ஆறும், குளமும், துறையும் நெறியும், அட்டாணமும் அம்பலமும், மாடமும் மயானமும், தலமும் கோவிலும், கோயிலும் வாயிலும், தளியும் பள்ளியும், அரசரும் ஈச்சுரமும், திருமேனியும் தலமும், இறையவரும் உறைவிடமும், இருசேய்கள், திருவாக்கும் ஊர்ப்பெயரும், இதிகாசமும் ஊர்ப்பெயரும், ஊர்ப்பெயரும் வழக்காறும், வைப்புத்தலங்கள், இறையும் அறமும், தானமும் தருமமும் திருமாலும் திருப்பதிகமும், சமணமும் சாக்கியமும், பள்ளிச் சந்தம் எனும் பல உட்பகுப்புகளைக் கூறி அதற்குள் ஊர்ப் பெயர்களை அடக்கி விளக்கம் கூறியிருக்கும் தன்மை அவரது ஆய்வு உத்தியின் புதுமையை எடுத்துக் காட்டுவதாகிறது. அதைப் போலவே தமிழகமும் நிலமும் என்னும் பகுப்பில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தின் அடிப்படையில் தனித்தனியாகப் பகுத்து ஊர்ப்பெயரைப் பாகுபாடு செய்திருப்பது அவரது தனித்தன்மையைக் காட்டுகிறது.

ஊர்ப்பெயர்களைத் தொகுத்துப் பகுத்து வகுத்துத் தலைப்பிடும் பொழுது 'உம்' விகுதியை இணைத்துத்

தலைப்புக்களை உருவாக்கும் தன்மையினை மேற்குறிப்பிட்ட ஆய்வுப் பகுதி வாயிலாக அறியலாம். ஊர்ப்பெயர்கள் இறுதியில் முடியும் பொதுச்சொல் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளன. இவ்வாறு குறிப்பிடும்பொழுது அவ்வூரைப் பற்றிய இலக்கியச் சன்றுகள் நேரடியாகவும் அடிக்குறிப்பு வாயிலாகவும் சுட்டிக் காட்டும் மரபை இனம் காண முடிகிறது. தமிழகத்தின் வடக்கு எல்லையாக விளங்குவது திருவேங்கடமலை. தொல்காப்பியர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர் ஒருவர்,

**வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**
**தமிழ் கூறு நல்லுலகத்து**

என்று தமிழ்நாட்டின் எல்லைகளை வரையறை செய்துள்ளார் எனக் கூறுமிடத்து இலக்கிய - இலக்கணச் சான்றுகள் நேரடியாகவே எடுத்தாளப்பட்டிருப்பதைக் காணலாம். இவ் உத்தியைப் பொருத்தமான இடங்களில் கையாண்டிருக்கும் ஆசிரியர் பல இடங்களில் இலக்கியச் சான்றுகளையும் குறிப்புகளையும் பின் அடிக்குறிப்பில் சுட்டிக் காட்டிச் செல்வதைக் காணமுடிகிறது. இந்நிலையில் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக எண் இட்டு அப்பகுதி முடிவில் குறிப்பு விளக்கத்தைத் தந்து செல்வதைக் காண முடிகிறது. ஆனால் கடற்கரையிலே, ஆற்றங்கரையினிலே என்னும் நூல்களில் பெரும்பாலான இலக்கண - இலக்கிய மேற்கோள்கள் நேரடியாக எடுத்தாளப்பட்டு விடுகின்றன. சில குறிப்புகள் மட்டும் அந்தந்தப் பக்கத்தின் அடியில் எண் இடப்பட்டுக் குறிக்கப் பட்டுள்ளன. தம் கருத்திற்கு நேரடியாகத் தொடர்புடைய சான்றுகளை நேரடியாகவும் மறைமுகத் தொடர்புடைய சான்றுகளை அடிக்குறிப்பிலும் இடம் பெறச் செய்யும் உத்தியைக் கையாண்டு தம் ஆய்வு முறையை அமைத்துள்ளார் ஆசிரியர்.

"தமிழ்ச்சொற்களின் வடிவங்களையும் தொடர்களின் வடிவங்களையும் நெடுங்காலம் பலவாறு ஆராய்ந்து அவற்றின் உண்மை வடிவங்களையும் வேர்களையும் வளர்ச்சிகளையும் விளக்கிக் கூறும் ஒருபுதுநெறியில் இவர்கள் வெற்றிகண்டதோடு பிறருக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார்கள்" என்னும் லெபகரு. இராமநாதன் செட்டியாரின் கருத்து ராபி. சேதுப்பிள்ளையின் நடை ஆளுமைத் திறனுக்குக் கட்டியம் கூறுகின்றது.

ஊரும்பேரும் நூலைப் பல்வேறு பொது அறிவுத் தகவல்களை அடங்கிய காலத்திற்கேற்ற கருத்துக் கருவூலமாக உருவாக்கிய ரா.பி. சேதுப்பிள்ளை கடற்கரையினிலே, ஆற்றங்கரையிலே ஆகிய நூல்களில் உணர்ச்சி ததும்பும் மேற்கோள்கள், உணர்ச்சி ததும்பும் உரைநடைப் பாங்கு, விளித்துப் பேசி முன்னிலையாக வாசகர்களை நிறுத்திப் பேசுவது போன்ற நடை, ஆச்சரியக் குறிகளை அதிகமாக அமைத்துப் பேசும் அலங்கார நடை முதலிய உத்திகளைக் கையாண்டுள்ளார். கடற்கரையினிலே நூலில் கடற்கரைப் பட்டணங்களை நேரடியாக விளித்து அவற்றிடம் உரையாடுவது போன்று தம் கருத்துகளையும் ஊர்ப் பெருமைகளையும் பேசும் ஒருவகை அரிய நடையைக் கையாண்டிருப்பதை இனம் காண முடிகிறது. ஆற்றங்கரையிலே நூலில் இடம்பெறும் ஊர்ப் பெயராய்வுக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் அழகிய இலக்கியச் சான்றுகளுடன் கூடிய சிறுகதை போன்று வர்ணிக்கப்பட்டுப் படிப்பதற்கு இனிய நடையில் எழுதப்பட்டுள்ளன.

ரா.பி. சேதுப்பிள்ளை ஊர்ப்பெயராய்வு செய்து கூறுமிடத்து ஒவ்வொரு ஊரையும் இறுதியில் முடியும் பொதுச் சொற்களுக்கேற்ப வகைப்படுத்திக் கொண்டு விளக்குமிடத்து முதலில் அந்த வகைப்பாட்டுக்குரிய சொல்லிற்கு விளக்கம் கூறி இலக்கியச் சான்றுகள் இருந்தால் எடுத்துக் கூறி வரலாற்றுக் குறிப்புகள் தெரிந்தால் சுட்டிக் காட்டி அதன் சிறப்பையும் பெருமையையுமே உணர்த்தி அதன் பின்பு ஊர்ப் பெயர்களைக் குறிப்பிட்டு அவ்வூர்ப் பெயர்களுக்குரிய பொருளை விளக்கி, அதனோடு தொடர்புடைய பிற ஊர்களைக் கூறிப் பிற மொழியில் வழங்கும் பெயர்கள் மருவி வந்திருந்தால் அவற்றின் வடிவம், தொடர்புடைய மேற்கோள் சான்றுகள், அடிக்குறிப்புகளுக்கான எண்கள் எனப் பல்வேறு கூறுகளை வரிசைப்படுத்திக் கூறும் முறையினைத் தம் ஊர்ப்பெயராய்வு உத்தியாகக் கையாண்டுள்ளார். சான்றாக ஒன்றைக் கூறலாம்.

பராக்கிரம பாண்டியன் என்னும் வகைப்பாட்டில் அமைந்த ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்து விளக்குமிடத்து அவர் குறிப்பிடும் முறை அவரது உத்தியை இனம் காட்டச் சான்று கொள்ளத்தக்கது.

> "பாரத நாட்டில் இந்துக்கள் போற்றும் புண்ணியத் தலங்களுள் தலைமை சார்ந்தது காசியாகும்.

*இத்தகைய காசியைத் திசை நோக்கித் தொழுத பழந்தமிழர் தமது நாட்டிலும் அப்பதியின் பெயரைச் சில ஊர்களுக்கு அமைத்துள்ளார்கள். சிவகாசி, தென்காசி முதலிய ஊர்களை அமைத்துள்ளார்கள். சிவகாசி, தென்காசி முதலிய ஊர்கள் வட காசியை நினைவூட்டுவனவாகும். தென்பாண்டி நாட்டில் தென்காசியைச் சிறக்கச் செய்தவன் பதினைந்தாம் நூற்றாண்டில் அரசு செலுத்திய பராக்கிரம பாண்டியன். சிவநேயச் செல்வனாகிய அம்மன்னன், கங்கைக் கரையில் உள்ள காசி விசுவநாதரின் கோலத்தைச் சித்திரா நதிக்கரையில் கண்டு வணங்க ஆசைப்பட்டு, அங்கு விசுவநாதன் கோயிலைக் கட்டினான். திருப்பணி முற்றுப் பெறுவதற்குப் பதினேழு ஆண்டுகள் ஆயின என்று சாசனம் கூறுகின்றது. தென்காசியில் கோயில் கொண்ட விசுவநாதப் பேரேரி என்று பெயர் பெற்ற அவ்வேரி, விசுவநாதப்பேரி என இன்றும் வழங்கக் காணலாம். இன்றும் விந்தனூர் முதலிய ஐந்து ஊர்களில் அவ்வரசன் அகரங்கள் அமைத்து அந்தணரைப் பேணிய செய்தி கல்வெட்டுகளால் அறியப்படும். அவ்வகரங்களுள் ஒன்று மேலகரம் என்னும் பெயரோடு இன்றும் தென்காசிக்கு அருகே நின்று நிலவுகிறது. சிவ பக்திச் செல்வமும் செந்தமிழ்ப் புலமையும் வாய்ந்த அம்மன்னன் தென்காசித் திருப்பணியைக் குறித்துப் பரிவுடன் பாடிய பாட்டு அன்பர் உள்ளத்தை உருக்குவதாகும். (ஊரும் பேரும் : 100, 101)"*

என வரும் பகுதி மேற்கூறிய ஆய்வு முறைகளையும் உத்திகளையும் அறியத் தருவதாகும். இச்செய்தியினை உறுதி செய்யும் சான்றினை எண்ணிட்டு அடிக்குறிப்பாக இறுதியில் கொடுத்திருக்கிறார். அது, "தென்காசிக் கோயிற் சாசனம்:- "சேலேறிய வயல் தென்காசி ஆலயம்; தெய்வச் செயலாலே சமைந்தது. இங்கென் செயல் அல்ல, அதனை யின்னம் மேலே விரிவு செய்தே புரப்பார், அடி வீழ்ந்து அவர் தம்பால் ஏவல் செய்து, பணிவன் பராக்கிரம பாண்டியனே (TAS Vol. I pp. 96-97)" என உள்ளது. இச்சான்று அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர் ஆய்வு

முறையினையும் உத்தி எடுத்தாளல் நெறியினையும் விளங்கிக் கொள்ளத் துணை செய்வதாக அமைந்துள்ளது.

இவ்வாறு ஊர்ப்பெயர் ஆய்வு செய்யும் பொழுது, சில செவிவழிக் கதைகள், பழமொழிகள் முதலியவற்றையும் எடுத்துக்கூறி விளக்கும் உத்தியைக் கையாள்வதைக் காண முடிகிறது. சீவலப்பேரி என்னும் ஊர் பற்றி விளக்கும் பொழுது,

> "கன்னட நாட்டுச் செல்வன் ஒருவன் நெல்லை நாட்டிற்போந்து தாமிரபருணி ஆற்றில் ஓர் அணை கட்டி அதன் நீரைக் கால்வாய்களின் வழியாகக் கொண்டு சென்று பயிர்த் தொழிலைப் பேணினான் என்று பழங்கதையொன்று வழங்குகின்றது. அவ்வாற்றில் மூன்றாம் அணைக்கட்டு கன்னடியன் அணை என்று இன்றும் வழங்குவது அதற்குச் சான்றாகும்"

எனக் குறிப்பிடுகிறார். ஆறு பற்றிக் குறிப்பிடும்பொழுது ஆறில்லா ஊருக்கு அழகில்லை என்னும் பழமொழியும் எழுந்தது. (ஊரும்பேரும் : 14) என வரும் பகுதியைப் பழமொழி ஆட்சிக்குச் சான்று காட்டலாம். மேலும் அவர் கருத்துகளை இணைக்க, இன்னும் (ப. 21, 29, 25) இவ்வாறு (ப.15) இங்ஙனம் (ப.26) முதலிய இணைப்புச் சொற்களைப் பயன்படுத்தி வரும் பாங்கினைக் காணலாம். அதோடு ஆற்றங்கரையினிலே நூலில் இடம்பெறும் பெயராய்வில் கட்டுரைகளில் எடுத்தாளப்பட்டிருக்கும் பாடல்களைப் பாடியவரின் பெயருடன் புள்ளி விவரமாகப் பின்னிணைப்பாகக் கூறியிருப்பதும் ஊரும் பேரும் நூலின் இறுதியில் பெயரகராதி ஒன்றையும் தமிழ் நாட்டுத் தலங்கள் பற்றிய தலப்பெயர், வழங்கும் பெயர், வட்டம், குறிப்புகள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் தந்திருப்பது சேதுப்பிள்ளையின் ஆய்வுமுறை மற்றும் உத்திகள் எடுத்தாளலின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதுடன் தரத்தையும் முன்மாதிரித் தன்மையையும் அறிவுறுத்துகின்றன.

## முடிவுரை

கட்டுரையில் கூறப்பட்டிருக்கும் சான்றுகள் வாயிலாக அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளையின் ஊர்ப்பெயர் ஆய்வுத் திறத்தினையும் முறையினையும் உத்திகளையும் விரிவாக உணர்ந்து

தெளியும் பணியின் வழிகாட்டுதலாக, அறிமுக முயற்சியாக இக்கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரை வாயிலாகப் பிள்ளையவர்கள் ஊர்ப்பெயராய்வின் முன்னோடி என்பதையும் அவர் எத்தகைய இலக்கிய வரலாற்றுப் பண்பாட்டு அறிவுப் பெட்டகம் என்பதையும் உணர முடியும். அந்த வகையில் ரா.பி. சேதுப்பிள்ளை ஊர்ப்பெயர்களைத் திரட்டித் தொகுத்த முறைமை, பகுத்த பாங்கு, வகுத்த நெறி, அவற்றை விளக்கிய போக்கு, அதன் வழியாக எடுத்துக் காட்டிய - சுட்டிக் காட்டிய, குறிப்புத் தந்த பொருண்மைகள், விளக்கிக் கூறிய முறைமை, நடை உத்திகள் முதலிய பல்வேறு கூறுகளை விளங்கிக் கொள்ள முடிந்தது. **ஊரும்பேரும், கடற்கரையினிலே, ஆற்றங்கரையினிலே** என்ற மூன்று ஊர்ப்பெயராய்வு நூல்களையும் மூன்று கோணத்தில் நுணுகி ஆராய்ந்து பல புதிய தரவுகளையும் ஆய்வு மூலங்களையும் ஆதாரங்களையும், வரலாற்று, இலக்கியச் சான்றுகளையும் அடையாளப் படுத்தியிருக்கிறார். நுண்மாண் நுழைபுலத்துடனும் பல்துறை அறிவுக் கூர்மையுடனும் பொது அறிவுக் கருவூலமாகப் பல புதிய செய்திகளை அறிந்து கொள்ளும் களஞ்சியமாகத் தந்திருக்கும் ஆய்வு இது என்பது இக்கட்டுரை வாயிலாக உறுதிப்படுகிறது. ஆய்வின் நிறைவில் தந்திருக்கும் பெயரகராதியும் பின்னிணைப்புப் பட்டியல்களும் ஆய்வாளர்களுக்கும் வாசகர்களுக்கும் மிகவும் பயனுடையன என்பதைக் கண்டறிந்துள்ளது. இது பின்வரும் ஊர்ப்பெயர் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டியாக, ஐயம் தெளிவிக்கும் அகராதியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

# படைப்புக்கலை

'பசி மிகுந்தவர் எளிய உணவையும் இனிய விருந்தாகக் கொள்வர்' என்பார் ரா.பி. சேதுப்பிள்ளை. இன்று தமிழ்ச் சமுதாயம் செம்மொழியாகிய சோற்றினை உண்ணும் வேளையில், நமக்காகப் பசித்திருந்து எழுதியவர் ரா.பி. சேதுப்பிள்ளை. தமிழன் சுறுசுறுப்பின்றிச் சோம்பிய நேரத்தில், வீறுகொண்டு விழித்தெழுந்து முழங்கியவர்; தமிழரின் ஊரையும் பேரையும் உலகறியச் செய்தவர். சொல்லின் செல்வராம் ரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புக்கலையினை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

பேசுபவன் எல்லோரும் பேச்சாளன் அல்லன்; எழுதுபவன் எல்லாரும் எழுத்தாளன் அல்லன். இவண் பேச்சும் எழுத்தும் என்று எண்ணப்படுவது இலக்கியம். இந்த இலக்கியத்திற்குத் தான் எத்தனை வடிவங்கள்?

சில படைப்பாளர்கள் சிறந்த கவிஞராக வெளிப்படுவர்; சிலர் சிறந்த கதையாசிரியராக வெளிப்படுவர். ஆனால், ஒரு படைப்பாளன் நல்ல ஆசிரியனாக, கவிஞனாக, கட்டுரையாளனாக, கதை படைப்பவனாக, திறனாய்வாளனாக, மொழிக்காப்பாளனாக, சொற்செல்வனாகப் பன்முகப் பார்வை கொண்ட படைப்பாளியாக விளங்குபவனெனில், அவனே சிறந்த படைப்பாளன் - எழுத்தாளன் - பேச்சாளன்.

தமிழ் இன்பத்திற்காக விருது பெற்ற ரா.பி. சேதுப்பிள்ளைக்கு, தமிழ் இலக்கியத்தின் - செந்தமிழின் மீது ஆர்வம் வந்தது எப்படி? இலக்கியப் படைப்பில் தன்னை எங்ஙனம் ஈடுபடுத்திக் கொண்டார்?

**நெல்லை மண்வாசனை**

எண்ணற்ற புலவர்களின் ஏற்றமிகு படைப்புகளைத் தந்து, இலக்கிய வரலாற்றுக்கு எழிலூட்டிய பெருமை, பொருநை - நெல்லைக்கு உண்டு. அன்றிலிருந்து இன்று வரை தனி வரலாறு படைக்கும் அளவுக்குத் தமிழுக்குத் தொண்டாற்றி வரும்

பெருமையுடையது நெல்லைச்சீமை. பொதிகைத் தென்றலும் பொருநை ஆறும், செந்நெல் வளமும் அம்மண்ணின் மணம் வீசும் - பெருமை பேசும் - இலக்கியங்களைப் படைக்க ஏதுவாக அமைந்தன.

திருநெல்வேலிச் சான்றோர்கள் துறைதோறும் தமிழுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளனர். தமிழ் இலக்கண, இலக்கிய வரலாற்றில் சங்க காலந் தொட்டு அகத்தியர், மாங்குடி மருதனார், குமரகுருபரர், திரிகூட ராசப்பக் கவிராயர், பாரதியார் சோமசுந்தரபாரதியார், ஆ. மாதவைய்யா, கா.சு. பிள்ளை, வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், பரலி சு. நெல்லையப்பர், ரசிகமணி டி.கே.சி., ரா.பி. சேதுப்பிள்ளை, மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் போன்றோர் எனப் பலரும் தமிழ் இலக்கியத்திற்குத் தொண்டாற்றியுள்ளனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் படைப்பு வகைமைகளான சிறுகதைகள், புதினங்கள், ஆய்வுக் கட்டுரைகள், மரபு மற்றும் புதுக்கவிதைகள், விமரிசனம், திறனாய்வு போல்வனவற்றைத் தமிழுக்கு நெல்லை மாவட்டம் வழங்கியிருக்கிறது. இன்றும் பலர் பல்வேறு இடங்களில் இருப்பினும், பிறந்த மண் வாசனையை மறக்காது, இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே தங்கள் பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையோ இருபதாம் நூற்றாண்டுத்தமிழறிஞர்களுள் குறிப்பிடத் தக்கவர்; சாதனைகள் பல படைத்தவர்.

சைவசமயத்தில் ஈடுபாடு கொண்ட இவர், சைவ சபைத் தொண்டர் படைக்குத் தலைவரானார்; தாம்படித்த நெல்லை இந்துக் கல்லூரியில் தமிழ்ப் பேரவைக்குத் தலைவரானார். ரா.பி.சே.யின் பேச்சைக் கேட்ட பேராசிரியர்களும் நெல்லை மக்களும் இவரைப் பாராட்டினர். இவர் பள்ளி - கல்லூரிகளில் தமிழ் - ஆங்கிலப் பாடங்களில் முதல் பரிசும் பாராட்டும் பெற்றார். பச்சையப்பன் கல்லூரியில் நடந்த பேச்சுப் போட்டிகளிலும் இவருக்கு முதல் பரிசு கிடைத்தது.

## வாழ்க்கைப் பாதையில்

இளம் பருவத்தில் சிறந்த பேச்சாளராக விளங்கிய இவரை, மாணவர்சங்கம், அறிஞர்கள் கூட்டமைப்பு ஆகியன பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கின. இவர் பேசும்

கூட்டங்களுக்கு வருவோரின் எண்ணிக்கை இருமடங்காயிற்று. டி.கே.சி.யின் 'கம்பன் கழக'த்தில் உறுப்பினரான ரா.பி.சேதுப்பிள்ளைக்குக் கம்பராமாயணம் மீது மிகுந்த பற்று தோன்றியது. அது வரை கம்பன் சுவையைக் காணாதிருந்த ரா.பி.சேதுப்பிள்ளை தனது அலுவலகத்திற்கு வருவோரிடம், கம்பரிடம் தான் கண்ட இன்பத்தைக் களிப்புடன் சொல்வதையும் கம்பன் கழகத்தில் சொற்பொழிவாற்றுவதையும் பழக்கமாகக் கொண்டார். இது, நெல்லை சைவ சமயத்தாருக்குப் பொறாமையை ஏற்படுத்தியது. இவரின் நோக்கையும் போக்கையும் மாற்ற முயன்ற சைவத்தாரிடம், கம்பன் 'சமயத்தைக் கடந்தவரெ'னப் பாங்குடன் எடுத்துரைத்தார். இவரின் பேச்சு பாமரர், பண்டிதர் அனைவருக்கும் ஓர் உணர்ச்சியூட்டிப் புதிய எழுச்சியைத் தோற்றுவித்தது. இவர், வெளியூர்களுக்குச் சென்று, தமிழ்ப்பணியைத் தயங்காது செய்தார்; சில சவால்களை எதிர்கொள்ளவும் தயங்கினாரில்லை. சான்றாக, சென்னை - கம்பன் கழகத் தலைவராகிய ரா.பி.சேதுப்பிள்ளை பல இடங்களில் ஒன்பது நாள்கள் கம்பன் விழாவைச் சிறப்புடன் நடத்தினார். பத்தாவது நாள் நிறைவு விழா நிகழ்ச்சிக்குப் பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார் தலைமையுரையாற்றத் தொடங்கினார். கம்பன் விழாவை நடைபெறாமல் தடுக்கத் திட்டமிட்டுச் சிலர் வம்புதும்பு செய்து, மேடையைச் சீர்குலைத்துக் கூட்டத்தில் குழப்பத்தை உண்டாக்கினர். அப்போது நெல்லையின் வீரத்தை விளக்குமுகத்தான்,

**தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்**
**தமிழ்ச்சங்கம் சேர்கிற் றீரேல்**
**என்றுமவன் உறைவிடமா மாதலான்**
**அம்மலையை யிடத்திட் டேகிப்**
**பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனும்**
**திருநதியின் பொழிய நாகக்**
**கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமாம்**
**நெடுவரையுங் கடலுங் காண்பீர்**

என்ற் கம்பராமாயணப் பாடலுக்கு, "ஏ, வானரங்களே! நீங்கள் செல்லும் வழியில் செந்தமிழ் மணம் பொங்கும் அந்த இடத்தில் சென்று உங்கள் வாலை ஆட்டாதீர்கள்; உங்கள் குறும்பையடக்கி, வாலை மடக்கிக் கொண்டு அப்பாற் செல்லுங்கள்" என அஞ்சாமல் முழங்கினார் ரா.பி. சேதுப்பிள்ளை. அஞ்சி ஓட நினைத்தவர் அமர்ந்து கேட்கத் தொடங்கினர்; அழிவுச்

செயலுக்கு வந்தவரெல்லாம் அவ்விடம் விட்டு நழுவிச் செல்லுமாறு நாவன்மையால் புதுமை செய்தார். மேலும், சென்னையில் திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் போன்றவற்றின் இலக்கியச் சுவைகளை எடுத்து வைத்துத் தமிழக மக்களைப் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

சமூக எதிர்ப்புக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ற வகையில், தொண்டாற்றிய ரா.பி.சேதுப்பிள்ளையினை நெல்லை மாவட்ட ஆட்சியர், கல்விக் குழு உறுப்பினராக்கினார். பிறகு இவர் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவின் உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். 1924, 1926, 1928 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் நெல்லை நகர்மன்ற உறுப்பினராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டு, துணைத் தலைவர் பதவிக்கு உயர்த்தப்பட்டார்; நகரின் பழம் பெயர்களின் சிதைவினை மாற்றியமைத்தார்; கூலக்கடைத்தெரு, காவற்புரைத்தெரு, விலங்கடித் தெரு, அக்க சாலைப் பிள்ளையார் கோவில் தெரு ஆகிய தெருக்களின் பழம் பெயரைப் பாதுகாத்தும் அவற்றுள் பொதிந்திருக்கும் உண்மையினையும் எடுத்துரைத்தார். சான்றாக, நாணயம் அடிக்கும் இடத்தை 'அக்க சாலை' என்பர். கடலால் அரிக்கப்பட்டுக் கொற்கைத் துறைமுகம் தூர்ந்து போன பின்னாளில், ஆங்கு வாழ்ந்த அக்க சாலைப் பணியாளர்கள் நெல்லையில் வந்து குடிபுகுந்தார்கள். அவர்கள் இங்கு வரும் போது, அக்க சாலையிலிருந்த, விநாயகப்பெருமானையும் உடன் கொணர்ந்து, தாம் தங்கிய தெருவிலேயே அம்பெருமானுக்குத் திருக்கோவிலும் அமைத்து வழிபட்டனர். அதனால், அத்தெருவிற்கு 'அக்க சாலைப் பிள்ளையார் கோவில் தெரு' என்ற பெயர் பண்டு வழங்கிற்று. இந்த உண்மையை உணராத பிற்கால மக்கள் அத்தெருவை 'அக்கா சாலைத் தெரு' என்று வழங்கி வந்தனர். அத்தெருப்பெயரின் தோற்றுவாயை - வரலாற்றை நகர் மன்றத்தில் விளக்கிப் பெயரை மாற்றினார். பொது நலம் பேணும் இவரைக்கண்டு, தன்னலம் பேணும் பிற உறுப்பினர்கள் அஞ்சினர்.

1931இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகப் பணியேற்ற ரா.பி. சேதுப்பிள்ளை மாணவர்கள் மனங்கொள்ளும் வகையில் அங்கு ஆறு ஆண்டுகள் தமிழ் மொழி நூல், இலக்கியங்களைக் கற்பித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரையாற்றியதை, "முன்பு

சேரன் தம்பியாகிய சேதுப்பிள்ளை சிலம்பின் ஒலி எல்லோருடைய சிந்தையிலும் ஒலிக்குமாறு செய்தார்" என்று விபுலானந்த அடிகளார் பாராட்டியதல்லாமல், பிறமொழிப் பேராசிரியர்களும் இவரைப் பாராட்டினர்.

"ஏதேனும் ஒரு பொருளைப் புதியதாகவும் சொந்தமாகவும் புகலுவதாய் அமைய வேண்டும்; அவ்வாறு புகல்வதையும் புதிய முறையிலும் தனக்கே உரிய தனிப் பாணியிலும் ஆசிரியன் பேச வேண்டும்" என்ற ஹட்சனின் கூற்று, ரா.பி. சேதுப்பிள்ளையின் பேச்சுக்கு மட்டும் அமையாது, படைப்புக்கும் பொருந்தும். 1937ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்த இவர் ஆராய்ச்சித் துறைத் தலைவராகி, சென்னைப் பல்கலைக் கழக முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்று, தனது அறுபத்தைந்து வயது வரை, தமிழ்ப் பணியாற்றித் தமிழுக்கு அரிய பல படைப்புகளை வழங்கினார்.

## பத்திரிகைகளில் படைப்பு

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்திரிகை - இதழியல் - துறை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது; பெற்று வருகிறது. அச்சுப்பொறி வரவால் பத்திரிகைத் துறை வளர்ச்சியடைந்ததும் பத்திரிகைகள் அதிகளவில் வரத் தொடங்கியதும் ஆங்கிலேயர் காலத்தில்தான். அந்த ஆட்சியின் போது, சமூகச் சிக்கல்களைப் பத்திரிகைகளில் வெளியிடப் பல கட்டுப்பாடுகள் இருந்தன. ரா.பி.சேதுப்பிள்ளையின் இளமைக் காலத்தில் கவிதை, சிறுகதை, புதினம் போல்வன அதிகளவில் வெளிவரவில்லை. பத்திரிகைகள் படிப்போர் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடித்த பத்திரிகைகள் என்று சிலவற்றை வரையறுத்துக் கொண்டிருந்தனர். தாங்கள் விரும்பாத பல பத்திரிகைகளைப் பத்திரிகைகள் என்றே கருதாதவர்களும் இருந்தனர். தாங்கள் படிக்கும் பத்திரிகையில் வெளிவருகின்றவற்றை இலக்கியம் என்றும் அதற்கு அப்பாற்பட்டவை ஏதும் இல்லை என்றும் கருதிக் கற்பனை உலகில் வாழ்ந்தவர்களும் உண்டு. இவ்வெண்ணப் போக்கை மாற்றி, எல்லாப் பத்திரிகைகளிலும் ஏதேனுமொரு தனிச்சிறப்புண்டு எனக் காட்டியவர் ரா.பி. சேதுப்பிள்ளை எனலாம்.

ரா.பி. சேதுப்பிள்ளையின் பத்திரிகை ஆர்வம் மிகப் பரந்தது. இவரை எழுதுவதற்காகப் பத்திரிகைகள் விரும்பி

அழைத்தன; அவ்வாறு அழைத்த பத்திரிகைகளில், இவர் ஆர்வமாக எழுதினார்; தமிழ், தமிழ்மொழி, தமிழ் வேந்தர், திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், தமிழர்வீரம், காதல், மதம், மாதம் போன்றனவற்றை வெளியிடுவதைத் தனது எண்ணப் போக்காகக் கொண்டிருந்தார். வணிக நோக்குடன் வெளியான பத்திரிகைகளுடன் இவர் உறவும் பகையும் கொண்டாரில்லை. சமுதாயத்திற்கும் தமிழ்வளர்ச்சிக்கும் தமிழனின் மேன்மைக்கும் அதிகப் பயன் விளைவிக்கும் சிறு பத்திரிகைகளின் வளர்ச்சிக்காக, இவர், உழைத்திருப்பதைக் காணலாம். பொருள்வருவாய் கருதாமல், பல பத்திரிகைகளில் தரமான இலக்கியக் கட்டுரைகளை அதிகளவில் படைத்தவர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவராவார்.

## சேதுப்பிள்ளையும் சிறுபத்திரிகைகளும்

இவர் தமது படைப்பாற்றலுக்குச் சிறுபத்திரிகைகளை அதிகளவில் பயன்படுத்தியிருக்கிறார். அவ்வகைப் பத்திரிகைகளை இரு பிரிவுகளாகப் பகுக்கலாம். அவற்றைச் சுதேசமித்திரன், ஆனந்தபோதினி, செந்தமிழ்ச்செல்வி, அமுதசுரபி, பாரத தேவி, குமரன், தமிழ்த் தென்றல், பல்கலைக்கழக ஆய்வு மலர்கள் போன்றவைகளை ஒரு பிரிவாகவும் கல்கி, ஆனந்தவிகடன், கலைக்கதிர், தீபாவளி, பொங்கல் மலர்கள் போன்றவற்றைப் பிறிதொரு பிரிவாகவும் சுட்டலாம். சென்னையிலிருந்து வெளியான ஆனந்த போதினி, காரைக்குடியிலிருந்து வெளியான 'குமரன்' ஆகிய இரண்டு இதழ்களிலும் 'கம்பர் கவிநயம்' என்னும் தலைப்பில் இவர் கட்டுரைகள் எழுதினார். பின்பு, இக்கட்டுரைகளைத் தொகுத்து **ஆனந்தகுமரன்** எனும் நூலாக வெளியிட்டார். **செந்தமிழ்ச் செல்வி**, குமரன் ஆகிய இதழ்களில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துப் 'பன்னிரு கட்டுரை' என நூலாக்கம் செய்தார். இலங்கை நகர்ச் சிறப்பையும் இராவணன் போன்றோர் வீரத்தையும் விளக்கும் கட்டுரைகளைக் 'குமரன்' பத்திரிகையில் தொடராக எழுதி வந்தார். பின்பு, இக்கட்டுரையை 'வீரமாநகர்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். 'தமிழ்த் தென்றல்', 'கலைக் கதிர்' பத்திரிகைகளின் வாயிலாக எழுதிய கட்டுரைகளைக் கடற்கரையிலே என்று புத்தகமாக்கினார். கல்கியில் வெளியான 48 கட்டுரைகளை **ஆற்றங்கரையிலே** என நூலாக்கம் செய்தார். அமுத சுரபி, பாரத தேவி, ஆனந்த விகடன் ஆகிய பத்திரிகைகளில் வெளி வந்த கட்டுரைகளைத் தொகுத்து, **தமிழ் இன்பம்** என்று நூலாக்கினார். இவர், செந்தமிழ்

இலக்கியக் கட்டுரைகளுக்குத் தனது எண்ணத்தையும் எழுத்தையும் தானமாக வழங்கியுள்ளார் எனலாம்.

## ஆராய்ச்சியில்

நூலை ஆய்வு செய்வோனுக்கு நிரம்பிய அறிவு வேண்டும். நுண்ணறிவு இல்லாதவன் மேற்கொள்ளும் ஆய்வானது மண்பாவை போலாகிவிடும். இவர், **திருவள்ளுவர் நூல்நயம்** என்னும் ஆராய்ச்சி நூலை ஏழு பிரிவாகப் பகுத்துக்கொண்டு, முதலில் திருவள்ளுவரின் பெயரும் சிறப்பும் பற்றி விளக்கி, அது பொதுமறையாக விளங்குவதற்குரிய பொருளையும் பொருத்திக் காட்டியுள்ளார். அடுத்து அதன் தலையாய கொள்கையாகிய அறத்தினை விரித்து, அரசியல்முறையை விளக்கி இன்ப இயலைத் துலக்கி, அதன் உவமைத் திறத்தையும் செந்தமிழ் நடையில் நுணுகி ஆராய்ந்துள்ளார். கற்பவர் உள்ளத்தை ஈர்க்கும் வகையில், இந்நூல், திருக்குறளின் திறவு கோல் போன்று தக்க சான்றுகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது. ஏழாவது பிரிவில், பரிமேலழகர் உரையில் காணலாகும் குறைபாட்டைக் கண்டு சுட்டுகிறார்.

> 'மக்கட்பேறு' என்னும் அதிகாரத் தலைப்பைப் 'புதல்வரைப் பெறுதல்' என மாற்றி மறைத்தும், அறிவறிந்த மக்கள் என்பதற்கு, 'ஆடவர்' என்று வலிந்து பொருள் கொண்டும், முழுமுதல் தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு வடநூல் மதம் பற்றி உரை வகுத்தும், தமிழ்நூல் முறையை உலகறியா வண்ணம் மறைத்தும், தம் கொள்கைக்கு இயைய, நூலாசிரியர் கருத்துக்கு முரணாகப் பொருள் கொண்டும் வகுத்த பரிமேலழகர் உரை முற்றிலும் நல்லுரையென்று சொல்ல வெண்ணாது

எனக் கடித்துரைக்கிறார்.

பரிமேலகர் உரையின் குணங்களையும் குற்றங்களையும் சுட்டிக்காட்டும் இவரின் **திருவள்ளுவர் நூல்நயம்** வரலாற்றாய்வு, வாழ்க்கை, வரலாற்றுமறை, அறிவியல் விளக்கநிலை போன்ற திறனாய்வு முறைகளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இந்நூலின் முன்னுரையில்,

> "உலகெலாம் உய்யுமாறு பொதுமறை வகுத்த ஆசிரியர் திருவள்ளுவனாரது அளப்பரிய

மாண்பினைப் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும் இந்நாள்வரை பொது வகையாற் பலபடப் பாராட்டிச் சீராட்டிப் போந்தனர். ஆசிரியரது நூலின் பிண்டப் பொருளை நுணுகி ஆய்ந்து, அதன் சொற்பொருள் நயங்களை யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் தெள்ளென வகுத்தோதி ஊக்கமூட்டும் செவ்விய உரைநடைநூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்த பெரும்புலவர் இத் 'திருவள்ளுவர் நூல்நயம்' எழுதிய திருவாளர் ரா.பி. சேதுப்பிள்ளையே யாவர்."

எனக் கா.சு. பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

கம்பன் கவிநயம் எனும் தலைப்பில் 1926இல் வெளியான இக்கட்டுரைகள் 1928ஆம் ஆண்டு 'பன்னிரு கட்டுரை' என்ற நூலாகின. கம்பரின் வழி, வைணவ சமயத்தின் சீர்மையை ஆராயும் நோக்கில், 'கம்பன் கவி நயம்' பாடிய சேதுப்பிள்ளை, கம்பரின் இயற்கை நயம், கற்பனை நயம், மனித நேயங்களை அவர்தம் காவியத்திலிருந்து எடுத்துச் சொல்லியுள்ளார்.

பன்னிரு கட்டுரையின் தலைப்புகளைப் பாங்குடன் அமைத்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. ஒருசடையும் திரிசடையும், செவிச்சுவையும் கவிச் சுவையும், கர்ணனும் கும்பகர்ணனும், ஆண்மையும் அருளும், பயிர்வண்டும் படர்கொடியும், வண்மையும் வறுமையும், நல்மரமும் நச்சுமரமும் ஆகிய இத்தலைப்புக்களை எதுகை, மோனை நயம்பட அமைத்து அப்பெருங்காப்பியக் கருத்துக்களை இக்கட்டுரைகளுக்குள் அடக்கியுள்ளார் எனலாம்.

வீரமாநகர் என்ற நூலும் இராமாயணத்தின் இராவணனைப்பற்றிச் சுட்டுகிறது. அரக்கர்கோன் அருந்தவம், வீணைக் கொடியோன், அரக்கர் பேராண்மை, இலங்கை வேந்தனும் கழுகின் வேந்தனும், அரக்கரும் அமரரும், இரு வகை அமைச்சு, வாரணம் பொருத மார்பன், மானவீரன், வில்லின் செல்வன், இலங்கை அறிஞன், தென்னிலங்கைத் தெய்வம், இலங்கை அணங்கு, அரக்கர்கோன் தங்கை சிறையிலிருந்த செல்வி, அறமும் மறமும் ஆகிய பதினைந்து தலைப்புக்களும் ஒன்றைவிட ஒன்று சிறந்ததாக அமையும் வண்ணம் அமைத்திருப்பது படிப்போருக்கு ஆவலைத் தூண்டுவதாகும். இவர், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் உத்தியை 'வீரமாநகரில்

புகுத்தியுள்ளார். இந்நூலுக்கு முகவுரை வழங்கிய வெ.ப.சு., தமிழ்த் தொண்டே தலைத் தொண்டாகக் கொண்டு தமிழ் கற்பதும், கற்பிப்பதும், ஆராய்வதும், ஆராய்ந்தறிந்தவற்றை அறிவிப்பதும் இடையறாது செய்து வரும் இந்நூலாசிரியர், பலர்க்கும் தெரிந்த பழைய கதைகளைச் சொல்லும் சதுரப்பாட்டினால் புதுமையானவைகளாக்கி வாசகர் மனத்தை மகிழ்வித்து, தக்க சந்தர்ப்பங்களில் தக்க அறிவுகளை இலக்கியச் சுவையோடு இனிது கலந்தூட்டி இன்பமும் பயனும் எய்தச் செய்தல் இந்நூலில் பல இடங்களில் காணலாம். இதில் ஒவ்வொரு பக்கமும் இனிமையாயிருப்பதால், வாசிப்போர் சில பக்கங்களைப் பார்த்தபோது தெரிந்து கொள்வாரென்பது திண்மை. இந்நூலின் இனிமை, நுனியிலிருந்து நுகரப்படும் கரும்பின் இனிமை போன்றிருக்கின்றது என்றும் இந்நூலில் விளங்கும் கட்டுரைகள் ஒவ்வொன்றும் கம்பராமாயணக் காவிய நயங்களை ஏற்ற இடங்களில் இனிதமைக்கப் பெற்றிருத்தலால் அந்தக் காவியத்தைப் படியாதாரைப் படிக்கும் படியும் முன் படித்தோரை மேலும் படிக்கும் படியும் இனிது தூண்டுவதாயிருக்கின்றது. 'அறமும் மறமும்' என்னும் கட்டுரை முடிவும் முடியுமாக, ஒழுக்கத்தின் உயர்ச்சியையும் இன்றியமையாமையையும் உறுதிப்படுத்தி யொளிர்கின்றது என்றும் சுட்டிக்காட்டுகிறார். 1932இல் நூலாக்கப் பெற்ற வீரமாநகரின் கட்டுரைத் தொடக்கமனைத்திலும் முதல்வரியின் அமைப்பும் இரண்டாவது வரியில் சிறிது இடம் விட்டிருப்பதும் புதுமையாக உள்ளது. இவர் உட்தலைப்புக்களின் அமைப்பில் ஒரு புதிய உத்தி முறையைப் புகுத்தியுள்ளார்.

சிலப்பதிகார நூல்நயம் ஆசிரியர் பெருமை, அரச நீதியும் அரசியலும், ஆரிய அரசரும் தமிழரசரும், கண்ணகியின் கற்பின் திறம், வினைப்பயன், பண்டைத் தமிழ் மக்கள் நாகரிகம், சிலப்பதிகார நூல்நயம் ஆகிய ஏழுதலைப்புக்களைக் கொண்டுள்ளது.

'ஆசிரியர் பெருமை'யில் இளங்கோவடிகளின் சமயம், துறவுநிலை, தமிழ்ப்பற்று, திருக்குறளை எடுத்தாளும் முறை ஆகிய செய்திகளை வகுத்துரைத்து, சிலப்பதிகாரம் கற்கும் ஆவலைத் தூண்டச் செய்கிறார் சேதுப்பிள்ளை. அடுத்து மூவேந்தர்களின் சிறப்பினையும் வேற்று நாட்டு அரசர்களின் பெயர் அமைதியினையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். சிலம்பின் முப்பெரும் உண்மைகளை விதந்தோதும் முகமாகக் கூறிச்

'சிலப்பதிகாரம்' எனும் பெயர்ப்பொருத்தத்தைத் தக்க சான்று காட்டி நிறுவுகிறார்.

திருவள்ளுவர் நூல்நயத்தைத் தொடர்ந்து 1953ஆம் ஆண்டில் **வழிவழி வள்ளுவர்** இவரால் உருவாக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பண்பாட்டை உருப்படுத்திய இலக்கியங்களுள் தலைமை சான்றது திருக்குறள். முப்பாலாக விளங்கும் அந்நூலை எப்பாலவரும் ஏற்றுப் போற்றுவர். தொன்றுதொட்டு அதன் சொல்லையும், பொருளையும், தமிழ்ப் புலமையுலகம் பொன்னேபோற் போற்றி வருகின்றது என்பர். இக்கருத்துக்கொப்ப, திருக்குறளின் கருத்துக்களைச் **சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம்** ஆகிய நான்கு காப்பியங்களும், பாரதியார் கவிதைகளும் ஏற்று அமைந்த விதத்தினை எடுத்தோதுவதையும் ஒப்பிட்டுக் காட்டுவதையும் இந்நூலின் நோக்கமாகக் கொண்டார். ஒப்பீட்டு முறையில் திறனாய்வு செய்தாலும், 'ஒன்றைவிட ஒன்று சிறந்தது' எனக் காட்டுவது இவரின் நோக்கமன்று. மேற்சுட்டிய தமிழ் இலக்கியங்களில் நிரம்பி வழியும் திருக்குறள் கருத்துக்களையே விளக்கிடினும் ரா.பி.சேதுப்பிள்ளையின் பல நூலறிவுத் திறமையைக் காட்டுவதாக இந்நூல் காணப்படுகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, ஆகிய மூன்று கட்டுரைகளின் தொடக்கம், முதல் அடி அமைப்பும் இரண்டாவது அடியில் சிறிது இடைவெளியமைப்பும் இருப்பது சேதுப்பிள்ளையின் பத்தியமைப்பு உத்தியாகவே உள்ளது.

**'புறநானூற்றுக் கட்டுரைகள்'** என்ற பெயரில் திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் இவரெழுதிய புறநானூற்றுக் கட்டுரைகளை வெளியிட்டது. 1944இல் கழகம் கூட்டிய மாநாட்டில், பன்னிரண்டு தமிழ்ப் பேரறிஞர்கள் பன்னிரண்டு தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர். அம்மாநாட்டிற்கு ரா.பி.சேதுப்பிள்ளை தலைமை தாங்கித் தலைமையுரையாற்றினார். அதனால், புறநானூறும் புலவரும், புறநானூறும் கலைகளும், புறநானூறும் போர்களும், புறநானூறும் இலக்கியமும் ஆகிய நான்கு தலைப்புக்களைக் கொண்ட 'புறநானூற்றுக் கட்டுரைகள்' கழகத்தால் நூலாக்கம் பெற்றுள்ளன.

இந்நூலை முற்றிலுமாக இவரது படைப்புகளில் ஒன்றாகக் கொள்ளாவிடினும், அடுக்குமொழியும் செந்தமிழ்

நடையும் புறநானூற்றை நிறைவு செய்வது போல உள்ளன எனலாம். கவிச் செல்வமும் புவிச் செல்வமும், முற்காலப் போர்முறை, குறுநில மன்னர், பழைய குலங்களும் குடிகளும், அறிஞரோடு உறவு கொண்ட அரசர், புலவர் தம் மானவாழ்க்கை, இசைத்தமிழ் வளர்ச்சி, முற்காலப் பெண்மணிகள், மக்களின் வாழ்க்கை நலம், இலக்கிய நயம் இன்னோரன்னவற்றை உள்ளடக்கிய இருபத்தொன்பது பக்கம் கொண்டது இவர் தம் தலைமையுரை. இப் புறநானூற்றுக் கட்டுரைகள் நூல் பல பதிப்புகளைக் கொண்டிலங்குகிறது. 1950ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழக இன்டர்மீடியட் வகுப்புக்கு இந்நூல் துணைப்பாடமாக வைக்கப்பட்டது.

ரா.பி. சேதுப்பிள்ளையின் **ஆற்றங்கரையிலே** 1961இல் வெளிவந்தது. இவர் தம் படைப்புக்கு, இதுவே இறுதியாகும். இவரது வெள்ளி விழாவைக் கொண்டாடிய சென்னைப் பல்கலைக்கழகம், அவர் பெயரால் அறக்கட்டளை ஒன்றினை நிறுவி, அவரைப் பற்றிய மலரொன்றையும் வெளியிட்டது.

**ஆற்றங்கரையிலே** என்ற நூல் ஆற்றங்கரையில் அமைந்த 48 நகரங்களையும் அவற்றின் வரலாற்றுச் சிறப்புக்களையும் கொண்டிலங்குகிறது. 'கல்கி' இதழில் இந்நூற் கட்டுரைகள் தொடராக வர, அனுமதி நல்கி, புதிய வழித்தடம் அமைத்தவர் ரா.பி. சேதுப்பிள்ளை ஆவார். இவ்வாறு படைப்புக் கலையில் இவர் பல்வேறு பாதைகளை ஏற்படுத்தியுள்ளார். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்னும் முதுமொழிக் கேற்பத் தமது சொற்பொழிவு, கட்டுரை போன்றவற்றை ஆய்விதழ்களில் தொடராக வெளியிட்டு, பின்பு நூல் வடிவில் வெளிக்கொணர்ந்த ரா.பி. சேதுப்பிள்ளையின் உத்தி பாராட்டுக்குரியதாம். இவர் செந்தமிழ் நடையிலேயே வழங்கிய இவரது படைப்புக் கலைத்திறம், தமிழ் வரலாற்றை, இலக்கியங்களை ஆராய்வோர்க்கு இன்றும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. தமிழ் உணர்ச்சியை மக்களிடையே ஆழப்பதிய வைத்தவர் ரா.பி. சேதுப்பிள்ளை என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவர் **வேலின் வெற்றியில்** முருகனின் பெருமைகளைக் குறிப்பிட்டுள்ளார். 'வேலும் வில்லும்' முருகனின் வேலாற்றலையும் இராமனின் வில்லாற்றலையும் பற்றியது. நக்கீரர், அருணகிரிநாதர் பாடிய முருகன் பெருமைகளை ஆற்றொழுக்கான நடையில்,

எதுகை, மோனை, இயைபு, முரண் ஆகிய தொடை நயத்துடன் அமைத்திருப்பது இவருக்கே உரிய தனிக்கலையாகும்.

ரா.பி.சேதுப்பிள்ளையின் படைப்புக்களில் கம்பரையும், கச்சியப்பரையும் வைணவத்தையும், சைவத்தையும் - ஏற்ற இறக்கமின்றி அமைத்திருக்கும் ஒரு சமநிலையைக் காணலாம். இவர், இவ்விரண்டையும் ஒப்பீடு செய்யவில்லை; வைணவ, சைவ சமயச் சிறப்புக்களைச் சுட்டிக்காட்டுவதே இவரின் நோக்கம்.

'மூவரும் முருகனும்' எனும் கட்டுரையில், சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் காட்டும் முருகனின் திருத்தலங்களின் சிறப்பினைக் குறிப்பிட்டுள்ளார். கச்சியப்பரை வியக்கும், ரா.பி. சேதுப்பிள்ளை இம்மூவரையும் வியக்கவில்லை எனலாம். அதுபோல இராமனைப் புகழும் இவர், திருமாலைப் புகழவில்லை.

ரா.பி.சேதுப்பிள்ளையின் **ஊரும்பேரும்** ஒரு வரலாற்றுப் படைப்பு. சேறும் சகதியும் கலந்த நீரில் இருக்கும் அயிரை மீனை அள்ளி அலசிப் பொறுக்குதல் போல இவர் தமிழகத்தின் ஊர்ப் பேர்களைப் பகுத்தும் தொகுத்தும் வழங்கியுள்ளார். இன்றும் சிதைவின்றி, அவர் கூறிய நிலையில் பெயருள்ள ஊர்கள் சிலவே. தமது நூலில், மாறுபட்டிருக்கும் நிலையில், அமைந்திருந்த பல ஊர்ப்பெயர்களின் சிறப்புக்களையும், சிதைவுகளையும் இவர் சிறப்பாக அலசுகிறார். இப்படைப்பில், ஊரின் பெருமை, அதன் வரலாற்றுச் சிறப்பு, இயற்கையமைப்பு, இன்றைய காலச் சூழலமைவு போன்றவற்றை நிரல்பட உணர்த்தியிருப்பதால், இதனைத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்று நூலென்பது மிகப் பொருத்தமுடையதே!

"இந்நூல் வரலாற்றின் பாற்பட்டது. இவ்வரலாறு தமிழ்நாட்டின் ஊரையும் பேரையும் விளக்குங் கலங்கரை. 'ஊரும் பேரும்' என்னுந்தலைப்பு விழுமியது; அஃது ஆழ்ந்த பொருண்மையுடையது, சுரங்கம் போன்றது" எனச் சுட்டும் திரு.வி.க., இந்நூலின் முகவுரையில் சேதுப்பிள்ளையின் வரலாற்றாய்வுக்கு விரிவான சான்று பகர்கிறார்.

> சில நாடுகளின் ஊரும் பேரும் அடங்கிய ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்து உலவுகின்றன. அத்தகைய உலாவைத் தமிழ்நாட்டில் காண்டல் அருமையாயிருந்தது. அவ்வருமையைப் போக்கும்

வாய்ப்பு அறிஞர் சேதுப்பிள்ளை அவர்கட்குக் கிடைத்தது தமிழ்நாட்டின் தவப்பயனாகும். தமிழ் கொழிக்கும் பொருநைக் கரையில் பிறந்து, தமிழ்பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து, தமிழார்ந்த மனமொழி மெய்களைப் பெற்றும் தமிழ் வண்ணமாய்த் தமிழ் மொழியும் ஒரு பெருங் கொண்டலிடை உதித்த மின்னொளி இந்நூல். இதைத் தமிழ்நாட்டின் தவப்பயன் என்று சாற்றலாமன்றோ?

ஆசிரியர், நிலம் - மலை - காடு - வயல் - ஆறு - கடல் - நாடு - நகரம் - குடி - படை - கோ - தேவு - தலம் முதலியவற்றை அடியாகக் கொண்டு, இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர்பேர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புகளும், பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெருவிருந்தாகும் என்பதில் ஐயமில்லை"

என்பார். இந்திய விடுதலைக்கு முன்பே இதுபோன்றதோர் ஆய்வுப்படைப்பை ரா.பி. சேதுப்பிள்ளை வழங்கினார். நூலின் இறுதியில் 'தமிழ் நாட்டுத் தலங்கள்' பற்றிய இணைப்பு, இவரது ஆறாண்டுகளின் அரும்பெரும் முயற்சியை - தேடலைக் காட்டுவதாகும். இப்படைப்பு, உறங்கிக் கொண்டிருந்த ஆய்வாளர்களைத் தட்டி எழுப்பியது. தமிழின் இடப்பெயராய்வின் முன்னோடியும் முதல் மாணாக்கரும் இவரே. தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கியதும், முதலில் இந்நூலுக்குப் பரிசளித்து அது தனக்குப் பெருமை சேர்த்துக் கொண்டது.

சேதுப்பிள்ளையின் **தமிழ் இன்பம்** எனும் நூல், மேடைப் பேச்சு, இயற்கை இன்பம், காவிய இன்பம், கற்பனை இன்பம், அறிவும் திருவும், மொழியும் நெறியும், இருமையில் ஒருமை, பாரதியார் பாட்டின்பம் ஆகிய எட்டுப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. சங்ககாலம் தொடங்கிப் பாரதியார் பாட்டின்பம் வரை தமிழ் வகைப்பாட்டின் முழு வடிவமே **தமிழ் இன்பம்** எனலாம்.

மேடைப் பேச்சு ஐந்தும் முத்துக்கள். ரா.பி. சேதுப்பிள்ளை தாம் பிறந்த ஊரான 'செப்பறை'த் தலத்தை - மண்ணின் மணத்தை - பல படைப்புகளில் மறக்காமல் ஊட்டும் போக்கைக்

கொண்டவர். அமுத சுரபியாக இருந்த தமிழகம், பொறி கலங்கி வடநாட்டையும் பிற நாட்டையும் நோக்கி வாடி நிற்கின்றதென வருந்திய சேதுப்பிள்ளை, தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்திட வேண்டுமென்றார்.

> உரைநடையில் தமிழின்பம் நுகர வேண்டுமானால், திரு.வி.க. சேதுப்பிள்ளை ஆகிய இரு புலவர்களின் செந்தமிழைச் செவிமடுக்க வேண்டும். 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' என்றும் சொல்லலாம். அவர் பேச்சு, அளந்து தெளிந்து குளிர்ந்த அருவிப் பேச்சு. அவர் எப்பொருளை எடுத்து விளக்கினாலும், அது மனத்திரையில் சொல்லோவியமாக நடமாடும். இதில் உள்ள கட்டுரைகள் தமிழுக்கும் பொருளாராய்ச்சிக்கும் பயன்படும் அரிய சொல்லணிகளாகும், படிக்கப் படிக்கத் தெவிட்டாது இனிக்கின்றன

என்று சுத்தானந்த பாரதி இந்நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். சாகித்திய அகாதெமியின் முதல் விருதினைத் **தமிழ் இன்பம்** பெற்றது குறிப்பிடத்தக்கது.

இவரது **தமிழ் விருந்து** நூலின் இருபது கட்டுரைகளுள், 'ஆகாய விமானம்', 'மணிமேகலையும் மதுவிலக்கும்' தவிர்த்து பதினெட்டுக் கட்டுரைகளும் திருச்சி, சென்னை வானொலி நிலையங்களில் இவர்பேசியவைகளே! 1945ஆவது ஆண்டில் வெளியான இந்நூல், 1960 ஆம் ஆண்டில் எட்டுப் பதிப்புக்களைக் கண்டிருக்கிறது.

இவர் இக்கட்டுரைகளைத் தமிழ்க் கலையின் தன்மை, தமிழ் இலக்கியத்தின் சீர்மை, தமிழ் மொழியின் செம்மை, தமிழரது வாழ்க்கையின் மேன்மை என நான்கு கூறுகளாகப் பகுத்து, தமிழர் தம் இலக்கியப் பசியைப் போக்கியுள்ளார் எனலாம்.

'தமிழ் விருந்தில்' கொச்சைத்தமிழ், கலைச் சொல்லாக்கும், நறுமணம் போன்ற கட்டுரைகளில் சொல்லாய்வுக்குரிய நோக்கத்தைக் காட்டியுள்ளார்.

1940இல் வெளியான ரா.பி. சேதுப்பிள்ளையின் **தமிழர்வீரம்** ஒன்பது பதிப்பினைக் கண்டது. தமிழர்களின் வீரம்,

வீரப்போர், வீரவிருதுகள், வீரக்கல், வீரவிளையாட்டு, வீரமாதர், மற மாண்புகளை இற்றைக்காலத் தமிழர் அறியும் வகையில், இனிமையாக ஆக்கியுள்ளார்.

இந்நூலின் முன்னுரையில் நாவலர் சோமசுந்தர பாரதியார்,

> சொல்லின் செல்வர்; இனிய எழுத்தாளர்; இன்சொற் பேச்சாளர். இவர்கள் உரை கேட்டு மகிழாத தமிழரே இரார். இவர்கள் இயற்றும் நூல் எதுவும் தமிழகம் முழுவதும் செல்லும் நாணயம்.

என்கிறார். இவர் பெண்ணியம் போற்றும் பெருந்தகையாளர்; சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் பெண்களைப் போற்றியவர். தமது படைப்புகளிலும் பெண்ணினத்தை வியந்து போற்றுகிறார். தமிழ்நாட்டில் சிறந்து விளங்கிய ஆதிரையார், விசாகையார், மருதியார், கோப்பெருந்தேவியார், மணிமேகலையார், கண்ணகியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் ஆகிய ஒன்பது பெண்மணிகளின் வரலாற்றுச் சிறப்புக்களைத் தொகுத்துத் தமிழ்நாட்டு நவமணிகள் என்னும் நூலாக வடித்துள்ளார்.

இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய தி.நெ. சிவஞானம்பிள்ளை,

> பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கைச் சிறப்பை, இக்காலத்துத் தமிழ்ச் சிறார்க்கு எடுத்தோதும் புத்தகங்களும், பண்டு தொட்டுச் சரித்திர வாயிலாகவும் பனுவல்கள் வாயிலாகவும் அறியக் கிடக்கும் நம்நாட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளும் தற்காலம் வெளிப்போந்துள்ள நூல்களுள் காண அரியவாயினவே என்று நெடுநாளாக நான் கருதியிருந்த ஒரு பெருங்குறையை இந்நூலாசிரியர் நிறைவு செய்துள்ளார்

என்று ரா.பி. சேதுப்பிள்ளையின் இப்படைப்பு முயற்சியைப் பாராட்டுவார்.

இவர், வீரமாமுனிவரின் தேம்பாவணி காப்பியச் சுவையைத் தமது கட்டுரையில் வெளிப்படுத்தியுள்ளார். அவரது திருக்காவலூர்க் கலம்பகத்தை ஒட்டி, 'திருக்காவலூர்க் கோவில்'

நூலொன்றைப் படைத்துள்ளார். அந்நூலில், அக்கோயில் சிறப்பினையும் அடைக்கல மாதாவின் அருளினையும் விதந்துபோற்றியுள்ளார். இது, சமயப் பொறுமையைக் காட்டுவதாகும்.

இவர் ஒரு சமயம் சார்ந்திருந்தும், படைப்புகளில் ஒரு பக்கமும் சாராமல் - காழ்ப்புணர்வைக் காட்டாமல் - கிறித்துவர்கள் வழங்கிய தமிழ்த் தொண்டுகளைத் தமிழ் உலகிற்கு எடுத்துரைத்துள்ளார். அதற்குப் 'படைப்புக்கலை'யைத் தக்க களமாக இவர் பயன்படுத்தியுள்ளார்.

இவர், கால்டுவெல் ஐயர் வரலாற்றைக் 'கால்டுவெல் ஐயர் சரிதம்' எனத் தமிழுக்கு வழங்கியுள்ளார்.

இவ்விரு கிறித்துவர்களின் தமிழ்த் தொண்டல்லாது பிற கிறித்துவர்களையும் அறிந்து, எல்லீசர், இரேனியஸ் ஐயர், வேதநாயகம் பிள்ளை, கிருஷ்ணப் பிள்ளை, வேதநாயக சாஸ்திரியார் ஆகியோரின் தொண்டுகளைத் தொகுத்துக் 'கிறித்துவத் தமிழ்த் தொண்டர்' என்னும் நூலாக வெளியிட்டுள்ளார்.

வரலாறுகளையும் ஆராய்ச்சி நூல்களையும் படைத்த ரா.பி.சேதுப்பிள்ளை நகைச் சுவையுடன் கூடிய கட்டுரைகளை வரைந்துள்ளார். 'தமிழகம் அலையும் கலையும்' நகைச்சுவையுடன் அமைந்திருப்பினும், உற்று நோக்கின், அதனுள் உண்மைகள் மறைந்திருக்கும். சான்றாக, 'பரங்கியர் போன வழி'யில் என்ற கட்டுரையில் நம் நாட்டை விட்டுச் செல்லவிருக்கும் பரங்கியரை வாழ்த்துவோமாக என்கிறார். இக்கட்டுரையில் காலதர், கோழி, தாழ்ப்பாள் முறையே வீட்டுக்குச் சன்னலும், கோழிக்கு வான் கோழியும் (டர்க்கி) பூட்டுக்குச் சாவியும் தந்தவராம்! கலங்கரை விளக்கம், அங்காடி, சோழமண்டலக்கரை, குடகு, கள்ளிமேடு, தரங்கம்பாடி, தூத்துக்குடி, திருவல்லிக்கேணி, கொடுங்கோளூர் போன்ற சொற்கள் முறையே லைட்ஹவுஸ், மார்க்கெட், கோரமண்டல் கோஸ்ட், கூர்கூ, காலிமீர், திராமீர், திராங்குபார், தூத்துக்குரின், டிரிப்பிலிகேன், கிராங்கனூர் எனத் தூய தமிழ்ச் சொற்களின் சிதைவை-சீரழிவை நகைச்சுவை ததும்பக் காட்டியுள்ளார்.

பிறநாட்டான் ஒருவன் தமிழனாகக் கருதப்பட வேண்டுமானால், அவன் நடை, உடை, பாவனைகள் எல்லாம்

தமிழ்நாட்டாரைப் போல் இருக்க வேண்டுமல்லவா? தமிழில் பிற மொழிச் சொற்கள் கலப்பதைக் குறித்து வேதனைப்படும் இவர், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்பார். ஆயினும்,

> தமிழ்ச் சொற்களை இழந்து பிறமொழிச் சொற்களை ஏற்றிருப்பது, கரும்பிருக்க இரும்பு கடிக்க ஒருப்படலாமா? வானொலி என்ற வளஞ்சார்ந்த சொல்லிருக்கச் செவிகைக்கும் பிறமொழிச் சொல்லைத் திணிக்கலாமா?

என்ற மன வேதனையைத் தம் படைப்புகளில் புகுத்திக் காட்டியுள்ளார்.

அலைமாட்சி (முதற்பகுதி)யில் சேர, சோழ, பாண்டியர்கால நகரங்களின் தோற்றம், மாற்றம், சிதைவு போல்வனவற்றையும் கலைமாட்சி (இரண்டாம் பகுதி)யில் மதுரை மாநகரம், கலைச் சொல்லாக்கம் உள்ளிட்ட பல்வேறு பொருள் பற்றிய கட்டுரைகளையும் 'தமிழகம் அலையும் கலையும்' நூலாக ரா.பி.சேதுப்பிள்ளை வெளியிட்டுள்ளார். வரலாற்று உண்மைகளையும் நகைச்சுவையுடன் கலந்து கொடுத்து, படிப்பாளிகளின் மனத்தில் பதிய வைக்கும் கலையை இவரிடம் காணமுடிகிறது.

## தொகுப்புக் கலைப்பணி

படைப்புக் கலையில் பல புதுமைகளைச் செய்த ரா.பி.சேதுப்பிள்ளை தொகுப்பு மற்றும் பதிப்புக் கலையிலும் சிறந்த பணியாற்றியுள்ளார். தமிழிலுள்ள அரிய பல செய்திகளைத் தொகுப்பதற்காக இவர் திரட்டியவை ஏராளம். அத்தனையும் பதிப்பாக்கம் பெறவில்லை என்றே கூறலாம். இவர், முதலில் சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என வழங்கியுள்ளார். அடுத்து, செஞ்சொற்கவிக் கோவையைத் தென்திராவிடப் புத்தக டிரஸ்டு ஆதரவில் தொகுத்தளித்தார். 'புலமைமிக்கவர்க்கே புலனாகும்' என்ற அரியநிலையை மாற்றி, ஆங்கில அறிவு இன்றி, ஓரளவு படித்தோர்க்கும் பயன்படுமாறு, எளிய நடையில் இன்பமும் பயனும் ஈயும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பதித்தல் என்ற குறிக்கோளுடன் விளக்கினார்.

இந்நூலின் இறுதியில் 'குறிப்பு' எனக்கொடுத்திருப்பது, தமிழ்ச்சான்றோர்க்குத் தேவையில்லாமல் இருக்கலாம். தெலுங்கு, மலையாளம், கன்னடத்தைச் சேர்ந்தோர்க்குப் புரியும் வகையில் இஃதமைந்திருத்தல் தெளிவாம்.

இவர் பாரதியாரின் கவிதைகளில் முகிழ்த்து நல்மொட்டுக்களைத் தொகுத்து, 'பாரதியார் இன்கவித்திரட்டு' என வழங்கியுள்ளார்.

இவர், பத்தாயிரம் பாடல்களைக் கொண்ட **கந்தபுராணத்தை** எல்லோரும் அறிந்து கொள்ளும் நோக்கில், தேர்ந்தெடுத்த ஆயிரத்து ஐந்நூறு பாடல்களைக் கொண்டதாக மூன்று பகுதியாகப் பகுத்துத் தொகுத்துள்ளார்.

எல்லீசரின் அறுபத்தொன்பது திருக்குறள் உரை கொண்ட நூலையும், திராவிடப் பொதுப் பழமொழிகளையும் (Common Dravidian Proverbs), திராவிடப் பொதுச் சொற்கள் (Dravidian Common Vocabulary) அடங்கிய பேரகராதியையும் ராபி. சேதுப்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகம் வழியாகத் தொகுத்தளித்துள்ளார்.

இவர் விமரிசனத்துக்காகவோ, ஆராய்ச்சிக்காகவோ அல்லாமல் எல்லோரும் படிக்க வேண்டும்; எளியோருக்கும் புரிய வேண்டும் என்றே இத்தகு பதிப்புகளை வெளியிட்டுள்ளார். இவ்வகை நூல்களில் ஆய்வுக்கு முதன்மை அளிக்காத நிலையை இவரிடம் காணலாம்.

தொடக்கத்தில் திருக்குறள், **கம்பராமாயணம், சிலப்பதிகாரம்** போன்ற நூல்களை ஆய்ந்தெடுத்த ரா.பி.சேதுப்பிள்ளை தமது படைப்புகளுக்குக் கற்பனை, நகைச்சுவை, வாழ்க்கை வரலாறு, சொல்லாய்வு, வரலாற்றாய்வு எனப் பல்வேறு வடிவங்களை வகுத்துக் கொண்டார்.

சிறுபத்திரிகைகளின் ஒரு பிரிவிற்கெனப் படைக்கும் போது தமிழ், தமிழர், தமிழ்நாடு எனும் மேம்போக்கான நிலையிலும் நகைச்சுவையுடன் கூடியதாகவும் அமைத்துள்ளார். வரலாறு, ஆராய்ச்சியாயின் அப்படைப்புகளில் நகைச்சுவை விரவாத நிலையைக் காணலாம். எவ்வாறாயினும் இவரது படைப்புக் கலை ஆற்றலுக்கு இவர்தம் படைப்புகளே சான்று பகரும்.

கட்டுரைகளை - படைப்புகளை எழுதிவிட்டால் மட்டும் போதாது; அவற்றுக்குத் தக்க தலைப்பிட்டு உரிய நேரத்தில் வெளியிட வேண்டும் என்ற நிலையில் ரா.பி.சேதுப்பிள்ளை, ஒரு குறிப்பிட்ட சிறுசிறு பகுதியாக வகுத்துக் கொண்டு, கட்டுரை வரைந்துள்ளார். பத்திரிகையின் தரத்திற்கேற்றவாறு, அவர் தமது படைப்புகளை உருவாக்கி வழங்கியுள்ளார் எனலாம்.

சிறுசிறு உருண்டைகளாகச் செய்து, அவற்றை ஒரு பெரிய உருண்டையாக்குவது போல் இவர், சிறிய அளவில் அமைந்த கட்டுரைகளைப் பெரு நூலாக்கம் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். சிலர் தனது படைப்புகள் வெற்றி பெறுமோ? தோல்வியுறுமோ? என்ற ஐயத்தால் இதுபோன்று செய்வர். ஆனால் இவரோ சிறுபத்திரிகைகளில் வெளியான தமது படைப்புகள் - கட்டுரைகள் குறைந்த அளவு எண்ணிக்கையிலான வாசகரிடம் மட்டும் போய்ச் சேர்ந்தால் போதாது; அனைவர்க்கும் போய்ச் சேர வேண்டும் என்ற நல்லெண்ணத்தில், அவற்றைப் பெரு நூலாக உருவாக்கி உலாவச் செய்திருந்தார் எனலாம். ரா.பி.சே.யின் சில கட்டுரைகள் 'கூறியது கூறல்' போல் தோன்றினும், அவையும் ஒதுக்கத் தக்கதல்ல எனப் படிப்போர் உணரலாம். இவருக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு யாருடைய மனமும் புண்படாதவாறு இலக்கியப் படைப்புகளை மிகுதியாக வழங்கியுள்ளார். ரா.பி.சே.யிடம் அறிவுப் பரப்பும் தேடல் முயற்சியும் இயல்பாக அமைந்திருந்தன. நூலின் தனித்தன்மையைச் சிதைத்து விடாமல், அந்நூலின் முழுமையினை இணைத்துக் காட்டும் (கற்பனை, நகைச்சுவை, வரலாறு . . . . ) பன்முகத் தன்மையை இவரது அனைத்துப் படைப்புகளிலும் காணலாம்.

### ரா.பி.சே.யும் திறனாய்வும்

மேலைநாட்டார் அந்தந்த நாட்டு இலக்கியப் படைப்புகளைத் திறனாய்வு செய்து அவற்றை நூலாக வெளியிட்டனர். இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் தமிழில் அது போன்ற திறனாய்வு நூல்கள் தோன்றவில்லை. இக்குறையினை முதன்முதலில் போக்கியவர் ரா.பி.சே. எனலாம். தமிழில் திறனாய்வு நூல்கள் தோன்றுவதற்கு வழி வகுத்தவர்களுள் இவரும் குறிப்பிடத்தக்கவர். தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்வதில் வல்லவராக விளங்கிய ரா.பி.சே. 'நுண்மாண் நுழைபுலம்' மிக்கவராவார்.

ரா.பி.சே.யின் படைப்புகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, 1. ஆராய்ச்சி 2. வரலாறு 3. பதிப்பு.

இம் மூன்று வகையுள்ளும் கற்பனை, நகைச்சுவை, தேடல், வரலாறு போன்ற நயங்கள் ஒரு சேர விரவி இருப்பதை உணரலாம். இவர்து, பன்னிரு கட்டுரை, திருவள்ளுவர் நூல்நயம், கம்பன்கவிநயம், சிலப்பதிகார நூல்நயம், வீரமாநகர், புறநானூற்றுக் கட்டுரைகள், வேலும் வில்லும், வேலின் வெற்றி, வழிவழி வள்ளுவர், ஆற்றங்கரையினிலே போன்றவை ஆராய்ச்சிக் கட்டுரைகளாம்.

இரண்டாவது பகுப்பில், தமிழகம் ஊரும்பேரும், தமிழ் இன்பம், தமிழர் வீரம், தமிழ்விருந்து, தமிழ்நாட்டு நவமணிகள், திருக்காவலூர்க் கோவில், கால்டுவெல் ஐயர் சரித்திரம், கிறித்துவத் தமிழ்த் தொண்டர் போன்றவற்றுள் வரலாற்றுண்மைகள் பொதிந்திருப்பதை உணரலாம். தமிழகம் அலையும் கலையும், கடற்கரையிலே ஆகியவற்றுள் வரலாற்றுடன் நகைச்சுவையும் கற்பனையும் ததும்புவதைக் காணலாம். இப்பிரிவுனுள் ஆங்கில மொழி வாயிலாகப் படைத்த சில நூல்களையும் குறிப்பிடலாம். **சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்** (Words And Their Significance) **செந்தமிழும் கொச்சைத் தமிழும்** (Tamil Literary and Colloquial) ஆகிய ஆங்கில நூல்களை வரலாற்று நோக்கின் அடிப்படையிலே வழங்கியுள்ளார்.

மூன்றாவது பகுப்பில், தமிழ்க் கவிதைக்களஞ்சியம், செஞ்சொற் கவிக்கோவை, பாரதியார் இன்கவித்திரட்டு, கந்தபுராணத்திரட்டு, திராவிடப் பொதுப் பழமொழிகள், திராவிடப் பொதுச் சொற்கள் - (பேரகராதி), எல்லீசர் திருக்குறள் உரை போன்ற நூல்களைச் சொந்தமாகவும் தென்மொழிகளின் புத்தக டிரஸ்டு, சென்னைப் பல்கலைக் கழகம் வழியிலும், ரா.பி.சே., பதித்து வெளியிட்டுள்ளார்.

வழக்கறிஞராகிய ரா.பி.சே., தமிழ் இலக்கியங்களின் நயத்தினை ஆராயும் நோக்குடன் திறனாய்வுத் துறையில் முன்வரிசையில் நின்றார்.

**தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇத்**
**துணிவோடு நிற்றல் . . . .**

என்ற தொல்காப்பிய மரபியல் சூத்திரப்படி, இவர் ஒரு சொல்லுக்குப் பொருந்தி வரக் கூடிய இன்னொரு சொல்லை - பழமையான சொல்லை - தமிழ் இலக்கியத்தின் வழியில் கண்டறிந்து தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியிருப்பது குறிப்பிடத் தக்கது. திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் மூன்றையும் தனித்தனியே பகுத்தாய்ந்து திருக்குறளுக்கு முதலிடம் வழங்கியிருப்பது அவரது மதிப்பீட்டு முறைத் திறனாய்வைப் புலப்படுத்துவதாம்.

எதனைப் போற்றுகின்றோமோ அது வளரும் என்ற பாரதியின் கூற்றுக் கேற்ப, ரா.பி.சே., தமிழைப் போற்றி வளர்த்தார்; இன்று அவர் போற்றிய தமிழ் வளர்கிறது! ரா.பி.சே.யைப் பாராட்டு முறைத் திறனாய்வாளர் எனச் சிலர் குறைபடலாம். இவரது ஆராய்ச்சி, வரலாறு, பதிப்பு ஆகிய வகைகளுக்குள் சுட்டிய படைப்புகளை உற்று நோக்கினால், சில இடங்களில் விளக்கமாக (Interpretation) இருக்குமே அன்றிப் பாராட்டுவது இவரின் நோக்கமன்று என்பது தெளிவாகும். இவர் படைப்பிலும் திறனாய்விலும் புரியாத புதிர் போட்டாரில்லை. உண்மையான விளக்கம் என்பதால், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் ரா.பி.சே.யின் படைப்புகள் இன்றும் சிறந்து விளங்குகின்றன.

இவர், பகுப்பாய்வினூடே வரலாற்றையும் ஊட்டிச் சமூகப் பயன்பாட்டிற்கான அரிய பல வரலாற்றுண்மைகளை உணர்த்தியவர். தமிழகம் ஊரும் பேரும், தமிழ் இன்பம் போன்ற படைப்புகள் சமூகப் பயன்மிக்கன.

### நினைப்பும் நிலைப்பாடும்

ஆசிரியர் பணி மீது பற்றுக் கொண்ட ரா.பி.சே. அண்ணாமலை மற்றும் சென்னைப் பல்கலைக் கழகங்களில் எதையும் எதிர்பார்த்துப் பணியாற்றினாரில்லை; செந்தமிழில் எதுகை மோனையைப் புகுத்தினார்; தமிழ்ச்சொற்களின் வேர்களைத் தோண்டித் துருவியாய்ந்தார். இப்பணிகளுக்காகச் சென்னைப் பல்கலைக் கழகம் ரா.பி.சே.க்கு இலக்கியப் பேரறிஞர் (Doctor of Literature) பட்டம் வழங்கி வெள்ளி விழாக் கொண்டாடியது. அரசியல் அமைப்புச் சொற்கள் மொழியாக்க நிபுணர் குழு, சாகித்திய அக்காதமியின் ஆட்சி மற்றும் ஆய்வுக்குழு போன்றவற்றில் உறுப்பினராகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழகக் கம்பராமாயண ஆராய்ச்சிப் பதிப்புக்குழு,

சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலத் தமிழ் அகராதியின் ஆய்வுக்குழு போன்றவற்றில் தலைவராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். ரா.பி.சே., பேச்சு, எழுத்து, மூச்சு எல்லாமே தமிழ். இவரது பல்வேறு படைப்புகள் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பாடநூல்களாக விளங்குகின்றன. பல படைப்புகள் ஐந்திலிருந்து ஒன்பது பதிப்புகளைக் கண்டன. இவர் படைப்பிலும் பதிப்பிலும் வெற்றி கண்டார்.

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்**

என்று குறள் வலியுறுத்துவதற்கேற்ப, தமிழர்கள், ஆங்கில மோகம் பிடித்துத் திரிந்த காலத்தில், தீந்தமிழைத் தேர்ந்து பிறரைச் செவி சாய்க்க வைத்தவர் ரா.பி.சே. வன்முறையாளரைக் கூடச் சொல்முறைக் கலையால் திருத்தும் திறம் கொண்டிருந்தவர். சைவத்தையும் வைணவத்தையும் ஆடாமல் அசையாமல் ஒரு சார்பின்றி வழங்கியவர்.

பலவகையான இலக்கியப் படைப்புக் கலையில் ஈடுபட்டுப் புகழுக்குரிய பல கட்டுரைகளை நிலைத்து நிற்கச் செய்தவர் என்பதற்கு அக்கட்டுரைகளே இன்றும் சாட்சியாய் நிலைபெற்றுள்ளன; சொல்லாட்சியுடன் கூடிய செந்தமிழ் நடையிலேயே தமது படைப்புகளை வழங்கியதால், படிப்பாளிகள் பலராயினர்; பயன் பெற்றனர். விலை மதிக்க முடியாத தமிழ் இன்பத்தை வாரி வழங்கி, தமிழர்க்கு ஊரும்பேரும் துலங்கச் செய்தவர் இவரே! தமிழ் இலக்கியப் படைப்புகளைப் போற்றிய படிப்பாளியாகவும் படைப்பாளியாகவும் சிறந்து விளங்கியவர் ரா.பி.சே. இவர் செந்தமிழை எதுகை மோனையுடன் படிப்போர்க்கு ஆர்வத்துடன் ஊட்டியவராம்.

தமிழில் இடப்பெயராய்வின் முன்னோடியும் முதல் மாணாக்கனும் ரா.பி.சே.யே! படைப்புக் கலையில் தடம்பல பதித்து வெற்றி கண்ட இவரைப் பட்டங்களும் பதவிகளும் தாமாகத் தேடி வந்தன.

ரா.பி.சே.யின் படைப்புகள் பன்முகத்தன்மை கொண்டமையால் இன்றும் தமிழ் உலகம் பாராட்டுகிறது.

வாழ்க செந்தமிழ் ! வளர்க சேதுவின் புகழ் !

# படைப்புகள் - ஒரு மதிப்பீடு

தமிழின்பம் தந்தவர், சொல்லின் செல்வர், செந்தமிழ்க் கிள்ளை, செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை என்றெல்லாம் புகழப்படும் ரா.பி. சேதுப்பிள்ளை, மறைந்தாலும் அவருடைய நாற்பதாண்டுகாலத் தமிழ்த் தொண்டினை அவருடைய நூல்கள் பறைசாற்றுகின்றன. ரா.பி. சேதுப்பிள்ளை பேச்சால், எழுத்தால், ஆசிரியர் பணியால் மற்றும் பதிப்புப் பணியால் மொழியியல், ஒப்பியல், வாழ்க்கை வரலாற்றியல் போன்ற பல்வேறு துறைகளை விரிவுபடுத்தியவர். இப்படிப்பட்ட தமிழன்னையின் தவப் புதல்வரின் படைப்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ரா.பி. சேதுப்பிள்ளையின் படைப்புகள்

1. திருவள்ளுவர் நூல் நயம் 2. சிலப்பதிகார நூல் நயம் 3. கம்பன் நூல் நயம் 4. தமிழக அலையும் கலையும் 5. வீரமா நகர் 6. வேலும் வில்லும் 7. தமிழ் விருந்து 8. தமிழர்வீரம் 9. தமிழின்பம், 10. ஆற்றங்கரையினிலே, 11. வழி வழி வள்ளுவர் 12. வேலின் வெற்றி 13. கடற்கரையினிலே 14. சிலப்பதிகாரத்தின் அமைப்பு 15. தமிழக ஊரும் பேரும் 16. தமிழ் நாட்டுப் பெண்மணிகள் 17. கால்டுவெல் ஐயர் சரிதம் 18.கிருஸ்தவத் தமிழ்த் தொண்டர் 19. திருக்காவலூர்க் கோயில் 20. திராவிடப் பொதுச் சொற்கள் (Dravidian Common Vocabulary) 21. திராவிடப் பொதுப் பழமொழிகள் (Common Dravidian Proverbs) 22. சொல்லும் பொருளும் (Words and their significance) 23. கந்த புராணத் திரட்டு 24. பாரதியார் இன்கவித் திரட்டு 25. தமிழ்க் கவிதைக் களஞ்சியம் 26. செஞ்சொற் கவிக்கோவை

எனும் நூல்களை எழுதியும், எல்லீஸரின் திருக்குறள் உரையையும் பதிப்பித்தும் உள்ளார்.

## மேடைப்பேச்சு

சென்னையில் நடைபெற்ற கம்பன் விழாவொன்றில் பேராசிரியர் சேதுப்பிள்ளை பேச நேர்ந்த பொழுது கூறிய சொற்கள் நினைவுகூரத் தக்கன.

> ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் பயிலும் மாணவன் நான்; என்னிடம் உங்களுக்குள்ள நம்பிக்கையின் மீதும் எனக்குத் தமிழ்த்தாயிடம் உள்ள மாறாத அன்பின் மீதும் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; கம்பனைப் போன்ற ஒரு தெய்வ மாக்கவிஞன் நெஞ்சையள்ளும் சொற்கவிஞன் இதுவரையில் தமிழகத்தில் தோன்றவில்லை; அது உண்மை வெறும் புகழ்ச்சியில்லை[1]

என்று ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் மேடைப் பேச்சின் போது சொல்லின் எளிமையும், அதே சமயம் தமிழ் மீது கொண்ட தீராக் காதலையும் அறியமுடிகிறது. ரா.பி. சேதுப்பிள்ளை **கம்பராமாயணத்தில்** கொண்டிருந்த ஆழ்ந்த புலமையைப் பற்றித் தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் கூறிய கருத்து நினைத்தற்குரியது.

> தமிழை வளர்ப்பதற்கென்று தமிழ் நாட்டில் அவ்வப்போது சிலர் பிறப்பதுண்டு. அவருள் சேதுப்பிள்ளை ஒருவர். இவ்வுலகம் கம்பர் கழகமானால் உள்ள நிறைவு கொள்ளுவோருள் சேதுப்பிள்ளை முதல்வராக இருப்பார். எவ்விடத்திலும் எம்மேடையிலும் எப்பேச்சிலும் அவர் கம்பரை மறப்பதில்லை. அவர் நா கம்பரின் உறையுளாகியது[2]

என்று குறிப்பிடுவதன் மூலம் மேடைப் பேச்சிலும், தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு முனைப்புடன் செயல்பட்டதை அறிய முடிகிறது.

சென்னையில் உள்ள ஒய்.எம்.சி.பட்டி என்ற அமைப்பில் சேதுப்பிள்ளையின் கம்பராமாயணச் சொற்பொழிவு வாரந்தோறும் தொடர்ந்து மூன்றாண்டுகள் நடைபெற்றது. மாலை 6 மணிக்குக் கூட்டம் தொடங்குமென்றால் 5.30 மணிக்கே மண்டபத்தில் மக்கள் நிறைந்துவிடுவர். சேதுப்பிள்ளை குறித்த காலத்தில் சொற்பொழிவைத் தொடங்கிக் குறித்த காலத்தில் முடித்து விடுவார். அவர் கம்பனைப் பற்றிப் பேசினாலும் இடையிடையே கன்னித் தமிழ் இலக்கியச் செல்வத்தையெல்லாம் அள்ளியள்ளி வழங்குவார். அவர் பேசிய சொற்பொழிவு களிலிருந்து சில.

"சுக்கிரீவன் தன் படைகளைத் தென்னாட்டிற்கு அனுப்புகிறான். செல்லும் வழிகளுக்குரிய அடையாளங்களைச் சொல்லி வருகிறான். தென்றமிழ் நாட்டுப் பொதிய மலையையும், அங்குத் தமிழ் முனிவனாகிய அகத்தியன் தங்கித் தமிழை ஆராய்வதையும் குறிப்பிட்டான்".

அந்த மலைக்குச் செல்லாமல் வலமாக அதனைச் சுற்றி வழிபட்டு அப்பாற் செல்லுங்கள் என்று அறிவுறுத்தினான்" இவ்வாறு இரண்டு மணிநேரம் தன் வெண்கலக்குரலில் சொற்பொழிவு ஆற்றும் திறமை பெற்றவர்.

சென்னையில் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், 1944ஆம் ஆண்டில் நடத்திய புறநானூற்று மாநாட்டில் பேராசிரியர் சேதுப்பிள்ளை தலைமை தாங்கி நிகழ்த்திய பேருரை தமிழர் உள்ளத்தில் நேரில்லாத தமிழ் உணர்ச்சியை நிரப்பியது. "செந்தமிழ்ச் செல்வர்களே! இந்நாள் தமிழ் நாட்டுக்கு ஒரு நன்னாள்" என்று தொடங்கி இன்பமழை பொழிந்தாற்போல அவர் புறநானூற்றின் சிறப்பினைப் பொழிந்த திறத்தினை நேரில் கண்டு, கேட்டு இன்புற்றனர். அத்தலைமையுரை சேதுப்பிள்ளையின் செந்தமிழ் இலக்கியப் புலமைக்கு ஓர் அளவு கோலாகத் திகழ்ந்தது என்பர்.

"அன்பர்களே தமிழ்த் தாயைப் போற்றும் அன்பரும் அறிஞரும் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கே நிறைந்திருக்கின்றார்கள். தமிழ் நாடெங்கும் தமிழ் முழக்கம் செழித்து வருகின்றது; எங்கும் தமிழ் மணம் கமழ்கின்றது. சிந்தைக்கினிய செவிக்கினிய செந்தமிழைத் தமிழ்நாட்டார் சீராட்டத் தொடங்கிவிட்டார்கள். பண்டைத் தமிழ் நூல்களைப் படிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் தொண்டர் பல்லாயிரம் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய உணர்ச்சியின் வடிவமே இம்மாநாடு. தலைசிறந்த ஒரு தமிழ்நூலின் திறத்தினை எடுத்துரைப்பதே இம்மாநாட்டின் நோக்கமாகும்"

என்று சூளுரைத்தார்.

"பழந்தமிழ் நாட்டின் தன்மையை எடுத்துக் காட்டும் தொகை நூல்களில் தலைசிறந்தது புறநானூறு.

அந்நூலில் படைத்திறம் வாய்ந்த பெருவேந்தரைக் காணலாம்; கொடைத்திறம் வாய்ந்த வள்ளல்களைக் காணலாம்; கற்றறிந்து அடங்கிய சான்றோரைக் காணலாம்: பழந்தமிழ்க் குலங்களையும் குடிகளையும் காணலாம். சுருங்கச் சொல்லின் கலைமகளும் திருமகளும் களிநடம் புரிந்த பழந்தமிழ் நாட்டையே புறநானூற்றில் பார்க்கலாம்.

"புறநானூறு தமிழ்ச்சுவை தேரும் மாணவர்க்கு ஓர் இலக்கியக் கேணியாகும். பழமையைத் துருவுவார்க்குப் பலப்பொருள் நிறைந்த பண்டமாகும். இத்தகைய பெருநூலைத் தமிழ் மக்களாகிய நாம் போற்றிப் படித்து இன்பமும் பயனும் எய்துவோமாக"

என்று அம்மாநாட்டுத் தலைமையுரையில் சூளுரைத்தார்.

1946ஆம் ஆண்டில், சென்னையில் நடைபெற்ற மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் தலைமை தாங்கிய சேதுப்பிள்ளை நிகழ்த்திய செந்தமிழ்ப் பேருரை தமிழாசிரியர்கட்கெல்லாம் புத்துயிரும், புத்துணர்வும், புதுவாழ்வும் உண்டுபண்ணியது. அவர்கள் வாழ்விலேயே ஒரு புதிய திருப்பத்தை உண்டு பண்ணியது.

"அன்பர்களே; இம்மாநாட்டிலே தமிழ்த்தாயின் மணிக்கொடி ஏறக்கண்டேன்; மனம் களித்தேன். வில்லும் கயலும் வேங்கையும் தாங்கிய மணிக்கொடி முத்தமிழ் வளர்த்த மூவேந்தரையும் நம் மனக்கண் எதிரே காட்டி நிற்கின்றது. இனித்தமிழ்நாடு தமிழருக்கே ஆகும் என்பதில் தடையும் உண்டோ? தமிழ்நாடு தன்னரசு பெறும் என்று எண்ணும் பொழுது தமிழர் உள்ளம் தழைக்கின்றது; தொண்டர் உள்ளம் துள்ளுகின்றது. தமிழ்த்தாய் முன்னாளில் எய்தியிருந்த ஏற்றமும் தோற்றமும் அலையலையாக எழுகின்றன.

"தமிழ் அறிஞர்களே! தமிழ்நாடெங்கும் தமிழ்ச் சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள். கலைச் செல்வத்தை வாரி வழங்குங்கள்;

> தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும். அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக்கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர். எந்த மொழியும் சொந்த மொழிக்கு இணையாகாது என்று தமிழ்நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; தேசிய மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம் என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த நிலையினை இன்று எண்ணிப் பாரீர்!

என வீர முழக்கம் செய்த பேராசிரியரின் தலைமைப் பேருரையில் கரைபுரண்டோடும் தமிழுணர்ச்சி வெள்ளம் போல் பாய்ந்தது.

### கட்டுரை இலக்கியம்

இக்காலத்தில் உலகில் எல்லா மொழியிலும் உரைநடை இலக்கியங்கள் உலவுகின்றன. அவற்றுள் கட்டுரை இலக்கியங்களே சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. பிரெஞ்சுநாட்டுப் பேரறிஞராகிய மாந்தேன் (Montaigne) என்பாரை ஐரோப்பிய நாடுகள் 'கட்டுரை இலக்கியத்தின் தந்தை' என்று பாராட்டுகின்றன. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பேரறிஞர் பெருஞ்சுவை நிறைந்த கட்டுரைகளை எழுதிப் பிரெஞ்சு இலக்கியத்தை வளர்த்தார். இவரைப் பின்பற்றியே ஆங்கிலம், இலத்தீன் போன்ற பிற மொழிகளில் கட்டுரை இலக்கியங்கள் எழுதப்பெற்றன. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றிய அடிசன் ஸ்டீல் போன்ற அறிஞர்களின் ஆங்கிலக் கட்டுரைகள் இலக்கியச் சிறப்பை எய்தலாயின. இவர்கள் காலத்திற்குப் பிறகு பல்வேறு மொழிகளிலும் கட்டுரை இலக்கியங்கள் வெளிவரலாயின.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய செந்தமிழ்ப் பேரறிஞராகிய ஆறுமுக நாவலர் மிகவும் எளிய நடையில் உரைநடை இலக்கியங்களை எழுதினார். அவர் எழுதிய

பாலபாடங்கள் சிறுவர்களுக்கு நல்லறிவூட்டும் கட்டுரைகளாக அமைந்தன. அவரைத் 'தமிழில் வசனநடை கைவந்த வல்லாளர்' என்று தமிழுலகம் போற்றியது. இருபதாம் நூற்றாண்டில் மறைமலையடிகளார், திரு.வி.க., சிவஞானமுனிவர் போன்றவர்கள் கட்டுரை இலக்கியத்தை வளர்த்தனர். செந்தமிழின் இனிமையே வடிவாகத்திகழ்ந்த ரா.பி. சேதுப்பிள்ளை பலவிதப் பொருள் குறித்துப் பல கட்டுரை நூல்களை எழுதியுள்ளார். ஒவ்வொரு கட்டுரை நூல் ஏதேனும் ஒரு கருத்தினைத் தெளிவாக உணர்த்துவது இவருடைய சிறப்பாகும். எந்தக் கருத்தையும் இனிமையாக எடுத்துரைத்துப் பின்பற்றச் செய்யும் திறன் படைத்தவர். தனக்கே உரிய நகைச்சுவை நடையில் எழுதி இலக்கியக் கட்டுரையைத் தொடங்கி வைத்த பெருமை இவரைச் சாரும்.

## இலக்கியக் கட்டுரை நூல்கள்

1. கம்பன் 2. தமிழக அலையும் கலையும் 3. வீரமா நகர் 4. வேலும் வில்லும் 5. தமிழ் விருந்து 6. தமிழர் வீரம் 7. தமிழின்பம் 8. ஆற்றங்கரையினிலே 9. வழிவழி வள்ளுவர் 10. வேலின் வெற்றி 11. கடற்கரையினிலே போன்ற பதினொரு நூல்களைக் கட்டுரை இலக்கிய நூல்களாகக் கூறலாம். 'தமிழின்பம்' என்ற நூலில் மேடைப் பேச்சு, இயற்கை இன்பம், காவிய இன்பம், கற்பனை இன்பம், அறிவும் திருவும், மொழியும் நெறியும், இருமையில் ஒருமை, பாரதியார் பாட்டின்பம் எனும் எட்டுப் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிகளிலும் ஐந்து கட்டுரைகள் வீதம் நாற்பது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. பாரதியாரின் கவிதைகள் நெஞ்சத்தை நெகிழ வைத்தமையால் அக் கவிதைகளைத் திரும்பத் திரும்பப் பாடி ராபி. சேதுப்பிள்ளை இன்புற்றார். இதன் வெளிப்பாடாகக் கலையின் விளக்கம், செந்தமிழ் நாடு, முப்பெருங்கவிஞர், பண்டாரப் பாட்டு, தமிழ்த்தாய் வாழ்த்து முதலிய பல தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதினார்.

பாரதியாரின் 'செந்தமிழ் நாடு' என்ற தலைப்பில் அமைந்த பாடலை அரசியல் மேடைகளில் பாடக் கேட்டு, தாமும் படித்தும் இன்புற்றார். மேலும், **திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம்** என்ற மூன்று நூல்களையும் கற்றுப் பல கட்டுரைகள் எழுதினார். 'வீரமாநகர்' எனும் நூலில் இலங்கை

மாநகரின் சிறப்பையும், இராவணனின் இயல்புகளையும் விளக்கும் சிறந்த கட்டுரை திகழ்கின்றது.

தமிழகத்தின் கடல் மாட்சிகளையும் கலை மாட்சிகளையும் ஒருவாறு விளக்கும் நோக்கத்துடன் எழுந்தவை **தமிழக அலையும் கலையும்** என்ற நூல். இதில் இருபத்தொரு கட்டுரைகள் அடங்கியுள்ளன. சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு என்ற மூன்று கட்டுரைகள் இலங்கை வானொலி நிலையத்தில் பேசப்பட்டவை. புதுவை மாநகரம், மதுரை மாநகரம், திருக்குறள் எல்லீசர் உரை, மேடைப்பேச்சு, கொச்சைத் தமிழ், ஒலிச்சித்திரம், ஆடையும் அணியும், நறுமணம் போன்ற கட்டுரைகள் சென்னை வானொலி நிலையத்தில் பேசப்பட்டவை. 'சென்னை கடற்கரை' என்ற கட்டுரை கல்கித் தீபாவளி மலரில் வெளிவந்தது. 'பரங்கியர் போன வழி' என்ற கட்டுரை ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளிவந்தது.

'மேலைநாட்டு அறிஞரின் கலைத் தொண்டு' என்ற கட்டுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு மலரிலும், 'நான் கண்ட சோழவந்தான்' என்ற கட்டுரை சுதேசமித்திரன் பொங்கல் மலரிலும், 'கலைச்சொல்லாக்கம்' என்ற கட்டுரை கோவையில் நிகழ்ந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் சாரமாகவும் அமைந்துள்ளன. சென்னை விலங்ககம் நூற்றாண்டு விழா, திருச்செந்தூர், நீலகிரிச் செல்வம், 'என்றுமுள தென்தமிழ்' வள்ளுவரும் பாரதியாரும் என்ற கட்டுரைகள் இதழ்களுக்காக எழுதியவையாகும்.

'வள்ளுவரும் பாரதியாரும்' என்ற கட்டுரையில் வள்ளுவரின் கருத்துக்களைப் பாரதியார் எவ்வாறு எடுத்தாண்டுள்ளார் என்பதனை எடுத்துக்காட்டுகிறார்.

'வழி வழி வள்ளுவர்' என்ற நூலில் சிலப்பதிகாரத்திலே வள்ளுவர், மணிமேகலையிலே வள்ளுவர், சிந்தாமணியிலே வள்ளுவர், கம்பராமாயணத்திலே வள்ளுவர், பாரதியார் கவிதையிலே வள்ளுவர் என்ற ஐந்து கட்டுரைகள் எழுதியுள்ளார். 'சிலப்பதிகாரத்திலே வள்ளுவர்' என்ற கட்டுரையில் காவிரி நாடு, வாணிக வளம், நகரச்சிறப்பு, இன்ப வாழ்க்கை, மாலைப்பொழுது, பழுதுற்ற மனையறம், கண்ணகியின் கண்ணீர், வீரக்கற்பு, இறையும் முறையும், கொலைத் தண்டனை, வினைப்பயன், கற்பின்

பெருமை, மானவீரம், அறவுரை போன்ற கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

'மணிமேகலையிலே வள்ளுவர்' என்ற கட்டுரையில் பொது மாதரும் குலமாதரும் என்ற பகுதியில் பொது மாதரைப் பரத்தையர் என்றும் விலைமாதர் என்றும் கூறுவதுண்டு. அவரைப் பொருட்பெண்டிர் என்றார் வள்ளுவர். பொருளையே குறிக்கோளாகக் கொண்டவர் என்பது அச்சொல்லின் பொருள். அவருடைய தொழிலை மணிமேகலை விளக்கிக் கூறுகின்றது என்கிறார்.

'சிந்தாமணியிலே வள்ளுவர்' என்ற கட்டுரையில் புதல்வர் தரும் புகழ், காலமும் இடமும், மனத்திண்மை, ஆண்மையின் அழகு, இறையொளி, அமைச்சரும் ஒற்றரும், பொருளின் திறம், அறஞ்செய்யும் காலம் போன்ற இடங்களில் திருத்தக்கதேவர் திருக்குறளின் கருத்துக்களை எடுத்தாண்டுள்ளார்.

'பாரதியார் கவிதையிலே வள்ளுவர்' என்ற கட்டுரையில் வல்லரசும் நல்லரசும் என்ற பகுதியில் நல்லரசின் செம்மையையும், வலலரசின் கொடுமையையும் விரித்துக் கூறுகின்றது திருக்குறள். அன்பினால் அரசாள்வது நல்லரசு. அச்சுறுத்தி அரசாள்வது வல்லரசு.

**கூழும் குடியும் ஒருங்கிழக்கும்; கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு**

என்றார் வள்ளுவர். மேலை நாட்டில் ஜார் என்னும் கொடுங்கோலன் செய்த ஆட்சியையும், அவன் கூழும் குடியும் ஒருங்கிழந்து வீழ்ந்த காட்சியையும் விளக்கிக் கூறுகின்றார். 'நல்லோரும் சான்றோரும் நடுங்கி ஒடுங்கினர்;' பேச்சுரிமையற்ற அந்நாட்டில் இம்மென்றால் சிறைவாசம்; ஏன் என்றால் வனவாசம்; இத்தகைய வல்லரசுக்கு அழிவு வந்தது. இமயமலை கவிழ்ந்தது போல் விழுந்து ஒழிந்தான் ஜார் அரசன்; அன்றே முடியரசு ஒழிந்தது; குடியரசு எழுந்தது என்று பாரதியார் பாடும் கவிதையில் வல்லரசு நில்லாது என்னும் திருவள்ளுவர் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

'சாதிவேற்றுமை' என்ற பகுதியில் இவ்வுலகில் வாழும் மாந்தர் அனைவரும் ஒரு குலம் என்பது திருக்குறளின் அடிப்படையான கருத்துக்களுள் ஒன்று என்கிறார்.

'பெண்ணடிமை' என்ற பகுதியில் பெண்குலத்தில் உரிமைகளைப் பேணிப் பாதுகாத்த ஆன்றோர்களில் தலைசிறந்தவர் திருவள்ளுவர். இல்வாழ்க்கையில் ஆணுக்குத் துணை புரிபவள் பெண். ஆதலால் மனையாளை வாழ்க்கைத் துணை என்று திருக்குறள் குறிக்கின்றது என்கிறார்.

'கம்பராமாயணத்திலே வள்ளுவர்' என்ற கட்டுரையில் இல்லறம் என்ற பகுதியில் பெண்களை இல்வாழ்க்கையில் இல்லாள் என்றும், மனையாள் என்றும் விளக்கம் அளிக்கப்படும்; பெண்களுக்குச் சிறந்த உரிமையும் கடமையும் உண்டு. வாழ்க்கைத் துணையாகக் கொண்ட கணவனையும், வந்த விருந்தினரையும் பேணி உபசரிப்பவள் பெண் என்கிறார்.

> அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்
> விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்
> மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
> இருந்த மாநிலம் செல்லரித் திடவும் ஆண்டு எழாதாள்.

என்று கம்பர் பாடிய பாடலில் கணவனையும், விருந்தினரையும் பேணும் கடமையுடையவள் பெண் என்ற கருத்து நன்றாக விளக்கப்படுகிறது.

### ரா.பி. சேதுப்பிள்ளையின் வெளிவராத பிற கட்டுரைகள்

பேராசிரியர் ந. சஞ்சீவி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் என்னும் நூலில், பேராசிரியர் சேதுப்பிள்ளையவர்கள் எழுதிய பெருந்தமிழ்த் தொண்டு - ஓர் ஆய்வு என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. அக்கட்டுரையின் பின்னிணைப்பில் ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய நூல்கள் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாகிய கிழக்குலகக் கலை ஆய்வு மலர், கலைக்களஞ்சியம், பல்வேறு சிறப்பு மலர்கள் ஆகியவற்றில் எழுதிய கட்டுரைகள், அனைத்திந்தியக் கிழக்குலகக் கலை மாநாட்டில் நிகழ்த்திய ஆராய்ச்சி உரைகளின் தலைப்புக்கள், அவர் பங்கு கொண்டு பணியாற்றிய வல்லுநர் குழுக்கள், அவரிடம் ஆய்வு செய்து பட்டம் பெற்றோர் விவரங்கள், அன்னை சொர்ணாம்பாள் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், அவரது நூல்களுக்கு அணிந்துரை வழங்கியவர்கள், அவரைப் பற்றிய இதழ்ச் செய்திகள், அவர் தம் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவற்றைக் கால வரிசைப்படி தொகுத்துப் பட்டியல்களாக வெளியிட்டுள்ளனர்.

ரா.பி. சேதுப்பிள்ளை ஆனந்தபோதினி, குமரன் என்னும் இரண்டு இதழ்களில் எழுதிய இலக்கியக் கட்டுரைகளைத் தொகுத்து, ஆனந்த குமரன், பன்னிரு கட்டுரைகள் என்ற இரண்டு நூலாக வெளியிட்டுள்ளார். இவை பேராசிரியர் ந.சஞ்சீவி தொகுத்துத் தந்துள்ள நூற்பட்டியலில் இடம் பெறவில்லை. இவ்விரண்டு நூல்களில் இடம்பெற்ற கட்டுரைகளில் பல பிற்காலத்தில் ரா.பி. சேதுப்பிள்ளை வெளியிட்ட 'தமிழ் இன்பம்' போன்ற நூல்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதனால் இவ்விரண்டு நூல்களும் பிற்காலத்தில் மீண்டும் பதிப்பிக்கப்படவில்லை. இவற்றில் இடம் பெற்றுப் பிற்காலத்தில் வெளியிடப்பட்ட வேறு நூல்களில் சேர்த்துக் கொள்ளப்படாத கட்டுரைத் தலைப்புக்கள் மட்டுமே இங்குத் தரப்படுகின்றன. ஆனந்த போதினி, செந்தமிழ்ச் செல்வி ஆகிய இதழ்களிலும், பல சிறப்பு மலர்களிலும் ரா.பி. சேதுப்பிள்ளை எழுதிய சில கட்டுரைகளைப் பற்றிய விவரங்களும் இங்குக் குறிக்கப்படுகின்றன.

பிற நூல்களில் சேர்க்கப்பட்டவை போக ஆனந்தக்குமரனில் எஞ்சியுள்ள கட்டுரைகள்; தென்மலையும் வடமலையும், புகலிப்பிள்ளையும் மதிலைப் பொன்னும், கலிங்கப்போர், நச்சுக்கண் நாகம், திருவாசகம் என்னும் தேன், முந்நாடும் முத்தமிழும், கொக்கு வேட்டை, குறத்தியும் குறியும், பள்ளரும் பள்ளியரும், நல்லாரிணக்கம், வீரமும் சீலமும் என்ற பதினொரு கட்டுரைகளும், செவிச்சுவையும் கவிச்சுவையும், செஞ்சொற் சதங்கை, தவழும் புகழ், பந்து விளையாட்டு என்ற நான்கு கட்டுரைகளும் எந்த நூலிலும் இடம்பெறவில்லை.

**ஆனந்தபோதினி இதழில் எழுதியவை**

| கட்டுரை எழுதிய காலம் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| ஜூன் 1931 | நனவோ கனவோ | 10-12 |
| ஆகஸ்ட் 1931 | சான்றோர் அணி | 97-99 |
| செப்டம்பர் 1931 | ஊர்ப்பெயர்களின் உருத்திரிதல் | 170-172 |

| கட்டுரை எழுதிய காலம் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| அக்டோபர் 1931 | கலைமகள் வழிபாடு | 273-276 |
| நவம்பர் 1931 | கொற்கைப் பெருந்துறை | 331-334 |
| டிசம்பர் 1931 | தமிழ் அகராதியின் வரலாறு | 449-451 |

| கட்டுரை எழுதிய காலம் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| ஜனவரி 1932 | வீரமாமுனிவர் | 489-491 |
| பிப்ரவரி 1932 | மொழிநூல் புலவரும் முதன்மொழியும் | 608-611 |
| மார்ச்சு 1932 | பழைய மொழியும் புதிய ஒளியும் | 689-693 |
| ஏப்ரல் 1932 | திருவள்ளுவரும் மேலைநாட்டு மொழிகளும் | 774-777 |
| மே 1932 | சிலம்பொலி | 851-853 |
| ஜுன் 1932 | அருந்தமிழ் ஆற்றல் செந்தமிழ்ச் செல்வி | 913-916 |

| தொகுதி எண் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 5 1927-28 | கழுகின் காவலன் | 142-146, 275-279, 333-339 |
| 5 1927-28 | தாரை | 482-486 |
| 17 1939-40 | வியாசம் | 287-291 |

## சிறப்பு மலர்களில் எழுதிய கட்டுரைகள்

| காலம் | மலரின் பெயர் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1942 | தேசிகர் நினைவு | அன்றும் இன்றும் | 6-7 |
| 1943 | திரு.வி.க. மணிமடல் | பரணிப்போர் | 57-64 |
| 1952 | சீவக சிந்தாமணி | இருபெருங்கவிஞர் | 228-234 |

மேலே குறிப்பிடப்பட்ட கட்டுரைகள் இன்னும் நூல்களாக வெளிவரவில்லை.

## திறனாய்வு நூல்

"உலகில் சிறந்ததென்று உணர்ந்து சிந்திக்கப் பெறுவதைத் தன்னலமற்ற முறையில் அறிந்து பரப்புவதற்கு முயற்சி செய்வது"[3] திறனாய்வு என மேத்யு ஆர்னல்டும், "இலக்கியம் சிறந்ததா அல்லது குறையுடையதா என்பதைக் காண்பதே"[4] திறனாய்வு என விக்டர் யூகோவும் கூறுவதைக் கருத்தில் கொண்டு, இளம் பருவந் தொட்டே தம் அறிவை வளமாகப் பெருக்கி வந்த சேதுப்பிள்ளை நெல்லை மாநகரில் வழக்கறிஞராகப் பணியாற்றிய நாளிலேயே இலக்கியத் திறனாய்வில் ஈடுபட்டார். திருக்குறள், கம்பராமாயாணம், சிலப்பதிகாரம் என்னும் முப்பெரு நூல்களையும் பலகாலம் பயின்று அவற்றின் நயங்களையெல்லாம் நன்றாகக் கண்டுணர்ந்தார். அந்த ஆராய்ச்சியின் பயனாக முதன் முதலாக, 'திருவள்ளுவர் நூல் நயம்" என்ற திறனாய்வு நூலைப் படைத்தார். இந்நூலின் மாண்பையும் ரா.பி. சேதுப்பிள்ளை காட்டியுள்ள திறனாய்வுத் திறத்தையும் கண்ட பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை முன்னுரையில் குறிப்பிட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது.

> "உலகெலாம் உய்யுமாறு பொதுமறை வகுத்த ஆசிரியர் திருவள்ளுவனாரது அளப்பரிய மாண்பினைப் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும், இந்நாள் வரை பொது வகையாற் பலபடப் பாராட்டிச் சீராட்டிப் போந்தனர். ஆசிரியரது நூலின் பிண்டப்பொருளை நுணுகி ஆய்ந்து அதன் சொற்பொருள் நயங்களை யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் தெள்ளென வகுத்தோதி ஊக்கமூட்டும் செவ்விய உரைநடைநூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்த பெரும் புலவர் 'இத்திருவள்ளுவர் நூல்நயம்' எழுதிய திருவாளர் சேதுப்பிள்ளையே ஆவார். திருக்குறள் பெருநூலை நன்கு கற்றாய்ந்து உணர விரும்பும் மாணவர் யாவருக்கும் அந்நூல் சொற்பொருள் வளப் பண்டசாலைக்கு நயமிக்க தொரு திறவுகோலாக இவ்வுரைநடைச் செந்தமிழ்ச்

> சீரிய நூலை இயற்றிய தமிழ்வாணர்க்குத் தமிழ் உலகம் என்றும் கடப்பாடுடையது"[5]

எனப் பாராட்டியுள்ளார். திருவள்ளுவர் நூல்நயம் என்ற நூல் 1. திருவள்ளுவர் பெருமை 2. திருக்குறள் பொது நூல் 3. அறத்தின் திறம் 4. அரசியல் முறை 5. இன்பஇயல் 6. திருக்குறள் உவமைத்திறம் 7. திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்று ஏழு இயலாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. 'திருவள்ளுவர் பெருமை' என்ற முதல் இயலில் தொல்காப்பியர், சேக்கிழார் போன்றவர்களின் பெயர்களைப் போலவே திருவள்ளுவர் என்ற பெயரும் குடிப்பிறப்பால் வந்தது என்பதனை ஆதாரத்துடன் தெளிவுபடுத்துகிறார். திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும், எல்லாக் காலத்திற்கும், எல்லாச் சாதியாருக்கும் பொதுவான நூல் என்பதனைப் பல மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டியுள்ளார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களுக்கும் அடிப்படையாயுள்ள அறத்தின் திறத்தை ஆசிரியர் விளக்கிய நலம் கலக்கமற்ற தெளிவுடையதாகும். மனமொழி மெய்களால், உடன்பாட்டானும் எதிர்மறையானும் குற்றமற்று ஒழுகுதலே அறத்தின் நியதியெனக் குறிப்பிட்டு அத்தகைய அறச்சால்பு இல்லறம், துறவறமென்னும் இருநிலைக்கும் அடிப்படை என்பதையும் எடுத்தியம்பியுள்ளார்.

வள்ளுவர் வகுத்த பண்டைத் தமிழகத்தின் அரசியல் முறையினை ஆராயப்புகுந்து பழந்தமிழர்களின் உயர்ந்த அரசியற் கொள்கையினையும் ஐம்பெருங்குழு எண்பேராயம் போன்ற அரசியற் பேரவைகள் அமைத்துப் பணிசெய்த பான்மையினையும் அக்காலத்திய வாணிக வளத்தையும் நாட்டு மக்கள் கல்வி மானம் முயற்சி சால்பு பண்பு முதலியவற்றால் தழைத்தோங்கி இருந்த தகைமையினையும் அவருள் வேளாளர் தலைநின்ற செய்தியையும்கூறி நாட்டின் பெருமைக்கு நற்குடிகளே காரணமானவர் என்பதனைப் பண்புற வலியுறுத்தியுள்ளார்.

இன்ப இயலில் அதன் உண்மையான இயல்பை முன்னைய நூல் முறையில் முதலில் விளக்கினார். களவியல், கற்பியல் துறைகளையெல்லாம் பொற்புறக் கோவை செய்து விளக்கிச் சிற்றின்ப நெறி நின்று பேரின்ப வழிச்செல்லும் பெற்றியினை அப்பகுதியின் இறுதியில் விளக்கியுள்ளார்.

இவ்வாறு ஐந்து இயல்களில் திருவள்ளுவர் நூலின் பொருள் நயங்களைத் தொகுத்தும் வகுத்தும் கூறிய ஆசிரியர் அவர் எடுத்தாளும் சொற்களின் நயத்தை விளக்குவதற்குத் திருக்குறள் உவமைத் திறத்தை ஆராய்ந்துள்ளார். முதலில் உவமை இயல்பினைத் தெளிவுற விளக்கிப் பின்னர் எளிய உவமை இயல்பினை நயந்தோன்றுமாறு உவமையாக வழங்கும் வள்ளுவர் திறத்தையும், அவரது இணையிலா இயற்கைப் பொருள் ஆராய்ச்சி நலத்தையும் ஏற்ற எடுத்துக்காட்டுக்களால் விளக்கியுள்ளார்.

திருக்குறள் நூல் நயத்தின் இறுதியில் அமைந்த திருவள்ளுவரும் பரிமேலழகரும் என்னும் பகுதி திருக்குறளை புதிய புதிய கண்ணோட்டத்தில் காணச் செய்யும் பொன்னுரையாகும். திருக்குறளுக்குப் பத்துப்பேர் எழுதிய உரைகளில் பரிமேலழகர் உரையே சிறந்தது எனப் போற்றப்பட்டாலும் 'தெள்ளு பரிமேலழகர்செய்த உரையிலும் சில குறைபாடுடையது' என நயமாக எடுத்துக்கூறிய விதம் கற்றோர் உள்ளத்தைக் கனியவைப்பதாக அமைந்துள்ளது.

'மக்கட்பேறு' என்னும் அதிகாரத் தலைப்பைப் 'புதல்வரைப் பெறுதல்' எனவும் 'அறிவறிந்த மக்கள்' என்பதற்கு 'ஆடவர்' என்றும் பொருள் கொண்டு முழுமுதல் தமிழ் நூலாகிய திருக்குறளுக்கு வடநூல் மதம் பற்றி உரை வகுத்தும், தமிழ்நூல் முறையை உலகம் அறியா வண்ணம் மறைத்தும், தம் கொள்கைக்கு இயைய நூலாசிரியர் கருத்துக்கு முரணாகப் பொருள் கொண்டும் வகுத்த பரிமேலழகர் உரை முற்றிலும் நல்லுரையென்று சொல்லமுடியாது என்பதனை ஆசிரியர் நடுநிலையோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

## சிலப்பதிகார நூல் நயம்

சேதுப்பிள்ளையின் செந்தமிழ் ஆய்வுத்திறனை விளக்கும் மற்றொரு நூல் சிலப்பதிகார நூல் நயம். சிலம்பு எனும் காவியத்தை விரும்பிக் கற்கப் புகுவார்க்குக் கலங்கரை விளக்காகத் திகழ்கிறது. இந்நூலில், 1. ஆசிரியர் பெருமை 2. அரச நீதியும் அரசியலும் 3. ஆரிய அரசரும் தமிழரசரும் 4. கண்ணகியின் கற்பின் திறம் 5.வினைப்பயன் 6. பண்டைத் தமிழ் மக்கள் நாகரிகம் 7.சிலப்பதிகார நூல் நயம் என்னும் ஏழு தலைப்புக்களில் ஆசிரியர் ஆராய்ந்துள்ளார். இறுதிக்

கட்டுரையாகிய சிலப்பதிகார நூல் நயம் என்பது இந்நூலின் மணிமுடியாக விளங்கிச் சிலம்பின் சீரிய நலங்களையெல்லாம் விளக்கி நிற்கிறது.

இந்நூலின் முதற் கட்டுரையில் உள்ள ஆசிரியர் பெருமை என்பதில் இளங்கோவடிகளின் புலமை புலனாகிறது. இளங்கோவடிகள் துறவியாயினும், தமிழகத்தின் தன்மையையும், தமிழரசின் முறைமையையும் நன்கு அறிந்திருந்தார்; அவர் நூலிலுள்ள அகச்சான்றுகளால் அவர் சமண சமயத்தினரே என்பது புலனாகும்; தமிழ்ப்பற்று, திருக்குறள் பற்று முதலிய பண்புகளில் சிறந்து விளங்கினார்.

தமிழ்நாட்டு அரசியல் மாண்பையும், அரசர்கள் கையாண்ட நீதியையும், மனு நீதிச் சோழன், சிபிவேந்தன், பொற்கைப் பாண்டியன், பாண்டியன் நெடுஞ்செழியன் போன்ற மன்னர்களின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். புகார் நகரத்தில் அன்று விளங்கிய பாவை மன்றத்தின் தன்மையினை விளக்கித் தமிழகத்தில் நீதி நிலைத்த விதத்தை எடுத்துக்காட்டியுள்ளார். அரசியலில் இடம் பெற்றிருந்த ஐம்பெருங்குழுவினராகிய அமைச்சர், படைத்தலைவர், காலக்கணிகர், தூதர், ஒற்றர்களின் இயல்புகளையெல்லாம் எடுத்துரைத்துள்ளார்.

'ஆரிய அரசரும் தமிழ் அரசரும்' என்னும் மூன்றாவது கட்டுரையில் கரிகால் வளவனது அருஞ்செயலையும், சேரன் செங்குட்டுவனது செயல் மாண்பையும், அவன் கனக விசயராகிய வடநாட்டு வேந்தரையும் பிறரையும் வென்ற வீரச் செயலையும் அவன் தன் படை வீரர்களைப் பாராட்டிய மனப்பான்மையையும் விளக்கியுள்ளார்.

கண்ணகியின் கற்பின் திறம் என்னும் நான்காவது கட்டுரையில் 'உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்' என்னும் உண்மையினைக் கண்ணகியின் கற்புடைய வாழ்வில் வைத்துக் காட்டும் கவிஞரின் அருந்திறனையெல்லாம் நடுநிலைமையோடு எடுத்துக்காட்டியுள்ளார்.

இறுதிக் கட்டுரையாகிய சிலப்பதிகார நூல்நயம் சிலம்பின் நலம்பெறு சிறப்பையெல்லாம் நயம்பட விளக்கும் பகுதியாகும். ஆசிரியர் இப்பகுதியில் சிலப்பதிகாரம் முத்தமிழ்க்

காப்பியமாக விளங்கும் சிறப்பைத் தெளிவுற விளக்கியுள்ளார். இளங்கோவடிகள் தம் காவியத்திற்குச் சிலப்பதிகாரம் என்று பெயரமைத்த பெருமையினை விரிவாக ஆராய்ந்து விளக்குகின்றார். துன்பியல் நாடகத்தை (Tragedy) இன்பியல் நாடகமாக (Comedy) முடித்துக் காட்டும் நூலாசிரியரின் நுண்ணறிவைப் பாராட்டுகின்றார். இந்நூலின் அகவற்பா நடை காவியத்தைக் கவினுறச் செய்வதென்றும் அதிற் காணப்பெறும் வருணனைகள், சிலப்பதிகார இசைப் பாக்கள் சிந்தைக்கும் செவிக்கும் இன்பமூட்டுவன என்றும் அவலம், வீரம், இன்பம், நகை முதலிய சுவைகள் காணப்படுகின்றன என்றும் விளக்கியுள்ளார்.

## ஆராய்ச்சி நூல்

பேராசிரியர் சேதுப்பிள்ளை தமிழகத்திற்குப் படைத்துப் பேரிலக்கியமாய் (Master piece) வழங்கிய உரைநடை நூல்கள் பதினேழு. இப் பதினேழில் வாழ்க்கைப் பெருநூலாய் (Life work) முற்றிமுதிர்ந்த ஆராய்ச்சிப் போக்கில் சிறப்பாகக் காணப்படும் நூல் **தமிழகம்-ஊரும் பேரும்** என்னும் தலையாய தமிழ் நூலாகும். இந்நூல் தமிழகத்து முன்னோர் தாம் வாழ்ந்த ஊர்களுக்கு அழகிய பெயர்கள் அமைப்பதில் மேற்கொண்ட கொள்கைகளை விளக்குவதாகும். ஊர்களின் பெருமை, வரலாற்று அருமை, இயற்கைச்சூழல் முதலிய உண்மைகளைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் இனிது விளக்குகின்றது.

இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞராகிய ஹட்சன் என்பார் 'இலக்கியக் கல்விக்கு அறிமுகம்' என்னும் பொருள் பற்றி ஆங்கிலத்தில் அரியதொரு நூல் எழுதியுள்ளார். அவற்றில் உண்மையாகவே உயர்ந்த ஒரு பெருநூலுக்குரிய இலக்கணம் என்னவென்பதைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

> "ஏதேனும் ஒரு பொருளைப் புதியதாகவும் சொந்தமாகவும் புகழுவதாய் அமைய வேண்டும்; அவ்வாறு புகழ்வதையும் புதிய முறையிலும் தனக்கே உரிய தனிப்பாணியிலும் ஆசிரியன் பேசவேண்டும்"

என்று அப்பேரறிஞர் கூறியுள்ளார். இவ்விலக்கணத்திற்குச் சிறந்ததோர் இலக்கியமாகச் சேதுப்பிள்ளையின் நூல்கள் காணப்பட்டாலும் 'தமிழகம்-ஊரும் பேரும்' என்ற நூல் ஒருபடி மேலே சிறப்புற்றுக் காணப்படுகிறது.

"ஆசிரியர் நிலம், மலை,' காடு, வயல், ஆறு, கடல், நாடு, நகரம், குடி, கோ, தேவு தலம் முதலியவற்றை அடியாக் கொண்டு, இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர்பேர் ஆராய்ச்சியும் ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புக்களும் பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெரு விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ்நாட்டில் சில ஊர்ப்பெயர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதல் நிலையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந்நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை. இந்நூலுள் பொலிதரும் சில ஊர்ப்பெயர்களின் வரலாறு சாம்பியும் சோம்பியும் நலந்தும் மெலிந்தும் கிடக்கும் நம் மக்களுக்கு அமிழ்தாகிப் புத்துயிர் வழங்கல் உறுதி. நூலின் நடைக்கண் நடம்புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் கவலையை நீக்கி அதன்மாட்டு வேட்கையை எழுப்பி அதை ஊக்குவனவாகும்"[6] என்று இந்நூலினைச் சிறப்பித்துத் திரு.வி.க. புகழ்கிறார்.

## ரா.பி. சேதுப்பிள்ளையின் ஆசிரியர் பணி

ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ் ஆற்றலைத் தெரிந்து கொண்ட கா.சு பிள்ளை அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் விரிவுரையாளராகப் பணிபுரிய உதவினார். இப்பணி சேதுப்பிள்ளையின் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தைத் தோற்றுவித்தது. கா.சு. பிள்ளைக்குப் பின் பேராசிரியர்களாகப் பணிபுரிந்த விபுலானந்தர், நாவலர் சோமசுந்தரபாரதியார் ஆகிய இருவர் தலைமையிலும் சேதுப்பிள்ளை ஆறாண்டுகள் அருந்தமிழ்ப் பணியாற்றினார். சேதுப்பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியேற்ற காலத்தில் ஒரு புதிய மாற்றம் ஏற்பட்டது. அந்நாளில் தமிழ் வகுப்புக்களையும் தமிழ்ப் பேச்சுக்களையும் கல்லூரி மாணவர்கள் புறக்கணித்து வந்தனர். அறிஞர்களும் மாணவர்களும் அளவுக்கு மிஞ்சிய ஆங்கில மோகத்தில் சூழ்ந்து கிடந்தனர். உலகிலேயே மிகவுயர்ந்த ஆங்கிலப் பேச்சாளர்களென விளங்கிய மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சி.ஆர். ரெட்டி, சத்தியமூர்த்தி போன்றவர்கள் ஆங்கிலத்தில் பெருமுழக்கம்

செய்து கொண்டிருந்த காலம் அது. சேதுப்பிள்ளை பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பணியேற்ற சில திங்களில் ஆங்கிலத்தின் கை தாழ்ந்தது; தமிழின் கை ஓங்கத் தொடங்கியது. இதற்குக் காரணம் சேதுப்பிள்ளையின் சிறந்த நாவன்மையே ஆகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேதுப்பிள்ளை பணியாற்றிய காலத்தில் தமிழகத்தின் தலைசிறந்த நல்லறிஞரான பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், துறைசை ஆதீனப் புலவர் பொன்னோதுவார், சர்க்கரை இராமசாமிப் புலவர், சோழவந்தான் கந்தசாமியார் போன்ற புலவர் பெருமக்களுடன் தமிழ்ப் புலமை நடத்தும் நற்பேறு பெற்றார். 1931 ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆனர்ஸ் வகுப்புத் தொடங்கப்பட்டது. இவ்வகுப்பிற்குக் 'கம்பராமாயணமும் மொழிநூலும்' என்ற தலைப்பில் கற்பிக்கும் வாய்ப்பினைப் பெற்றார் சேதுப்பிள்ளை. வகுப்பில் மாணவர் எழுவராக இருந்தாலும் அவருடைய சொற்பொழிவில் எந்த நாளும் உற்சாகம் குன்றாமல் எழுநூறு மாணவர்கள் இருப்பது போன்று ஆரவாரமாக நடத்துவார். அந்நாளில் ஆனர்ஸ் வகுப்பு மாணவர்கள் மொழி நூலை ஆங்கிலத்தின் வாயிலாகவே கற்றனர். அவர்கள் பல்கலைக் கழகத் தேர்விலும் ஆங்கிலத்தில்தான் விடையெழுத வேண்டும். அதனால் மொழிநூலைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அவ்வகுப்பில் ஆங்கிலத்திலும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினார். இதன் விளைவாகச் 'சொல்லும் பொருளும்' (Words and their significance) என்ற ஆங்கில நூலை எழுதினார்.

ரா.பி. சேதுப்பிள்ளை வகுப்பு நடத்துவதைச் சொற்பொழிவாகவே கருதி நடத்தக்கூடியவர். வகுப்பில் நடத்தும் தமிழ் இனிமையை அறிந்த ஆங்கிலப் பேராசிரியர் சுந்தரம், சேதுப்பிள்ளையின் கரத்தைப் பற்றிக் குலுக்கி, "அன்பர் சேதுவே! தமிழ் என்றால் இளமை! இனிமை! என்று இயம்புகின்றார்கள்; அது பற்றுக் காரணமாகக் கூறும் வெற்றுரையென்றே நான் இதுகாறும் எண்ணியிருந்தேன்; இன்று தங்கள் தமிழ்ப்பேச்சைக் கேட்ட பிறகுதான் தமிழ் இனிமையென்பது முற்றிலும் உண்மையெனக் கண்டேன். இன்றுமுதல் நானும் நற்றமிழ் நூல்களைக் கற்று இன்புறுவேன்" என்று மகிழ்ச்சி பொங்க உள்ளன்புடன் பாராட்டினார். அன்று சிலம்புச் சொற்

பொழிவுக்குத் தலைமை தாங்கிய பேராசிரியர் விபுலானந்த அடிகளார், "முன்பு சேரன் தம்பியாகிய இளங்கோ சிலப்பதிகார நூலைப் பாடினார். இன்று என் அருமைத் தம்பியாகிய சேதுப்பிள்ளை சிலம்பின் ஒலி எல்லோருடைய சிந்தையிலும் செவியிலும் ஒலிக்குமாறு செய்தார்"[7] என்று மனமுவந்து பாராட்டினார். இவ்வாறு ரா.பி. சேதுப்பிள்ளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மணம் பரப்பி வந்து பிறகு சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1936 ஆம் ஆண்டில் தலைமைத் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். அந்நாளில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பணியாற்றி வந்தார். சேதுப்பிள்ளை பணியேற்ற ஓராண்டிலேயே தமிழ் ஆய்வுத் துறையின் துணைத்தலைவராகப் பணிபுரியும் உயர்வு கிடைத்தது. அதனால் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளைக்குப் பெருந்துணையாக இருந்தது. அவர் தொகுக்கத் தொடங்கிய தமிழ்ப் பேரகராதிப் பணியினை இனிது செய்து முடித்தார்.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை ஓய்வு பெற்ற பின்னர் ரா.பி. சேதுப்பிள்ளை தலைமைப் பதவியினையேற்றார். அதன் பயனாகப் பல தமிழ் நூல்களை ஆராய்தற்குரிய அரிய வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. தமிழ் நூல்களை நுணுகி ஆராய்வதிலேயே பேரின்பம் கண்ட சேதுப்பிள்ளைக்கு அப்பணி மேலும் பலனளித்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் பிற மொழித் துறைகளுக்குப் பேராசிரியப் பீடம் அமைந்திருந்தது. ஆனால் தமிழ் மொழிக்குப் பேராசிரியப் பீடம் இல்லாதது குறையாகியிருந்தது. இதனைப் போக்கப் பல வகையில் சென்னையில் முயற்சி செய்து முடிவில் சென்னையில் வாழ்ந்த கிறித்துவத் தமிழ்ப் பேறறிஞர் ரெவரண்ட் லாசரஸ் என்பவருடைய பெயரில் அவருடைய மகள் தொடங்க முன் வருவதை அறிந்த ரா.பி. சேதுப்பிள்ளை மகிழ்ச்சியடைந்தார்.

ரா.பி. சேதுப்பிள்ளை சென்னைக்கு வந்த சில ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், தமிழ் ஆனர்ஸ் வகுப்பு தொடங்கப் பெற்றது. சென்னையிலும் பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளிலும் அவ்வகுப்பு நடைபெற்றது. பின்பு தமிழ் எம்.ஏ., பட்ட வகுப்பும் நடைபெற்றது. இவ்வகுப்புக்களில் பயின்ற மாணவர்களுக்குப் பேராசிரியர் சேதுப்பிள்ளையின் சுவையான சொற்

பொழிவுகளைத் தொடர்ந்து கேட்கும் அரிய வாய்ப்பு கிட்டியது. தமிழ் ஆராய்ச்சித் துறையில் பட்டம் பெறுவதற்காக அவர் தலைமையில் ஆய்வு நிகழ்த்திய தமிழ் மாணவர்க்கும் அவருடைய தமிழ்ப் புலமை ஆரப் பருகும் சீரிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அவர் தலைமையின் கீழ்த் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி நிகழ்த்திய மாணவர் பலர் எம்.லிட், பட்டமும் டாக்டர் (பிஎச்டி) பட்டமும் பெற்றிருக்கின்றார்கள்.

பேராசிரியர் சேதுப்பிள்ளை தம் பல்கலைக் கழக வாழ்க்கையில் மொழி இலக்கிய நலம் கருதி நிபுணர் குழுவின் உறுப்பினராக இருந்து அரும்பணியாற்றினார். அனைத்திந்தியக் கீழைக்கலை ஆராய்ச்சிக்காகப் பல்வேறிடங்களில் கூடிய ஏழு மாநாடுகளில் கலந்து தமிழ்க்கலைகளைப் பற்றிய அரிய கருத்துக்களைப் பன்னாட்டு நல்லறிஞர்களும் தெரியுமாறு விரிவுரையாற்றி வந்தார். 1937 முதல் 1955ஆம் ஆண்டு வரை ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்ற அம்மாநாடுகளில் கலந்து, அவர் ஆற்றிய பணி சென்னைப் பல்கலைக் கழகத்தின் சிறப்பை நாடறியச் செய்தது. 1955ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூடிய அம்மாநாட்டில் திராவிடப் பகுதிக்குப் பேராசிரியர் சேதுப்பிள்ளையே தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

அவர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைக்கு மட்டுமன்றி இந்திய மொழித் துறைகள் அனைத்திற்கும் அருந்துணைவராயும் பெரும் வழிகாட்டியாகவும் விளங்கினார். தென்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை வளமும் உரமும் பெறுவதற்கு உறுதுணையாக இருந்து வந்தார். அவரது துணையாலும் முயற்சியாலும் பல்கலைக் கழகத்திலிருந்து இரண்டு அரிய நூல்கள் வெளிவந்தன. ஒன்று 'திராவிடப் பொதுச் சொற்கள்' (Dravidian Common Vocabulary) மற்றொன்று 'திராவிடப் பொதுப் பழமொழிகள்' (Common Dravidian Proverbs). அம்முறையில் பேராசிரியர் சேதுப்பிள்ளை சென்னைப் பல்கலைக் கழகத்தில் கால் நூற்றாண்டு ஆற்றிய அரும் பணியால் அப்பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறை விரிவடைந்தது ; உயர்வும் வளமும் உற்றது ; பல்கலைக் கழகத்தின் பெருமையும் பல்கியது. இதனால் சென்னை மாநகர் மட்டுமல்லாது செந்தமிழ் நாடுமே புத்தொளி பெற்றன.

## ஒப்பியல் இலக்கியம்

> "பொது இயல்புகளுடைய பலமொழி இலக்கியங்களையும் ஒருங்குவைத்து ஒப்பிட்டு ஆராய்ந்தால்தான் இலக்கியத்தின் உண்மைத் தன்மையை நன்கு உணர முடியும். இலக்கியத்தின் அமைப்பையும் ஆழ்ந்த உட்பொருளையும் தன்மைகளையும் சரியாக மதிப்பிடுவதற்கு இலக்கிய ஒப்பீடு இன்றியமையாததாகும்"

என்று தமிழண்ணல் கூறுவதைப் போல் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ் விருந்து என்ற நூலில் 'தமிழ் நாட்டாரும் அயல்நாட்டாரும்', 'தமிழ் மொழியும் பிறமொழியும்-மலையாளம்', 'தமிழ் மொழியும் பிறமொழியும்- தெலுங்கு', 'தமிழ் மொழியும் பிறமொழியும்-கன்னடம்', என்ற நான்கு கட்டுரைகள் உள்ளன. அவற்றில் திராவிட மொழிகளின் சொற்களையும் அவற்றின் பொருளையும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார்.

'வேலும் வில்லும்' என்னும் நூலில் அமைந்த 'கம்பரும் கச்சியப்பரும்' என்னும் கட்டுரை கம்பராமாயணத்திற்கும் கந்தபுராணத்திற்கும் உள்ள ஒற்றுமைகளை ஆராய்ந்துரைப்பதாக உள்ளது.

'தமிழ்இன்பம்' என்ற நூலில் 'ஆண்மையும் அருளும்', 'கர்ணனும் கும்பகர்ணனும்', 'காளத்திவேடனும் கங்கைவேடனும்', 'பாரதப் பண்பாடு', 'இருமலையும் தமிழ் மலையே' போன்ற கட்டுரைகள் ஒப்பீடாக உள்ளன.

ஆற்றங்கரையினிலே என்ற நூலில் அடைக்கல மாதா என்னும் கட்டுரையில் வீரமாமுனிவர் உள்ளமும் குலசேகர ஆழ்வார் உள்ளமும் இறையருளை நாடுவதில் ஒன்றுபட்டிருப்பதை அவ்விருவரின் பாடல்களைக் கொண்டு விளக்குகின்றார்.

## வாழ்க்கை வரலாற்று நூல்கள்

"ஒருவர் வாழ்வில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் அனைத்தினையும் அவற்றின் சிறப்பு தெளிவாகப் புலப்படும் படியும், காலக் குறிப்புகளுக்குப் பெருமையளித்தும் நயம்படும் படி உரைக்க வேண்டும். அப்பொழுது அவற்றினூடே வாழ்க்கை

வரலாற்றுத் தலைவர் பண்பு மிளிறும் படியும், செயல்கள் விளக்கம் பெறும் படியும், படைக்கும்பொழுது வாழ்க்கை வரலாற்றிலக்கியம் மலர்கிறது"[8] என்று ச.சிவகாமி கூறுவதைப் போல ரா.பி. சேதுப்பிள்ளை தமிழகப் பெண்மணிகள், கால்டுவெல் ஐயர் சரிதம், கிறித்தவத் தமிழ்த் தொண்டர் என்னும் மூன்று வாழ்க்கை வரலாற்று இலக்கிய வளர்ச்சிக்குத் துணைபுரிந்துள்ளார்.

'தமிழகப் பெண்மணிகள்' என்ற நூலில் ஆதிரையார், விசாகையார், மருதியார், கோப்பெருந்தேவியார், மணிமேகலையார், கண்ணகியார், புனிதவதியார், மங்கையர்க்கரசியார், திலகவதியார் போன்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளை அழுத்தம் திருத்தமாக எழுதியுள்ளார்.

'கால்டுவெல் ஐயர் சரிதம்' என்ற நூலில் கால்டுவெல்லின் இளமை, சமயப்பணி, இந்திய வருகை, தமிழ்ப்பற்று, தமிழுக்குச் செய்த தொண்டுகள் போன்ற வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை எழுதியுள்ளார்.

## மொழியியல் ஆய்வு நூல்கள்

ரா.பி. சேதுப்பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றுள் பெரும்பான்மையானவை மொழியியல் பற்றியன. அவற்றில் Words and their Significance, Dravidian Comparative Vocabulary என்னும் இரு நூல்கள் மொழியியல் அடிப்படையானவையாகும்.

தமிழ்மொழியிலிருந்து பிரிந்த மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்றவைகளை மொழியியல் அடிப்படையில் ஆய்வு செய்து தமிழ் மொழியில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லுக்குப் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதைத் 'தமிழ் விருந்து' என்னும் நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

## கவிதைத் தொகுப்பும் நூற்பதிப்பும்

ரா.பி. சேதுப்பிள்ளை தனக்குப் பிடித்த கவிதைகளைத் தொகுத்து கந்தபுராணத் திரட்டு, பாரதியார் இன்கவித் திரட்டு, செஞ்சொற் கவிக்கோவை, தமிழ்க்கவிதைக் களஞ்சியம் என்ற நான்கு நூல்களாக வெளியிட்டுள்ளார்.

பாரதியார் இன்கவித் திரட்டு என்ற நூலில் பாரத நாடு (2 பாடல்) தமிழ்நாடு ( 2 பாடல்) சுதந்திரம் (6 பாடல்) தேசிய இயக்கம் (3 பாடல்) தேசியத்தலைவர்கள் (4 பாடல்) பிற நாடுகள் (3 பாடல்) தோத்திரம் (18 பாடல்) ஞானப்பாடல் (8 பாடல்) நீதி (2 பாடல்) சமூகம் (3 பாடல்) தனிப்பாடல் (3 பாடல்) சுயசரிதை (1 பாடல்) கண்ணன் பாட்டு (10 பாடல்) குயில் பாட்டு (1 பாடல்) மொத்தம் 67 பாடல்கள் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

**தமிழ்க்கவிதைக் களஞ்சியம்** என்ற நூல் சாகித்திய அக்காதெமியால் வெளியிடப்பட்ட நூலாகும். இந்நூல் 1110 பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலின் முகவுரையில் முத்தமிழ்ப் பாகுபாடு பற்றியும், இயற்றமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வகைகள் பற்றியும் ஆய்ந்து விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. நூலின் இறுதியில் செய்யுள், முதற்குறிப்பு அகராதி, ஆசிரியர் பெயர், அகராதி, இலக்கியங்கள், புலவர்கள் பற்றிய குறிப்புரை ஆகியன இடம்பெற்றுள்ளன.

## நூற்பதிப்பு

1796ஆம் ஆண்டு சென்னை மாகாண நிலவரி மன்றத்தின் அதிகாரியாகப் பொறுப்பேற்ற ஃபிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் என்பவர் திருக்குறளில் மிக்க ஈடுபாடு கொண்டு, அதன் முதல் குறிப்பு எழுதி 1819 இல் முந்நூற்று நான்கு பக்கங்களில் அச்சிட்டார். தலைப்பு, அச்சிடப்பட்ட நாள் பற்றிய குறிப்புக்கள் இல்லாமல் இருந்த அவ்வுரையினைத் தகுந்த தலைப்புக்கள் தந்தும், குறிப்புரைகள் எழுதியும் ரா.பி. சேதுப்பிள்ளை பதிப்பித்திருக்கின்றார். நூலின் முன்னுரையில் எல்லீஸின் வாழ்க்கைக் குறிப்பு, நூல் எழுந்த வரலாறு, விளக்கவுரை எழுதப்பட்டுள்ள முறை, அதனால் வெளிப்படும் எல்லீஸின் அறிவுத்திறம் ஆகியவை விளக்கிக் கூறப்பட்டுள்ளன.

எல்லீஸ் எழுதிய உரை இருபகுதிகளாக உள்ளது. முதற்பகுதி திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களிலுள்ள சில குறட்பாக்களின் விளக்கவுரையாகவும், இரண்டாம் பகுதி ஐந்து முதல் பதின்மூன்று முடியவுள்ள அதிகாரங்களிலிருந்து தேர்ந்தெடுத்த சில குறட்பாக்களின் விளக்கவுரையாகவும் அமைந்துள்ளது.

உரைப்பகுதியில் குறட்பாவினை முதலில் எழுதி அடுத்து அதன் ஆங்கில மொழிபெயர்ப்பைத் தந்து பின்னர் விளக்கவுரை

எழுதும் போக்கினைக் காணலாம். இவ்விளக்கவுரை ஆங்கிலமும் தமிழும் கலந்ததாக உள்ளது. விளக்கவுரையின் பிற்பகுதியில் Illustrations என்று தலைப்பிட்டு, வடமொழி நூல்களிலிருந்தும் தமிழ் இலக்கியங்களிலிருந்தும் ஏராளமான மேற்கோள்களை அந்தந்த மொழியின் வரிவடிவில் தந்து அவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விளக்கியுள்ளார். பரிமேலழகரைப் பின்பற்றி எல்லீஸ் விளக்கவுரை எழுதியுள்ளார் என்று தெளிவுறுத்தியும், நூலின் இறுதியில் பல தொடர்களுக்கும் மேற்கோள் பாடல்களுக்கும் பாடபேதங்களைக் குறிப்பிட்டு விளக்கம் தந்தும் பதிப்பித்திருக்கும் பாங்கு ரா.பி. சேதுப்பிள்ளையின் நூற்பதிப்புத் திறனைப் பறைசாற்றுகிறது. இவ்வாறு மேடைப் பேச்சு, கட்டுரை இலக்கியம், திறனாய்வுப் பணி, ஆராய்ச்சி, ஒப்பியல், மொழியியல், வாழ்க்கை வரலாற்றிலக்கியம், பல்கலைக்கழக ஆசிரியர் பணி, கவிதைத் தொகுப்பும் பதிப்பும் போன்றவைகளின் மூலம் ரா.பி. சேதுப்பிள்ளையின் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினைக் காணமுடிகிறது.

### அடிக்குறிப்புகள்

1. *ரா.பி. சேதுப்பிள்ளை,* **தமிழின்பம்,** *ப.38.*
2. *மேலது, ப.86.*
3. *A.G. George,* **Critics and Criticism,** p.2.
4. Victor Hugvo, Quoted by A.G. George, **Critics and Criticism,** p.2.
5. *அ.க. நவநீத கிருஷ்ணன்,* **டாக்டர் சேதுப்பிள்ளை,** *ப.133.*
6. *ரா.பி. சேதுப்பிள்ளை,* **தமிழக ஊரும் பேரும்,** *(முன்னுரை), ப.3.*
7. *அ.க. நவநீத கிருஷ்ணன், மேலது, ப.384.*
8. *ச.சிவகாமி,* **வாழ்க்கை வரலாற்றிலக்கியம்,** *ப.41.*

# படைப்புத்திறன்

'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை தலைசிறந்த தமிழறிஞர். விழுமிய புலமையாளர். தமிழ்மொழியின் எளிமையையும் சிறப்பையும் தம்முடைய இனிய உரைநடை வன்மையால் மக்களிடம் பரப்பிய ஏந்தல். ஊர்ப்பெயர் ஆராய்ச்சியில் தலைசிறந்து விளங்கியவர். ஒரு கருத்தை எங்ஙனம் உரைத்தால் அது மக்கள் மனத்தில் பதியும் என்னும் வித்தை அறிந்தவர். தம்முடைய இனிய நூல்களால் தமிழக மக்களின் நெஞ்சங்களிலெல்லாம் நீக்கமற நிறைந்தவர்.

## படைப்புத்திறன் காணப் பயன்பட்ட நூல்கள்

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய நூல்களுள் **வேலும் வில்லும், கால்டுவெல் ஐயர் சரிதம், தமிழ் விருந்து, தமிழகம் ஊரும் பேரும், தமிழர் வீரம், வழிவழி வள்ளுவர், தமிழின்பம் கடற்கரையிலே, அலையும் கலையும், தமிழகப் பெண்மணிகள்** என்ற படைப்புக்களின் வழி ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் படைப்புத்திறன் வெளிக் கொணரப்படுகிறது.

### நூல்கள் அறிமுகம்

### 1. வேலும் வில்லும்

முருகப்பெருமானின் சிறப்பை இந்நூலில் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார். 1. முருகன் பெருமை 2. கந்தர் அலங்காரம் 3. கம்பரும் கச்சியப்பரும் 4. மூவர் தமிழும் முருகனும் என்னும் நான்கு தலைப்புகளை உள்ளடக்கி இந்நூல் அமைந்துள்ளது.

### 2. கால்டுவெல் ஐயர் சரிதம்

அயர்லாந்து நாட்டில் பிறந்து அன்னைத் தமிழின் முன்னேற்றத்திற்கு அயராமல் உழைத்தவர் கால்டுவெல் என்னும் பெருந்தகையார். தமிழர்களே தமிழ்மொழியின் பெருமையை உணராதிருந்த வேளையில் 'திராவிட மொழிகளின்

ஒப்பிலக்கணம்[1] (Comparative Grammar of Dravidian Languages) என்னும் ஒப்புயர்வற்ற நூலை இயற்றி உலக மொழிநூல் அறிஞர்களையெல்லாம் தமிழ்மொழியின்பால் திரும்பிப் பார்க்க வைத்த பெருந்தகையாளர் அவர். அதுமட்டுமன்று, திருநெல்வேலிச் சரித்திரத்தை வரன்முறையாக எழுதிய பெருமைக்குரியவரும் இப்பேரறிஞரே யாவார். இத்தகைய பெரியாரின் வாழ்வை, 1. அறிவும் அருளும் 2. பொருனை நாடும் ஏசு மதமும் 3. நாடும் நடையும் 4. பழையன கழிதலும் புதியன புகுதலும் 5.கலையின் விளக்கம் 6.பண்டைத்தமிழகம் 7. தென்னாட்டு மொழிகள் 8. பாண்டிப் பழந்துறைகள் 9. ஏற்றமும் தோற்றமும் 10. ஆங்கிலக்கல்வியும் தமிழ்க்கல்வியும் 11. மனையறமாண்பு 12. நல்லாரிணக்கம் 13. பண்பும் பயனும் 14. மூப்பும் முடிவும் 15. முடிவுரை - என்னும் பதினைந்து தலைப்புகளின் கீழ் ஆற்று நீரோட்டம் போலத் தொடர்ச்சியான சொல்லோட்டத்துடன் இந்நூல் விளங்குகிறது.

### 3. தமிழ் விருந்து

சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் உள்ள வானொலி நிலையத்தில் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பேசிய பதினெட்டுப் பேச்சுக்கள் கட்டுரை வடிவில் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மேலும் 'ஆகாய விமானம்' என்னும் கட்டுரையும், 'மணிமேகலையும் மதுவிலக்கும்' என்னும் இரண்டு கட்டுரைகள் ஆசிரியரால் சேர்க்கப்பட்டு மொத்தம் இருபது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் 'மணிமேகலையும் மதுவிலக்கும்' என்னும் கட்டுரையானது சென்னை மதுவிலக்குச் சங்கத்தின் (The Hindu Good Templars League) ஆண்டுவிழாவிற் செய்த சொற்பொழிவின் சுருக்கமாகும்.

1. கலையும் கற்பனையும் 2. புராதனப்போர் - படையெடுப்பு 3. போர்க்களங்கள் 4. ஆகாயவிமானம் 5. வாழ்க்கையும் வைராக்கியமும் 6. புறநானூறு 7. சிலப்பதிகாரம் 8. மணிமேகலையும் மதுவிலக்கும் 9. நளவெண்பா 10. நகைச்சுவை 11. தமிழ்நாட்டாரும் அயல் நாட்டாரும் 12. தமிழ் மொழியும் பிறமொழிகளும் (தெலுங்கு) 13. தமிழ்மொழியும் பிறமொழியும் (மலையாளம்) 14. தமிழ்மொழியும் பிறமொழியும் (கன்னடம்) 15. இலக்கணம் மொழியைப் பாதுகாக்கும் முறை 16. தமிழ் இலக்கியத்திற் கண்ட அரசு 17. தமிழ் இலக்கியத்திற் கண்ட

அமைச்சு 18. தமிழ் இலக்கியத்திற் கண்ட தூது 19. தமிழ் இலக்கியத்திற் கண்ட பக்தி 20. தமிழ் இலக்கியத்திற் கண்ட கடவுள் என்னும் இருபது தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது.

## 4. தமிழகம் – ஊரும் பேரும்

இந்நூல் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் வரலாற்று அறிவை விளக்குகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஊர்களையும், அவ்வூர்களுக்கு அமைந்த பெயர்களையும் மிகவும் தெளிவாக இந்நூல் விளக்குகிறது. இந்நூல் இவருடைய அரிய படைப்பாகும். 1. தமிழகமும் நிலமும் 2. நாடும் நகரமும் 3. குடியும் படையும் 4. குலமும் கோவும் 5. தேவும் தலமும் 6. தமிழகம்-அன்றும் இன்றும் 7. இணைப்பு: தமிழ்நாட்டுத்தலங்கள் என்னும் ஏழு தலைப்புகளைக் கொண்டு இலங்குகின்றது..

## 5. தமிழர் வீரம்

தமிழர்கள் வீரத்திற்குப் பேர் போனவர்கள். 'புறநானூறு' என்னும் சங்க இலக்கியம் பண்டைத் தமிழர்களின் வீர வாழ்வைப் படம் பிடித்துக் காட்டுகிறது. குழந்தை இறந்து பிறந்தாலும் கூட அதன் மார்பைக் கத்தியால் கீறிப் புதைப்பர் பண்டைத் தமிழர். நேருக்கு நேர் நின்று வீரப்போர் புரிவர். விழுப்புண் படாத நாட்களையெல்லாம் வீணான நாட்களாகக் கருதினர். புறமுதுகிட்டு ஓடுபவர்களையும், கையில் ஆயுதம் இல்லாதவர்களையும் எக்காரணம் கொண்டும் தாக்க மாட்டார்கள். போர்முறையிலும் கூட அறத்தைக் கடைப்பிடித்தனர் பண்டைத் தமிழர்கள். யாருக்கும் எவ்விதத் துன்பமும் தராத பசுக்களையும், கற்பிணிப் பெண்களையும், நோயாளிகளையும், உடல் ஊனமுற்றவர்களையும், வயதான கிழவர்களையும் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிய பின்பே தம் அம்பைக் கடி விடுவர். இத்தகைய பொற்காலம் சங்ககாலம்.

மேற்காணும் நூல் பண்டைத் தமிழர்களின் வீரத்தைத் தெற்றென விளக்குகிறது. 1. தமிழ்க்கொடியேற்றம் 2. தமிழர் படைத்திறம் 3. தமிழ்நாட்டுப் போர்க் களங்கள் 4. மானவீரம் 5. வடதிசை வணக்கிய வீரம் 6. கடலாண்ட காவலர் 7. தமிழ்நாட்டுக் கோட்டைகள் 8. பெண்ணை நாட்டுப் பெருவீரர் 9. தியாகவீரம் 10. வீரவிளையாட்டு 11. வீரமாதர் 12. வீரக்கல்

13. வீரவிருதுகள் 14. பேர் தெரியாப் பெருவீரர் 15. வீரப் புகழ்மாலை என்னும் 15 கட்டுரைகளைக் கொண்டு இலங்குகின்றது இந்நூல்.

### 6. வழிவழி வள்ளுவர்

1. சிலப்பதிகாரத்திலே வள்ளுவர் 2. மணிமேகலையிலே வள்ளுவர் 3. சிந்தாமணியிலே வள்ளுவர் 4. கம்பராமாயணத்திலே வள்ளுவர் 5. பாரதியார் கவிதையிலே வள்ளுவர் என்னும் ஐந்து தலைப்புகளைக் கொண்டு இலங்குகின்றது.

### 7. தமிழின்பம்

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் இயற்றிய மதுரமான நூல் இது. இந்நூலின் தலைப்பிலேயே தமிழ்மணம் கமழ்கின்றது. இந்நூல் இவருக்கு அளப்பரிய புகழைப் பெற்றுத் தந்தது. சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் இலக்கிய நூல் இதுவேயாகும். இந்நூல் 1. மேடைப்பேச்சு 2. இயற்கை இன்பம் 3. காவிய இன்பம் 4. கற்பனை இன்பம் 5. அறிவும் தருவும் 6. மொழியும் நெறியும் 7. இருமையில் ஒருமை 8. பாரதியார் பாட்டின்பம் என்னும் எட்டுப் பெரும்பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவிலும் ஐந்தைந்து கட்டுரைகள் இடம்பெற்று மொத்தம் நாற்பது கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டது இந்நூல். கற்பார் நெஞ்சங்களைக் கொள்ளை கொள்ளும் ஆற்றல் பெற்றது இந்நூல்.

### 8. கடற்கரையிலே

கடற்கரையைப் பார்த்து ஒவ்வொரு தமிழ்ப்பேரறிஞரும், சமயச் சான்றோரும் கற்பனையாய்ப் பேசுவதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 'திருவள்ளுவர்' முதலாகப் பாரதியார் ஈறாக இருபது தமிழ்ச்சான்றோர்களின் பேச்சுக்கள் இதில் கற்பனை நயத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 9. அலையும் கலையும்

இந்நூலானது தமிழகத்தின் கடல் மாட்சியையும், தமிழர்களின் கலை மாட்சியையும் விளக்குமுகத்தான் எழுதப்பட்டது. இந்நூலில் மொத்தம் 21 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் 1. சேரநாடு 2. சோழநாடு 3. பாண்டிய நாடு என்னும் முதல் மூன்று கட்டுரைகளும் இலங்கை வானொலி

நிலையப் பேச்சுக்களாகும். 'சென்னைக் கடற்கரை' என்னும் கட்டுரை கல்கி தீபாவளி மலரில் வெளிவந்த கட்டுரையாகும். 'பரங்கியர் போனவழி', 'மேலைநாட்டு அறிஞரின் கலைத்தொண்டு எனும் இவ்விரண்டு கட்டுரைகளும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு மலரில் இடம் பெற்றவையாகும். 'நான் கண்ட சோழவந்தான்' என்னும் கட்டுரை சுதேசமித்திரன் பொங்கல் மலரில் இடம்பெற்ற கட்டுரையாகும். 'கலைச் சொல்லாக்கம்' என்பது கோவையில் நிகழ்ந்த சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கமாகும். புதுவை மாநகரம், திருவள்ளுவர்-எல்லீசர் உரை, மேடைப்பேச்சு, கொச்சைத்தமிழ், ஒலிச்சித்திரம், ஆடையும் அணியும், நறுமணம், மதுரை மாநகரம் - ஆகிய எட்டுக் கட்டுரைகளும் சென்னை வானொலி நிலையப் பேச்சுக்களாகும்.

### 10. தமிழகப் பெண்மணிகள்

இந்நூல் கற்புடைய மங்கையரின் பெருமையை விளக்க எழுந்த நூலாகும். இந்நூலுள் 1. ஆதிரையார் 2. விசாகையார் 3. மருதியார் 4. கோப்பெருந்தேவியார் 5. மணிமேகலையார் 6. கண்ணகியார் 7. புனிதவதியார் 8. மங்கையர்க்கரசியார் 9. திலகவதியார் ஆகிய ஒன்பது கற்புடை மங்கையர் இடம் பெற்றுள்ளனர்.

### ஊர்ப்பெயர் ஆய்வு

வேர்ச்சொல் ஆராய்ச்சி, மக்கட்பெயர் ஆராய்ச்சி, இறைப்பெயர் ஆராய்ச்சி, ஊர்ப்பெயர் ஆராய்ச்சி போன்றவை இன்பம் தரும் ஆராய்ச்சிகளாகும். தமிழ்கற்ற அனைவராலும் இவை போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட முடியாது. இவ்வாராய்ச்சியில் ஈடுபட ஆய்வாளருக்கு விழுமிய புலமையும், நடுவு நிலையும், பன்னூல் புலமை மற்றும் பன்மொழிப் புலமையும், எதையும் கூர்ந்து நோக்கும் ஆற்றலும் வேண்டும்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். எண்ணற்ற இலக்கியங்களைக் கற்றவர். கடினப் பாடல்களுக்கும் கூட எளிய முறையில் உரை சொல்லும் வன்மையர் இத்தகையவர் தமிழகத்தில் உள்ள ஊர்களின் பெயர்களை ஆராயும் பணியில் ஈடுபட்டார். அம்முயற்சியில் பெருவெற்றியும் பெற்றார். அதன் விளைவாக எழுந்த நூல்தான்

தமிழகம்-ஊரும்பேரும் என்பது. இந்நூலுள் இவர் தமிழகத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பண்டைத் தமிழர் வகுத்த நிலமுறையைக் கையாண்டே தம் ஆய்வைத் தொடர்கிறார். இந்நூலுள் 'குறிஞ்சிநிலம்' என்னும் தலைப்பில் பரங்கிமலை என்னும் பெயர் ஏற்பட்ட காரணத்தைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

> "சென்னைக்கு அருகேயுள்ள மலையொன்று பரங்கி மலை என்று பெயர் பெற்றுள்ளது. இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே, பரங்கியர் என்னும் போர்ச்சுக்கீசியர் அங்கே குடியிருப்புக் கொண்டமையால் அப்பெயர் அதற்கு அமைந்ததென்பர்."[1]

மேலும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'பாக்கம்' என்று சில ஊர்களின் பெயர்களின் பின்னால் இணைக்கப்பட்டுள்ளதை மிகவும் அழகாக ஆராய்ச்சி செய்கிறார். அப்பத்தியாவது,

'கடற்கரைச் சிற்றூர்கள் பாக்கம் என்று பெயர் பெறும். சென்னை மாநகரின் அருகே சில பாக்கங்கள் உண்டு. கோடம்பாக்கம், மீனம்பாக்கம், வில்லிவாக்கம் முதலிய ஊர்கள் நெய்தல் நிலத்தில் எழுந்த குடியிருப்பேயாகும். சில காலத்திற்கு முன் தனித்தனிப் பாக்கங்களாய்ச் சென்னையின் அண்மையிலிருந்த சிற்றூர்கள் இப்போது அந்நகரின் அங்கங்களாய் விட்டன. புதுப்பாக்கம், புரசைப்பாக்கம், சேப்பாக்கம், நுங்கம்பாக்கம் முதலிய ஊர்கள் சென்னை மாநகரோடு சேர்ந்திருக்கின்றன'.[2]

சென்னையில் உள்ள ஓர் ஊரின் பெயர் பல்லாவரம். அவ்வூரைப் பற்றி ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு ஆராய்கின்றார்.

> 'பல்லவ மன்னர் பெயர் தாங்கி நிற்கும் ஊர்களில் ஒன்று சென்னைக்கு அண்மையிலுள்ள பல்லாவரம் ஆகும். பல்லவபுரமே பல்லாவரம் என மருவியுள்ளது. அங்குள்ள குகைக்கோயிலில் மகேந்திரவர்மன் விருதுப்பெயர்கள் பொறிக்கப் பட்டிருத்தலால் அஃது அப்பல்லவன் காலத்தே எழுந்த ஊர் என்று கருதலாம்'[3]

இன்னும் தமிழக ஊர்ப்பெயர் காரணம் அறிய விரும்புவோர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் இயற்றிய இந்நூலை வாங்கிக் கற்கலாம். இங்ஙனம் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் ஊர்ப்பெயராய்வில் தலைசிறந்து விளங்குகின்றார்.

### கற்பனைத்திறன்

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கற்பனைநலம் வாய்க்கப்பட்டவர். இவர் இயற்றிய 'கடற்கரையிலே' என்னும் நூல் இருபது அறிஞர் பெருமக்கள் தாம் வாழ்ந்து சிறப்புற்ற ஊரில் உள்ள கடல்களைப் பார்த்துப் பேசும் முறையில் கற்பனை நயம் பொருந்த எழுதப்பட்டதாகும். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் கற்பனை நயத்திற்குக் கீழ்வரும் பத்தி சான்றாகும். வள்ளுவர் பெருமானின் கூற்றாக இதில் இடம்பெற்றுள்ளது.

> "கருணை மாமுகிலே! வானவெளியிலே உருண்டு திரண்டு செல்கின்ற உன்னைக் காண என் கண் குளிர்கின்றது; உள்ளம் மகிழ்கின்றது. கருமையின் மகிமையை இன்று நன்றாக அறிந்தேன். கருணையின் நிறம் கருமைதானோ என்று கருதி மனங்களிக்கின்றேன். கார்முகிலே! நீ அறத்தின் சின்னம்; அருளின் வண்ணம்; கொடாக் கடலிடம் தண்ணீரைக் கொள்ளைக் கொண்ட உன்னை இம்மாநிலம் தூற்றவில்லை; போற்றுகின்றது; கொண்டல் என்று உன்னைக் கொண்டாடுகின்றது. உன் கருணை வடிவத்தில் அழகினைக் கண்டனர் பண்டைத் தமிழர்; அதனால் உன்னை எழிலி என்று அழைத்தனர் ...................... மன்னுயிரை வாழ்விக்கும் மாரியே! உன்னை மனமாரப் போற்றுகின்றேன்; வாயார வாழ்த்துகின்றேன். பாரெல்லாம் புகழும் காரே; வாழி; ஏழுலக கேத்தும் எழிலியே! வாழி" என்று வாழ்த்திக் கொண்டு தமது மயிலாப்பூர்க் குடிசையின் உள்ளே புகுந்தார் அம்மேதை. மழை கொட்டிற்று."[4]

மேற்காணும் பத்தியைப் படிப்போர் வள்ளுவரே நேரில் மேகத்திடம் பேசுவதைப் போல் உணர்வர். இதுதான் வளமான கற்பனைத் திறன் என்பது.

கடற்கரையூர்களிலேயே மிகவும் சிறப்புப் பெற்றது திருவொற்றியூர். இவ்வூரிலே பட்டினத்தார் என்னும் சிவனடியார் நீண்டநாள் வாழ்ந்து வந்தார். இறுதியிலே இவ்வூரிலேயே முத்தியடைந்தார். அப்பெரியார் ஒற்றியூர் கடலைப்பார்த்துப் பேசுவதாகக் கற்பனை நயம் தோன்ற ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் இந்நூலிலே பின்வருமாறு கூறுகிறார்.

> *பரந்த பெருங்கடலே! பசித்தோர் முகம் பார்த்து இரங்கும் தன்மை வாய்ந்த செல்வர் இல்லாத நாடு நாடாகுமா? ஏழையர்க்கு ஒன்றும் ஈயாது ஏழடுக்கு மாடம் கட்டி இறுமாந்திருப்பவர் இறைவனது கருத்தறியாத ஈனர் அல்லரோ? மெய்யறிவு பெற்ற மேலோர் எல்லாம் மெய்ப்பொருளாகிய இறைவனே 'ஏழைப் பங்காளன்' என்று குறித்தனரேயன்றிச் செல்வர் பங்காளன் என்று சிறப்பிக்க வில்லையே! இத்தகைய ஏழையரைப் புறக்கணிப்பது ஆண்டவனைப் புறக்கணிப்பதாகுமன்றோ? அழியுந் தன்மை வாய்ந்த செல்வத்தை அற்றார்க்கும் ஆதுலர்க்கும் கொடுத்து, அழியாத அறமாக மாற்றிக் கொள்வதன்றோ அறிவுடைமையாகும்? . . . . . . . . .*
> *. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . "ஒற்றியூரே! உன் பெருமையை அவன் அருளால் உணர்ந்தேன். நீயே சிவலோகம் என்று அறிந்தேன். என் உள்ளம் கவர்ந்த ஒற்றியே! வாழி; என்னைத் தாங்கும் ஒற்றியே! வாழி; உலவாப் பெரும் பெயர் ஒற்றியே! வாழி"*

என்று வாழ்த்திக் கொண்டு ஆழிக்கரையை விட்டகன்றார் இருவினைக் கட்டறுத்த பட்டினத்தார். இதன்மூலம் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் சிறந்த கற்பனைத் திறன் வாய்க்கப் பெற்றவர் என்பதைத் தெற்றென அறியலாம்.[5]

**கலைச்சொல்லாக்கம்**

தமிழில் வழக்கில் இருந்த எண்ணற்ற சொற்கள் காலப் பழைமையால் இன்று வழக்கொழிந்து விட்டன. இதற்கு முக்கியக் காரணம் வேற்றுமொழிச் சொற்கள் தமிழில் கலந்தமைதான். இங்ஙனம் தமிழ்ச்சொற்கள் வழக்கொழிந்ததால் தமிழில் வேற்றுமொழிச் சொற்கள்தான் அரசோச்சும். இவ்விழி நிலைமையை மாற்ற வேண்டுமெனில் வழக்கொழிந்த சொற்களை

நாம் மீண்டும் பயன்பாட்டில் கொண்டு வரவேண்டும். ஏற்கெனவே தமிழில் உள்ள சொற்களைக் கொண்டு புதிய தமிழ்ச் சொற்களைப் படைக்க வேண்டும்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும் கலைச் சொல்லாக்கத்தில் மனமுவந்து ஈடுபட்டவர். அனைத்துத் துறைகளிலும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்னும் கொள்கையில் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் உறுதியாக இருந்தார். காலதர் என்னும் சொல்லானது கால், அதர் என்னும் இரண்டு சொற்களைக் கொண்ட ஒரு கூட்டுச் சொல்லாகும். 'கால்' என்பதற்குக் காற்று என்று பொருள். 'அதர்' என்னும் சொல்லுக்கு வழி என்பது பொருள். காற்று வருகின்ற வழியைக் 'காலதர்' என்னும் இனிய தமிழ்ச் சொல்லால் குறித்தனர் பண்டைப் புலவர்கள். இன்று அவ்வினிய தமிழ்ச்சொல்லை விட்டு 'ஜன்னல்' என்னும் போர்த்துக்கீசிய சொல்லைப் பயன்படுத்துகிறோம். இது தவறாகும். இங்ஙனம் பயன்படுத்தலாகாது எனப் பின்வரும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் கூற்றால் அறியலாம்.

> 'இப்பொழுது காலதரைச் சன்னல் என்று சொல்கிறோம். என்ன காரணத்தால் காலதரைக் கைவிட்டோம் என்பது இப்பொழுது தெரியவில்லை! எவ்வளவு முயன்றாலும் இப்பொழுது சன்னலை நம் வீட்டை விட்டு அகற்ற முடியாது. ஆதலால், சன்னலை வைத்துக் கொள்வோம். அதனுடன் காலதர் என்ற சொல்லையும் ஆட்சிக்குக் கொண்டு வர முயல்வதே அறிவுடைமை ஆகும். எப்படிக் கொண்டு வருவது என்று நீங்கள் ஐயுறலாம். அதற்கு ஒரு வரி சொல்கின்றேன். கட்டடக்கலையில் காலதர் என்பதை 'வென்டிலேட்டர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கேற்ற தமிழ்ச் சொல்லாகக் கொள்ளலாமன்றோ!'[6]

என்கிறார். மேலும் ராபி. சேதுப்பிள்ளை அவர்கள் தொடர்ந்து பின்வருமாறு கூறுகிறார்.

> 'இப்பொழுது தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சிமொழியாய் நிலவுகின்றது. ஆங்கிலத்தில் 'ஆபிஸ்' என்று இதுகாறும் வழங்கிய சொல் மாறி,

'அலுவலகம்' என்ற தமிழ்ச்சொல் வழக்காற்றில் வந்து கொண்டிருக்கின்றது. 'பணியகம்' என்றும் அதைச் சொல்லலாம். இத்தகைய நல்ல சொற்கள் இருக்க, இந்நாட்டில் ஒரு சாரார் 'காரியாலயம்' என்று அந்நிலையத்தைக் குறிக்கின்றனர். காரியம் நடைபெறுகின்ற இடத்தை ஆலயம் என்று சொல்லுதல் தமிழ் மரபிற்கு ஏற்குமா என்று கேட்கின்றேன். இவ்வண்ணமே ஆடைவிற்கும் கடையை வஸ்திராலயம் என்று சிலர் வழங்குகின்றனர். இவ்வாறு ஆலயம் என்ற சொல்லைக் காரியத்தோடும் வஸ்திரத்தோடும் இணைத்து வழங்குதல் தமிழின் நீர்மைக்குத் தகாது என்பது என் தாழ்மையான கருத்து'.[2]

இந்தப் பத்தியின் மூலம் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கலைச்சொல்லாக்கத்தில் எத்துணை ஈடுபாடு கொண்டவர் என்பதை நாம் அறியலாம்.

## பெண்ணினமேம்பாடு

பெண்ணின மேம்பாட்டிற்குப் பெரும்பாலும் அனைத்துத் தமிழறிஞர்களும் பாடுபட்டுள்ளனர். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும் பெண்ணினம் முன்னேறுவதில் பெருத்த அக்கறையுடன் இருந்தார். கற்பில் சிறந்த ஒன்பது பெண்மணிகளைப் பற்றிய வாழ்வைத் **தமிழகப் பெண்மணிகள்** என்னும் நூலாக எழுதியுள்ளார். 'மருதி' என்னும் கற்புக்கரசியின் வாழ்வை இவர் இந்நூலில் விளக்கும் விதம் சுவையானதாகும்.

காவிரிப்பூம்பட்டினத்தை முன்னாளில் ஆட்சி செய்தவன் ககந்தன் என்பவன். இவன் நீதியும் நேர்மையும் கொண்டவன். அந்நாட்டு மக்கள் இம்மன்னன் மேல் கொண்ட பற்றின் காரணமாகக் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் காகந்தி என்று பெயரிட்டனர். இத்தகைய நல்ல அரசருக்கு இரண்டு காமுக மைந்தர்கள் இருந்தனர். அவ்வூரில் வாழ்ந்த கற்புக்கரசி ஒருத்தியின் பெயர் மருதி என்பது. அவள் நீராடிவிட்டு வரும் வழியில் அரசனது மைந்தர்களில் இளையவன் மருதியின் அழகில் மயங்கினான். அவளை வேகமாகத் துரத்தினான். மருதி விரைவாக ஓடிச் சென்று அங்கிருந்த பூதச்சதுக்கம் என்னும் கோயிலில் நுழைந்து உள் பக்கம் தாழிட்டுக் கொண்டாள். பின்பு

அக்கோயிலில் உள்ள தெய்வத்திடம் தான் எவ்வாறு அவ்விளைஞனின் மனம் கெடுவதற்குக் காரணமானேன் என்று கேட்டாள். மருதி இவ்வாறு தெய்வத்திடம் கேட்கும் முறையையும் தெய்வம் அதற்குப் பதில் கூறும் முறையையும் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு சுவைபடக் கூறுகிறார்.

> ஓ தெய்வமே! கற்புடைய மாதர் பெய்யென்றால் மழை பெய்யுமே! அத்தகைய கற்புடைய மாதர் ஆடவர் நெஞ்சில் சென்று அடையாரே! இவ்வரசிளங்குமரன் மனத்தில் நான் செல்லுவதற்கு என்ன தவறு செய்தேன்? என்னைக் கொண்ட கணவனுக்கு யாதொரு குற்றமும் செய்தறியேன்! நான் செய்த குற்றத்தை என்னிடம் ஏ! தெய்வமே, நீ எடுத்துரையாயோ? நீ இங்கிருப்பது பொய்யோ, மெய்யோ?" என்று அழுது புலம்பினாள். இவ்வாறு மருதி அழுவதைக் கண்ட அத்தெய்வம் மனமிரங்கி அவள் முன்பே ஓர் இளம் பெண்ணாகத் தோன்றி, "மாதே! நீ வருந்தாதே. கணவனைத் தெய்வம் என்று கருதி ஒழுகும் மாதர் பெய்யென்றால் மழை பெய்யுமென்பது உண்மையே. ஆயினும் பயனற்ற பொய்க் கதைகளை நீ ஆர்வத்தோடு பயின்று வந்தாய். திருவிழாக் காலங்களில் கண்டோர் கண்களைக் கவரத்தக்க ஆடை அணிகளை அணிந்து சென்றாய். இக்குறைகள் உன்னிடம் இருந்தமையாலேயே அரசிளங்குமரன் உன்னைக் காதலித்தான். ஆயினும் உனது கற்பு நிலையில் யாதொரு களங்கமும் இல்லை."[7]

என்று தெய்வம் கூறிப் பின்பு மருதியைப் பின் தொடர்ந்த காரணத்தால் அவ்வரசிளங் குமரன் அவனுடைய தந்தையாலேயே கொல்லப்பட்டான்.

மேற்காணும் பத்தியின் மூலம் கற்புடைய மகளிரேயாயினும் அவர்கள் பிற ஆடவரைக் கவரும் வண்ணம் ஆடை அணிகளை அணியக்கூடாது என்றும், எளிமையாகவும், அடக்கமாகவும் வாழ்ந்தால் பெண்கள் வாழ்வில் முன்னேறலாம் என்பதும் விளக்கப்பட்டன.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பெண்ணின முன்னேற்றத்தில் பேரீடுபாடு கொண்டவர் என்பதை மேற்காணும் நூலின் மேற்கோளால் தெளியலாம்.

## மேலைநாட்டுத் தமிழறிஞரைப் போற்றும் பண்பு

தமிழ் மொழியின்பால் தளராக் காதல் கொண்டு, மலரில் இருக்கும் மதுவை நாடிப் பறக்கும் வண்டுகள் போலத் தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களைக் கற்று இன்புற அயல்நாட்டு அறிஞர் பலர் நம் தமிழகம் போந்தனர். அவர்களிலே டாக்டர் ஜி.யு. போப், வீரமாமுனிவர், கால்டுவெல் என்னும் மூவரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

கால்டுவெல் ஐயர் அவர்கள் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (Comparative Grammar of Dravidian Languages) என்னும் நூல் எழுதித் தமிழின் பெருமையைத் தரணிக்கு உணர்த்திய பெருந்தகை ஆவார். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் இவ்வைந்து மொழிகள் திராவிட மொழிகள் என அழைக்கப்படும். இவ்வைந்து மொழிகளிலேயே தமிழ் மிகவும் தொன்மையான மொழி என்றும், தமிழில் கலந்துள்ள அனைத்து வடசொற்களும் நீங்கிவிட்டாலும் கூட தமிழ் தனித்து இயங்கும் ஆற்றல் பெற்றது என்றும் உணர்த்தியவரும் இவரேயாவர்.

தமிழின் மேல் இத்துணை ஈடுபாடு கொண்ட கால்டுவெல் ஐயர் மேல் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பேரன்பும் பெருமதிப்பும் இருந்தன. அந்தப் பேரன்பும் பெருமதிப்பும்தான் கால்டுவெல் ஐயர் சரிதம் என்னும் நூலாக முகிழ்த்தன.

கால்டுவெல் ஐயரின் பண்புகளை அவர் பின்வருமாறு கூறுகிறார்.

> மாசற்ற ஏசுநாதர் வாழ்ந்து காட்டிய நெறியைக் கடைப்பிடித்தொழுகிய கால்டுவெல் ஐயர் எளிய வாழ்க்கையே தமக்குரியதெனக் கொண்டார்; இடையன்குடி வட்டத்திலமைந்த சிற்றூர்கட்குச் செல்லும்பொழுது பெரும்பாலும் நடந்து செல்வதே அவர் வழக்கமாயிருந்தது; செல்லும் இடங்களில் எளிதாகக் கிடைக்கும் காய் கனிகளை உண்டு

மகிழ்வார். நெடுங்காலம் தென்னாட்டிற் பழகிய பான்மையால் இந்நாட்டுக் காய் கனி கிழங்குகள் அவர்க்கு ஏற்ற உணவாயின. பகற்பொழுதில் வெய்யோனொளியைப் பொறுக்கமாட்டாது ஆங்காங்கமைந்த கூரைப் பள்ளிகளில் அவர் தங்கியிருப்பார்; பனையோலைகளாற் பண்புறவேய்ந்த கூரைப் பள்ளியின் குளிர்ந்த நிழலில் அமர்ந்து அருங்கலை பயில்வார்; காலையும் மாலையும் நெடுந் தூரம் உலாவி வருவார். இராப்பொழுதில் ஊரடங்கிய பின்னர் பள்ளியின் முற்றத்தில் பனைநார்க்கட்டிலிற் படுத்துறங்குவார்."[8]

இங்ஙனம் கால்டுவெல் ஐயரின் எளிய வாழ்வையும் இனிய பண்புகளையும் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

கால்டுவெல் ஐயருக்குத் தமிழ்மொழியின்பால் இருந்த மாறாக்காதலால்தான் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களுக்குக் கால்டுவெல் ஐயர் மேல் பற்று ஏற்பட்டது.

## பன்னூல் பயிற்சியும் பன்மொழிப்புலமையும்

ஒருமொழியில் சிறந்த அறிஞராகத் திகழ விரும்புவோர் பன்னூல்களைத் தேடிக் கற்க வேண்டும். வாழ்க்கைக்குப் பயன்படும் நல்ல நூல்களை மட்டுமே கற்கவேண்டும். எந்த நூல்களைக் கற்க வேண்டும் என நாலடியார் பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறது.

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவ தெல்லாம் – கலகல
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒம் துணையறிவார் இல் – நாலடியார் பா.எண்.140

நம்மை நன்னெறிக்கு உய்விக்கும் அறிவுநூல்களைக் கற்காமல் உலக இன்பங்களை அனுபவிக்கப் பயன்படும் வேறு நூல்களைக் கற்போர் கலகல எனக் கூவும் தன்மையுடையவரே. அன்றி அவர்கள் கற்கும் நூல்களால் யாதொரு பயனும் இல்லை என்பது இதன் பொருள்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தரமான இலக்கிய நூல்களைக் கற்றவர் என்பது அவருடைய நூல்களை முழுமையும்

கற்பார் உணரமுடியும். சங்க இலக்கியங்களாகிய எட்டுத் தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றில் இவர் ஆழங்கண்டவர். பக்தி இலக்கியங்களாகிய தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் போன்றவற்றில் பெரும் புலமை பெற்றவர். தனிப்பாடல்கள் பலவற்றையும் பயின்றவர்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் புலமையின் ஆழத்தை அளந்தறியும் செயலானது ஒருவன் தானே தனியாக நீந்தி ஆழ்கடலின் ஆழத்தைக் கண்டறியும் அரிய செயல் போன்றது அது. இவருக்குப் பன்னூல்களில் ஆழமான புலமை உண்டு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குத் தமிழ் தவிர தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிட மொழிகளிலும் நல்ல பயிற்சி உண்டு என்பதை இவர் இயற்றிய 'தமிழ் விருந்து' என்னும் நூலின் மூலம் அறிய வருகிறது. தெலுங்கு மொழியில் இவருக்கிருந்த பயிற்சியைப் பின்வரும் பத்தியால் அறியலாம்.

> 'ரேப்பு என்ற சொல் தெலுங்கில் நாளை என்ற பொருளைத் தரும். இறப்பு என்னும் தமிழ்ச் சொல்லே தெலுங்கில் ரேப்பு என்றாயிற்று. இறப்பு என்பது கடந்த நிலையைக் குறிக்கும். கடந்து சென்ற காலத்தைத் தமிழில் இறப்பு என்றார்கள்; கடந்து வருங்காலத்தைத் தெலுங்கிலே ரேப்பு என்று கொண்டார்கள்'.[9]

> 'மலையாளத்தில் தகப்பனைத் தமப்பன் என்கின்றார்கள். ஆகவே, தம் அப்பன் என்பது தமப்பன் என்றாகித் தமிழில் தகப்பன் ஆயிற்றென்று அறிந்து கொள்கிறோம்'.[10]

> 'ஒருவன் என்பது கன்னடத்தில் ஒப்பனு என்றாகும். அதற்கு நேரான பெண்பாற்பெயர் ஒப்பளு. ஒப்பளு என்பது கன்னடத்தில் வழங்குதலால் ஒருவள் என்னும் பதம் தமிழின் நீர்மைக்கு மாறுபட்டதன்று என்று கொள்வதில் குற்றமொன்றும் இல்லை'.[11]

இங்ஙனம் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பன்னூல் பயிற்சியும், பன்மொழிப் புலமையும் உடையவர் என்பதை அறியலாம்.

## மொழிநடை

அறிஞர் பெருமக்கள் தம்கருத்தை மக்கள் மனத்தில் எளிதில் பதிய வைக்கப் பல்வேறு மொழிநடைகளைப் பயன்படுத்துவர். அவ்வாறு அவர்கள் பயன்படுத்தும் மொழிநடையைப் பொறுத்தே அவர்களின் படைப்புகள் மக்களின் மத்தியில் வெற்றியையோ அல்லது தோல்வியையோ தழுவும்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் படைப்புகளில் பல்வேறு விதமான மொழிநடைகளைப் பயன்படுத்தியுள்ளார். இவருடைய மொழிநடை பெரும்பாலும் செந்தமிழிலேயே உள்ளது. எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. 'செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை' என இவர் கவியோகி சுத்தானந்த பாரதியாரால் பாராட்டப்பட்டவர். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் படைப்புகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றவையாகும். இதற்கு அவர் பயன்படுத்தியுள்ள மொழிநடையே மிகப் பெரும் காரணமாகும். இவருடைய படைப்புகளை ஆழ்ந்து நோக்குகையில் 1. வினா நடை 2. வினாவிடைநடை 3. நகைச்சுவை நடை 4. சொல்விளக்க நடை 5. மேற்கோள் பயன்படுத்தும் நடை 6. உணர்ச்சி நடை 7. வழக்குச் சொல் நடை என ஏழு வகையான மொழிநடைகளைப் பயன்படுத்தியுள்ளார் என அறிய முடிந்தது. இந்நடைகளை ஒவ்வொன்றாகக் காண்போம்.

### 1. வினாநடை

பிறரை ஏதாவதொன்றைப் பற்றி வினவும் முறையில் தம் மொழி நடையை அமைப்பது வினாநடை எனப்படும். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் இவ் வினா நடையைத் தம் படைப்புகளில் பயன்படுத்தியுள்ளார். அப்பத்தியாவது:

தமிழ்க் கவிகள் காதல் என்ற சொல்லை எடுத்தாளவில்லையா? நீதி நூல்களில் அச்சொல் வரவில்லையா? திருப்பாடல்களில் அஃது இடம்பெறவில்லையா?

காவியங்களிலும், நீதி நூல்களிலும் திருப்பாசுரங்களிலும் பயின்ற அழகிய தமிழ்ச் சொல்லை ஏன் கூசிக் கூசிப் பேச வேண்டும்?[12]

### 2. வினாவிடை நடை

நாம் படைத்த படைப்புகளில் வினா முறையில் பத்தியை அமைத்து, அவ்வினாவிற்குப் படைப்பாளரே விடை கூறும் முகத்தான் அமைவது வினா விடை நடை எனப்படும். இந்நடையையும் ரா.பி. சேதுப்பிள்ளை தம் படைப்புகளில் பயன்படுத்தியுள்ளார். கீழ்வரும் பத்தி அதற்குச் சான்றாகும்.

> 'இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழ்நாடு எப்படி இருந்தது? தமிழ் மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள்? அரசியல் எங்ஙனம் நிகழ்ந்தது? வாணிபமும் கைத்தொழிலும் எவ்விதம் நடந்தன? இவற்றையும் இவை போன்ற செய்திகளையும் நாம் அறிந்து கொள்வதற்குச் சாதனமாகிய நூல் ஒன்று தமிழிலே உண்டு. அந்த நூலைத் தொகுத்தவர் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஒரு தமிழ்ப் பெருமகனார். ஆனந்தரங்கப் பிள்ளை என்பது அவர் பெயர்'.[13]

### 3. நகைச்சுவை நடை

படைப்பாளர் தம்முடைய படைப்பைக் கற்பவர் தொய்வடையாமல் இருக்க நகைச்சுவையுடன் எழுதுவார். இம்மொழிநடை நகைச்சுவைநடை எனப்படும். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம் படைப்பைச் சுவையாக்க நகைச்சுவை நடையைப் பயன்படுத்தியுள்ளார். பின்வரும் பத்தி அதற்குச் சான்றாகும்.

> திருவோடு எழுதிய கொடியைக் கையில் எடுத்து முன்னே சென்றார் சுந்தரமூர்த்தி. பரமசிவனுடைய இருப்பிடத்தை நோக்கிப் பண்டாரப் படை நடந்தது. ஒரு பழங் காட்டினுள்ளே இருந்தார், பரமசிவன். அக்காட்டைக் காத்து நின்றான் நந்தி என்ற சேவகன்.
>
> அவனைக் கண்டு வணங்கினார் சுந்தரம். திருத்தொண்டர் சங்கத்தின் தீர்மானங்களை அவனிடம் தெரிவித்தார். அது கேட்ட நந்தி, அப்பா

சுந்தரம்! திட்டமெல்லாம் சரியாய்ப் போட்டு விட்டாய்! ஆனால், இப்போது பரமசிவன் படும்பாடு உனக்குத் தெரியுமா? பட்டாடை என்ற பேச்சே அவர் குடும்பத்தில் இல்லை. பார்வதியும், கங்கையும் பருத்தி நூலாடைகள்தாம் கட்டிக்கொள்கிறார்கள். பரமசிவனோ, அதுவுமின்றிப் புலித்தோலை எடுத்து உடுத்திருக்கிறார்; குளிர் தாங்க மாட்டாமல் கரித்தோலைப் போர்த்துக் கொண்டிருக்கிறார். உலகத்துக்கெல்லாம் அவர் படியளக்கிறார் என்று பெயர். இப்போது அவர் குடும்பத்திற்கே அரிசி பங்கிட்டுக் கொடுக்கப்படுகின்றது. அவரிடம் வேலை பார்க்கும் நான் வயிறாரச் சோறுண்டு அறுபது நாளாயிற்று. மூத்த பிள்ளைக்குச் சாதம் போதாது; தம்பியாகிய முருகனை ஏய்த்து அவன் பங்கையும் சேர்த்துச் சாப்பிடுகின்றான். முருகன் ஒரு விளையாட்டுப் பிள்ளை. சாப்பாட்டு வேளையில் ஒருமயில் ஆடினால் அதையே பார்த்துக் கொண்டிருப்பான்; ஒரு கோழி கூவினால் அதைக் கொண்டு வர ஓடுவான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு பேசாமல் இருப்பாள் பார்வதியம்மை. பிள்ளைகளைத் தட்டி வளர்க்கத் தெரியாத தாய் அவள். அவளுக்கும் கங்கைக்கும் எப்பொழுதும் சண்டை. இருவரும் பிரிந்து தனித்தனியே குடியிருக்க வேண்டுமென்று பரமசிவனிடம் விண்ணப்பம் செய்தார்கள். இப்பொழுது வீட்டுக்கும் பஞ்சமல்லவா? தனித்தனி வீடு தருவதற்கு வழியில்லை என்று உணர்ந்த தியாக மூர்த்தியாகிய தலைவர், தம் உடம்பில் ஒரு பாகத்தைப் பார்வதிக்குக் கொடுத்தார்; காடு போன்ற தம் சடையில் கங்கையை வைத்துக் கொண்டார். இப்படி இருக்கிறது பரமசிவன் நிலைமை. உள்ளதைச் சொல்லிவிட்டேன்; இனி உன் சித்தம்"

என்று கூறினான்.[14]

## 4. சொல் விளக்க நடை

அறிஞர்பெருமக்கள் ஆழ்ந்த புலமை பெற்றவர்கள். ஆய்வு நூல்களை ஆழமாய்க் கற்ற தமிழ்ப் பேரறிஞர்கள் ஒரு தமிழ்ச்

சொல்லை எடுத்துக் கொண்டு அச்சொல்லின் பொருளை ஆய்வு செய்வர். அவ்வாராய்ச்சியில் அவர்களுக்குப் பேரின்பம். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும் சொல்விளக்கத்தில் ஈடுபட்டதனால் அவருடைய படைப்புகளில் சொல்விளக்க நடை அமைந்து பொலிகின்றது. 'பைய' என்னும் சொல்லை ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் விளக்கமாக ஆராய்ந்துள்ளார். அப்பத்தி கீழ்வருமாறு:

'பையச் சென்றால் வையந் தாங்கும்' என்பது இந்நாட்டிலே ஒரு பழமொழி. பைய என்றால் மெல்ல என்பது பொருள். 'பையப்போ' என்ற சொல் பாண்டிய நாட்டிலே பெருவழக்குடையது. தேவாரத்தில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. மதுரை மாநகரில் சிவனடியார் திருமடத்தில் தீயோர் வைத்த தீயை அரசனிடம் செலுத்தத் திருவுளங்கொண்ட திருஞானசம்பந்தர், "பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" எனப் பணித்ததாகத் தேவாரம் கூறும்".[15]

### 5. மேற்கோள் பயன்படுத்தும் நடை

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தம்முடைய படைப்புகளில் தேவைப்படும் இடங்களில் மேற்கோள் காட்டித் தம் படைப்புகளைச் சுவையாக்குகின்றார். அளவான மேற்கோள் பயன்படுத்தி யிருப்பதால் இவர்தம் படைப்புகள் கற்போர்க்குக் கழிபேரின்பம் நல்குகின்றன. சான்றுக்கு ஒரு பத்தி கீழே தரப்படுகிறது.

'சோழ நாட்டுக் கப்பற்படையும் சாலப் பழமை வாய்ந்தது. கரிகால்வளவன் காலத்திற்கு முன்னே காவிரி நாட்டை யாண்ட சோழன் ஒருவன் கடலாட்சி புரிந்தான் என்பது ஒரு பழம்பாட்டால் விளங்குகின்றது. கடற்காற்றை ஏவல் கொண்டு கப்பலோட்டிய அக்காவலனை,

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன்

என்று புகழ்ந்தது தமிழ்க்கவிதை.[16]

### 6. உணர்ச்சி நடை

கற்போரையும், கேட்போரையும் தம்பால் கவர்ந்து இழுக்கக்கூடிய படைப்புகளைப் படைப்பதும், சிறந்த பேச்சாற்றல்

பெற்று விளங்குவதும் தனியொரு கலையாகும். இவ்விரண்டு கலைகளையும் நிறைவாய்ப் பெற்றிருந்தவர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள். இவர் இயற்றிய கடற்கரையிலே என்னும் நூல் முழுவதும் உணர்ச்சி நடையாலும் கற்பனை வளத்தாலும் ஆக்கப்பட்டதுதான். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் உணர்ச்சி நடைக்குக் கீழ்வரும் பத்தி சான்றாகும்.

> கைம்மாறு வேண்டாக் கருமுகிலே! உனக்கு மனமுவந்து தண்ணீர் அளித்தால், தனக்கும் நலம் உண்டு என்பதை அறியாது போயிற்றே இக்கடல்! நீ மழை பெய்யாவிட்டால் இந்நெடுங் கடலும் தன் நீர்மை குன்றுமே! நீ ஆற்று நீராக வந்து கடலைப் பெருக்குகின்றாய்; ஊற்று நீராகப் பொங்கிக் கடலை ஊட்டுகின்றாய்; மழைநீராகப் பொழிந்து கடலை நிறைக்கின்றாய். ஒரு வழியாகக் கொடுத்துப்பல வழியாக வாங்குகின்ற உபாயமும் இக்கடல் அறியா தொழிந்ததே!'.[17]

## 7. வழக்குச் சொல்நடை

நாம் வழக்கில் பயன்படுத்தும் சொற்களைத் தம் படைப்புகளில் கையாண்டு அமைக்கும் மொழிநடைவழக்குச் சொல் நடை எனப்படும். ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் ஒரு வழக்குச் சொல்லைப் பயன்படுத்தித் தம் படைப்பை அமைத்துள்ள விதத்திற்குக் கீழ்வரும் பத்தி சான்று பகர்கின்றது.

> 'இனி வரும் பொங்கல் பெரும் பொங்கலாக வேண்டும்; தமிழ்நாட்டில் உள்ள வெற்றிடம் எல்லாம் விளை நிலமாக மாறவேண்டும்; உண்ண உணவும் உடுக்க உடையும் எல்லார்க்கும் கிடைக்க வேண்டும்; சென்னை மாநகரில் 'கன்றாவி' யாகவுள்ள தோற்கன்றுகள் ஒழிந்து பாற் கன்றுகள் பெருக வேண்டும்.'[18]

## 8. செந்தமிழ்நடை

இனிய தமிழில் தம் படைப்புக்களைப் படைப்பது செந்தமிழ் நடை எனப்படும். செந்தமிழ்நடை அனைவருக்கும் கைவரக்கூடியதன்று. எண்ணற்ற செந்தமிழ் நூல்களைக்

கற்பார்க்கும், தமிழ்மொழியின் பால் விழுமிய பற்றுக் கொண்டவர்கட்கும் மட்டுமே இந்நடை கைவரும். மூதறிஞர் செம்மல் வ.சுப. மாணிக்கனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., மறைமலையடிகள், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை போன்றோர் இந்நடையில் கைதேர்ந்த பேரறிஞர் பெருமக்களாவர்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் படைப்புகளில் மணிமுடியாகத் திகழும் மொழி நடை செந்தமிழ் நடையேயாகும். இந்நடைதான் இவர்மேல் பெரும்பாலான மக்களைப் பற்றுக் கொள்ளச் செய்தது. இவருடைய செந்தமிழ்நடை கற்பாரைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இதனுடன் குழப்பமின்றித் தம் கருத்தை விளக்கும் பாங்கும் சேர்ந்து இவருடைய படைப்புகளைத் தமிழ்மணம் கமழச் செய்கின்றன. இவருடைய செந்தமிழ் நடைக்கு இரண்டு சான்றுகளைக் காட்டலாம்.

> 'பொங்கல் விழா நடைபெறும் காலமும் இனியகாலம்; கார் உலாவும் வானமும், நீர் உலாவும் ஏரியும் கருணை காட்டும் காலம் ; இயற்கை அன்னை பசுமையான புடைவை உடுத்து, பன்னிறப் பூக்களைச் சூடி, இனிய காயும், கனியும் கரும்பும் அணிந்து இன்பக் காட்சி தருங்காலம்'[19]

> திருக்குறள் ஓதற்கு எளிது; உணர்தற்கு அரிது' என்பது கற்றறிந்தார் கொள்கை. உணர்தற்கு அரிதாயுள்ள திருக்குறளை ஒல்லும் வகையால் விளக்கியருளினர் நல்லியற் கவிஞரும் உரை யாசிரியரும். சிலம்பின் திறமுரைத்த இளங்கோவடிகள் முதலாக வீர சுதந்திரம் வேண்டிப் பாடிய பாரதியார் ஈறாகத் தமிழகத்தில் தோன்றிய பெருங்கவிஞர் அனைவரும் திருக்குறளின் கருத்துகளைத் தமது கவிதையில் அமைத்து அழகுக்கு அழகு செய்துள்ளனர்[20]

இங்ஙனம் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பல்வேறு வகையான மொழி நடைகளைப் பயன்படுத்தித் தமது படைப்புகளுக்குச் சுவை ஊட்டியுள்ளார். இவரை நடையில் நின்றுயர் நாயகர் எனவும் அழைக்கலாம்.

### விழுமிய தமிழ்ப்பற்று

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் தமிழ்ப்பற்று நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தன்று; நீரினும் ஆரளவின்று. இவருடைய படைப்புகளை ஆழ்ந்து கற்றால் மட்டுமே இவருடைய தமிழ்ப்பற்றை நாம் உணரமுடியும். இவர் தம் படைப்புகளுக்கு இட்ட பெயர்களிலேயே தமிழ்மணம் கமழக் காணலாம்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் தமிழ் வளர்த்த சேர, சோழ, பாண்டியர்களையும், அயல்நாட்டிலிருந்து தமிழகம் போந்து அன்னைத் தமிழுக்கு அரும்பணியாற்றிய கால்டுவெல் ஐயர் போன்ற அறிஞர்களின் மீதும் பெரும்பற்றுக் கொண்டவர்.

கலங்கரை விளக்கம் என்னும் தூயதமிழ்ச் சொல்லை விடுத்து 'Light house' என்று ஆங்கிலத்திலும், 'தீபஸ்தம்பம்' என வடமொழிச் சொல்லையும் ஏன் பயன்படுத்துகின்றீர் என்று வினா எழுப்புகிறார்.

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் விழுமிய தமிழ்ப்பற்றுக்குக் கீழ்வரும் பத்தி சான்று பகரும்.

> "தமிழ் அறிஞர்களே! தமிழ் நாடெங்கும் தமிழ்ச் சங்கம் நிறுவுங்கள்; தமிழ்ப்பாடம் சொல்லுங்கள்; கலைச் செல்வத்தை வாரி வழங்குங்கள்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்யுங்கள். இவ்விதம் ஒல்லும் வகையால் நாம் ஒவ்வொருவரும் பணி செய்வோமானால் இன்னும் பத்தாண்டுகளில் தமிழ்நாடு புத்துயிர் பெற்றுவிடும். அக்காலத்தில் நாடு முற்றும் தமிழுணர்ச்சி பொங்கித் ததும்பிப் பூரணமாய் நிற்கும். கல்லூரிகளில் நல்லாசிரியர்கள் எல்லோரும் தமிழறிஞராயிருப்பர். பல்கலைக்கழகங்களில் நக்கீரர் போன்ற நற்றமிழ்ப் புலவர் தலைவராக வீற்றிருப்பர். 'எந்த மொழியும் நமது சொந்த மொழிக்கு இணையாகாது' என்று தமிழ்நாட்டு இளைஞர் செம்மாந்து பேசுவர்; 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம்' என்று முரசு கொட்டுவர். எட்டுத் திசையிலும் தமிழ்நாடு ஏற்றமுற்று விளங்கும். அந்த

*நிலையினை இன்று எண்ணிப் பாரீர்! அதனை*
*எய்தியே தீர்வோம்; பணிசெய்ய வாரீர்![21]*

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல இவருடைய விழுமிய தமிழ்ப் பற்றுக்கு மேற்காணும் ஒரு பத்தியே போதுமான சான்றாகும்.

## தொகுப்பு

1. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் படைப்புகள் தமிழ் மக்களிடையே தமிழின் சுவையை உணர்த்தவும், அவர்களுக்குத் தமிழ்மொழியின் மேல் பற்று உண்டாக்கவும் எழுதப்பட்டவையாகும்.

2. இனிய செந்தமிழில் எழுதும் தன்மை, அதே கணத்தில் கற்போர்க்குப் புரியும் வகையில் எளிய நடையில் கட்டுரை அமைப்பில் இவருடைய படைப்புகள் இலங்குகின்றன.

3. இவருடைய படைப்புகளில் இவர் மேற்கோள் காட்டும் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், கம்ப ராமாயணம், கந்தபுராணம் போன்ற பாடல்களை மக்கள் கற்கும்போது மூலநூல்களையே கற்கலாமே என்னும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

4. இவர் தம் நூல்களில் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் விதமும், தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தாமல் இருந்தால் அவை நாளடைவில் வழக்கொழிந்து அத்தமிழ்ச் சொற்களின் இடத்தை வேற்றுமொழிச் சொற்கள் ஆக்கிரமித்துவிடும் என்று அறிவிப்புச் செய்வது தமிழர்களுக்கு இவர் கூறும் சிறந்த அறிவுரையாகும்.

5. பெண்களின் நலனில் இவருக்கு அக்கறை உண்டு என்பதை இவர் இயற்றிய 'தமிழகப் பெண்மணிகள்' என்னும் நூல் மெய்ப்பிக்கிறது.

6. ஊர்ப்பெயர் ஆராய்ச்சியில் விருப்பமுடன் முதன்முதலில் ஈடுபட்ட தமிழறிஞர் இவரே என நாம் உறுதியாக நம்பலாம். 'தமிழகம்-ஊரும்பேரும்' என்னும் நூலே அதற்குச் சான்றாகும்.

7. இவர் தாம் பயன்படுத்தும் நூல்கள், கல்வெட்டுச் சான்றுகள், இலக்கிய இதழ்கள் போன்றவற்றைத்தம் நூலின் இறுதியில்

பட்டியலிட்டுக் காட்டியிருப்பது இவருடைய நேர்மைக்கும், புலமைக்கும் பெருத்த சான்றுகளாக அமைகின்றன.

8. அரிய இலக்கியச் செய்திகளைத் திருக்குறள் போல எளியமுறையில் சுருக்கமாக விளக்கும் திறன் இவருடைய படைப்புகளின் பெரு வெற்றிக்குக் காரணமாக நாம் கருதலாம்.

## அடிக்குறிப்புகள்

1. தமிழகம் - ஊரும் பேரும், ப.3.
2. மேலது, ப.38.
3. மேலது, ப.111.
4. கடற்கரையிலே, பக்.6-7.
5. மேலது, பக்.41-42.
6. அலையும் கலையும், பக்.187-188.
7. மேலது, பக்.189-190.
8. தமிழகப் பெண்மணிகள், பக்.17-18.
9. கால்டுவெல் ஐயர் சரிதம், பக்.107-1(
10. தமிழ் விருந்து, ப.93.
11. மேலது, ப.99.
12. தமிழின்பம், ப.72.
13. தமிழ் விருந்து, ப.44.
14. தமிழின்பம், பக். 123-124.
15. மேலது, ப.68.
16. தமிழர் வீரம், ப.41.
17. கடற்கரையிலே, பக்.6-7.
18. தமிழின்பம், பக்.54-55.
19. மேலது, ப.52.
20. அலையும் கலையும், ப.105.
21. தமிழின்பம், ப.5.

# கருத்துப் புலப்பாட்டு நெறி

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை முதன் முதலில் சாகித்திய அகாடமி விருது பெற்ற தமிழறிஞர். சொல்லாய்வு, இலக்கிய ஆய்வு, மொழியியல் ஆய்வு, கலையியல் தெளிவு, கட்டுரை வன்மை, கட்டுரைக்கும் திறன் அனைத்தும் சான்றவர். வழக்கறிஞர், பேராசிரியர், நகர் மன்றத் துணைத்தலைவர் எனப் பல நிலைகளில் பொறுப்பான பணியாற்றியவர். கருத்துப் புலப்பாட்டுக்குப் பல்வேறு மொழிநடை உத்திகளை மேற்கொண்டு, 'சொல்லின் செல்வர்' ஆனவர்.

## மொழி நடை

'மேடைப் பேச்சிலும் உரைநடை நூல்களிலும் இவரது நடை செம்மாந்த செந்தமிழ் நடையாகவே இருக்கும். இவர் நடையில் அடுக்கு மொழியெல்லாம் இயல்பாய் வந்தமைந்து இன்பஞ்சேர்க்கும். தெளிவும், செறிவும், அழகூட்டும். உவமையும் கற்பனையும் உவகையூட்டும். இலக்கியத் தொடர்கள் இடையிடை விரவிப் பெருமிதம் சேர்க்கும்' என்பார், உரைநடைத்திறன் ஆசிரியர் த. சோசபு சுந்தரராசு. ரா.பி. சேதுப்பிள்ளையின் செந்தமிழ் நடைக்கு அவருக்கே உரிய மொழிப்புலமையும், ஆளுமைத்திறனும், சொல்லாடல் கலையும் காரணங்களாகும்.

நடை என்பது உரை நடந்து செல்லும் முறையாகும். "நடை என்பது மனிதன் எண்ணங்களை வெளியிடும் தனிமுறைமை" எனப் பிளேர் கூறுகிறார். "மொழியில் உரக்கச் சிந்திப்பது நடை" என்று நியூமென் கருதுகிறார். "நடை என்பது மனிதனே," எனப் பப்போ கூறுகிறார். 'சரியான இடத்தில் சரியான சொல்லைக் கூறுவது நடை' என்கிறார் ஸ்வீப்ட்."

உரைநடை என்பதற்கு, ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி, 'சந்தமற்ற சாதாரணமாக எழுதும் அல்லது பேசும்மொழி', என்று பொருளுரைக்கிறது. "புலவரின் உள்ளத்தில் உண்மையும் உறுதியும் சிறந்து விளங்கினால், அவருடைய நடை திட்பமும் நுட்பமும் அமைந்ததாகும். அவருடைய உள்ளத்தில் ஆர்வம் மிகுதியானால்

நடையில் ஆற்றல் மிகுதியாகும்,"[2] என்பார் முனைவர் மு. வரதராசன்.

வீரமாமுனிவர் உரைநடை இலக்கியத்தைத் தமிழில் வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். 'வசனநடை கைவந்த வள்ளலார்', ஆறுமுகநாவலர், தாண்டவராய முதலியார், வீராசாமி செட்டியார், வேதநாயகம் பிள்ளை போன்றோர் உரைநடையின் தொடக்க வளர்ச்சிக்குத் தொண்டாற்றினர். முனைவர் உ.வே. சாமிநாதையர், மறைமலையடிகள், திரு.வி.க. போன்ற தமிழ்த்தொண்டர்கள் உரைநடை வளர்ச்சிக்கு வாயில் அமைத்தனர். அவ்வரிசையில் உரைநடைக்கு உரமிட்டு வளர்த்த பெருமை ரா.பி. சேதுபிள்ளைக்கும் உண்டு. சேதுவின் எளிய, இனிய, செந்தமிழ் நடை, கற்றாரையும் மற்றாரையும் இணைக்கும் சேதுவாக விளங்கியது.

## உரைநடையின் இன்றியமையாப் பண்புகள்

உரைநடையின் பல்வேறு வகைகளையும் ஆராய்ந்து முடிவு காணும் திறனாய்வாளர்கள் உரைநடைக்கு,

1. தரும் கருத்து (Facts)
2. தெளிவு (Lucidity of style)
3. சந்தம் (Rhythm)
4. உணர்ச்சி (Emotion)

ஆகிய இன்றியமையாப் பண்புகள் தேவை என்று குறிப்பிடுகின்றனர்.[3]

## தரும் கருத்து

ஆசிரியர் தரும் செய்தி எதுவாக இருப்பினும், அது நேரடியாகவும் சுருக்கமாகவும், கலையுணர்வுடனும் இருக்க வேண்டும். அவ்வகையில் ரா.பி. சேதுவின் செய்தி தரும் முறை நேரடியாக ஆனால் விரிவாகக் கலையுணர்வுடன் காட்சியளித்து மாட்சி பெறுகிறது.

## தெளிவு

படைப்பாளர் தரும் செய்தி சுருக்கமாக இருந்தாலும், தெளிவாக மயக்கம் தராத வண்ணம் அமைதல் வேண்டும். சிறந்த

உரைநடையின் அணியாக விளங்கும் தெளிவு, கருத்துத்தெளிவு, உருவத் தெளிவு, நடைத் தெளிவு என்று மூன்று வகைப்படும். முத்தெளிவும் சுடர்விடுவதே உரைநடையாகும். தமிழ்ச் சேதுவின் உரைநடையில் முத்தெளிவும் முதன்மையுற்று விளங்குகின்றது.

**சந்தம்**

உரைநடைக்குச் சந்தம் இயல்பாக அமைந்திருப்பின் இலக்கிய இன்பம் ஊற்றெழும். எதுகை, மோனை, இயைபு போன்றவை சேதுவின் உரைநடைக்கு அழகு சேர்க்கின்றன.

> "குற்றமற்ற நற்றவம் புரிந்தது"[4]
>
> "எலியை நரிவெல்லுமாயின் நீயும் என்னை வெல்வாய்"[5]
>
> "வரிசையறிந்து அறிஞர்க்குப் பரிசளிக்கும் இயல்பு வாய்த்த
> அவ்வள்ளல் வருந்தி வந்தவர் எவரையும் வறிதே
> அனுப்பியதில்லை"[6]
>
> "மங்கை பங்கனைக் கண்டு அங்கம் குளிர்ந்தனர் அடியார்,
> பொல்லாத சூலை நோய் அந்நல்லாரை விட்டு ஒழிந்தது"[7]

என்றெல்லாம் சேதுவின் நடையில் சந்தநயம் விளையாடுகின்றது.

> "இனிய காட்சிகளைக் காண்பது கண்ணுக்கு இன்பம்
> இனிய ஒலிகளைக் கேட்பது காதுக்கு இன்பம்
> இன்சுவை பொருள்களை அருந்துவது நாவிற்கு இன்பம்
> நறுமணங்களை நுகர்வது மூக்கிற்கு இன்பம்
> நல்ல பொருள்களைப் பொருந்துவது உடலுக்கு இன்பம்"[8]
>
> "பூவிலே மணமுண்டு சந்தனம் போன்ற சில
> மரங்களிலே மணமுண்டு மருக்கொழுந்து
> போன்ற சில தழைகளிலே மணமுண்டு
> நன்னாரி போன்ற சில வேர்களிலும் மணமுண்டு"[9]

என்ற உரைநடையில் இயைபு பளிச்சிடுகிறது.

> "கனிகளும் கன்னலும் கணக்கின்றித் தரும் காவிரி
> நாட்டிலே
> கவலையின்றிக் குரங்குகள் குதி போடும்"[10]

என்று எழுதும் போது மோனநடை நடமிடுகிறது.

### உணர்ச்சி

ஆசிரியர் கூறும் செய்தி படிப்போரையும் கேட்போரையும் பிணிக்கும் தகைசான்றதாய் அமைதல் வேண்டும். உள்ளத்தில் உணர்ச்சியை ஊட்டும் வண்ணம் அமைதல் வேண்டும். ரா.பி. சேதுவின் நடை, தமிழ் உணர்வையும், இலக்கிய இன்பத்தையும் தூண்டும் முறையில் உணர்ச்சியின் வெளிப்பாட்டு நடையாக அமைந்துள்ளது.

### உரைநடையின் முப்பிரிவுகள்

நடை என்பது ஒவ்வொரு ஆசிரியருடைய படைப்பு முறையாகும். நடை ஒருவருடைய உணர்திறனையும் உணர்த்தும் திறனையும் மொழித்திறனையும் நன்கு புலப்படுத்துவதாகும். உரைநடை உரைக்கப்படும் முறையை அடியொற்றி,

1. வருணனை உரைநடை (Descriptive Prose)
2. விளக்க உரைநடை (Explanatory Prose)
3. உணர்ச்சி உரைநடை (Emotion Prose)

என மூன்றாகப் பிரித்துணரலாம்.

### வருணனை உரைநடை

ரா.பி. சேதுவின் உரைநடையில் வருணனை நடை, பல இடங்களில் வருகின்றது. நிகழ்ச்சி வருணனையை, வேலும் வில்லும் நூலிலும், இட வருணனையை வீரமாநகரிலும், மாந்தர் வருணனையைக் கால்டுவெல் ஐயர் சரித்திரத்திலும் கண்டு இன்புறலாம்.

சித்திரைத் திங்கள் முழுமதி நாளில் அழகர் ஆற்றில் இறங்கும் காட்சியை வருணனை உரைநடையாகத் தருகின்றார், ஆசிரியர். "சோலைமலை அழகர் இளவேனிற் காலத்தில் வைகையாற்றுக்கு எழுந்தருளுவார். சித்திரைத் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் ஆற்றிலே இறங்குவார், அழகர். அப்போது தென்னாடு முழுவதும் திரண்டெழுந்து வைகையை நோக்கிச் செல்லும். ஆற்றுமணல் எங்கும் ஆணும் பெண்ணுமாய் அடியார் கூட்டமாய் நிறைந்து காணப்படும். சோலை எங்கும் சோற்று மணம் கமழும். நகரம் எங்கும் தெய்வநலந் திகழும். இக்காட்சியைக் காணப் பெறாத அன்பன் ஒருவன், நான் ஆற்றைக்

கண்டேனா? அழகரைத் தொழுதேனா?', என்று அகம் குழைந்து உருகினான்."[11]

## விளக்க நடை

"விளக்க நடை, எடுத்துக் கொண்ட பொருளை விளக்கமாகச் சொல்லப் பயன்படுவது" ஆகும்.[12] ரா.பி.சேதுவின் **ஊரும் பேரும், தமிழர் வீரம், ஆற்றங்கரையினிலே** போன்ற பல நூல்களில் விளக்கநடை விளங்கக் காணலாம். "நமக்கு விளங்க முடியாத எந்தப் பொருளையும் அனைவரும் எளிமையில் விளங்கிக் கொள்ளுமாறு உரைப்பதே உரைநடையாகும்."[13] என்பார் கார்டினார்.

> "நெஞ்சத்தில் வஞ்சகத்தை வைத்து அழுகின்ற கள்ளரையும் தொழுகின்ற கள்ளரையும் திருக்குறள் குறிக்கின்றது.
>
> **தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்**
> **அழுத கண்ணீரும் அனைத்து**
>
> என்று திருக்குறள் குறிக்கும் இருவகைக் கள்வரையும் தொழுகள்ளர், அழுதகள்ளர் என்று அழைப்பர் பொதுமக்கள். இவர்களோடு வைத்து எண்ணத்தக்க இன்னொருவகைக் கள்வரும் உண்டு. அன்னார் ஆசாரக் கள்ளர் எனப்படுவர்,"[14]

என்று ரா.பி. சேதுப்பிள்ளை திருகுறளுக்கு விளக்கம் தருகிறார்.

## உணர்ச்சி நடை

உணர்ச்சி நடையானது படிப்பவர்களைக் கருத்துக்களோடு ஒன்ற வைப்பதற்குக் கையாளப்படும் உத்திகளில் ஒன்றாகும்.

"ஓர் உணர்ச்சியைத் தூண்டுமுறையில் எல்லை மீறிய உணர்ச்சி நிலையில் எழுதப்பட்ட உரைநடை உணர்ச்சி உரைநடை,"[15] எனப்படும். இந்நடையை ஆசிரியரது பல் நூல்களில் காணலாம். வேலின் வெற்றியில் உமையம்மையைப் பற்றி உயர்த்தும் பொழுது, உணர்ச்சி நடையைக் கையாளுகிறார். தமிழ்ச்சேது.

"மண்ணுயிரையும் மாநிலத்தையும் மற்றும் உள்ள பொருள் அனைத்தையும் ஈன்று வளர்க்கும் அன்னையாகிய உமையாளையும் வளர்ப்பாள் உண்டோ? மலையரசனும் அவர் மனையாளும் அவளை வளர்த்தனர் என்பது பெயரற்ற பேச்சே. அவர் மனையிலே வளர்ந்து அம்மை தன் அருளின் தன்மையைப் புலப்படுத்தினாள் போலும்."[16]

உணர்ச்சியைத் தூண்ட, ரா.பி. சேது பல்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளார்.

### பெயர்ச்சொல் நடை

பெயர்ச்சொல்லை இறுதியில் அமைத்து, உணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

"முறுக்கமைந்த நெடுஞ்சடைமுடியுடைய செம்மேனி எம்மானை நோக்கி நின்று மனம் உருகினார் சிலர். காதலுற்று வெதும்பிக் கருகினர் சிலர். தோழியரோடு பெருகும் காதலைப் பேசினர் சிலர்"[17]

### வினாநடை

வினாநடையில், எத்தனை? எங்கே? யார்? என்பன போன்ற வினாக்களை எழுப்பி உணர்ச்சி அலைகளை உரைநடையில் உருவாக்கியுள்ளார்.

கொற்கை துறைமுகத்தின் சிறப்பைப் பலவாறு பகர்ந்து, "இப்போது அத்துறை எங்கே? மரக்கலங்கள் எங்கே? ஆனிமுத்து விலைபெறும் அங்காடி எங்கே? மன்னர் வாழ்ந்த மாளிகை எங்கே?"[18] என்று உணர்வுடன் எழுதிச் செல்கிறார்.

### வினாவிடை நடை

வினாவும் விடையுமாக உரைநடையை அமைப்பதும் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவுகிறது.

> "முற்காலப் பெருமையைப் பேசுவதால் பயன் என்ன? பழமை பழமை என்று பன்னுவது எற்றுக்கு என்று சிலர் எண்ணலாம். பழமையை அறிவதில் பயன் உண்டு. பழம் பெருமையை அறியுந்தோறும் நம்உள்ளத்தில் புதியதோர் ஊக்கம் பிறக்கின்றது"[19]

என்று படிப்போரைச் சிந்திக்கச் செய்வதோடு படிப்பவருக்கு எழும் ஐயத்தையும் ஐயவினாவாக்கி விடை தருகிறார். கட்டுரை ஆசிரியர்.

## வினா முற்றுத் தொடர்களால் அமைந்த நடை

"அந்நகையினைப் பார்த்து அவன் இரங்கினான், ஏங்கினான், விம்மினான், வெதும்பினான், பெருமூச்சு விட்டான், மயக்கமுற்றான்"[20] என்று வேலின் வெற்றி நூலில் எடுத்துரைக்கிறார்.

## தருக்க நெறி விளக்கம்

பிறர் கருத்தை மறுத்து, தம்கருத்தை நிலைநாட்டச் சான்றுகள் தந்து விவாத முறையில் அமைப்பது தருக்க நெறி நடையாகும்.

ரா.பி. சேது, ஒப்புமைக்கும், உவமைக்கும் உள்ள வேறுபாட்டைத் தருக்கநெறியில் விளக்குகிறார்.

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை என்பது ஒரு குறளின் கருத்தாகும். அழுக்காறுடையவனிடம் ஆக்கம் இல்லை. அது போல ஒழுக்கமில்லானிடம் உயர்வு இல்லை என்பது மற்றொரு குறளின் பொருளாகும். இவைகளில் ஓர் உண்மையை மற்றோர் உண்மையால் விளக்கும் தன்மை காணப்படுகிறதேயல்லாமல், உவமையணியாக இவற்றைக் கருதுவதற்கு இடமில்லை. ஆகவே இத்தன்மை வாய்ந்த ஒப்புமை காணுமிடத்து அதனை உவமையென்று கொள்ளாது உதராணம் என்று கொள்ளுதலே பொருத்தமாகத் தோன்றுகிறது."[21]

## உளப்பாட்டு நடை

இந் நடை படிப்போரைப் படைப்பாளனுடன் ஒன்றச் செய்கிறது. படிப்போரை முன்னிலைப்படுத்தி அமைவது இந்நடை. ரா.பி.சேதுவின் உரைநடையில் இந்நடை காணப்படுகிறது.

"இனிப் பண்டைக் காலத்தில் எவ்வாறு படை திரட்டப்பட்டது என்பதையும் சிறிது பார்ப்போம்."[22]

மாமல்லபுரத்தின் கலைச் செல்வத்தை நன்கு அறிவதற்கு வாய்ப்பும் உண்டாகும் என்று நம்புகின்றோம்."[23]

### எளியநடை

கருத்துக்களை எளிதில் அறியச் செய்யும் எளியநடை தெளிந்த நீரோடை போன்று இருக்கும். இந் நடை தமிழ்ச் சேதுவின் நடையில் பயின்று வருகின்றது.

> "தமிழ் மொழியில் பெருங்காவியங்கள் சில உண்டு. கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் இரு பெருங்காவியங்கள். தன்னிகரில்லாத் தலைவனாகிய இராமன் பெருமை இராமாயணத்தில் பேசப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் தன்னேரில்லாத் தலைவியாகிய கண்ணகியின் செம்மை போற்றப்படுகின்றது. இவ்விரண்டும் வீர காவியம்."[24]

### அங்கத நடை

வீரமாநகர் நூலில் இவ்வகை நடையைக் காணமுடிகிறது.

> "அரக்கர் சேனை அழிந்தது என்று அரசனிடம் சொல்ல நாவெழாது நடுங்கிய தேவர், காவலன் முன்னே போந்து கைபிசைந்து கலுழ்ந்து நின்று நிகழ்ந்த வினையை அறிவிக்கும் நீர்மை நகை விளைவிப்பதாகும்."[25]

> "விரைந்தோடி வந்த தேவர் வாயினாற் பேச இயலாது கையாலும் மெய்யாலும் கட்டுரைத்த செய்தியை அரசன் குறிப்பாக உணர்ந்தான்."[26]

> "இலங்கை வேந்தன்பால் வைத்த அச்சத்தால் அரக்கரையும் தம்மையும் வேற்றுமைப்படுத்தாது, நமரெல்லாம் இறந்தாரென்று அமரர் நாணாது சொல்லும் முறை அவர் அடிமை வாழ்க்கைக்கு அமைந்த சான்றாகும்."[27]

### நகைச்சுவை நடை

ரா.பி. சேது சில இடங்களில் கூறும் கருத்திற்கு ஏற்ப நகைச்சுவை நடையைக் கையாளுகின்றார். குற்றாலக் குறவஞ்சியில் முக்கூடற் பள்ளியும், மருதூர்ப்பள்ளியும் சண்டையிடும் காட்சியை நகைச்சுவை நடையில் நவில்கிறார்.

"இவ்விருவருடைய ஏச்சும் பேச்சும் இல்லாத நாள் இல்லை. ஏசுவதற்கு வேறொன்றும் தோன்றாவிட்டால், இவர்கள் கும்பிடும் சாமிகளைக் கூசாமல் ஏசுவார்கள்."[28]

### நாடக நடை

உரைநடையின் இடையில் நாடகப் பாங்கில் அமைந்த நடையைக் கையாள்கிறார்.

"அப்பொழுது கண்ணகி தனது இனிய மழலை மொழிகளால், மதுரை மூதூர் எங்கிருக்கின்றது? என்று தன் காதலனிடம் கேட்டாள். கோவலன் மிகவும் மனம் வருந்தி "இதுவரையும் நாம் ஒரு காதவழி வந்து விட்டோம். இன்னும் முப்பது காதம் இருக்கின்றது" என்று மொழிந்தான்".[29]

தமிழ் விருந்து, தமிழகம் அலையும் கலையும் போன்ற பனுவல்களில் சில கட்டுரைகளில் பாத்திரங்களின் பெயர்களைக் கூறிப் பின் உரையாடலை அமைத்து, நேரடியாக நாடகமாகவே அமைத்துள்ளார்.

### இசைவிப்பு நடை

"கடன் கொண்டும் செய்வன செய்தல் நன்று, என்ற உண்மையை மனத்திற்கொண்டு, தொண்டு செய்த வின்சுலோ ஐயர் போன்ற பெரியார் என்றும் தமிழ் நாட்டாரது நன்றிக்கு உரியவராவர் அன்றோ?"[30]

என்று படிப்போரை இசைவிக்கச் செய்கிறார் இன்தமிழ் சேது.

### வரலாற்று முறை ஆய்வு நடை

இவரது பல கட்டுரைகள் ஆய்வு நடையில் அமைந்துள்ளன. ஊர்ப் பெயர் வரலாற்றைக் கூறும் போது வரலாற்றுச் சான்றுகளுடன் நிறுவுகிறார். ஊரும் பேரும் என்னும் நூலில் இந்நடையைக் காணலாம்.

திருநெல்வேலி நகரத்தில் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது வீரராகவபுரம். அது வீரராகவ முதலியார் பெயரால் அமைந்த ஊராகும். கிருஷ்ணப்ப நாயக்கர் மதுரையில் ஆட்சி புரிந்த போது, வீரராகவர் அவருடைய பிரதிநிதியாகத்

தென்னாட்டில் விளங்கினார் என்பது சாசனத்தால் அறியப்படும்.[31]

## மேற்கோள் நடை

தமிழ் இலக்கியத்தில் ஊறித் திளைத்த தமிழ்ச் சேது பல செய்யுள் வரிகளை எளிய உரைநடையில் அமைத்துள்ளார். பாரதியாரின் சிறப்பை அவர் மேற்கோளுடன் விளக்குகிறார்.

> பாரத சமுதாயம் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை நன்குணர்ந்த கவிஞர் சாதி சமய வேற்றுமையால் விளையும் தீமைகளை, விளக்கமாகவும் பாடினார். 'நாமிருக்கும் நாடு நமது' என்றுணர்ந்து தாய் நாட்டையும், தாய் மொழியையும் போற்றுதல் வேண்டும் என்று ஆசைப்பட்டார். 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என்று தம்மை ஈன்ற தமிழ்நாட்டைப் புகழ்ந்து பாடினார்.[32]

## மொழித்திறன்

ஒருவரின் மொழித்திறனை ஒலிநிலை, சொல் நிலை, தொடர் நிலை என்னும் மூன்றின் நிலைகளில் உய்த்துணரலாம்.

> "மொழியில் அழுத்தத்தையும், தெளிவையும் உருவாக்க முயலும் எல்லா வழிவகைகளையும் மொழி நடையியலின் கீழ் அடக்கலாம்"[33]

என்ற கூற்றுக்கிணங்க ரா.பி. சேதுவின் மொழிநடையை இந்நிலைகளிலும் காணலாம்.

### ஒலி நிலை

ஒலி நிலை சூழலையும், பண்பையும் விளக்க உதவுகிறது. ஒலிக்குறிப்பு, அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி போன்றவை இவ்வகையில் அடங்கும்.

### ஒலிக்குறிப்பு

தமிழ் விருந்தில் கம்பர் காவியத்தை விளக்கும் போது 'குய்யோ முறையோ' என்னும் ஒலிக் குறிப்புச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

"அசட்டுப் பிசட்டு"[34]

"வெள்ளை வெளேரென்ற"[35]

"செக்கச் சிவந்த"[36]

போன்ற ஒலிக்குறிப்புச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

## அடுக்குத் தொடர்

உணர்ச்சி வெளியீட்டிற்கு அடுக்குத் தொடர் உதவுகிறது. இத்தொடர் சேதுவின் நடையில் பயின்று வருகிறது.

"உயர்ந்தோர் உயர்ந்தோர்"[37]

"முறையோ முறையோ"[38]

"நல்லணிகள் எத்தனை! எத்தனை!"[39]

## இரட்டைக்கிளவி

செயலின் வேகத்தை விவரிக்க இரட்டைக் கிளவி இடமளிக்கிறது.

"சல சல" "கல கல"[40]

"தழுதழுத்த"[41]

இவை போன்ற இரட்டைக்கிளவிகளைத் தமிழ்ச் சேதுவின் நடையில் ஆங்காங்கே காணலாம்.

## சொல் நிலை

ஒருவர் நூலில் காணும் வடசொல், ஆங்கிலச் சொல், பழமொழி, மொழியாக்கச் சொற்கள் போன்றவை அவரின் சொல்லாட்சித் திறனை மதிப்பிட உதவுகின்றன.

## சொல்லாட்சி

பழந்தமிழ் இலக்கியச் சொற்றொடர்களைத் தமிழ்ச் சேது கையாண்டு இலக்கிய நயஞ்சான்ற செம்மாந்த நடையைப் படைத்துள்ளார்.

'அறிய ஒண்ணாது', 'அலக்கண்', 'அலமந்து', 'துணுக்கம்' 'கடிது', 'சால', 'இன்றே', 'போந்து', 'அஞ்சேல்', 'நண்ணி' என்பன போன்ற தூய தமிழ்ச் சொற்கள் மேவ எழுதியுள்ளார்.

## சொல் வளம்

தமிழ்மொழி சொல் வளம் உடையது, என்பதைப் பிறருக்கு உணர்த்த எண்ணிட்டுச் சொல்ல வேண்டிய இடத்தில் நான்கு சொற்களை வேறுபடுத்தி வாக்கியங்களை அமைக்கிறார் தமிழ்ச் சேது.

> "மலையும் மலை சார்ந்த இடமும் ஒருவகை. காடும் காடு சார்ந்த இடமும் மற்றொருவகை. வயலும் வயல் சார்ந்த இடமும் பிறிதொருவகை. கடலும் கடல் சார்ந்த இடமும் இன்னொருவகை. இந்நான்கு முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் பெயர்களாற் குறிக்கப்பட்டன."[42]

என்று எண்களை அடுக்கிச் சொல்லாமலும் வந்த சொல்லே மீண்டும் வராமலும் தமிழ் மொழியின் சொல் வளத்தைப் புலப்படுத்துகிறார்.

## பிறமொழிச் சொற்கள்

வடமொழி ஆட்சியுடன் கூடிய சொற்றொடர்கள் இவர்தம் உரைநடையில் அருகிச் சில இடங்களில் காணப்படுகின்றன.

"காட்டைக் குறிக்கும் வடசொற்களில் வனம், ஆரண்யம் ஆகிய இரண்டும் சில ஊர்ப் பெயர்களில் அமைந்துள்ளன"[43] என்று வடமொழி ஆட்சியைச் சுட்டிக் காட்டியுள்ள இவரே பல இடங்களில் மொழியைப் 'பாஷை' என்ற சொல்லால் வழங்குகிறார்.

"கிறித்து - கிறிஸ்து"[44]

"வணிகத் தொகை - கிரையத் தொகை"[45]

"உரைநடை-வசனம்"[46]

"நினைவுச்சின்னம் - ஞாபகச் சின்னம்"[47]

"வருகைதந்தார் - விஜயம் செய்தார்"[48]

வடசொல்லிற்கு ஏற்ற தமிழ்ச் சொற்கள் இருந்தும் ரா.பி. சேது இவ்வண்ணம் அப்படியே அமைத்ததற்குக் காரணம்

இக்காலத்தே போன்று அக்காலத்தே தனித் தமிழ் கழகங்களும், மொழி விழிப்புணர்ச்சியும் தோன்றாமையே ஆகும்.

"அருமையான தமிழ்ச் சொல் ஒன்று இருக்க ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ"[49] என்று ஆங்கில மோகத்தைச் சேது சாடுகிறார். இவரே 'கவர்னர்' என்றும் 'அப்பீல்'[50] என்றும் ஆங்கிலத்தில் எழுதக் காரணம் அவர் வாழ்ந்த காலமும், அவர் பழகிய நண்பர்களும் ஆவர்.

## பழமொழிகள்

உரைநடையில் பழமொழியைப் பயன்படுத்துவது சிறப்பாகவும், உத்தியாகவும் கருதப்படுகிறது. பழமொழியைப் பயன்படுத்துவது கருத்துச் செறிவிற்கு வழி வகுக்கிறது. முன்னோர் மொழி பொருளைப் போற்றப் பழமொழி கருவியாகிறது. தமிழ்ச் சேதுவின் எழுத்திலும், பேச்சிலும் பழமொழியின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது.

வின்சுலோ ஐயர் கடன்பட்டு அகராதிப் பணியை முடித்த செய்தியைக் கூறும் இடத்து,

"கடன் கொண்டும் செய்வன செய்தல் நன்று"[51]

என்ற பழமொழியைக் கூறுகிறார்.

## பேச்சு வழக்குச் சொற்கள்

சில பேச்சு வழக்குச் சொற்கள் சேதுவின் நடையில் காணப்படுகின்றன.

"வெள்ளையர் ஆளும் விரிநகரே"! "நின் கோட்டையின் அருகே இரவெல்லாம் அரவம்".

"சட்டைக்காரரின் கூட்டம், வெள்ளை வெறியாட்டம்".[52]

இங்குச் சட்டைக்காரன் என்பது பேச்சு வழக்கு. ஆங்கில ஆதிக்கம் ஏற்பட்டபோது ஆங்கிலேயரைப் பின்பற்றிச் சில தமிழர் சட்டையணியத் தொடங்கினர். அவர்களைச் 'சட்டைக்காரன்' என்று அழைப்பது பேச்சு வழக்கு. அதனைத் தமிழ்ச் சேது கையாண்டுள்ளார்.

'சின்னா பின்னமாக'[53] என்னும் பேச்சு வழக்குத் தொடரையும் பயன்படுத்தியுள்ளார்.

'காசிக்கு வீசம் அதிகம்'[54] என்றும் பேச்சு வழக்கைக் கையாள்கிறார்.

'இலையமுது' என்று சிறப்புப் பெயர் பெற்றுள்ளது வெற்றிலை. பாடுபட்டுப் பிழைக்கும் ஏழை மக்கள் வயிறு காய்ந்தாலும் வெற்றிலை போடாதிருக்க மாட்டார்கள். வெற்றிலைக்கும் விதியில்லாத வறியவனை "வெறுவாய்க்கு இலை கெட்டவன்" என்று வசை கூறுவர்.[55]

## மொழியாக்கச் சொற்கள்

விண்ணிலே தோன்றும் ஒலியை 'வானொலி'[56] (வான் ஒலி) என்றும் Madras Oriental Manuscripts Library என்பதைக் கீழை நாட்டுக் கையெழுத்து நூல் நிலையம் என்றும் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். கலங்கரை விளக்கத்தை, ஒளிவிளக்கம்"[56] என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தொடர்நிலை

உவமைத் தொடர், உருவகத் தொடர் எண்ணும்மைத் தொடர், மரபுத் தொடர், விளித் தொடர் போன்ற பல்வேறு தொடர்களை ராபி.சேது எடுத்தாண்டுள்ளார்.

## உவமைத் தொடர்

ஆசிரியர் தான் கண்ட, உணர்ந்த உணர்வைப் படிப்போர்க்கு உணர்த்த உவமை துணைபுரிகிறது. தமிழ்ச் சேது பெரும்பான்மையும் மரபு உவமைகளையே கையாள்கிறார்.

தமிழ் முனிவன் தென்திசையின் பொதிய மலைக்கு வந்த போது "வடதலையும், தென்தலையும் துலாக்கோல் போல் சமனாகி நின்றன"[57] என்று உவமை கூறுகிறார்.

"ஊழித் தீயில் நெய்கடல் விழுந்தால் எழும் தீக்கொழுந்து போல"[58]

"நஞ்சு தோய்ந்த அம்பு போல" போன்ற உவமைகளையும் கையாள்கிறார். கட்டுரை ஆசிரியர்.

## உருவகத் தொடர்

உவமையும் பொருளும் வேற்றுமை
ஒழிவித்துஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்

என்பது தண்டியாசிரியர் கூற்று. உருவகமானது பொருள் விளக்கத்திற்கும் உணர்ச்சித் தூண்டலுக்கும் பயன்படுத்தப் படுகிறது.

"நல்ல மரமும் நச்சு மரமும்" "பயிர் வண்டும், படர் கொடியும்"[59] போன்ற கட்டுரைத் தலைப்புகளே உருவகத் தொடர்களில் அமைந்திருந்தன.

"குருதி மழை", "சேனைப் பெருங்கடல்" போன்ற உருவகத் தொடர்களும் பயின்று வந்துள்ளன.

## எண்ணும்மைத் தொடர்

*"அன்று அலர்ந்த செந்தாமரை போன்ற ஆறுமுகமும், அழகிய கண்ணும், காதல் அசைந்த குண்டலமும், தலையில் அணிந்த திருமுடியும், மணி மார்பும், பன்னிரு கைகளும், படைக்கலங்களின் ஒளியும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கும் திருவடியும் தெரியக் கண்டாள்."*[60]

என்று உம்மைத் தொடரினை ஆசிரியர் உரைநடையில் காணலாம்.

## நீண்ட தொடர்

"இத்தன்மை வாய்ந்த முருகன் குன்றக் குறவர் மனையிலே வாழ்ந்த வள்ளி என்னும் வஞ்சியைக் காதலித்து, அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற நிலையும், தினைப்புனம் காத்து நின்ற வள்ளியின் முன்னே, கிழக்கோலம் புனைந்து தோன்றி அம்மங்கை தன் செங்கையால் அளித்த தேனும் தினைமாவும் அருந்தி மகிழ்ந்த செய்கையும், பின்பு என்றும் உளதாய முருக நலங்காட்டி மணந்துகொண்ட மாண்பும், இன்பச் சுவை நிரம்பிய நாடகமாகத் தொன்று தொட்டுத் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன"[61]

என்று கலவை வாக்கியத்தில் நீண்ட தொடரினை அமைத்துள்ளார் தமிழ்ச்சேது.

### விளித்தொடர்

"தொண்டை நாட்டுப் பண்டைத் துறைமுகமே!

"கற்றவர் போற்றும் வெற்றி மாநகரே!"

போன்ற விளித்தொடர்கள் கடற்கரையிலே பனுவலில் மிகுதியாக வந்துள்ளன.

### உத்திகள்

மொழிநடை சிறப்பாக அமைய உத்திகள் உதவுகின்றன. ரா.பி.சேதுவின் மொழிநடையில் பல்வேறு உத்திகள் பயின்று வந்து அவரின் மொழித்திறனை உணர்த்துகின்றன.

### அடைமொழி அமைப்பு

'கொலையுழுத கொடிய வேற்படை' 'சேவடி கொழுந்து' 'இருந்தவ முனிவர்', 'பன்னெடுங்காலம்' போன்ற அடைமொழிகளை இடை இடையே அமைத்து நடையின்பம் கூட்டுகிறார் கட்டுரை ஆசிரியர்.

### ஒப்பிட்டுக் காட்டும் உத்தி

அயோத்தி அமைச்சரும், இலங்கை அமைச்சரும் என்ற கட்டுரையில், ஒப்பிட்டுக்காட்டும் உத்தியைக் காணலாம். பன்னெடுங்காலம் அயோத்தி மன்னனை நன்னெறியில் செலுத்தி வந்தவர் அயோத்தி அமைச்சர்கள். ஆனால் இவ்வாறன்றி, அடிமைத்திறம் வாய்ந்து வாழும் அமைச்சர் பலர் இலங்கையில் இருந்தனர் என்ற எதிர்மறையான இரு நிலைகளைக் காட்டிக் கட்டுரை ஆசிரியர் கருத்தை நிலை நிறுத்துகிறார்.

### நிகழ்ச்சி வழி விளக்கம்

இவ்வுத்திகளை ஊரும் பேரும், தமிழர் வீரம், திருக்காவலூர் கோவில் போன்ற நூல்களில் காணலாம்.

> "கல்விப் பெருக்காற் செருக்குற்ற பெருஞ்சடைப் பண்டாரங்கள் ஒன்பதின்மர் வீரமாமுனிவரொடு வாதித்து அவரை வெல்லக் கருதித் திருக்காவலூர்

> வந்தடைந்தார்கள். அன்னாரொடு வாது செய்ய இசைந்த முனிவர், வென்றவர் சொற்படி தோற்றவர் நடப்பதென்று ஒப்பந்தம் செய்து கொண்டு வாது செய்யத் தலைப்பட்டார். இரு திறத்தார்க்கும் ஒருமாத காலம் பெருவாதம் நிகழ்ந்தது. இறுதியில் முனிவர் வென்றார். தோற்ற பண்டாரங்களில் அறுவர் இயேசு சமயத்தை ஏற்றுக் கொண்டனர். மற்ற மூவரும் தாம் தோற்றத்திற்கு அடையாளமாக முனிவர் விரும்பியவாறு தம் சடைகளை அறுத்துத் திருக்காவலூர் மண்டபத்தில் போட்டு விட்டு விடைப்பெற்றுப் போயினர். இச்செய்தி வீரமாமுனிவர் சரித்திரத்தில் குறிக்கப் பட்டிருக்கின்றது."

என்று வீரமாமுனிவர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சியைத் தம் உரைநடையில் உரைக்கின்றார், கட்டுரை ஆசிரியர்.

### முடித்தல் உத்தி

"எப்பகையினும் அறப்பகையே கொடிதென்னும் உண்மை அரக்கர் அழிவுற்ற கதையால் இனிதறியப்படும்"[62] என்று 'அறமும் மனமும்' கட்டுரையில் தொகுத்துச் சுட்டிக் காட்டிக் கருத்தை நிலைநாட்டி முடிக்கிறார் கட்டுரை ஆசிரியர்.

### நீக்கல் உத்தி

இவ்வுத்தி சேதுவின் நடையில் பல இடங்களில் பயின்று வந்துள்ளது.

> "மாதவி மனையில், மல்லிகை முல்லை முதலிய மலர்கள் மணங்கமழ்ந்தன. மாலைப் பொழுதில் மந்தமாருதம் மெல்லென வீசியது. கதிரவன் மறைந்து குளிர்ந்த கலைகளையுடைய சந்திரன் விண்ணிலே விளங்கித் தோன்றியது."[63]

இந்நடையில், 'மாதவி மனையில்' என்ற சொல் முதல்வாக்கியத்தில் மட்டும் பயின்றும், ஏனைய வாக்கியங்களில் வராதும் உள்ளது. எனினும், பொருள் மயக்கம் தோன்றவில்லை. இந்த நீக்கல் உத்தியைக் கட்டுரை ஆசிரியர் பயன்படுத்துகிறார்.

## விரித்தல் உத்தி

தமிழகப் பெண்மணிகள் என்ற நூலில் விரித்தல் உத்தியைக் காணலாம்.

> "நீர்வளம் முதலிய நால்வகை வளங்களும் நிறைந்த சோழநாட்டின் தலைநகராகிய காவிரிப் பூம்பட்டினத்தில் சாதுவன் என்னும் ஒரு வணிகன் இருந்தான்".

> "காவிரிப்பூம்பட்டினத்தில் சாதுவன் எனும் ஒரு வணிகன் இருந்தான்"

என்று கூற வந்ததை விரித்தல் உத்தியில் மேற்கண்டவாறு விரித்துரைக்கிறார்.

## காரண காரிய விளக்கம்

"அறநெறி திறம்பாத அரசன் ஆட்சியில் மாதவர் நோன்பும் மடவார் கற்பும் தலைசிறந்தோங்கு மென்றும், மறம் வாடித்தளருமென்றும் அறநூல் கூறுகின்றது. இதற்கு மாறாக மற நெறியை மேற்கொண்ட இலங்கை மன்னன் மாதவர் நோன்பையும் மங்கையர் கற்பையும் அழிக்க முற்பட்டதாலேயே முக்கோடிவாழ் நாளும் முயன்று பெற்ற பெரு வரமும் முறிந்து முடியலுற்றான்" என்று இராவணன் வீழ்ச்சிக்கான காரண காரியங்களை எடுத்தோதுகிறார் தமிழ்ச் சேது.

## தலைப்பு விளக்கம்

'வீணைக்கொடியான்' என்ற கட்டுரையை, 'நானிலம் காக்கும் மன்னரும், தேவரிற் சிறந்த மூவரும் தமக்குரிய தனிக்கொடியோடு திகழ்ந்தனர்' என்று தொடங்கி மூவேந்தருக்குரிய கொடிச் சிறப்பைப் புகழ்ந்து, இராவணனும் தனி வீரக்கொடியில் வீணையை எழுதி வீணைக் கொடியோனாய் விளங்கினான் என விரித்துரைக்கிறார். எடுத்துக்கொண்ட தலைப்புக்கு விளக்கம் தந்து பின் பொருத்தமுறச் செப்பும் அழகை இக்கட்டுரையில் காணலாம்.

## முடிவுரை

ரா.பி.சேதுவின் உரைநடை சொல்லும் விதத்தால், கவிநயத்தால், உணர்ச்சி வெளிப்பாட்டால் சிறந்து விளங்குகிறது.

எளிய, இனிய, தூய தமிழ் நடையாகச் சேதுவின் உரைநடை மிளிர்கின்றது. 'சொல்லின் செல்வர்' என்ற சிறப்பினை ரா.பி. சேதுவின் செந்தமிழ் நடை மெய்ப்பிக்கிறது.

## அடிக்குறிப்புகள்

1. பி. தட்சிணாமூர்த்தி, புலப்பாட்டு நெறி, ப.12.
2. மு. வரதராசனார், இலக்கியத்திறன், ப.238.
3. சு. சோசபு சுந்தராசு, உரைநடைத்திறன், ப.8.
4. ரா.பி. சேதுப்பிள்ளை, வேலின் வெற்றி, ப.5.
5. மேலது, ப.49.
6. மேலது, ப.5.
7. மேலது, ப.49.
8. மேலது, ப.21.
9. கடற்கரையினிலே, ப.65.
10. தமிழின்பம், ப.129.
11. ஆற்றங்கரையினிலே, ப.14.
12. ஜெ.நீதிவாணன், நடையியல், ப.69.
13. சு.சோசபு சுந்தராசு, உரைநடைத்திறன், ப.15.
14. திருவள்ளுவர் நூல்நயம், ப.24.
15. சு.சோசபு சுந்தராசு, உரைநடைத்திறன், ப.15.
16. வேலின் வெற்றி, ப.21.
17. மேலது, ப.21.
18. கடற்கரையினிலே, ப.65.
19. மேலது, ப.65.
20. வேலின் வெற்றி, ப.5.
21. திருவள்ளுவர் நூல்நயம், ப.129.
22. தமிழ் விருந்து, ப.16.
23. தமிழகம் அலையும் கலையும், ப.15.
24. சிலப்பதிகாரக் கதை, ப.21.
25. வீரமாநகர், ப.27.
26. மேலது, ப.28.
27. மேலது, ப.29.
28. தமிழ்விருந்து, ப.64.
29. சிலப்பதிகாரக் கதை, ப.21.
30. கிறித்துவத் தமிழ்த் தொண்டர், ப.79.

31. ஊரும் பேரும், ப.106.
32. தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.
33. இ. சுந்தரமூர்த்தி, நடையியல் அறிமுகம், ப.17.
34. தமிழின்பம், ப.129.
35. மேலது, ப.129.
36. மேலது, ப.129.
37. வேலின் வெற்றி, ப.69.
38. மேலது, ப.65.
39. மேலது, ப.11.
40. தமிழகம் அலையும், கலையும், ப.93.
41. வேலின் வெற்றி, ப.69.
42. தமிழகம் அலையும் கலையும், ப.21.
43. தமிழின்பம், ப.129.
44. கடற்கரையினிலே, ப.4.
45. வேலின் வெற்றி, ப.27.
46. மேலது, ப.94.
47. ஊரும் பேரும், ப.1.
48. மேலது, ப.10.
49. கிறித்துவத் தமிழ்த் தொண்டர்கள், ப.79.
50. மேலது, ப.46.
51. மேலது, ப.33.
52. மேலது, ப.33.
53. தமிழகம் அலையும், கலையும், ப.32.
54. மேலது, ப.33.
55. கடற்கரையினிலே, ப.55.
56. மேலது, ப.71.
57. கிறித்துவத் தமிழ்த் தொண்டர்கள், ப.79.
58. ஊரும் பேரும், ப.70.
59. ஆற்றங்கரையினிலே, ப.42.
60. மேலது, ப.40.
61. பன்னிரு கட்டுரைகள், ப.49.
62. கடற்கரையினிலே, ப.24.
63. சிலப்பதிகாரக் கதை, ப.11.

# உரைநடைக் கூறுகள்

ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் நடை செய்யுளின் இனிமை கொண்ட செந்தமிழ் நடையாகும். இவர் எழுதிய கட்டுரை நூல்கள் பதினான்கு; வாழ்க்கை வரலாற்று நூல்கள் மூன்று; மதிப்பு நூல்கள் நான்கு; அவற்றில் தமிழின்பம், வேலும் வில்லும், அலையும் கலையும் முதலான நூல்களில் அமைந்துள்ள பல்வேறு உரைநடைக் கூறுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## ஓசைநயம்

நல்ல உரைநடைக்கு வேண்டிய தெளிவு, உணர்ச்சி, சொல்லாட்சித் திறன் போன்றவற்றால் மட்டுமன்றி, ஓசை நயத்தாலும் உரைநடையின் ஆற்றல் சிறப்பதுண்டு. உரைநடையில் தனக்கே உரிய எதுகை மோனைகளால் அழகுபடுத்தும் முறை போற்றுதற்குரியதாகும்.

## சான்றுகள்

1. 'அனுமன் அரக்கரை அச்சுறுத்தக் கருதி அசோகவனத்தை அழித்தான்'. (வேலும் வில்லும், ப.37)
2. 'கத்தும் தரங்கம் எடுத்தெறியும் கருங்கடல்' (அலையும் கலையும், ப.6)

## இயைபுத் தொடர்கள்

பல செய்திகளைத் தொகுப்பதற்கு வினையெச்சத் தொடர்களை அமைக்கின்றார் ஆசிரியர். இறுதியாக இலங்கை வேந்தன் முடியிழந்து, படையிழந்து மானமும் இழந்து எளியனாய் நின்றான். (வேலும் வில்லும், ப.44)

## ஒரு சாயல் தொடர்கள்

ஒரு பொருளைத் தெளிவாக விளக்குவதற்காக ஒரே சாயல் அமைந்த தொடர்களைக் கையாண்டு வெற்றி கண்டவர்

ரா.பி.சே. அவர்கள். அதனால் வேகமும், உணர்வும் நடையில் இணைகின்றன.

## சான்றுகள்

1. *அடியார்க்கு முருகன் அருள் செய்யும் கோலம் அழகிய குழந்தைக் கோலம்; மாற்றாரை அழிப்பதற்கு அப்பெருமான் கொள்ளும் கோலம் வீரப்பெருங் கோலம் (வேலும் வில்லும், ப.2).*

2. *அக்கம் பக்கம் பார்க்க மாட்டார்; இங்குமங்கும் எழுகின்ற ஓசைகளைக் கேட்க மாட்டார்; காலம் செல்வதை உணர மாட்டார்; கடும்பசியின் கொடுமையையும் அறிய மாட்டார் (அலையும் கலையும், ப.144).*

## இலக்கியத் தொடர்கள்

நூலாசிரியர்க்கு இன்றியமையாத நுண்மாண் நுழைபுலத்தை இளம் பருவம் தொட்டே வளமாகிப் பெருக்கி வந்த ரா.பி. சேதுப்பிள்ளை தாம் செம்மையாகக் கற்ற இலக்கிய நூல்கள் குறித்து இலக்கிய நண்பரிடத்தும், மேடையிலும் விளக்கிக் காட்டியவர். ஆதலால் அவர் தம் நூல்களில் இலக்கியப் பழந்தொடர்களைக் காணலாம்.

**பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்**
**அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும் (சிலம்பு)**

**சேயோன்மேய மைவரை உலகம் (தொல்)**

**காக்கை குருவி எங்கள் சாதி (பாரதியார்)**

போன்ற தொடர்களை உள்ளவாறே கையாளுகின்றார்.

## வினாத் தொடர்

திருவி. கலியாண சுந்தரனார் போன்று இவரும் வினா கேட்கும் முறையைத் தம் நூல்களில் இடையிடையே பயன்படுத்தும் தன்மை தருக்க நெறியில் உருவாகும் கட்டுக்கோப்பை நடையில் ஏற்படுத்துகின்றது. வினாத் தொடர்களை அமைப்பதன் மூலம் படிப்போரது சிந்தனைகளை கிளர்ச்சி பெறச் செய்வதற்கான உத்தியை இவர் பின்பற்றுகின்றார்.

*சான்றுகள்*

1. பிள்ளையன் மண்டபத்தில் கொண்டு சேர்க்கக் கருதியது பெரும் பிழையன்றோ? (வேலும் வில்லும், ப.14)

2. இன்று அந்த மீனக்கொடி எங்கே? முத்துச் சலாபம் எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இன்று இத்துறைமுகத்தில் பறக்கின்றது (அலையும் கலையும், ப.23)

இவ்வாறு வினாக்களைத் தொடுக்குமிடத்துச் சற்று நீண்ட தொடர்களைப் பயன்படுத்துகின்றார். இவ்விடத்தில் இசைவிப்பு நடை மெல்லத் தலைதூக்குகின்றது.

**உரையாடல் தொடர்கள்**

உரையாடலில் அமைந்திருக்கும் பகுதிகளில் ஆசிரியர் சிறுசிறு தொடர்களைப் பயன்படுத்தி இயல்பாக நடைபெறும் நாடகக் காட்சி போல் அமைத்திருக்கும் சிறப்பு நோக்கற்குரியது.

1. சூர்ப்பணகை இராவணனிடம் ஐயனே, பஞ்சவடியில் பாவையைக் கண்டேன். அவளை இங்கே எடுத்துவர முயன்றேன். (வேலும் வில்லும், ப.33)

2. கண்ணகி காவலனை நோக்கி, 'அரசே! என் கணவன் கள்வனல்லன்; அவனிடம் இருந்த சிலம்பு அரண்மனைச் சிலம்பன்று. அதன் இணைச்சிலம்பு இதோ, என் கையில் உள்ளது! இதனுள்ளமைந்த பரல் மாணிக்கம் என்று திறம்பட உரைத்தாள் (தமிழின்பம், ப.77)

மேற்கண்ட உரையாடல்களில் பொருள் செறிந்த சிறு தொடர்களைப் பார்க்கின்றோம்.

*தொடரிடையே அடிக்குறிப்புத் தரல்*

புதிய சொல், ஊர், இருப்பிடம் முதலியவற்றை அந்தந்தப் பக்கங்களின் அடியில் அடிக்குறிப்பு போல விளக்க முற்படும் மாண்பு உரைநடையிடையே விளக்க முற்படின் 'நடையில் தடை ஏற்படும்' என்ற எண்ணத்தாலேயாகும். 'ஊரும் பேரும்' என்ற இவர்தம் ஆராய்ச்சி நூலில் தமிழகத்து முன்னோர் தாம் வாழ்ந்த ஊர்களுக்கு அழகிய பெயர்களை அமைப்பதில் மேற்கண்ட கொள்கைகளை விளக்குவது போல் 'வேலும் வில்லும்' என்ற நூலிலும் ஊர்களின் விளக்கம் தரப்பட்டுள்ளது. இது இவரது

வரலாற்று அறிவை விளக்குவதோடு சொற்பொருள் ஆய்வுத் திறனையும் வெளிப்படுத்தும்.

**சான்றுகள்**

சமரபுரி - திருப்போரூர். தொண்டை நாட்டில் உள்ளது.

குருகு பெயர்க்குன்றம் - கிரவுஞ்ச மலை

மாவடி வைகும் செவ்வேள் - காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் மாமரத்தடியிலுள்ள முருகன் என்பர்.

வேளூர் - வெள்ளூர் என்றும், சேயூர் - செய்யூர் என்றும், கீழ்வேளூர் - கீவளூர் என்றும், சேய்ஞலூர் - செங்கனூர் என்றும் சிதைந்தமையை ஆய்ந்துள்ளார்.

## உரையாடலில் செந்தமிழ்

திரு. ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் உரையாடல் வருமிடங்களில் தனக்குரிய செந்தமிழ்நடையினையே பாத்திரங்கள் உரையடலுக்கும் பயன்படுத்தும் பெற்றி, இவரது பண்டைய இலக்கிய நடை ஈடுபாட்டைக் காண்பிக்கும்.

**சான்றுகள்**

1. வீரவாகு சூரனிடம் 'தன்னிகரில்லாத தலைவனே முருகனாய்த் தோன்றினான். அண்டங்களனைத்தையும் படைத்தும் காத்தும் விளையாடும் பரமனே ஆறுமுகக் கோலங்கொண்டு அழகிய பாலனாய் வந்தான். (வேலும் வில்லும், ப.39) என்ற பகுதியிலும்,

2. செந்தமிழ்ப் பாமாலை பெற்ற சோலை மலையிலே மஞ்சு தவழும்; மழை பொழியும்; அருவி சொரியும்; ஆறாக ஓடும்; ஆற்று நீர் கல்லின் இடையே பாய்ந்து செல்லும் போது 'கலீர்', 'கலீர்' என ஒலிக்கும் (தமிழின்பம், ப.176) என்ற பகுதியிலும்

ஆசிரியர் தன்னையே அந்தந்தப் பாத்திரமாக்கிச் செந்தமிழால் சிறப்புறச் செய்யும் போக்கினை நாம் காண்கிறோம்.

## பெயர்ப் பயனிலைத் தொடர்கள்

எடுத்த பொருளை நன்கு விளக்கப் பெயர்ப் பயனிலைத் தொடர்களை ரா.பி.சேதுப்பிள்ளை மேற்கொள்கிறார். இம்முறையால் ஒரு கருத்தையே பன்முறையால் விளக்கும் இவரது

தன்மை புலனாகும். அடியார்க்கு முருகன் அருள்செய்யும் கோலம் அழகிய குழந்தைக் கோலம், மாற்றாரை அழிப்பதற்கு அப்பெருமான் கொள்ளும் கோலம் வீரப்பெருங்கோலம் (வேலும் வில்லும், ப.2) செங்கோட்டில் வாழும் முருகன் திருமாலின் மருகன்; தில்லை மன்றிலே திருநடம் புரியும் சிவனார் திருமகன்; தேவர்களுக்கெல்லாம் மேலான தேவன்; ஞான வடிவாய் நாதன் (வேலும் வில்லும், ப.26).

## சொல் ஆட்சி; அடைமொழி

திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் சொற்களைப் பயன்படுத்தும் நிலையில் சிறந்த அடைமொழிகளைச் சேர்த்துப் பிறர் உள்ளம் கவரும் வண்ணம் அமைத்திருக்கிறார். கோல மாமயில், நீலமாமயில், பச்சைப் பசும் பாலனாக, வெற்றிவேல், செல்வ நெடும் மாடங்கள், நெடுந்தவம், பெரும் வரம், சீரிளமை முதலியவை எடுத்துக்காட்டுகளாகும். இத்தொகைச் சொற்களும் கவிதைத் தன்மை ஊட்டுவதில் சிறந்த பங்கேற்கின்றன.

## பழஞ் சொல் உயிர் பெறல்

திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் 'வேலும் வில்லும்' என்ற நூலில் பல பழந்தமிழ்ச் சொற்களைக் கையாள்கின்றார். அலமருகின்றார், பெற்றியர், பேதுறுவர், நலிந்தவர், உழன்றவர், எரிமடுத்தான், போன்தான், பகர்ந்தார், இலங்குகின்றது - இவை போன்ற பழஞ்சொற்களைப் பயன்படுத்தும் வகையில் பழந்தமிழ்ச் சொற்களுக்கு உயிர்ஊட்ட எண்ணும் அவர்தம் நினைவு, இயன்றவரை பிறமொழிச் சொற்களைத் தவிர்க்க எண்ணும் பாங்கு நமக்குப் புலனாகின்றது.

### உவமைகள்

கவிதை சிறக்க உவமை உருவகங்கள் அடிப்படைக் காரணங்களாய் உள்ளன. ஆயினும் கவிதையில் மட்டுமன்றி உரைநடையிலும் பேச்சிலும் கூட உவமைகளை ஆளுகிறோம். திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் முருகன் விளங்கும் பான்மையினை, 'பாலில் நெய் போல் பரந்து நிற்பார்', எனவும் சிறைப்பட்ட சீதையின் நிலையைப் 'புகையடைந்த ஓவியம் போலப் பொலிவிழந்தாள்' எனவும், வீரர் வனத்தைக் காவலிட்ட பாங்கினை 'அசோக வனத்தைக் கண்ணினைக் காக்கும் இமை

போலக் காத்து நின்றார் சிலர்' எனவும் உயர்ந்த சிறந்த பொருத்தமான உவமைகளைப் படைத்து நிகழ்ச்சிகளை மெருகேற்றுகின்றார். உவமை இடையிடையே ஊடுருவும் காரணத்தால் உரைநடைக்கு ஓர் உயிர்த்துடிப்பும் அலங்காரமும் ஏற்படுகின்றன.

## தலைப்புப் பத்திப் பிரிவுகள்

திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் பொருள் பொதிந்த தலைப்பினை 'வேலும் வில்லும்' எனத் தம் நூலுக்கு அமைத்த அழகு பல்லோரையும் கவர்வதாக உள்ளது. 'கம்பரும் கச்சியப்பரும்' என்ற தலைப்பின் கீழ் அமைந்த ஒவ்வொரு பத்தியின் செய்தியைச் சுருக்கமான பொருட் செறிவுள்ள சொல்லாட்சியால் சிறு தலைப்புகளாகப் பிரித்தாலும் பத்தியின் இடையே இடப்புறத்திலும் குறித்துக் காட்டிடும் சிறப்பு நயமிக்கதாய் உள்ளது. 'நல்லரசும்வல்லரசும்', 'மூக்கறுபட்ட தங்கை', 'சீதையின் சிறைவாசம்', 'கையறுபட்ட தங்கை' என்ற பக்கத் தலைப்புக்கள் இவை போன்றனவாகும்.

## பொதுச் செய்திகள்

திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'வேலும் வில்லும்' என்ற நூலில் 'பிறவிப் பெரும் பிணி' போன்ற உருவகங்களும், கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே' என்பது போன்ற பழமொழிகளும், 'அந்தோ பாவியேன்' போன்ற வியப்புத் தொடர்கள் சிறியளவிலும் இடம்பெறுகின்றன.

## முடிவுரை

திரு ரா.பி. சேதுப்பிள்ளையும், திரு அண்ணாதுரையும் அடுக்குத் தொடர் நிறைந்த இசைநயமிக்க நடை மூலம் மக்களை இன்பக்கடலில் ஆழ்த்தினர் என்பது பல அறிஞர்களின் பொதுவான கருத்து. செந்தமிழ் நடையால், இலக்கிய நடையால், எளிய தெளிந்த நீரோட்ட நடையால் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனி இடம் பெற்று விளங்குகின்றார் திரு.ரா.பி. சேதுப்பிள்ளை என்றால் அது மிகையாகாது. தமிழ் கூறும் நல்லுலகம் இவரது தமிழ்ப் பணியை என்றும் மறவாது.

# விடியல்கள் ஒரு பார்வை

தமிழ்மொழி இனிமையும் இலக்கிய வளமும் கொண்டது. அவற்றோடு அமையாமல் இணையற்ற மெய்யறிவுக் கருத்துக்களையும் தன்னுள் கொண்டு விளங்குவது.

தமிழ்கூறு நல்லுலகம் போற்றிப் புகழும் சிறந்த சான்றோர் சேதுப்பிள்ளை. திண்ணைப் பள்ளியில் படிக்கும் போதே இவருக்குத் தமிழார்வம் துளிர்விட்டதே பின்னாளில் சிறந்த தமிழறிஞராக ஒளிவீசக் காரணம். 10 வயதிலே மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம் போன்ற அறநூல்களைப் பயின்றார்.

"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதற்கேற்ப, சிவஞானமாபாடியம் என்ற சைவசித்தாந்த சாத்திர நூலை மனப்பாடம் செய்து ஒப்புவித்த சேதுவின் செந்தமிழார்வத்தைக் கண்ணுற்ற செப்பறை அடிகளார், நீ பின்னாளில் பெரிய நாவலனாவாய் என்று மனமார வாழ்த்திய வாழ்த்துதான் பின்னாளில் சேதுவைச் சொல்லின் செல்வராகவே மாற்றிவிட்டது.

நல்லொழுக்கமும், நற்பண்பும், நேர்மையும் கொண்டவரான சேது, செந்தமிழின் சுவை கண்டு வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு, திருக்குறள், கம்பனின் கவிநயத்தையும் ஆழ்ந்து கற்று, தமிழ் இலக்கியத்தில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை இலக்கிய நயந்தோன்றச் செந்தமிழ் நடையில் எதுகை மோனையுடன் எங்கணும் தமிழ் மணம் கமழச் செய்தார்.

## தமிழகத்தின் நேரு

சேதுவின் மென்மைப் பண்பாலும், தமிழ்ப் புல்மையாலும் நாவன்மையாலும் 1924, 1926 மற்றும் 1928ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நகர்மன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, தமிழகத்தின் நேரு எனப் புகழப்பட்டு, தன்னலங்கருதாமல் திட்டங்கள் நிறைவேறப் பாடுபட்டார்.

சேதுப்பிள்ளையின் அறிவாற்றல், சிந்தித்துச் செயலாற்றுந் திறன், செயல் திட்டங்கள், அவருடைய நேர்மை ஆகியவற்றை வியந்து போற்றிய பல்கலைச் செல்வர் கா.சு. பிள்ளை அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றுவதிலும் நேர்மையிலும், நேருவைப் போன்ற நேர்மையான திறமையாளர்நம் சேதுப் பிள்ளையே என உளம் மகிழ்ந்து பாராட்டினார்.

## சட்டம் பயின்ற தமிழ்ச் சாதனையாளர்

சட்டம் பயின்ற தமிழ்ச் சாதனையாளர்களில் தனித்துவம் பெற்று விளங்குபவர் ராபி. சேதுப்பிள்ளை அவர்கள். 1930ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்ற சேதுவின் ஆங்கிலப் புலமைக்குச் சான்று சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும் என்ற நூல் இவரது திறமைக்கு உரை கல்லாக விளங்குகின்றது.

அதே பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து தமிழ் பற்றிக் கூறும் சுவைகள் எல்லாம் வெற்றுரை எனக் கூறிவந்த பேராசிரியர் சுந்தரம் அவர்கள் சிலப்பதிகாரம் பற்றிச் சேது அவர்கள் சொற்சுவை, பொருட்சுவை, இலக்கியச்சுவை ததும்பப் பேசிய சொற்பொழிவைக் கேட்டு, அன்பர் சேதுவே தமிழ் என்றால் இனிமை, இனிமை என்று இயம்புகின்றார்கள், அது பற்றின் காரணமாகக் கூறும் வெற்றுரை என்றே நான் இதுகாறும் எண்ணியிருந்தேன். இன்று தங்கள் தமிழ்ப் பேச்சைக் கேட்டபிறகுதான் தமிழ் இனிமை என்பது முற்றிலும் உண்மை எனக் கண்டேன்! இன்று முதல் நானும் நற்றமிழ் நூல்களைக் கற்று இன்புறுவேன் எனப் பாராட்டினார்.

தமிழின் சுவையறிந்தோர் பாராட்டுவது பெரிதன்று, தமிழ் பற்றித் தெரியாத வேறு துறையைச் சார்ந்தவர் அதன் சுவையறிந்து ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாமல் தானும் கற்பேன் என்று கூறுவது தான் மிகச் சிறந்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவரது பணி முடிந்த அன்று அளிக்கப்பெற்ற தேநீர் விருந்தில் கலந்து கொண்ட சுநீதி குமார் சட்டர்ஜி அவர்கள் சேதுவின் பேச்சைக் கேட்டு, "தமிழின் இனிமையே உருவெடுத்து வந்தது போல் இருக்கிறது தங்கள் பேச்சு" என்று போற்றிப் பாராட்டியது சேதுவின் சொல் வன்மையை உணர்த்தும் சிறந்த சான்றாகும்.

தமிழ் என்பது ஆழமும் அகலமும் உடைய ஒரு பெரிய கடல் போன்றது. தேனினும் இனிய திகட்டாத சுவை மிக்கது.

"வளர் தமிழ்" எவ்வளவு அழகான இலக்கணச் சொல், தமிழே இலக்கணம்தான்.

வளர்கின்ற தமிழ், வளர்ந்த தமிழ், வளரும் தமிழ் முக்காலத்தாலும் சுவைக்கக் கூடியது, இனியது, தமிழ்மொழி.

## தமிழாற்றல்

சட்டத்துறையில் பணியாற்றிய இவர் செந்தமிழால் ஈர்க்கப்பட்டுத் தீந்தமிழின் துறையில் புகுந்தவர். தமது நாவன்மையாலும், கேட்டார்ப்பிணிக்கும் தகைமையாலும் கேளாரும் கேட்கும் வகையில் சொற்பொழிவாற்றும் திறமையாலும் **"சொல்லின் செல்வர்"** என்ற புகழைப் பெற்ற பெருமகனார்.

## இவரது தமிழாற்றல் குறித்து

"எழுத்து, பேச்சு இரண்டும் வல்லார்; எதுகை மோனை இயைந்து வர எளிய இனிய தமிழில் குற்றால அருவி போல் குழைவாகப் பேசும் திறத்தினர்; சொல்லின் செல்வர்; செந்தமிழ்க்கிள்ளை சேதுப்பிள்ளை என்றேத்தப்படுபவர்; பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக இயங்கியவர்" என்று தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் என்ற நூலில் பாராட்டுவார் ஆய்வறிஞர் மது.ச. விமலானந்தம்.

வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டிருந்த போதிலும் இவரிடம் தமிழார்வம் குடிகொண்டிருந்தது. நெல்லை மாணவர் சங்கத்தில் தொடர்பு கொண்டு திருக்குறள் பற்றி உரை நிகழ்த்தினார். அதோடு நில்லாமல் வெளி இடங்களிலும் சென்று சைவ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார். அங்கு இவரது நாவன்மை நல்ல புகழைத் தேடித் தந்தது.

## நாவன்மையும் சொற்பொழிவும்

**நாநலம் என்னும் நலனுடைமை யந்நலம்**
**யாநலத் துள்ளதூ மன்று** *(641)*

என்பது வள்ளுவம். சொல்லாற்றல் மிக்கவர்களைத்தான் உலகம் மதித்துப் போற்றுகிறது. யாநலத்தினும் சிறந்ததாக வள்ளுவப்

பெருந்தகையால் கூறப்பட்ட நாநலம் ரா.பி. சேதுப்பிள்ளையிடம் மிகுந்திருந்தது. சொற்பொழிவாற்றலாலும் நயம்படக்கூறும் செறிவுமிக்க கருத்துக்களாலும் புகழ் பெற்றவர் சொல்லின் செல்வர்.

அவரது சொற்பொழிவுகளில் தமிழ் மணம் கமழும். எடுத்தாளப்படும் சொற்கள் ஒவ்வொன்றும் இதுவரை எவரும் கூறாத நடையில் நயங்களுடன் சுவைபட விளக்கம் தருவார்.

## தமிழிலக்கியப்பணி

**தமிழ் உண்டு தமிழ் மக்கள் உண்டு**
**நல்ல தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு**

என்பதையே வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றியவர்கள் பலர். அவர்கள் வரலாற்று ஏடுகளில் மட்டுமின்றி, மக்கள் நெஞ்சங்களிலும் நீங்கா இடம் பெற்று உள்ளனர்.

தமிழ் மொழியில் செந்தமிழ் நடையில் இலக்கியப் படைப்புகளைப் படைத்துத் தமிழன்னைக்கு வளங்கூட்டிய பெருமை மிக்கவர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை.

## விடிவெள்ளிகள் ஓர் அலசல்

### ஆய்வு நூல்கள்

தமிழ் மொழியில் திறனாய்வு நூல்கள் வெளியிடப்படாத குறையைத் தமது ஆய்வு நூல்களால் அகற்றியவர் செந்தமிழ் நிறை நிலா அறிஞர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள்.

### 1. திருவள்ளுவர் நூல் நயம்

இளமைப் பருவம் முதலே, திருக்குறளை மிகுந்த வேட்கையோடும், மனம் நிறைந்த ஈடுபாட்டோடும் கற்று வந்த சேது, கற்கக் கற்க இனிய கல்கண்டாகத் திருவள்ளுவரின் எல்லையிலாப் பேரறிவை எண்ணி, எண்ணி, இல்லை உலகில் இது போலொரு நூல் என வியந்து அதிசயித்துப் போனார். அந்த வியப்பின் வெளிப்பாட்டால் விளைந்த விடியல் தான் திருவள்ளுவர் நூல் நயம்.

1923இல் வெளியிடப்பட்ட இந்நூல் சேதுப்பிள்ளையின் ஆராய்ச்சிப் பாங்கை வெளிப்படுத்திய தோடு, தமிழ் மொழியின்

மேன்மைக்கு ஒளி ஊட்டியது. சிந்தனையைத் தூண்டும் சீரிய உரைநடை நூலுக்கொரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. அப்போது இவரின் வயது என்ன தெரியுமா? 27தான். அந்த இளம் பருவ மதி நுட்பத்தை, ஆய்வுப் பெரும் பணியை மூத்த தமிழறிஞர் பலரும் வியந்து நயந்து போற்றினர், புகழ்ந்தனர்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற குறளுக்கேற்பத் திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் என்னும் முப்பெரும் நூல்களையும் ஆழ்ந்து கற்றது, நுண்மாண் நுழைபுலம் போன்றது.

திருவள்ளுவரின் சிந்தனைகளுக்குரிய முழுமையான ஆய்வுப் பெருவடிவத்தை உருவாக்கிய முதல் நூல் எனப் புகழ்ந்து பாராட்டினார் சட்ட நூல் வல்லுநர் சான்றாண்மைப் பேராசான் பேறறிஞர் கா.சு. பிள்ளை அவர்கள்.

திருவள்ளுவருக்கு ஏழு என்பது பிடித்த எண்ணிக்கையோ! என்னவோ! தமது நூலுக்கு 7 சீர் கொண்ட குறட்பா வகையையே கருவியாக்கிக் கொண்டார். மொத்தப் பாடல்கள் 130, பாயிரத்தை நீக்கி,

| | |
|---|---|
| அறத்துப்பால் அதிகாரங்கள் 34 | பாடல்கள் 340 |
| பொருட்பால் அதிகாரங்கள் 70 | பாடல்கள் 700 |
| காமத்துப்பால் அதிகாரம் 25 | பாடல்கள் 250 |

எப்படிக் கூட்டினாலும் ஏழு என்ற கூட்டுத்தொகையே வரும். ஆக ஏழு வள்ளுவப் பெருந்தகையின் நெஞ்சைக் கவர்ந்த எண் எனத் தெரிகிறது. திருவள்ளுவரைக் கவர்ந்த ஏழு என்ற எண்ணையே தமது ஆராய்ச்சி நூலுக்குரிய பகுதிகளாகச் சொல்லின் செல்வர் கொண்டிருக்கும் அருமை மிகப் பெருமைமிக்கது. அவை

திருவள்ளுவர் பெருமை
திருக்குறள் பொதுநூல்
அறத்தின் திறம்
அரசியல் முறை
இன்ப இயல்

திருக்குறள் உவமைத்திறம்
திருவள்ளுவரும் பரிமேலழகரும்

இவ்வேழு பகுதிகளைக் கொண்டு உருவாக்கியுள்ள திருவள்ளுவர் நூல் நயம், சிறப்பையும் சேதுப்பிள்ளையின் ஆய்வுத் திட்பத்தையும் தம் முன்னுரையில் கா.சு. பிள்ளை அவர்கள், செவ்விய நிறைவு நூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்த பெரும்புலவர் இத்திருவள்ளுவர் நூல் நயம் எழுதிய திருவாளர் சேதுப்பிள்ளையே ஆவார் எனப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். திருவள்ளுவர் நூல் நயம் தந்த சேதுப்பிள்ளையின் தமிழாய்வுத் திறனில் உள்ள தனித்தன்மையை விளக்கும் மற்றொரு திறனாய்வு நூல் சிலப்பதிகார நூல் நயம்.

ஆசிரியர் பெருமை
அரசநீதியும் அரசியலும்
ஆரிய அரசரும் தமிழரும்
கண்ணகியின் கற்பின் திறம்
வினைப்பயன் பண்டைத் தமிழ்மக்கள் நாகரிகம்
சிலப்பதிகார நூல் நயம்

என்னும் ஏழு தலைப்புகளில் இந்நூல் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இளங்கோவின் பல்கலை நூலறிவையும் பண்பாட்டுக் கலையறிவையும் ஆய்வு நோக்கில் எடுத்துரைக்கும் கருத்துமிக்க இத்திருநூல் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனக் கூறிய பாட்டுக் கொரு புலவன் பாரதியின் திருவாக்கை மெய்ப்படுத்தும் திறனாய்வு நூல்.

சேதுப்பிள்ளையின் இலக்கியச் செறிவை ஆய்வறிவின் விரிவை இனிக்கும் உரைநடையால் படிக்கும் அனைவருக்கும் உணர்த்தி விடும் சீரிய நூலாகவும், சிலப்பதிகாரத்தின் நேரிய கருத்துக்களில் நின்றொளிரும் நெஞ்சுவக்கும் இனிய நயங்களைத் தெளிவுபடுத்தும் திறனாய்வாகவும் இந்தப் படைப்பு வெளியாகி உள்ளது.

### தமிழகம் – ஊரும் பேரும்

பேரறிஞர் சேதுப்பிள்ளை தமிழில் படைத்தளித்த உரைநடை நூல்கள் 17. அவற்றில் புகழைப் பெரிதும் ஓங்கச் செய்தது, மணிமுடியாகத் திகழ்வது தமிழகம் - ஊரும் பேரும்

என்ற ஆய்வு நூல். செல்வத்துட்செல்வமாகச் செந்தமிழுக்குச் சிறந்த சொத்தாயிற்று. இந்நூல் சேதுப்பிள்ளையின் ஆராய்ச்சித் திறனையும், இடைவிடா முயற்சியையும் எடுத்தியம்பும் தலை சிறந்த ஆராய்ச்சி நூல்.

இந்தியா விடுதலை பெற்ற பிறகு தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற அமைப்பு அந்நாளைய கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் அவர்களால் நிறுவப்பட்டது. இதன் முதல் பரிசை முதல் முறையாகத் தமிழகம் ஊரும் பேரும் என்ற இவ்வாராய்ச்சி நூலுக்காகச் சேதுப்பிள்ளை ஐந்நூறு வெண்பொற்காசுகளைப் பெற்றார்.

1300க்கு மேற்பட்ட ஊர்களின் பெயர்களை அரும்பாடுபட்டு ஆராய்ச்சி செய்து அவ்வூர்களின் பெயர்க் காரணங்களையும் அவற்றைப் பற்றிய வரலாற்றுப் பின்னணியையும் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு முகவுரை வழங்கிய திரு.வி.க. அவர்கள்,

> இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர், பேர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொறித்துள்ள குறிப்புகளும் பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெருவிருந்தாகும் என்பதில் ஐயமில்லை.
>
> தமிழ்நாட்டில் சில ஊர்ப்பேர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலைமையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந்நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை.
>
> நூலின் நடைக்கண் நடம்புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் கவலையை நீக்கி அதன் மாட்டு வேட்கையை எழுப்பி அதை ஊக்குவனவாகும்

எனப் பாராட்டியுள்ளார். இந்நூலைத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்று நூல் என்பர்.

## ஊர்ப் பெயர் விளக்கம்

### பேட்டை

தொழில்களால் சிறப்புறும் ஊர்கள் பேட்டை எனப்படும். சேலத்தின் மேல் பாகத்தில் செவ்வாய்ப்பேட்டை என்னும் சிற்றூர்

உள்ளது. வாரந்தோறும் செவ்வாய்க் கிழமையில் சந்தை கூடுமாதலால் அஃது அப்பெயர் பெற்றது என்பர்.

சென்னை மாநகரத்தில் கைத்தொழிலின் சிறப்பினால் தண்டையார் பேட்டை, வண்ணாரப் பேட்டை, சிந்தாதிரிப் பேட்டை என்றும், கருமார் தொழில் சிறப்பினால் கொல்லர் பேட்டை என்பது மருவி இன்று கொலைக்காரன் பேட்டையாகி விட்டது.

## புரம்

புரம் என்ற சொல் சிறந்த ஊர்களைக் குறிப்பது. தொண்டை நாட்டின் தலைநகரம் ஆதியில் கச்சி என்றும் காஞ்சி என்றும் பின்னர் அவ்வூரின் சிறப்புக் கருதி புரம் என்ற சொல் சேர்ந்து காஞ்சிபுரம் ஆயிற்று.

புரம் என்பது புரி எனவும் வழங்கும். சேலத்தில் தருமபுரி எனும் ஊரும், தேவாரத்தில் திருநெல்வாயில் எனக் குறிக்கப்பட்ட ஊரும் இன்று சிவபுரியாயிருக்கின்றன.

## புது

புதிதாகத் தோன்றும் ஊர்கள் புது என்னும் அடைமொழியைப் பெரும்பாலும் பெற்று வழங்கும். புதுக்கோட்டை, புதுச்சேரி, புதுக்குடி, புதுப்பேட்டை, புதுவயல் முதலிய ஊர்ப் பெயர்களால் அவ்வூர்கள் புதிதாக வந்தவை என்பது வரலாற்றுக் கண் கொண்டு நோக்குவோர்க்கும் பெரும் பயன் தரும்.

## தமிழின்பம் நூல் சிறப்பு - 1948

1955ஆம் ஆண்டு இந்தியப் பேரரசின் சார்பில் இயங்கும் கலைக்கழகம் ஒன்று தமிழின்பம் என்ற சேதுப்பிள்ளையின் படைப்புக்கு ஐயாயிரம் வெண்பொற்காசுகள் வழங்கியது.

## அலையும் - கலையும்

1958இல் வெளிவந்த தமிழகம்-அலையும் கலையும் தமிழ்நாட்டின் கலைச்சிறப்பையும் கலைவளர்த்த நகரங்களின் நல்லியல்புகளையும் ஆய்கின்றது.

இந்நூலில் அடங்கிய 21 கட்டுரைகளும் இடம் பெற்ற இடங்களும் பின்வருமாறு:

| கட்டுரையின் பெயர் | இடம் பெற்ற இடம் |
| --- | --- |
| 1-3 சேர, சோழ, பாண்டிய நாடு | இலங்கை வானொலி நிலையப் பேச்சு |
| 4. சென்னைக் கடற்கரை | கல்கி தீபாவளி மலர் |
| 5. சென்னை விலங்ககம் | நூற்றாண்டு விழா |
| 6. புதுவை மாநகரம் | |
| 7. திருவள்ளுவர் -எல்லீசர் உரை | சென்னை வானொலி நிலையப் பேச்சுகள் |
| 8. மேடைப்பேச்சு | |
| 9. கொச்சைத்தமிழ் | |
| 10. ஒலிச்சித்திரம் | சென்னை வானொலி |
| 11. ஆடையும் அணியும் | நிலையப் பேச்சுகள் |
| 12. நறுமணம் | |
| 13. மதுரை மாநகரம் | |
| 14. பரங்கியர் போன வழி | ஆனந்தவிகடன் தீபாவளி மலர் |
| 15. மேலைநாட்டு அறிஞரின் கலைத்தொண்டு | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் |
| 16. நான் கண்ட சோழவந்தான் | சுதேசமித்திரன் பொங்கல் மலர் |
| 17. கலைச் சொல்லாக்கம் | கோவையில் சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாடு (கலைச் செல்வன் மாநாடு) |
| 18. நீலகிரிச் செல்வம் | மாட்டுப் பொங்கல் நிகழ்ச்சி |
| 19. என்றுமுளதென்தமிழ் | |
| 20. வள்ளுவரும் / பாரதியாரும் | சென்னை வானொலி |
| 21. திருச்செந்தூர் | நிலையப் பேச்சுகள் |

தனித்தமிழ் நடை இவருக்குப் பிடித்தமானது. எதுகை மோனை இன்பங்கருதிக் கூட இவர் வடமொழிச் சொற்களைக்

கையாளுவதில்லை. அவர்தம் தனித்தமிழ் ஆரவாரமற்றது. திட்ப நுட்பம் சான்றது.

அருமையான தமிழ்ச்சொல் ஒன்று இருக்க ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ? தமிழ்ச் சொல்லானது கருப்பிற்கு ஒப்புமைப் படுத்துகிறார்.

## தமிழில் பேசினால் தண்டனையா?

சேவியர் உயர்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படிக்கும் போது வரலாற்று ஆசிரியர் ஞானப்பிரகாச சுவாமிகள் என்னும் பாதிரியாரின் கட்டளைப்படி ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும்; மறந்தோ, தவறியோ தமிழில் ஒரு சொல்கூட மாணவர்கள் பேசலாகாது; அவ்வாறு பேசினால் ஒரு சொல்லுக்கு ஒரு காசு தண்டனையாகச் செலுத்த வேண்டும். அதன்படி மிகுதியாகத் தண்டனை செலுத்தியது மாணவர் சேதுவே ஆகும்.

பின்னாளில் ஞானப்பிரகாசர் அவர்கள் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் இருந்தபோது அங்கு நடைபெற்ற வீரமாமுனிவர் விழாவில் பேசுவதற்கு சேது அழைக்கப்பட்டார்.

ஞானப்பிரகாசருக்கு அப்போது அகவை 85. சேதுவைக் கண்டதும் எழுந்து உட்கார்ந்து அன்போடு தமிழில் பேசினார். அதுகண்டு மகிழ்ந்த சேது,

"தங்ளிடம் பயின்ற காலத்தில் தங்கள் வகுப்பில் தமிழ் பேசியதற்காகச் சொல் ஒன்றுக்கு ஒரு காசு வீதம் தண்டனை செலுத்தினேன். இன்று தங்கள் கல்லூரி விழாவில் இரண்டாயிரம் தமிழ்ச் சொற்களுக்குக் குறையாமல் பேசப் போகிறேனே. அதற்கு முன்னதாகவே தண்டனைப் பணத்தைத் தங்களிடம் கட்டி விடலாமா? எனப் பணிவன்புடன் கேட்க, அந்நாளில் ஆங்கிலம் தேவைப்பட்டது; இன்றோ எங்கும் தமிழ் எதிலும் தமிழ் ஆதலின் நானே இப்போது தமிழில்தானே பேசுகிறேன் என்று அன்புடன் கூறினார்.

இந்நூலின் மூலம் பல புதிய சொற்கள் எப்படித் தோன்றின? பழைய சொற்கள் எப்படித் தோன்றி மறைந்தன என்பது குறித்து அழகாகச் சான்றுகளோடு விளக்கமளித்துள்ளார். பழையன கழிதலும், புதியன புகுதலும்

நல்ல வரவேற்பைப் பெற்றதுடன் தமிழ் மண்ணானது ஏற்றுக் கொண்டதுதான் பெருமதிப்பு தரக்கூடிய செயலாகும்.

*சான்று*

| | | |
|---|---|---|
| பரங்கியர் | - | போர்ச்சுக் கீசியர் |
| பறையாமல் | - | சொல்லாமல் |
| விண்ணானம் | - | விஞ்ஞானம் |

*ஆற்றங்கரையினிலே*

*1961இல்* அவருடைய வெள்ளி விழாவின் போது வெளியிடப் பெற்றது ஆற்றங்கரையினிலே என்ற அரிய நூலாகும்.

தமிழ்நாட்டில் ஓடும் ஆறுகள், அவ்வாற்றங்கரையினில் அமைந்த நகரங்களின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கியது இக்கட்டுரைத் தொகுப்பு நூல். இவர்தம் நடையில் எதுகையும் மோனையும் மிகுதியாக இடம் பெறும்.

மயிலைக் கடற்கரையின் அழகுக்கு அழகு செய்தது ஓர் அல்லிக்குளம். மண்ணீரும் ஆகாத முந்நீரின் அருகே நல்ல தண்ணீர் உதவி நின்ற அம்மணற்கேணியை அல்லிக்கேணி என்று மயிலையார் அழைத்தார்கள். அதைச் சுற்றி எழுந்தது ஒரு சிற்றூர். தொண்டை நாட்டு மன்னன் அதன் அண்டையில் திருமாலுக்கு ஒரு கோயில் எடுத்தான். அவர் அருளால் ஊர் சீராயிற்று. அல்லிக்கேணி திருவல்லிக்கேணி ஆயிற்று.

தமிழக ஆறுகளின் சிறப்பு, அவற்றின் கரைகளில் அமைந்த நகரங்களின் வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு இவற்றை எடுத்துக் கூறும் நூல் இந்நூல்.

*திருவரங்கம்*

பொன்னும் பொருளும் தேடி அல்லும் பகலும் அலைகின்றதே! இன்றுளார் நாளை மாள்வார் என்பதை உணராது இறுமாந்திருக்கின்றதே! பொருள் அல்லவற்றைப் பொருளாகக் கருதும் மருள் நிறைந்த இம்மாந்தருடன் சேர்ந்து நான் வாழ மாட்டேன் எனப் பேசும் குலசேகரப் பெருமாளின் எண்ணத்தைச் சேது அழகாக வடிவமைத்து உள்ளார்.

இந்நூலில் இலக்கியச் சுவையும் வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த இக்கட்டுரைகள் தொண்டை நாட்டின் பழந் தலைநகராகிய காஞ்சி முதலாக ஈழ நாட்டின் புகழ் பெற்ற தலமாகிய கதிர்காமம் ஈறாக நாற்பத்தெட்டு ஊர்களின் பெருமையைப் பேசும் அருமை உடையன.

முத்தமிழின் முழக்கத்தை நாடு முழுவதும் பரப்பும் இந்நூல் தமிழ்த் தாய்க்குச் சிறந்ததோர் அணி. இந்நூலின் இறுதியில் தொகுத்துள்ள மேற்கோள் பாடல்கள் தமிழ்ச் சான்றோர்க்கு மட்டுமல்லாமல் தமிழ்ச் சுவையறிந்தோர்க்கும் பெருவிருந்தாகும்.

### தமிழ் விருந்து

"பசி வந்திடப் பத்தும் பறந்திடும்" என்பது பழமொழி. தன்மானம், சுயமரியாதை, கௌரவம், நேர்மை, பகுத்தறிவு போன்ற நற்குணங்களும் செயல்களும் பசி வந்திடப் பறந்திடும். "செவிக்குணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்". தமிழ்க் கலைகளின் தன்மை, தமிழ் இலக்கியத்தின் சீர்மை, தமிழ் மொழியின் செம்மை, தமிழரது வாழ்க்கையின் மேன்மை போன்று 4 கூறுகளை உள்ளடக்கி இலக்கியப் பசி மிகுந்தவர்களுக்கு எளிய உணவாகவும், இனிய விருந்தாகவும் 1945இல் வெளிவந்த நூல் **தமிழ் விருந்து**.

இந்நூலின் சிறப்பம்சம் 20 தலைப்புகளுமே சொற்பொழிவுகள், 16 சென்னை வானொலி நிலையப் பேச்சுகள், 2 சென்னை மதுவிலக்குச் சங்கத்தின் ஆண்டுவிழாவிற் செய்த சொற்பொழிவின் சுருக்கம், 2 திருச்சி வானொலிப் பேச்சுகள்.

### கால்டுவெல் ஐயர் சரிதம் – 1936

திராவிட மொழிகள் நூலின் தந்தை என்றழைக்கப்பட்ட அயர்லாந்து அறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்களின் தமிழ்த் தொண்டினைத் தேனீயிலும் சுறுசுறுப்பாய்ச் சிறகடித்துப் பறந்து செய்தித் தேனைச் சேகரித்துத் திரட்டியிருக்கிறார் ரா.பி. சேதுப்பிள்ளை என்பது இந்நூலின் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

சமயப்பணியின் பொருட்டு இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கால்டுவெல், தமிழ்தான் பழமையான மொழி

என்றும், தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்து விளங்கியவர்கள் என்றும் ஆராய்ந்து கூறியவர். தமிழுக்கு ஒப்பிலக்கணம் படைத்தவர்.

திருக்குறளையும், சிந்தாமணியையும், பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூலையும் படித்துத் தமிழ்ச் சொற்களின் நுட்பம் உணர்ந்து புலவரானார். புதுமைகளை ஆராயும் மனப்பாங்கு கொண்டவர் கால்டுவெல்.

இவர் செய்த மொழி ஆராய்ச்சி போல் அதற்கு முன்பு யாரும் செய்திருக்க மாட்டார்கள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி என்று தமிழைச் சொன்னாலும், அதை ஆதாரத்தோடு நிரூபிக்க இயலாமல் தமிழர்கள் திண்டாடினார்கள். அதை ஆதாரத்துடன் நிறுவியவர் வெள்ளையரான கால்டுவெல்.

தமிழில் உள்ள "ழ" என்ற சிறப்பெழுத்து எந்த மொழியிலும் இல்லாத ஒன்று. இந்த எழுத்துடன் கூடிய பல சொற்கள் திரிந்து பல மொழிகளில் இன்னும் வழங்கி வருவதைக் கால்டுவெல் கண்டுபிடித்துத் தெரியப்படுத்தினார். கோழிக்குச் சிந்து மொழியில் கோரி என்ற பெயர் இருப்பதையும், கிரேக்க மொழியில் அரிசிக்கு அருசா என்றிருப்பதையும், அதைப்போலவே கன்னடம், தெலுங்கு போன்ற மொழிச் சொற்கள் பெரும்பாலானவற்றின் இயற்சொற்கள் தமிழாக இருப்பதையும் கால்டுவெல் எடுத்துக் காட்டினார்.

தென்னிந்தியக் குடும்பத்தில் ஆறுமொழிகள் திருந்திய மொழிகள் என்றும், 6 மொழிகள் திருந்தாத மொழிகள் என்றும் கால்டுவெல் திறம்படக் காட்டிப் போந்தார்.

| திருந்திய மொழிகள் | திருந்தாத மொழிகள் |
|---|---|
| தமிழ், தெலுங்கு | நீலகிரியில் - தோடிமொழி |
| கன்னடம், மலையாளம் | கொண்டவனம் - கொண்டா |
| துளுவம், குடகு | ஒரிசா நாடு - கூவர் |
| | நாகபுரியில் - ஒரியா |
| | ராசமால் கிரியில் - மேலா |
| | பெருசிஸ்தானம் - பிராகி |

திராவிட மொழிகளுக்கே சிறப்பாக உரிய பல கூறுகளைக் கால்டுவெல் அறிஞர் ஒப்பிலக்கணத்தில் விளக்கிக் காட்டியுள்ளார்.

கால்டுவெல், பொருனை நாட்டின் வரலாற்றைத் திறம்பட வரைந்துதவிய சிறந்த வரலாற்று ஆசிரியராகவும் விளங்குகின்றார்.

50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்ப்பணி புரிந்த அந்த அறிஞர், தாய் நாட்டுக்குச் செல்வதை விடுத்துத் தமிழ் நெஞ்சங்களோடு ஒருவராய் வாழ்ந்து தமது 77ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். அவர் உடல் அவர் கட்டிய இடையன்குடி தேவாலயத்தின் ஒரு பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டது.

### கடற்கரையிலே – 1950

தமிழகத்தின் செழுமையும் செம்மையும் பழமையும் பண்பாடும் இக்கட்டுரையில் சிறந்து விளங்குகின்றன. இக்கட்டுரையின் சிறப்பம்சம் இதில் இடம்பெற்றுள்ள 20 கட்டுரைகளும் கற்பனையே.

விருதைத் தமிழ்க்கழகத்தின் சார்பில் வெளியிடப் பெற்ற "தமிழ்த் தென்றல்" என்ற திங்களிதழில் வெளிவந்த 20 கட்டுரைகளின் தொகுப்பே **கடற்கரையிலே.**

இந்நூலில் தொகுக்கப்பட்ட 20 கட்டுரைகளும் தமிழ் வளர்த்த, தமிழுக்காகவே வாழ்ந்த சான்றோர்களைப் பற்றியன. இதில் இடம்பெற்ற ஊர்களும் அதன் காவியத் தலைமகனும் மகளுமாக இருப்பது கடற்கரையின் ஓரமாக உள்ளதுவே.

ஒவ்வொரு கட்டுரைகளையும் தொகுக்கும் போது அது சார்ந்த செய்தியினைப் புறநானூறு, ஆற்றுப்படைகள், தேவாரம், பட்டினத்தார் பாடல்கள், பெருந்தொகை, படிக்காசுப் புலவர் பாடல்கள் போன்றவற்றை எடுத்து மேற்கோள் காட்டி விளக்கி உள்ள விதம் அருமை. கவிஞரும், கலைஞரும் உரையாடுவது போன்று அமைந்தது இந்நூல்.

### வேலும் வில்லும்

முருகன் பெருமை, மூவர் தமிழும், கம்பரும் கச்சியப்பரும் என்ற 3 கட்டுரைகளின் தொகுப்பே **வேலும் வில்லும்** என்ற செந்தமிழ்ச் சுவை சொட்டும் நூலாகும். தமிழ்ச்சுவை மட்டும்

சுவைத்து இன்பம் கண்டது போதாது என இறைவனின் அன்புச் சுவையும் சுவைத்துச் சுவைபட இந்நூலைப் படைத்துள்ளார்.

கந்தர் அலங்காரம் ஒரு தமிழ்க் கவிதையின் சிறப்பு. இறைவனை அலங்கரித்து ஆனந்தக் கூத்தாடுவான் பக்தன். இந்த வகையில் கந்தப் பெருமானைச் செந்தமிழாலும், சங்கத் தமிழாலும் அலங்கரித்தோர் பலர். ஆனால் சந்தத் தமிழால் அலங்கரித்தார் அருணகிரியார்.

திருப்புகழ் என்னும் சந்தத் தமிழ் மாலை அணிந்த பின்னரும் ஆராத அன்பினால் அலங்காரம் ஒன்று செய்தார் அருணகிரியார். அதுவே கந்தர் அலங்காரம்.

அருணகிரிநாதர் படைத்த கந்தர் அலங்காரம் ஏற்கெனவே சந்தத் தமிழால் சிறப்புப் பெற்றது. அதை மேலும் தன் செந்தமிழால் மெருகூட்டிப் படிப்பவர் உள்ளத்தே ஆர்வம் பொங்கச் செய்தவர் செந்தமிழ்க்கிள்ளை ரா.பி. சேதுப்பிள்ளை.

## தமிழர் வீரம்

1947இல் வெளிவந்த தமிழர் வீரம் என்ற நூல் தமிழர் தம் போர்த் திறத்தையும், படைத்திறத்தையும் விளக்குகிறது.

தமிழரது போர் அற ஒழுக்கமான 5 துறைகளை உள்ளடக்கியது. முறையே வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை பண்டைத் தமிழர் போர் மரபும், மறமாண்பும், வீரர் அறப்பரிசும் உள்ளடக்கிய செய்திகளை மிகவும் அழகாக, சொல்வளமும், பொருள் வளமும் கொண்டு இந்நூலினைச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை படைத்துள்ளார்.

சிலப்பதிகாரம், திருக்குறள், புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, திருத்தொண்டர் புராணம், தொல்காப்பியம், புறத்திணை, மு. இராகவையங்கார் - ஆராய்ச்சித் தொகுதி, பெருந்தொகை போன்ற பெருநூல்களிலிருந்து மேற்கோள் காட்டி இதில் அழகுற எடுத்துக் கூறப்பட்டு உள்ளது. என்னே! அவரின் புலமைத்திறம்.

### வேலின் வெற்றி – 1954

விமலன், கார்த்திகேயன், குழகன், தண்டாயுதபாணி, கந்தன், செந்தில்நாதன், சரவணன், சுப்பிரமணியன், குமரன்,

ஆறுமுகம், முத்துக்குமரன், பழநி, வேலாயுதன், வேலவன், சண்முகன், மால்முருகன், வடிவேலன், கடம்பன்.

இவைபோன்ற இன்னும் பல சிறப்புப் பெயர்களைக் கொண்ட அழகன் முருகனின் புராணத்தைச் சென்னை கந்தகோட்டத்தில் 10 ஆண்டுகளாகக் கந்தபுராணம் வகுப்பு சொற்பொழிவின் தொகுப்பே வேலின் வெற்றி நூல்.

அவ்வகுப்பிற்காகக் கந்தபுராணத்தில் ஏறத்தாழ 1500 பாடல்களைத் திரட்டிச் சொற்பொழிவாற்றி உள்ளார். முருகனின் பிறப்பின் அவசியம் முதற்கொண்டு பசுந்தினைப்பயிர் நிறைந்த புனத்திற்குள்ளே வள்ளிக்கிழங்கெடுத்த குழியில் சுடரொளி போன்ற குழந்தையான வள்ளியைக் கண்டெடுத்துத் திருமணம் செய்து தெய்வானையுடன் இறுதியில் காட்சி கொண்டது வரை அழகுறச் செல்வச் செழிப்புடனும் மிடுக்குடனும் ரா.பி. சேதுப்பிள்ளை படைத்துள்ளார் இந்நூலை.

### தமிழகப் பெண்மணிகள்

தமிழ்நாட்டின் தவப்புதல்விகளான ஆதிரை, விசாகை, மருதி, கோப்பெருந்தேவி, மணிமேகலை, கண்ணகி, புனிதவதி, மங்கையர்க்கரசி, திலகவதி, முதலான 9 பெண்மணிகளின் பெருமைமிகு வரலாற்றைக் கூறும் நவமணிகளின் வரலாற்று நூல் தமிழகப் பெண்மணிகள்.

ஒவ்வொருவருடைய கற்பின் திறன், சிறப்பு போன்றவற்றைப் பிறர் படிப்போர் வண்ணம் அழகாகக் கொண்டு சென்று இந்நூலைப் படைத்துள்ளார்.

ஒருவர் ஆராய்ச்சித் திறனுடையவராகவோ அல்லது சிறந்த எழுத்தாளராகவோ அல்லது ஓர் உயர்ந்த பேச்சாளராகவோ, ஏதாவதொரு துறையில் புகழ்பெற்றுத் திகழ்வர். தலை சிறந்த எழுத்தாளர் பலர் மேடை ஏறிப் பேச இயலாதவராக இருப்பர். மிகச் சிறந்த பேச்சாளர்கள் ஒரு நூலும் எழுதியிருக்கமாட்டார். ஆனால் ஒரு சிலர் தம் பேச்சாலும் எழுத்தாலும், ஆராய்ச்சித் திறனாலும் புகழ் வாய்ந்தவராக இருப்பர். திறனாலும் புகழ் வாய்ந்தவராக இருப்பர். அவருள் ஒருவரே ரா.பி. சேதுப்பிள்ளை.

இவ்வாறு எழுத்து, பேச்சு, ஆராய்ச்சி என முப்பெரும் ஆற்றல் பெற்றவராகத் திகழ்ந்த சேதுப்பிள்ளையே, இலக்கிய உலகில் புதியதோர் மாற்றத்தை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் என்று அறிஞர்கள் போற்றிப் பாராட்டினர்.

**தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை** என்பது பாவேந்தர் வாக்கு. அவ்வாக்கு இவர் தொண்டிற்கு முற்றிலும் பொருந்துவதாயிற்று. அதாவது நோய் நொடி இன்றி உடல் நலத்தோடு நீண்ட காலம் வாழ இத்தமிழ்த் தொண்டே உதவியது.

**விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்**

என்ற குறளுக்கு இலக்கியமாகத் திகழ்ந்தார். இவரது செந்தமிழ் நடை செய்யுளோசை ஒழுகுகின்ற தெள்ளிய தமிழ்நடை என நாவலர் சோமசுந்தர பாரதியாரால் போற்றப்பட்டது.

# ஒப்பீட்டுக் கட்டுரைகள் - ஓர் ஆய்வு

நான்கு நூல்கள் மட்டும் இவ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கட்டுரைகளின் அமைவாக்கம் பற்றியும் ஆசிரியரின் தனித்தன்மைகளும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றன.

## சொற்பொருள் விளக்கம்

ஆசிரியரின் கட்டுரைகளில் 'சொல்' ஆய்வு - பொருள் விளக்கம் - வேர்ச்சொல் ஆய்வுகள் நிரம்ப உள்ளன.

**காதல்:** காதல் என்ற சொல்லுக்கு விளக்கம் சொல்ல வந்த ரா.பி. சேதுப்பிள்ளை இறைவன் மேல் வைப்பதும் காதல், பிள்ளைகளின் மேல் செலுத்துவதும் காதல், ஆண், பெண் இருபாலரிடத்து இருப்பதும் காதல், நட்பும் காதல் என்றெல்லாம் கூறி அதற்கான காட்டுகளையும் காட்டி இறுதியில் "சுருங்கச் சொல்லின் "தலைசிறந்த அன்பே காதல்" என்கிறார் (தமிழின்பம், ப.74).

**கற்பு:** கற்புப் பற்றிச் சொல்லும் பொழுது "காதல் என்பது உணர்ச்சி, கற்பு என்பது ஒழுக்கம் உணர்ச்சியால் ஒன்றுபட்ட நம்பியும், நங்கையும் (தலைமகனும், தலைமகளும்) ஒருவரை ஒருவர் தமக்கே உரியவராகக் கொண்ட நிலையிலே தோன்றும் ஒழுக்கமே கற்பு என்பர்" (தமிழ் இன்பம், ப.77) என்று பொருள் கூறுகின்றார்.

**காமம்:** "காமம் என்பது வடசொல். இன்பம் என்னும் பொருள் அதற்குண்டு. ஆயினும் காலகதியில் காமம் என்பது துன்மார்க்கத்திற் பெறும் இன்பத்தைக் குறிப்பதாயிற்று. காமி, காமுகன் முதலிய சொற்கள் தூர்த்தன் என்ற பொருளிலே வழங்குகின்றன. காமுகன் - கல்வி கற்பதற்கும் தகுதியற்றவன் என்று நன்னூல் கூறுகின்றது" (தமிழ் இன்பம், ப.76) என விரிவாக ஆய்ந்து குறிப்பிடுகிறார்.

**கனி:** கனி என்ற சொல் சாவாமருந்தைப் போன்ற பழத்தையே குறிக்கும் என்ற பரிமேலழகர் கருத்தை ஏற்கிறார். கனி

என்னும் சொல் பொதுவாகப் பழங்களை எல்லாம் உணர்த்துமாயினும் சிறப்பு வகையில் அமிழ்தம் பொழியும் இன்பம், (ப.144) என்று பிறர் கருத்தைச் சான்று காட்டி ஏற்கச் செய்கிறார்.

## சிவம் - சிவகதி - சைவம் - சைவசமயம்

சிவம் என்ற சொல்லுக்கு மங்களம் என்றும் சிவகதி என்பதற்குப் பேரின்ப நிலையாகிய முக்தி என்றும் சைவம் என்ற சொல்லுக்குச் சிவகதியிற் கொண்டு சேர்க்கும் நெறி என்றும் சைவசமயம் என்பதற்குச் சிவன் என்னும் மங்கலப் பொருளை வழிபட்டுச் சிவகதியை அடைவதற்கு வழிகாட்டும் சமயமே சைவசமயமாகும் என்றும் பொருள் விளக்கம் கூறித் தெளிவு படுத்துகிறார் (தமிழ் இன்பம், ப.170).

## திரிபதார்த்தம்

"பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுக்குப் பதி என்பது கடவுள்; பசு என்பது உயிர்; பாசம் என்பது கட்டு என விளக்கம் கூறுகிறார். வீடு பேறு என்ற சொல்லுக்குப் "பசுவாகிய உயிர் பாசமென்னும் கட்டறுத்துப் பதியுடன் இரண்டறக் கலந்து விடுதலே வீடு பேறு ஆகும்" (தமிழ் இன்பம், ப.173) என்ற எளிய விளக்கம் தருகிறார் ஆசிரியர்.

## சாக்கிய மதம்

சாக்கிய மதம் எனப் புத்தமதத்திற்கு ஏன் பெயர் வந்தது எனில் "புத்தர் சாக்கிய குலத்திற் பிறந்தவராதலால் அம்மதத்தைச் சாக்கியம் என்று சொல்வதுண்டு" (தமிழ் இன்பம், ப.177) எனக் காரணம் கூறுகிறார். சொல்லுக்குப் பொருள் - வேர்ச்சொல் பற்றிய விரிவான பகுதி ஒப்பீட்டுப் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

## மொழிநடை

### பாட்டு உரைநடை

மொழிநடை பற்றிப் பொற்கோ குறிப்பிடுகையில்

முன்பின் தொடர்பில்லாமல் ஒரு பக்கத்தை ஒரு நூலிலிருந்து அல்லது இதழிலிருந்து எடுத்து நாம் படித்துப் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம்.

> நாம்படித்த பகுதி ஒரு சிறுகதைப் பகுதியா, நாடகப்பகுதியா, கவிதைப்பகுதியா, கட்டுரைப் பகுதியா என்பதை நாம் எளிதாகவே தெரிந்து கொள்ள முடியும். அப்படித் தெரிந்து கொள்ள நமக்கு உதவியாக இருப்பது எது? முன்பின் தொடர்பு இல்லை; எழுத்து வடிவில் ஒரு முழுமை இல்லை; அப்படிப்பட்ட சூழலில் கூட அதை நாம் தெரிந்து கொள்கிறோம் என்றால் அதற்குக் காரணம் மொழிநடைதான் என்று சொன்னால் அது தவறாகாது

(ஆராய்ச்சி நெறிமுறைகள், பொற்கோ, ப.43) என்று குறிப்பிடுகிறார். அதுபோலவே அறிஞர்களின் நூல்களைப் படிக்கும்போது ஒவ்வொருவருக்கும் ஒருமொழிநடை, தனித்தன்மை இருப்பதை உணரலாம். அவ்வாறே ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் மொழிநடையில் புகழ்பெற்ற இலக்கியப் பாடல் அடிகளை உரைநடையிலேயே அமைப்பது இவர் தம் தனிச் சிறப்பாகும்.

**முன்னோர் மொழி பொருளே யன்றி அவர்மொழியும்**
**பொன்னே போல் போற்றுவம் என்பதற்கும்–முன்னோரின்**
**வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் என்பதற்கும்**
**கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்**

**(நன்னூல்–பொதுப்பாயிரம், சூ.9)**

என்று நன்னூல் கூறுதற்கேற்ப அவர்தம் மொழிநடையில் முன்னோர் மொழி பொருளும், மொழியும் பொன்னே போல் போற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.

## திருவாசகம்

திருவாசகத்தில் தோய்ந்து ஆசிரியர் சில பாடலடிகளை, சொற்களை இக்கட்டுரைகளில் உரைநடையில் அமைக்கிறார். இதனைப் பாட்டு உரைநடை எனலாம். தலைவி வளர்த்த பைங்கிளியை மறந்து தலைவி நீராடுகின்றாள். அதனை ஆசிரியர், "பால் நினைந்தூட்டி" வளர்த்த பசுங்கிளியின் பசியையும் மறந்து தலைவி நீராடத் தலைப்பட்டாள்" (தமிழ்இன்பம், ப103) என்று குறிப்பிடுகின்றார்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய

**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உவப்பிலா ஆனந்தமாய் . . . .**
**(திருவாசகம், பிடித்த பத்து)**

இத்திருவாசகப் பாடல் அடிகள் ஆசிரியர் மனத்தில் பதிந்திருந்தமையால் அதனை இயல்பாகவே உரைநடையில் பயன்படுத்துகிறார். மேலும், பட்டினத்தார் காளத்தி நாதனை வழிபட்ட திறத்தைக் கூறும்போது "மெய்யடியார் போல் நடித்து வீடகத்தே புகுந்திட விழைகின்றேன் என்று உள்ளத் துறவமைந்த உயரிய அடிகள் உருவாராயினார்". (தமிழ்இன்பம், ப.219) என்று கூறுகின்றார். இதன் ஆரம்ப அடிகள்,

**நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே**
**வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்**
**(திருவாசகம்-அறிவுறுத்தல்)**

எனும் திருவாசகப் பாடல் அடிகளின் உரைநடையாக்கமாகும்.

## புறநானூறு

'முருகனும் முழுமதியும்' என்ற கட்டுரையில் முருகனின் நடையழகை ரா.பி. சேதுப்பிள்ளை கூறுகையில் "குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி முகம் மலர்ந்து அளவிலா இன்ப முற்றான்" (தமிழ் இன்பம், ப.106) என்று குறிப்பிடுகிறார். இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்ட புறநானூற்றில் பாண்டியன் அறிவுடை நம்பி பாடிய,

**படைப்புப் பலபடைத்து பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும். . . .**
**(புறநானூறு. 188)**

என்ற பாடலின் அடிகளாகும். மேலும் 'கர்ணனும் கும்பகர்ணனும்' என்ற கட்டுரையில் நன்றியின் பெருமையை எடுத்துரைக்கும் கம்பர் பாடலை மேற்கோள் காட்டி உரைவகுக்கும் போது,

"அற நூல்களில் கழுவாயும் உண்டு: ஆனால் செய்ந்நன்றி சிதைத்தோர்க்கு எஞ்ஞான்றும் உய்யும் வழி இல்லை"
(தமிழ் இன்பம், ப.207)

என்று விளக்கம் கூறுகிறார். இது,

*ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்*

*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .*

*வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன*
*நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்*
*செய்தி கொன்றோர்க்கு உய்தி இல் என*
*அறம்பாடிற்றே ஆயிழை கணவ (புறநானூறு. 34)*

என்ற புறப்பாடலடிகளை உரைநடையாக்கம் செய்து அணி செய்தமையாகும்.

**திருமுருகாற்றுப்படை**

சொல்லின் செல்வரின் 'காயும் கனியும்' என்ற கட்டுரையில் அதியமானின் மலையை வருணிக்கும் போது,

*மந்தியு மறியா மரங்கள் செறிந்த தென்மலை*
*(தமிழ் இன்பம், ப.142)*

என்றெழுதுகிறார். இது திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் அருளிய,

*மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்து*
*(திருமுருகாற்றுப்படை 42ஆம் அடி)*

என்ற அடியின் பாட்டு உரைநடையாகும்.

**சிலப்பதிகாரம்**

பாரியும் மாரியும் என்ற கட்டுரையில் பாரியது பறம்பு மலை வளம் கூறும் போது, "பசியும் பகையும் இன்றி வசியும் வளனும் பெருகிய அம்மலை (தமிழ் இன்பம், ப.150) என வழங்குகிறார். இது

*பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி*
*(சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதை)*

என்ற சிலப்பதிகார அடிகளை எடுத்து எழுதியமையாகும்.

**மணிமேகலை**

அதே கட்டுரையில் பாரியை "அற்றார்க்கும் அலர்ந்தார்க்கும் அவன் உற்ற துணைவன்; பசிப்பிணி என்னும் பாவியின் பெரும்பகைவன்" என்று குறிப்பிடுகிறார். இதில் . . .
(தமிழ் இன்பம், ப.150)

குடிப்பிறப்பழிக்கும் விழுப்பம் கொல்லும் . . . .பசிப்பிணி
என்னும் பாவி (மணிமேகலை)

எனும் மணிமேகலை அடிகள் அணிசெய்யப்பட்டுள்ளன.

## பெரியபுராணம்

காளத்தி வேடனும் கங்கை வேடனும் என்ற கட்டுரையில் கண்ணப்பன், குகன் இருவரும் பயன் கருதாப் பக்தி பூண்டவர்கள் என்ற கருத்தை வலியுறுத்த

கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன் என்று
கொண்டவர்கள் (தமிழ் இன்பம், ப.218)

என்கிறார். இது,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விலங்கினார்
(பெரியபுராணம், தொண்டர் பெருமை)

என்ற பெரியபுராணப் பாடலடியிலிருந்து போற்றப்பட்டதாகும்.

## குமரகுருபரர்

காளத்தி வேடனும் கங்கை வேடனும் என்ற அதே கட்டுரையில் கண்ணப்பன்-குகன் ஆகிய இரு அடியாரதுஅன்பின் பெருமையை எண்ணிய ஆன்றோர்,

எற்றே இவர்க்கு நாம் என்று உள்ளம் உருகினார்
(தமிழ் இன்பம், ப.218)

என ஆசிரியர் எழுதுகிறார். இது,

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்றே அகமகிழ்க – தம்மின்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று
(நீதிநெறி விளக்கம்)

எனவரும் குமரகுருபரர் அருளிய பாடலடியால் அழகூட்டப் பெற்றதாகும்.

## பட்டினத்தார்

'கர்ணனும் கும்பகர்ணனும்' என்ற கட்டுரையில் அன்னையைப் பற்றிக் குறிப்பிடும்போது "முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்து, அந்திபகலாய் இறைவனை வந்தித்துப் பெற்றெடுத்த அன்னை" (தமிழ் இன்பம், ப.207). என்கிறார் ஆசிரியர். இதில் பட்டினத்தாரின் புகழ்பெற்ற

**முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே**
**அந்தி பகலாச் சிவனை ஆதரித்துத் – தொந்தி**
**சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ**
**எரியத் தழல்மூட்டு வேன்**

*(பட்டினத்தார் பாடல் எண். 39)*

என்ற பாடலில் உருகி மனத்திலிருந்து எடுத்தெழுதியதாகும்.

## பாரதியார்

சேரனும் சீரனும் எனும் கட்டுரையில் மோசிகீரனாரின் வடிவம் கண்ட சேரமன்னன் எண்ணுவதாக "அவரது முகத்தின் விளக்கத்தால் அவர் வாக்கில் ஒளியுண்டெனத் துணிந்தான்" (தமிழ் இன்பம், ப.148) என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். இது,

**உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்**
**வாக்கினிலே ஒளியுண்டாகும்**

*(பாரதியார், தேசிய கீதங்கள், 22–4)*

என்ற பாரதியின் பாடலடிகளின் பதிவாகும். இவ்வாறு சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், காப்பியங்கள், பிற்காலக் குமரகுருபரர், பட்டினத்தார், பாரதியார் என நெடிய தமிழ் மரபில் தோய்ந்து மகிழ்ந்த சேதுப்பிள்ளை கட்டுரைகளில் தனியாக மேற்கோள்கள் காட்டுதலோடு உயிரில் கலந்ததால் பாட்டு அடிகளை உரைநடையில் கலந்து 'பாட்டு உரை நடை' கண்ட புலமைச் செல்வராகத் திகழ்கிறார். இது அவரது தனித்தன்மைகளுள் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

## அடுக்கு மொழி நடை

'சொல்லின் செல்வர்' எனத் தருமை ஆதீனத்தால் பாராட்டப் பெற்ற பிள்ளையவர்கள் அடுக்கு மொழி அறிஞராகத்

திகழ்கிறார். 'சேரனும் கீரனும்' என்ற கட்டுரையில் மோசிகீரனார் சேரமன்னனைப் பார்க்கப் போகிறார். அவரின் தோற்றத்தை,

**நெடும்பசியால் நலிந்து, வெயிலால் உலர்ந்து**
**வழிநடையால் வருந்தித் தளர்வுற்ற தமிழ்ப்புலவர்**

என வர்ணிக்கிறார் பிள்ளை. மோனைகள் அடுக்கு மொழியாகி அணி செய்கின்றன. மன்னன் இல்லை. புலவரின் கண்ணில் பாலாவி போன்ற மஞ்சம் படுகிறது. இதனை

**மஞ்சத்தைக் கண்ட புலவர் நெஞ்சம்**
**பள்ளத்துட் பாயும் வெள்ளம் போல்**

என்று எதுகை நடையால் அடுக்கு மொழியாக்குகிறார் ஆசிரியர். (தமிழ் இன்பம், ப.147). உறங்குகின்ற புலவரை மன்னன், பார்த்து, கவரிவீசி நிற்கிறான். புலவர் விழித்து விதிர்விதிர்த்து,

**படைக்கலம் எடுத்துவீசும் நின் தடக்கையினால்**
**கடையேற்கு கவரிவீசவும் இசைந்தனையே**
**(தமிழ் இன்பம், ப.149)**

என மொழிவதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார். இதில் எதுகையும் மோனையும் அமைந்து சிறக்கின்றன. "ஆண்மையும் அருளும்" என்ற கட்டுரையில், இந்நாட்டில் முறை திறம்பாது அரசாண்ட மன்னர்கள் மாறுபட்ட அரசரோடு மலைய நேர்ந்தக்கால் அறநெறி விலகாது அமர் விளைத்தார்கள் (தமிழ் இன்பம், ப.199) வழிக்கு வராத வணங்காமுடி மன்னன் மீது படையெடுக் குமுன்னே குருகுலமன்னன் கண்ணனைத் தூதனுப்பிக் கடும்போர் விலக்கக் கருதினான் (தமிழ் இன்பம், ப.201). என்றெல்லாம் ஆசிரியர் எதுகை, மோனைகளை அமைத்து அடுக்குமொழி அமைப்பது காணலாம். 'காளத்தி வேடனும் கங்கை வேடனும்' என்ற கட்டுரையில் ஜடாயு பற்றிச் சொல்லும் போது

**அரன் அளித்த வாளுடையானை**
**வெறும் அலகுடையான் வெல்லுதல்**
**இயலாததென்றறிந்தும் அறநெறி திறம்பிய**
**அரக்கனோடு பொருது ஆவி துறத்தலே தன் கடமை**
**(தமிழ் இன்பம், ப.221)**

என மொழிகிறார் ஆசிரியர். இதில் அடுக்கு மொழிநடை அணி செய்கிறது.

## சிலேடை

ஆசிரியர், "அழகும் முத்தும்" என்ற கட்டுரையில் அழகிய சொக்கநாதர் என்ற புலவரைப்பற்றிச் சொல்லும்போது

> பொருள் ஒன்றையே அவர் கருதியவரல்லர் வருவாய்
> மாசம்பத்து வந்தாலும் அதனையே
> மா சம்பத்தாகக் கொள்ளும் மனப்பண்புடையவர்
> (தமிழ் இன்பம், ப.158)

எனச் சிலேடையாகக் குறிப்பிடுகிறார். மாசம்பத்து என்பதைப் பிரித்துப் 'பெரிய செல்வமாக' என்ற பொருளில் அமைப்பது சுவையாக அமைந்துள்ளது. இது சொல்லின் செல்வரின் சொல் விளையாட்டாகும்.

## பழமொழி

பிள்ளை அவர்கள் தம் கட்டுரைகளில் பல இலக்கியங்களிலிருந்து மேற்கோள்காட்டினும் மக்கள் அறிந்த எளிய பலமொழிகளையும் பயன்படுத்துகிறார். பாரத நாட்டின் பண்பைக் கூறும் போது, அவனன்றி ஓர் அணுவும் அசையாது எனும் உண்மையை அறிந்து போற்றும் நாடு இந்நாடு (தமிழ் இன்பம், ப.169) என்று கூறுகிறார். இராமனையும் தர்மனையும் ஒப்பிடும் போது, பொறுத்தார் பூமி ஆள்வார் என்னும் பொய்யாமொழிக்குக் கோசலநாட்டு வீரனாம் குருகுலக் குரிசிலும் இணையற்ற சான்றாவார். (தமிழ் இன்பம், ப.205) என மொழிகிறார். கர்ணனை அவனது தாய் அழைக்கிறாள்; மகன் செல்ல மறுக்கிறான். இதனை, தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்னும் அமுதவாக்கைக் கர்ணன் நன்கு அறிந்தவனேயாயினும் சுயோதனன் தனக்குச் செய்த பெரு நன்றியை மறந்து அன்னையின் உரைவழி நடக்க இசையானாயினான்" (தமிழ் இன்பம், ப.210).

இவ்வாறு ஆசிரியர் எளிமையானதும் இனிமையானதுமான பழமொழிகளைத் தமது கட்டுரையில் அமைத்து அழகு செய்துள்ளார். எதுகை, மோனை கலந்த அடுக்குமொழி, சிலேடை பழமொழிகள் ஆகியவற்றால் பொருளழகும் ஓசை இன்பமும் நிறைந்து கட்டுரைகள் செம்மை பெறுகின்றன.

### சான்று காட்டல்

வழக்கறிஞராகிய ஆசிரியர் ஆதாரத்துடன் சான்று காட்டி வாதிடும் போக்கில் கட்டுரைகளை அமைக்கிறார். ஊகமாக, உறுதிப்படுத்தாமல் சொல்லுதல் போன்றவை இவரது கட்டுரைகளில் அமைவதில்லை. இலக்கிய ஆதாரம், வழக்கியல் ஆதாரம் இவற்றைச் சான்றாகக் காட்டுகிறார்.

### சைவ சமயப் பொறை

**தமிழும் சைவமும்** என்ற கட்டுரையில் சைவசமயம் பரந்த நோக்கமுடையது எனச் சொல்ல வந்த போது,

**அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்**
**அவ்வவர்க்கு ஆங்கே ஆரருள் புரிந்து**

**விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே**
**எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்**
**(திருநாவுக்கரசர் தேவாரம்)**

என்ற மேற்கோள்களைக் காட்டி, "சமயத்தின் பேரால் நிகழும் பிணக்கங்களும் போர்களும் சைவநெறிக்கு மாறுபட்டன என்பது தெள்ளிதின் விளங்கும்" (தமிழ் இன்பம், ப.172) எனச் சான்றுகள் காட்டுகிறார். சைவநெறியில் சமயப்பொறுமை சிறந்த கொள்கையாக விளங்கிற்றென்பதற்குச் சிலப்பதிகாரத்திலிருந்து சான்று காட்டுகிறார்.

> சிலப்பதிகாரத்தை இயற்றியவர் சேரநாட்டு இளவரசர். அவர் இவ்வுலக வாழ்க்கையை விரும்பாது சமண சமயத் துறவியாயினார். ஆனால் அவருடன் பிறந்த சேரன், செங்குட்டுவன் சிறந்த சைவனாய் விளங்கினான். இங்ஙனம் தமையன் சைவ சமயத்தையும் மேற்கொண்டு ஒரு குடும்பத்தில் இணக்கமாக வாழ்ந்த நாட்டில் சமயப் பொறுமை நிலைத்திருந்த தென்பதை விரித்துரைக்கவும் வேண்டுமா?

என வாதிடுகிறார் (தமிழ் இன்பம், ப.173)

### பௌத்தம் : எழுச்சி–வீழ்ச்சி

பௌத்தம் எழுச்சி பெற்றதையும் வீழ்ச்சி பெற்றதையும் சான்று காட்டித் தெளிவிக்கிறார் ஆசிரியர். 'தமிழும் சாக்கியமும்' என்ற கட்டுரையில்,

> தமிழ் நாட்டிலே மாணிக்க வாசகர் காலத்தில் பௌத்தமதம் பரவியிருந்த பான்மை அவர் வரலாற்றால் விளங்குகின்றது. மணிமேகலை என்னும் தமிழ்க்காவியம் எழுந்த காலத்தும் பௌத்த மதம் தலையெடுத்து நின்றதாகவே தெரிகிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்த புத்த சங்கத்தில் அறவணவடிகள் என்னும் பௌத்த முனிவர் விளங்கினார். . . மாதவியையும் அவள் மகள் மணிமேகலையையும் பௌத்த சமயத்தில் சேர்த்தவர் அவரே. இன்றும் அவர் பெயர் காஞ்சிபுரத்தில் . . . அறப்பணஞ்சேரி என்று வழங்குகின்றது. (தமிழ் இன்பம், பக்.177-178)

என எழுச்சி நிலைக்குச் சான்று காட்டியவர், பௌத்தத்தின் வீழ்ச்சி நிலைக்கும் சான்று காட்டுகிறார்.

> ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே சீன தேசத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்த யுவான்சியாங் என்பவர் பௌத்த மதம் தளர்ச்சியுற்றுத் தாழ்வடைந்திருந்த நிலையைக் குறித்து வருந்தி எழுதியுள்ளார்

(தமிழ் இன்பம், ப.178) எனச் சரியான ஆதாரம் காட்டுகின்றார்.

**கம்பரின் குகன்**

கம்பர் குகனைப் படைக்கும்போது கண்ணப்பரை நினைந்தே படைத்தார் என்ற கருத்திற்குச் "சான்றாகக் காளத்தி வேடனும் கங்கை வேடனும்" என்ற கட்டுரையில்,

> வான்மீக முனிவர் எழுதிய வடமொழிக் காவியத்தில் குகன் இராமனைக் காணப் புறப்படும் கோலம், ஓர் அரசன் மற்றோர் அரசனைக் காண எழுகின்ற தன்மையில் அமைந்திருக்கின்றது. ஆனால் கம்பர், ஆண்டவனைக் காணச் செல்லும் அடியவனாகக் குகன் கோலத்தைத் திருத்தி அமைத்துள்ளார்.
>
> **தேவ நின்கழல் சேவிக்க வந்தனன்**
> **நாவாய் வேட்டுவன் நாயடியேன்**
>
> என்று குகனே கூறுதலால் இவ்வுண்மை விளங்கும். (தமிழ் இன்பம், ப.214)

என்று சான்று காட்டுகிறார்.

## போரில் அறம்

இராமனும் தருமனும் போர் செய்வதற்கு முன் போரைத் தவிர்க்கவே தூதனுப்பினரேயன்றி அச்சத்தால் அல்ல என்ற கருத்திற்கு,

> விதிக்கு விதியாகும் வில்லைத் தாங்கிய இலக்குவனைத் துணைக்கொண்ட இணையற்ற இராமவீரன் இலங்கை நாதனுடைய புயவலியும் படைவலியும் கண்டு பயந்து அவன் பால் தூதனுப்பினான் அல்லன். அவ்வாறே தண்டேந்திய வீமனையும், தனுவேந்திய விசயனையும் துணையாகக் கொண்ட தருமன் நூற்றுவராய் விளங்கிய மாற்றார் படைவலிகண்டு கலங்கிக் கண்ணனைத் தூது அனுப்பினான் அல்லன் (தமிழ் இன்பம், ப.201) எனச் சான்று பகர்வது வழக்கிடும் வாதத்திறனை நினைவூட்டுகிறது.

## கண்ணீர் : அழிக்கும் படை

ஏழையர் வடிக்கும் கண்ணீர் செல்வச் செருக்குடைய வல்லரசையும் அழித்துவிடும் என்பதை விளக்குவதற்குச் சான்றுகளை வரிசைப்படுத்துகிறார் ஆசிரியர்.

> **அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே**
> **செல்வத்தைத் தேய்க்கும் படை** *(555)*

என்ற குறட்பாவை ஆதாரமாகக் கொள்கிறார்.

1. பாண்டியன் அரசு வீற்றிருந்த மதுரை மாநகரில் கண்ணகி அல்லலுற்று அழுதாள் - கண்ணகியின் கண்ணீர் மன்னனை மாய்த்தது.
2. சீதையின் கண்ணீர் இலங்கை மாநகரில் விழுந்தது. அதனால் வீரமன்னனாகிய இராவணன் விழுந்துபட்டான்.
3. வீரமகேந்திரத்தில் சிறையிலிருந்து வருந்திய சயந்தன் வடித்த கண்ணீர் சூரனை மடித்தது.
4. செருக்குற்ற துரியோதனன் சபையில் பாஞ்சாலியின் கண்ணீர் பாய்ந்தது. பாஞ்சாலி வடித்த கண்ணீரே அவன் குலத்தை வேரறுக்கும் படைக்கலமாயிற்று (அலையும் கலையும், ப.108)

என்றெல்லாம் வரிசையாகச் சான்றுகளை அடுக்கிக்காட்டி வலியுறுத்தும் பாங்கு அவரது தனித்தன்மைகளுள் ஒன்றாக விளங்குகிறது.

## அருவரே தமிழர்

தமிழர்க்கு அருவர் என்றும் தமிழுக்கு அரவம் என்றும் பெயர் உண்டு. அதன் வழக்காறு பற்றி ஆராயப்புகுந்த ஆசிரியர், சான்றுகளைக் கூறுகிறார்.

> "இப்பொழுது ஆர்க்காடு என்று வழங்கப்படும் நாடு முற்காலத்தில் 'அருவா நாடு' என்ற பெயரைப் பெற்றிருந்தது. அருவா நாட்டில் வாழ்ந்தவர்கள் அருவர் எனப்பட்டார்கள். அவர்கள் பேசியமொழி தமிழ். அருவர் வாழ்ந்த நாடு ஆந்திர தேசத்தை அடுத்திருந்தமையால் அருவரை ஆந்திரர் நன்கறிந்திருந்தார்கள். அருவர் தமிழர் ஆதலால் தமிழர் எல்லோரையும் ஆந்திர நாட்டார் அருவர் என்று அழைக்கலாயினர். இவ்வுண்மை கலிங்கத்துப்பரணி என்னும் தமிழ் இலக்கியத்தால் அறியப்படும்"

என்று கூறி,

> **ஒருவர் ஒருவரின் ஓடமுந்தினர்**
> **அருவர் அருவர் எனா இறைஞ்சினர்**
> **அபயம் அபயம் எனா நடுங்கியே**

என்ற பாடலில் ஆந்திரக் கலிங்கரின் அபயக்குரலில் 'அருவர்' எனத் தமிழரைச் சுட்டுவதைக் காட்டுகிறார். மேலும், ஒரு பழம்பாடலையும் மேற்கோள் காட்டி அருவர் தமிழரே என நிறுவுகிறார். அப்பாடல்,

> **ஒருவர் ஒருவர் மேல் வீழ்ந்து வடவர்**
> **அருவர் அருவர் என அஞ்சி – வெருவந்து**
> **தீத்தீத்தீ என்றயர்வார் சென்னி படைவீரர்**
> **போர்க்கலிங்க மீதெழுந்த போது**

(தமிழ் விருந்து, பக். 78-79)

என்பது அவரது கருத்திற்கு வலிமை சேர்க்கிறது.

## வேலும் வில்லும்

கம்பரின் காவியத்திற்கும் கச்சியப்பரின் கந்தபுராணத்திற்கும் உள்ள ஒற்றுமைகளைச் சம்பவங்கள், பாத்திரப்பண்புகள் முதலானவற்றைப் பாடல்களாகத் தொகுத்துக் காட்டியுள்ளமை மிகச்சிறந்த சான்றுகளாக உள்ளன. அவை ஒப்பு நோக்குவார்க்கு எளிமை பயக்கின்றன. (வேலும் வில்லும், 56-75)

## ஒப்பீடுகள்

சொல்லின் செல்வர் தமிழ் இலக்கியங்களிற் கரை கண்டவர் ஆதலால் ஒரு பாடலை (அ) கருத்தை எண்ணுகின்ற போது அதனோடு ஒப்புடைய பாடலை (அ) கருத்தைப் பதிவு செய்யும் இயல்பினராக விளங்குகிறார். இத்தன்மை கூர்த்த அறிவையும், அழகியல் உணர்வையும், புலமையையும் காட்டுகின்றது.

## முருகனும் முழுமதியும்

இக்கட்டுரையில் முருகன் முழுமதிக்கு ஏங்க அதுகண்ட முனிவர் நிலவுடன் பேசுவதாக ஆசிரியர் கற்பனையாக அமைத்துள்ளார்.

> "வெண்ணிலா வீசும் விண்மதியே! முருகனைப் போலவே நீயும் அமுதமாய் விளங்குகின்றாய்; கண்டோர் கண்ணையும் மனத்தையும் குளிர்விக்கின்றாய்; குமுதவாய்திறந்து குளிரொளி விரிக்கின்றாய்; உயிராகிய பயிர்தழைக்க உயரிய அருள் சுரக்கின்றாய்; இவ்வாறு பல கூறுகளில் முருகனை நிகர்க்கும் நீ அவனொடு விளையாட வா"
> (தமிழ் இன்பம், ப107)

என முருகனுக்கும் முழுமதிக்கும் உள்ள ஒப்புமைகளைக் காட்டுவது அழகியல் உணர்வைத் தூண்டுகிறது.

## பயிர்வண்டும் படர்கொடியும்

ஆசிரியர் இக்கட்டுரையில் ஒரு வேங்கை மரமானது புயற்காற்றில் விழுவதாகவும் அப்பொழுது அதிலிருந்த வண்டு பறந்து செல்வதாகவும் மரத்தில் படர்ந்திருந்த கொடி பிரியாது வாடுவதாகவும் கற்பனையாக உரைக்கிறார். வண்டுகளைப் பொது

மகளிரைப் போலவும் படர்கொடிகளைக் குலமாதர் போலவும் ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர்.

நிலமரங்கிய வேரோடு நேர்பறித்து
அலமரும்துயர் எய்திய ஆயினும்
வலமரங்களை விட்டில மாசிலாக்
குலமடந்தையர் என்னக் கொடிகளே (கம்பர்)

என்ற பாடலை விளக்கும் போது 'அலமரும்துயர் எய்திய ஆயினும் வலமரங்களை விட்டில மாசிலாக் குலமடந்தையர் என்னக் கொடிகளே' என்பதற்கு ஒப்பீடாக

இளங்கோவடிகள் எழுதிக்காட்டிய கண்ணகியின்
வடிவம் எம் மனக்கண்ணெதிரே காட்சியளித்தது
(தமிழ் இன்பம், ப.113)

என்று எழுதுகிறார். மேலும் இடர் உள்ள போது நழுவிவிடும் கிளைஞர்க்கு ஒப்பீடாக,

காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாகு மீனிற் பலராவார்–ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையோம் என்பார் சிலர்
(தமிழ் இன்பம், ப.112)

என்ற பாடலைக் காட்டுகிறார். மேலுள்ள 'நிலமரங்கிய. .' எனத் தொடங்கும் பாடலில் வண்டுகள் பற்றி எதுவுமில்லை எனினும் கற்பனையால் வண்டுகள் மரம் விழும் போது பறந்தன என்றார். அதற்கு ஒப்பாகப் பொதுமகளிர் வண்டனையர் என்பதற்கு பின்வரும் பாடலைக் காட்டுகிறார்,

நறுந்தாதுண்டு நயனில் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவர்

என்ற மணிமேக்லை அடிகளை ஒப்புமை காட்டுகிறார். (தமிழ் இன்பம், ப.112)

## நல்ல மரமும் நச்சுமரமும்

ஓர் இளவரசனும் தோழனும் பயணம் செய்வதாகவும் நன்மரத்தையும் குளத்தையும் நச்சுமரத்தையும் பார்த்து அவற்றை

ஒப்பிட்டுப் பேசுவதாகவும் இக்கட்டுரையை அமைக்கிறார் ஆசிரியர்.

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கட் படின் (216)**

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கட் படின் (217)**

என்ற குறட்பாக்களுக்கு மேற்கண்ட கற்பனையைக் காட்டுகிறார். இரு இளைஞர்களும் பேசுகிறார்கள்:

> "இப்பொய்கை நம்மை அன்புடன் அழைத்து இன்முகம் காட்டித் தாகம் தணித்துத் தளர்வை மாற்றியது. அப்பால் இம்மரம் நாம் தங்கியிருக்கக் குளிர் நிழல் தந்து பசியாறப் பழங்கள் அளித்துத் தலைநோய் தீர்க்கவும் தனிமருந்தாய் அமைந்தது. இத்தன்மையை நோக்குங்கால் நல்லார் கைப்பட்ட செல்வத்தின் தன்மை நன்கு விளங்குமன்றோ?"
>
> *(தமிழ் இன்பம், ப.118)*

என்பதன் மூலம் ஆசிரியர் நல்லோர் செல்வத்துடன் நன்மரம், குளத்தை ஒப்பிட்டு விடுகிறார். நச்சுமரத்தைப் பற்றித் தெரிந்து கொண்டபின், இளைஞர்கள் பேசுகிறார்கள்:

**நச்சுமரத்தில் அமைந்த நன்னிறக் கனிகள்**
**பேதையர் கைப்பட்ட செல்வம் போல்**
**பிறர்க்கு இடர் விளைப்பன வாகும்**

**(தமிழ் இன்பம், ப.120)**

என வருந்தியதாகக் கற்பனை செய்து நச்சுமரத்தையும் தீயர் செல்வத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். மேலும் ஆசிரியர்

**நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்**
**நச்சுமரம் பழுத் தற்று (1008)**

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு (408)**

என்ற குறட்பாக்களில் இருந்தே மேற்கண்ட கற்பனையை யாத்து ஒப்பிடுகிறார். இது கற்பனையாகக் கதைபோல் கூறுவதன் மூலம்

சொல்லவந்த கருத்தை எளிமையாகக் கூறி மனத்தில் பதியவைக்கும் உத்தியாகத் தெரிகிறது.

**காயும் கனியும்**

இக்கட்டுரையில் இனிய சொற்களைக் கனி எனவும் தீய சொற்களைக் காய் எனவும் குறிப்பிடும் வள்ளுவரின்,

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (100)**

என்ற குறட்பாவிற்கு,

**கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ**
**மயிலாடும் ஆரூராரைக்**
**கையினால் தொழதொழிந்து கனியிருப்பக்**
**காய்கவர்ந்த கள்வனே**
-திருநாவுக்கரசர் தேவாரம்

என்ற தேவாரப்பாடலை ஒப்பிட்டுக்காட்டுவது இனிமை பயக்கிறது. (தமிழ் இன்பம், ப.144)

**பாரியின் பெருமை**

'பாரியும் மாரியும்' என்ற கட்டுரையில் பாரியின் பெருமைகளைப் பேசும் ஆசிரியர்,

**பாரி பாரி என்று பல ஏத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே**

என்ற கபிலரின் பாடலை மேற்கோள் காட்டிவிட்டு மேலும் பாரிக்குப் பெருமை சேர்க்க, சுந்தரரின் தேவாரப் பாடலையும் மேற்கோள் காட்டி ஒப்பிடுகிறார்.

**மிடுக்கிலாதானை வீமனேவிறல் விசயனே வில்லுக்கு**
**இவனென்று**
**கொடுக்கிலா தானைப் பாரியேயென்று கூறினும்**
**கொடுப்பாரிலை**
- சுந்தரர் தேவாரம்

இப்பாடல் பாரியின் கொடைப் பெருமைக்கு ஒப்பீடாக விளங்குகிறது மேலும்.

> "இப்பொழுதும் பெருந்தன்மை வாய்ந்த குலத்திற் பிறந்த மக்களைப் "பாரிமான் மக்கள்" என்று தென்னாட்டில் வழங்கும் வாய்மொழி பாரியின் பெருமைக்கு என்றும் அழியாத சான்று பகர்வதாகும்"
>
> *(தமிழ் இன்பம், ப.154)*

என வழக்காற்றையும் குறிப்பிட்டுக் கட்டுரையை நிறைவு செய்கிறார்.

### கரும்பும் கானமயிலும்

'அழகும் முத்தும்' என்ற கட்டுரையில் முத்துச்சாமி வள்ளல், அழகிய சொக்கநாதர் என்ற புலவரிடம் கரும்புக்கும் கான மயிலுக்கும் பொருந்துமாறு கவியொன்று பாடும்படி வேண்டிய போது,

**மேனியெலாம் கண்ணுறலால் வேள்விரும்பும்**
**தன்மையினால்**
**ஆனபசுந்தோகையினால் ஆடலினால் – மீனவன் நேர்**
**மானபரா! நெல்லைநகர் வாழுமுத்துச் சாமிமன்னா**
**கானமயில் ஒப்பாம் கரும்பு**

என்ற பாடலைப் புலவர் பாடினார். இதில் மயிலுக்கு மேனியெல்லாம் கண், கரும்புக்கு மேனியிலே கண் (கணு); மயிலைச் செவ்வேள் விரும்பி வாகனமாகக் கொண்டான்; கரும்பை மாரவேள் விரும்பி வில்லாகக் கொண்டான்; இன்பவுணர்ச்சியுற்ற போது மயில் தோகையை விரித்து ஆடும்; இளங்காற்று வீசும்போது கரும்பின் தோகையும் அசைந்து ஆடும் என மூன்று ஒப்புமைகளை ஆசிரியர் விளக்குகிறார். மேலும் வள்ளலின் செருப்புக் காணாமல் போய்விட அவரும் செருப்புக்கும் திருடனுக்கும் பொருத்தமான பாட்டிசைக்கும்படி வேண்ட, கவிஞரும்,

**அங்கங் களவால் அதுகண்டு தைப்புறலால்**
**எங்கும் மிதியடி யென்றே சொலலால் – வெங்கல்**
**கரடு முட்கஞ் சாததினால் காமர் முத்துச்சாமி**
**திருடனைஒப் பாகும் செருப்பு**

என்ற பாடலைப் பாடினார். திருடனுக்கு அங்கம் களவு, செருப்புக்கு அங்கங்கு அளவு; கள்வனது களவு கண்டு உதைப்பார்கள், செருப்பின் அளவுகண்டு தைப்பார்கள்; கள்வனை மிதி, அடி என்பார்கள், செருப்பையும் 'மிதியடி' என்பார்கள்; கல்லும், முள்ளும், கரடும், கண்டு அஞ்சாது செல்வான் கள்வன்; கல்லும், முள்ளும், கரடும் கண்டு செருப்பு அஞ்சாது என நான்கு ஒப்புமைகளை விளக்குகிறார் ஆசிரியர்.

### புத்தரும் வள்ளுவரும்

இக்கட்டுரையில் பிம்பிசாரன் என்ற வடநாட்டு மன்னன் கோமேதயாகம் செய்யக் கருதியதைக் கேள்வியுற்றுப் புத்தர் அவன் அரசுபுரிந்த நகரத்திற்கு விரைந்து கொல்லாமை அறத்தை வலியுறுத்திப் பலியைத் தடுத்தார் என்பதைச் சொல்ல வந்த ஆசிரியர்,

இங்ஙனம் வடநாட்டில் புத்தர் செய்த நற்போதனையைத் தென்னாட்டில் திருவள்ளுவர் செய்தார்.

**நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
**கொன்றாகும் ஆக்கம் கடை**

என்று திருக்குறள் திருத்தமாகக் கூறுகின்றது.

(தமிழ் இன்பம், ப.181)

என்று வடநாட்டுப் புத்தரோடு தென்னாட்டு வள்ளுவரை ஒப்பிடுகிறார். மேலும், புத்தரின் பௌத்த சங்கத்திற்கு ஒப்பாகத் தமிழ்ச் சங்கத்தைக் குறிப்பிடுகிறார். இதனை,

> "பௌத்த சமயத்தில் எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை சங்கத்திற்குத் தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு" (தமிழ் இன்பம், ப. 183)

என ஒப்பிட்டுச் சொல்கிறார்.

### ஆண்மையும் அருளும்

வீரத்தோடு விவேகமும் வேண்டும்; போரைத் தவிர்க்கவே உயர்ந்த மன்னர்கள் விரும்ப வேண்டும் என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர் இராமனையும் தருமனையும் ஒப்பிடுகிறார்.

இராமன், போரைத் தவிர்க்க அங்கதனைத் தூது அனுப்பினான். தருமன் போர்தவிர்க்க கிருஷ்ணனைத் தூது

அனுப்பினான்; விதிக்கு விதியாகும் வில்தாங்கிய இலக்குவன் இருப்பதால் இராமன் அச்சத்தால் அல்ல அருளினால் தூதனுப்பினான்; அவ்வாறே தருமனும் பீமன், விசயன் இவர்களைப் பெற்றவன் எனவே அருளினால்தான் தூது அனுப்பினான்; இராமன் தூது அனுப்பியமைக்கு இலக்குவன் வெகுண்டான்; தருமன் தூதிற்குப் பீமன் வெகுண்டான்; இலக்குவனுக்கு இராமன் அறமுறைத்தான்; பீமனுக்குக் கிருஷ்ணன் அறமுறைத்தான்; இராமன் தம்பி துணைகொண்டு இலங்கை மன்னனை வென்றான்; தருமனும் தம்பியர் துணை கொண்டு சுயோதனனை வென்றான் என்றெல்லாம் ஒப்புமைகளை அடுக்குகிறார் ஆசிரியர். மேலும் இராவணனும், கர்ணனும் படைக்கலமிழந்து நின்ற போது முறையே இராமனும் விசயனும் அருளினர் என்பதை ஆசிரியர்,

> "இன்று போய்ப் போர்க்கு நாளை வாவென நல்கினன்" என்று கவியரசர் கூறுமாறு பகையரசனுக்கு விடை கொடுத்தனுப்பினான். அவ்வாறே வில்லாண்மையில் தலைசிறந்து விளங்கிய விசயன் போர்க்களத்தில் படைக்கலம் இழந்து எளியனாய் நின்ற கர்ணனது நிலை கண்டு தளர்ந்து அவன்மீது அம்பெய்தலைத் தவிர்த்த ஆண்மை இராமனது உயரிய அருளை நிகர்ப்பதாகும்"

என்று ஒப்பிட்டுக் கூறுகின்றார். (தமிழ் இன்பம், ப.204)

### கர்ணனும் கும்பகர்ணனும்

இக்கட்டுரையில் நன்றியுடைமை பற்றிச் சொல்லும் போது,

> **எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

என்று நாயனார் கூறிய அறிவுரையைப் பொன்போல் போற்றினர் தமிழ் மக்கள். இக்குறளில் அடங்கிய கருத்தை விரித்துரைக்கப் போந்த கம்பர்,

> **சிதைவகல் காதல் தாயைத்**
> **தந்தையை, குருவை, தெய்வப்**
> **பதவி அந்தணரை, ஆவைப்**
> **பாலரைப் பாவை மாரை**

வதைபுரி குநர்க்கும் உண்டாம்
மாற்றலா மாற்றல், மாயா
உதவி கொன்றார்க்கு என்றேனும்
ஒழிக்கலாம் உபாய முண்டோ

என்று நன்றியின் பெருமையை நன்கெடுத்துரைத்தார்". என வள்ளுவரையும் கம்பரையும் ஒப்பிடுகிறார் (தமிழ் இன்பம், ப.206). அடுத்து, கர்ணனையும் கும்பகர்ணனையும் ஒப்பிடுகின்றார் ஆசிரியர். அங்க நாட்டு அரசன் கர்ணன்; இலங்கையர்கோன் தம்பி கும்பகர்ணன்; கர்ணனின் தாய் துரியனை விட்டுவிட்டுத் தம்பக்கம் வருமாறு வேண்டுகிறாள்; விபீடணன் கும்பகர்ணனை இராவணனை விட்டுத் தம்பக்கம் வருமாறு வேண்டுகிறான்; கர்ணன் மறுத்து நன்றியுணர்வுடன் செஞ்சோற்றுக் கடன் முடிக்கிறான்; கும்பகர்ணன் மறுத்து நன்றியுடன் போரிட்டு இறக்கிறான். இவ்வாறு அமைந்த ஒப்பீடுகள் நன்றியுணர்வின் உச்சமிகு இரு பாத்திரங்களை நன்றாக விளக்குகின்றன. (தமிழ் இன்பம், பக்.208-212)

**கண்ணப்பனும் குகனும்**

"காளத்தி வேடனும் கங்கை வேடனும்" என்ற கட்டுரையில் கண்ணப்பனையும் குகனையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஆசிரியர். அதனைச் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம். கண்ணப்பன் இறைவனுக்கு இறைச்சியைப் படைத்தான்; அவ்வாறே இராமனுக்கு மீனைத் தந்தான் குகன்; இறைச்சி கண்டு சிவகோசாரியார் வருந்தினார்; விருத்த மாதவர்கள் மீனைக் கண்டு வெறித்தனர்; சிவகோசாரியாருக்கு இறைவன் கனவில் தோன்றிக் கண்ணப்பனைப் புகழ்ந்தார். இராமன் குகனை நேரில் புகழ்ந்து மாதவர் ஐயம் அகற்றினான்; இருவரும் இரவில் காவல் புரிந்தனர்; இறைவன் கண்ணில் குருதி சோர்தல் கண்டு கண்ணப்பன் வெகுண்டான்; பரதனைப் பகை எனக் கருதி குகன் வெகுண்டான்; இருவரும் பயன் கருதாப் பக்தி பூண்டவர்கள் (தமிழ் இன்பம், பக்.214-222) என்றெல்லாம் வரும் ஒப்புமைகள் இருவரையும் அறியத் தெளிவாக உதவுகின்றன.

**வேலும் வில்லும்**

ஆசிரியரின் மற்றொரு நூலான **வேலும் வில்லும்** என்ற நூலில் 'கம்பரும் கச்சியப்பரும்' என்ற கட்டுரையில்

கம்பராமாயணத்தையும் கந்தபுராணத்தையும் ஒப்பிட்டுரைக்கிறார். இரு காப்பியங்களுக்கிடையே சம்பவங்களே ஒப்புமையாக வுள்ளன. கம்பனில் சூர்ப்பணகை மூக்கறுபட்டாள்; புராணத்தில் அசமுகிகையறுபட்டாள்; இராவணன் சபையில் சூர்ப்பணகை முறையிட்டாள். சூரபன்மன் சபையில் அசமுகி முறையிட்டாள்; அநுமன் இலங்கையைக் கண்டான்; வீரபாகு மகேந்திரம் கண்டான்; கம்பனில் சீதை சிறையிருந்தாள்; கச்சியப்பரில் சயந்தன் சிறையிருந்தான்; அநுமன் இராமனின் பெருமை கூறினான்; வீரவாகு முருகன் பெருமை கூறினான்; இராவணன் சபையில் முன்னுரை நிகழ்த்தியது போலவே சூரன் தன் சபையில் முன்னுரை நிகழ்த்துகிறான்; சேனைக் காவலன் பேச்சு, காலசித்தன் பேச்சு; மகோதரன் இராவணனிடம் பேசுதல்; பானுகோபன் சூரனிடம் பேசுதல்; விபீஷணன் பேச்சு, சிங்கமுகன் பேச்சு; இராவணன் பரிகாசப் பேச்சு, சூரன் பரிகாசப் பேச்சு; விபிஷணன் மீதுகுற்றம் சாட்டுதல்; சிங்கமுகன் மீது குற்றம் சாட்டுதல்; போர் முனையில் இராமனும் இராவணனும்; போர்முனையில் முருகனும் சூரனும்; கும்பகர்ணன் இறந்த பொழுது இராவணன் புலம்பல், சிங்கமுகன் இறந்த பொழுது சூரனின் புலம்பல்; மகனை இழந்த மண்டோதரி புலம்பல்; மகனை இழந்த பதுமை புலம்பல்; இராவணன் இறந்தபொழுது விபீஷணன் புலம்பல்; சூரன் இறந்தபொழுது இரணியன் புலம்பல் எனக் கம்பராமாயணமும் கந்தபுராணமும் மிகச்சிறந்த ஒப்புமைக்குரிய காவியங்களாகத் திகழ்வதை ஆசிரியர் விளக்கிச் சான்று காட்டுகிறார். (வேலும் வில்லும், பக்.56-75).

### நாவரசரும் வள்ளலாரும்

திருவடி நிழலின் இனிமையைப் பற்றித் திருநாவுக்கரசரின் பாடலை மேற்கோள் காட்டுகிறார் ஆசிரியர்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே**

இவ்வழகிய தேவாரப் பாடலுக்கு இராமலிங்க அடிகளாரின் பாடலை ஒப்பீடாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த
குளிர்தருவே, தருநிழலே, நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீ ரிடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே, சுகத்திலுறும் பயனே,
ஆடையிலே எனைமணந்த மணவாளா, பொதுவில்
ஆடுகின்ற அரசே, என் அலங்கல் அணிந்தருளே

இவ்விரு பாடல்களிலும் குளிர்ச்சியும், தண்மையும், இனிமையும் கலந்த சுகானுபவம் வெளிப்படையாகத் தெரிகிறது. நாவரசர், வள்ளலார் இருவரும் இறைமையில் தோய்ந்த ஒப்புமையை ஆசிரியர் நமக்கும் ஊட்டுகிறார். (ப.6, தமிழ் விருந்து)

## நாவரசரும் பாரதியும்

'பண்டாரப் பாட்டு' என்ற கட்டுரையில் நாவரசரின் தாக்கம் பாரதியிடம் எப்படியுள்ளது என்பதை ஒப்பீட்டு நோக்கில் வெளிப்படுத்துகிறார் ஆசிரியர். மகேந்திர பல்லவன் மதம் மாறி, நாவரசரை அழைத்துவர வீரர்களை அனுப்பினான். அந்நிலையில் நாவரசரின் நிலையினை ஆசிரியர்,

> "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று தொடங்கும் வீரப்பாட்டிசைத்தார். இவ்வாறு மன்னனது பரந்த படையின் முன்னே தமியராய் அஞ்சா நெஞ்சினராய் நின்று அவன் மறப்படையைத் தம் ஆன்ம வலியால் வென்ற அப்பரது வீரப்பாட்டு பாரதியின் உள்ளத்தைக் கவர்ந்தது.
>
> யார்க்குங் குடியல்லேன் யான்என்ப
> தோர்ந்தனன் மாயையே–உன்தன்
> போர்க்கஞ் சுவேனோ பொடியாக்கு
> வேன் உன்னை மாயையே
>
> என்று தம்மை அச்சுறுத்திய மாயையைப் பழித்துப் பாடியுள்ளார். இப்பாட்டில் திருநாவுக்கரசரது வீரவுள்ளம் விளங்கக் காணலாம்"

என நாவரசரது பாடலோடு பாரதியின் பாடலை ஒப்பிடுகிறார் (தமிழ் இன்பம், ப.249). மேலும், சமண மன்னன் கொலைக்களிற்றை ஏவிய போது,

**அஞ்சுவ தியாதொன்று மில்லை**
**அஞ்ச வருவதும் இல்லை**

என்று நெஞ்சுருகிப் பாடினார் நாவரசர். யானை தலை வணங்கி நின்றது. சைவசமயச் சீலராகிய நாவரசரைச் சமணமன்னன் துச்சமாக எண்ணினான். இது பாரதியின் உள்ளத்தில் பதிந்திருந்தமையால்.

**துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**

என்று பாடினார் பாரதியார். (தமிழ் இன்பம், ப.251) மேலும் ஆசிரியர். ஊனம் ஒன்றில்லாத இறைவனுக்கு ஆட்பட்ட உத்தமர் வேறொன்றையும் பொருளாகக் கருதார். மண்ணும் விண்ணும் நிலைகுலைந்தாலும் ஞாயிறும் திங்களும் திசைமாறினாலும் அன்னார் மனம் துளங்குவதில்லை. இவ்வுண்மையை,

**வானந்துளங்கிலென் மண்கம்ப மாகிலென். . . .**
**ஊனமொன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே**

என்று அப்பர் தம் தேவாரத்தில் அருளிப்போந்தார். அவ்வான்மத்திறலின் அருமை அறிந்த பாரதியார்,

**உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே**

என்று கற்றாரும் கல்லாரும் அறியும் முறையில் விளக்கிப் போந்தார். என ஒப்பிடுகிறார். (தமிழ் இன்பம், ப.252).

## தமிழ் மொழியும் பிற மொழிகளும்

தமிழ் விருந்து என்ற ஆசிரியரது மற்றொரு நூலில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய மொழிகளை ஒப்பிடுகிறார் ஆசிரியர்.

## தமிழும் தெலுங்கும்

இல்-இல்லு; இல்லாள்-இல்லாலு; முகில்-மொகிலு; மஞ்சு-மஞ்சு; மேகத்தையும், காலத்தையும் குறிக்கும் கார் என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் கார் காலத்தை மட்டும் குறிக்கிறது; தமிழில் வான் என்ற சொல் விண்ணையும் மழையையும் குறிக்கும். தெலுங்கில் மழையை மட்டும் குறிக்கிறது; தமிழில்

பெருமழையைச் 'சோணை' என்பதுபோல் தெலுங்கிலும் சோணை எனப்படுகிறது; தமிழில் சிறுமழையைத் தூவனம் என்பது போல் - தெலுங்கில் துவர, தூர எனச் சிறுமழையைக் குறிக்கிறார்கள்; குளம்-கொலனு; மடு-மடுகு; அங்காடி-அங்காடி; அவனுக்கு-வானிக்கி; அதனுக்கு-தானிக்கி; அதர்-தாரி; உரல்-ரோலு; இலது-லேது; இறப்பு-ரேப்பு; பகல்-பகலு; பட்டப்பகல்-பட்டப்பகலு; நென்னல் (நேற்று) - நின்ன; நாளை - ரேப்பு (இறந்த); செப்புதல் - செப்பு; சொல்லாட - மாட்டாட; மாற்றம் (சொல்)-மாட்ட; உழுந்து - உத்தலு; அழுத்து-அத்து; பருப்பு-பப்பு; செருப்பு-செப்பு; நெருப்பு-நெப்பு; பருத்தி-பத்தி; மருந்து-மந்து; கொழுப்பு-கொவ்வு; ஏழு-ஏடு; கோழி-கோடி; மேழி-மேடி; பவழம்-பவடம்; கொற்று-கொட்டு; சுற்றம்-சுட்டமு; புற்று-புட்ட; ஊற்று-ஊட்ட; வண்டி(பண்டி)-பண்டி; பெரும்புலி (வேங்கை)-பொப்புலி; என ஒப்பிடுகிறார்.

## தமிழும் மலையாளமும்

இல்-இல்லம்; மஞ்சு-மஞ்சு; அங்காடி-அங்காடி; ஒன்னு-ஒந்நு; மூனு-மூநு; பன்னி-பன்னி; கன்னு-கன்னு; குன்று-குன்னு; ஒன்பது-ஒம்பது; ஐம்பது-அம்பது; அரிசி (அரி)-அரி; (எல்) என்பு-எல்; தகப்பன் (தமப்பன்) - தமப்பன்; வண்ணான் [(மண்ணான்)] எழில்மலை-எலிமலை; திறவுகோல் (தாழ்க்கோல்)- தாழ்க்கோல்; புடவை கொடை-புடகொட; கோ, கோன், கோமான்-கோ, கோன், கோமான்; கோயில் (அரண்மனை, கோவில்)- கோயில் (அரண்மனை, கோவில்); தம்பிரான் (இறை, குரு)- தம்பிரான் (அரசன்); க (சோலை)- காவு.

## தமிழும் கன்னடமும்

மனை-மனை; மனை-வாழ்க்கை-மனெ வார்த்தை; முகில்-முகில்; மஞ்சு-மஞ்சு; கார் (மேகம், காலம்) கார்(காலம்) அங்காடி-அங்காடி; பூ, புலி, புல், பல்லி, பத்து-தமிழில் வருவது அனைத்தும் பழங் கன்னடத்தில் அதே பொருளில் வருகின்றன. ஆனால் தற்காலக் கன்னடத்தில் முறையே ஹூவு, ஹூல்லு, ஹூலி, ஹல்லி, ஹத்து; நிலவொளி (திங்கள் விளக்கு)- திங்கள் விளக்கு; மாதம்-திங்கள்; கரை(அழைப்பு) - கரையுத்தே; ஒருவன்-ஒப்பனு (பெண்பால் ஒப்பளு); எருது (ஏர்) - ஏர்ந்து; ஈருள்ளி (வெங்காயம்)-நீருள்ளி; வண்டி- பண்டி; யான்-யான் (பழையகன்னடம்) நானு (புதுக்கன்னடம்) நீ-நீன்; உழுந்து-உத்து;

கொழுப்பு- கொப்பு; கழுத்து-கத்து; தொழு நோய் - தொன்னு; பெரும்புலி (வேங்கை) - பொப்புலி; பருப்பு-பப்பு; மருந்து-மத்து; எருமை-எம்மே; பருத்தி-பத்தி; செவி-கிவி; செவிடு-கிவிடு; செந்தளிர்-கெந்தளிர்; செம்பருத்தி-கெம்பத்தி; வடுகர்-படகர்; வீடு-பீடு; வீதி-பீதி; வில்-பில்லு; வேர்-பேரு; எனத் தமிழ்ச் சொற்களையும் கன்னடச் சொற்களையும் ஒப்பிடுகிறார். பல தமிழ்ச் சொற்கள் கன்னடத்தில் தூயதமிழில் உள்ளன என்பது மகிழ்வளிக்கிறது.

## தமிழும் துளுவும்

முகில்-முகல்; அரிசி-அரி; கொக்கு (மாமரம்)- குக்கு; துளுவும் கன்னடமும் நெருங்கிய தொடர்புடைய மொழிகளாகும். இவ்வாறு ஆசிரியர் தமிழோடு பிறமொழிகளையும் ஒப்பிட்டு வேர்ச்சொல்லாய்வு முதலியவற்றையும் நிகழ்த்தியுள்ளார். இதன் மூலம் இவரது பன்மொழிப்புலமை புலப்படுகிறது.

## முடிவுரை

சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையின் கட்டுரைகள் சொற்பொருள் விளக்கம்; பாட்டு உரைநடை; மொழிநடைப் பிரிவுகள்; சான்று காட்டி விளக்குதல்; ஒப்பீடுகள் என்ற தலைப்புகளில் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. இவ்வாய்வின் மூலம் ஆசிரியரின் இலக்கியப் புலமை, உலக வழக்கறிவு; பன்மொழிப்புலமை, கட்டுரைத் திறன், வாதிடும் தர்க்க அறிவு ஆகியவை புலப்படுகின்றன.

# தமிழ்த்தொண்டு

*கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்*
*உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்*
*ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையாஉன்*
*சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே*

என்று அழகிய பாட்டில் தமிழின் தனிச்சிறப்பினை நன்றாக உணர்த்தினார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. உலக உயர் செம்மொழிகளில் ஒன்றானதும், உலகில் உயர்ந்ததும், இலக்கிய இலக்கணக் கலை நுட்பங்களை உடையதுமான மொழி தமிழ்மொழி. மனித இனத்திற்கு உயர்ந்த வாழ்வியல் நெறிகளைக் காட்டக்கூடிய நீதி நெறிகளைத் தன்னகத்தே கொண்டு, "பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்" என்றும் மாறாத சீர் இளமையுடன் திகழும் இத்தமிழ்மொழிக்குத் தளராமல் தொண்டாற்றிய தமிழ்ச் சான்றோர்கள் பலராவர். செந்தமிழ் நாடு சிறப்புற்று விளங்குதற்குரிய பல காரணங்களுள் அறப்பண்பாளர்களும், அறிஞர்களும் எக்காலத்தும் நிலைத்திருந்து தொண்டாற்றியதே தலைசிறந்த காரணமாகும். நம் நாடு வரலாற்றுக்கு அப்பாற்பட்ட காலத்திருந்தே தகைசால் சன்றோரையும், தமிழ் அறிஞரையும் பெற்று வளம் நிறைந்த மொழியையும், மனம் நிறைந்த பண்பையும் உடையதாய் வளர்ந்து வருகிறது. அத்தகைய சான்றோருள் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையும் ஒருவராவார்.

பேச்சால் தமிழ்த்தொண்டு செய்து உயர்ந்த பெரியார் பலர்; எழுத்தால் தமிழ்த் தொண்டு செய்து உயர்ந்த பெரியார் மேலும் பலர்; ஆனால் பேச்சாலும் எழுத்தாலும் ஒருங்கே தமிழுலகுக்குத் தொண்டாற்றித் தமிழ் நடையிலும், தமிழ் உணர்ச்சியிலும் ஒரு புது வேகத்தைப் புகுத்தியவர் ஒரு சிலரே. அங்ஙனம் உயர்ந்தோருள் திரு.வி.க.வுக்கு அடுத்துச் சேதுப்பிள்ளை அவர்களையே கூறவேண்டும் என்று டாக்டர் பா. நடராசன் அவர்கள் கூறுகிறார் (ப.15, 1961).

## சொல்லின் செல்வர்

தமிழ் மொழிக்குத் தலைசிறந்த பரிசுகளையும் பாராட்டுகளையும் பலவாக நல்கிய பேராசிரியர் அவர்கள் பெற்ற பரிசுகளும் பாராட்டுகளும் பலவாகும். தமிழ் வளர்க்கும் தலைசிறந்த நிலையங்களாய் விளங்கிய பெருமை தமிழ்நாட்டு மடங்களுக்கு உண்டு. அந்த மரபில் வந்த தருமை ஆதீனம், எத்தனையோ ஆண்டுகளாய்ப் பேராசிரியர் அவர்கள் வழங்கிய சொல்லமுதைப் பருகித் திளைத்த மக்கள் தங்கள் நாவார, மனமாரச் சொல்லி வந்த பட்டத்தையே அதாவது 'சொல்லின் செல்வர்' என்ற பட்டத்தை 1950ஆம் ஆண்டில் வழங்கிச் சிறப்பித்தது. (ப.66, 1961)

1948ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் தமிழ்ப் பெரியார் சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் மாநாட்டில் பேராசிரியர் அவர்கள் எழுதிப் புகழ்பெற்ற ஆராய்ச்சி நூலாகிய "ஊரும் பேரும்" என்பது "தலைசிறந்த ஆராய்ச்சிநூல்" என்பதற்காக ரூ.500 பரிசு பெற்றார். 1955ஆம் ஆண்டில் அவரின் புகழ்பெற்ற கட்டுரைத் தொகுதியாகிய "தமிழின்பம்" என்பது 'விடுதலைக்குப்பின் வெளி வந்த சிறந்த தமிழ் நூல்' என்பதற்காக மத்திய அரசிடம் ரூ.5000 பரிசு பெற்றார்.

பேராசிரியர் ஆற்றிய ஆசிரியப் பணியைப் பாராட்டிச் சென்னைப் பல்கலைக்கழகத்தார் 'டாக்டர்' பட்டம் வழங்கிப் பெருமைப் படுத்தினர். மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையருக்குப் பிறகு, சென்னைப் பல்கலைக்கழகத்தாரால் சிறப்புச் செய்யப் பெற்றவர் பிள்ளை அவர்களே என்பதை நினைவு கொள்ளும்போது, தமிழ் இலக்கியத் துறையில் எவ்வளவு உயர்ந்த ஓரிடத்தைப் பெற்றுள்ளார் என்பது தெளிவாகும்.

1961ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் கால் நூற்றாண்டுக் காலம் ஆற்றிய அருந்தமிழ்ப் பணியினைப் போற்றித் தமிழறிஞர்கள் சேர்ந்து இவருக்கு வெள்ளிவிழா கொண்டாடிப் புகழ் சூட்டினார்கள்.

## ஆராய்ச்சிப்பணி

பேராசிரியர் அவர்களின் பேச்சுப் பணியோடு எழுத்துப் பணியும் தலை எடுக்கலாயிற்று. முதன் முதலில் எழுதிய ஆய்வு நூல் திருவள்ளுவர் **நூல்நயம்** ஆகும். இன்று வள்ளுவர் பற்றிய

ஆராய்ச்சிக்குப் பிள்ளை அவர்களின் நூல் ஒப்புமிக்கில்லாத அடிப்படை நூலாக அமைந்துள்ளது என்பதை இலக்கியத்துறை அறிஞர் அனைவரும் ஒப்புக் கொள்வர். தமிழ் இலக்கிய ஆராய்ச்சி எவ்வாறு செய்வது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு நூலாகவும் அது அமைந்தது. 'திருவள்ளுவர்' பற்றிய ஆராய்ச்சிக்கே ஒரு புதுத்திருப்பத்தை அமைத்த திறத்தைப் பேராசிரியர் கா.சு. பிள்ளை அவர்களே தமது முன்னுரையின் தொடக்கத்தில், "உலகமெலாம் உய்வான் பொதுமறை வகுத்த ஆசிரியர் திருவள்ளுவரது அளப்பரிய மாண்பினைப் பாவலரும் நாவலரும் கற்றோரும் மற்றோரும் இந்நாள் வரை பொதுவகையாற் பலபடச் சீராட்டிப் பாராட்டிப் போந்தனர். ஆசிரியரது நூலின் பிண்டப் பொருளை நுணுகி ஆய்ந்து அதன் சொற்பொருள் நயங்களை யாவருக்கும் எளிதில் விளங்கும் வண்ணம் தெள்ளென வகுத்தோதி ஊக்கமூட்டும் செவ்விய உரைநடை நூல் ஒன்று இல்லாத குறையை நிறைவு செய்த பெரும்புலவர் இத் "திருவள்ளுவர் நூல் நயம்" எழுதிய திருவாளர் சேதுப்பிள்ளையே யாவர்" என்று சுட்டியுள்ளார் (ப.48, 1961).

அதைத் தொடர்ந்து சிலப்பதிகார ஆராய்ச்சி கொண்ட **சிலப்பதிகார விளக்கம்** என்பதும், கம்பராமாயண ஆராய்ச்சி கொண்ட **வீரமாநகர்** என்பதும் பிறந்தன. இந்த முறைவைப்பை எண்ணும் போது இலக்கிய வரலாற்றின் முறையிலேயே அமைந்த பேராசிரியர் அவர்கள் நூல்களின் போக்கு இனிது புலனாகும்.

### ஊர்ப்பெயர் ஆராய்ச்சி

பிள்ளை அவர்களின் வாழ்க்கை நூல் (Life Work) என்று போற்றத்தக்கதாய் உள்ள பெரும் புகழ் சான்ற நூல் **ஊரும் பேரும்** என்னும் ஒப்பற்ற ஆராய்ச்சிக் கருவூலமே ஆகும். இந்நூல் ஆயிரத்து முந்நூற்றுக்கு மேற்பட்ட ஊர்களின் பெயர்களை ஆராய்ந்து விளக்குகிறது. இந்நூலின் தனிப் பெரும் சிறப்புக் குறித்துத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களின் மதிப்பீட்டு மொழிகள் வருமாறு:

> "சில நாடுகளின் ஊரும் பேரும் அடங்கிய ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்து உலவுகின்றன. அத்தகைய உலாவைத் தமிழ் நாட்டிற் காண்டல் அருமையாயிருந்தது. அவ்வருமையைப் போக்கும் வாய்ப்பு அறிஞர் சேதுப்பிள்ளை அவர்கட்குக் கிடைத்தது. தமிழ்நாட்டின் தவப்பயனாகும். தமிழ்

கொழிக்கும் பொருநைக் கரையில் பிறந்து, தமிழ் பொங்கும் பொதிகைத் தென்றலில் வளர்ந்து, தமிழார்ந்த மனமொழி மெய்களைப் பெற்றுத் தமிழ் வண்ணமாய்த் தமிழ் பொழியும் ஒரு பெருங்கொண்டலிடை உதித்த மின்னொளி இந்நூல். இதைத் தமிழ் நாட்டின் தவப்பயன் என்று சாற்றலாமன்றோ?"

"ஆசிரியர், நிலம்-மலை-காடு-வயல்-ஆறு-கடல்-நாடு-நகரம்-குடி-படை-குலம்-கோ-தேவு-தலம் முதலியவற்றை அடியாகக் கொண்டு, இந்நூற்கண் நிகழ்த்தியுள்ள ஊர் பேர் ஆராய்ச்சியும், ஆங்காங்கே பொதிந்துள்ள குறிப்புக்களும், பிறவும் தமிழ்ச் சரித்திர உலகுக்குப் பெரு விருந்தாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ் நாட்டில் சில ஊர்ப்பேர்கள் சிதைந்தும் திரிந்தும் மருவியும் மாறியும் தத்தம் முதனிலையை இழந்துள்ளன. அவை மீண்டும் பழைய நிலை எய்திப் பண்புறுதற்கு இந்நூல் பெருந்துணை செய்தல் ஒருதலை. இந்நூலுள் பொலிதரும் சில ஊர்ப்பேர்களின் வரலாறு சாம்பியும் சோம்பியும் நலிந்தும் மெலிந்துங் கிடக்கும் நம் மக்கட்கு அமிழ்தாகிப் புத்துயிர் வழங்கல் உறுதி. நூலின் நடைக்கண் நடம் புரியும் பீடும் மிடுக்கும் வீறும் நாட்டின் சவலையை நீக்கி, அதன்மாட்டு வேட்கையை எழுப்பி அதை ஊக்குவனவாம்." (ப.57, 1961)

பேராசிரியர் இந்நூல் மட்டுமல்லாது வேறு சில நூல்களிலும் ஊர்ப்பெயர்களை ஆராய்ச்சி செய்துள்ளார். சான்றாக **அலையும் கலையும்** என்னும் நூலில் சிலவற்றைக் காண்போம். மல்லைத் துறைமுகத்தைத் திருத்தினான் பல்லவ மன்னனாகிய நரசிம்மவர்மன். அவனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று மாமல்லன் என்பது. அவன் ஆட்சி புரிந்த காலம் சற்றேறக்குறைய ஆயிரத்து இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லலாம். சிற்பக் கலையில் சிறந்த ஆர்வமுடையவனாகிய மாமல்லன், கடற்கரையில் அமைந்த குன்றுகளை அழகிய கற்கோயில் ஆக்கினான், அம்மன்னன் ஆற்றிய திருப்பணியின் செம்மையால் கடல் மல்லை, 'க்வின் மல்லை' ஆயிற்று; மாமல்லபுரம் என்ற பெயரும் பெற்றது.

*நாளடைவில் அப்பெயர் மகாபலிபுரம் என மருவியது. திருமாலின் சேவடியால் அழிவுற்ற மகாபலி மன்னனை அந்நகரத்தோடு இணைத்துப் புராணக் கதை பிறந்தது. இன்று மகாபலிபுரம் என்றே அவ்வூர் வழங்குகின்றது. (ப.13, 1972)*

*'ஊட்டி' என்றும் 'ஒட்டகமண்டு' என்றும் இக்காலத்தில் புகழ்ந்து பேசப்படுகின்ற ஊரை உண்டாக்கியவர்கள் தோடர்களே. தமிழர் குடியிருக்கும் ஊர்களுக்குப் பட்டி, பாக்கம், நகரம், புரம் என்று பெயரிட்டிருத்தல் போல, தோடர்கள் குடியிருக்கும் இடத்திற்கு 'மந்து' என்பது பெயர். மந்தை என்ற தமிழ்ச் சொல்லே தொடர் மொழியில் மந்து என மருவி வழங்குகின்றது. மாடுகளைச் செல்வமாக மதிக்கும் தோடர்கள் தங்கள் ஊருக்கு மந்து என்று பெயரிட்டது பொருத்த முடையதன்றோ? நீலகிரியிலுள்ள மந்துகளில் மிகச் சிறந்தது 'ஒத்தைக்கல் மந்து' என்பது. ஒரு குத்துக்கல்லைச் சுற்றி எழுந்த குடியிருப்புக்கு அப்பெயர் அமைந்தது போலும்! ஒத்தைக்கல் மந்து என்பதுதான் ஆங்கிலத்தில் 'ஒட்டக மண்டு' ஆயிற்று! ஊட்டி என்பது அதன் குறுக்கம். இது போன்றே பல்வேறு ஊர்ப்பெயர்களை ஆராய்ந்திருப்பதை இந்நூலில் காணமுடிகிறது. (ப.95, 1972)*

### சொல்லாராய்ச்சி

பேராசிரியர் அவர்களுடைய சொல்லாராய்ச்சி பற்றிய கட்டுரைகள் தமிழ் மொழியில் ஆராய்ச்சித்துறையில் ஒரு புதுத் திருப்பத்தையும் மேம்பாட்டையும் அளித்தன என்பது உறுதி. **சொற்களும் அவற்றின் பொருட்சிறப்பும்** என்னும் நூலில் மட்டும் ஏறத்தாழ ஐந்நூறு சொற்கள் ஆராய்ச்சிக்கு இலக்காகியுள்ளன. செந்தமிழும் கொச்சைத்தமிழும் பற்றிய கட்டுரைகளில் ஏறத்தாழ ஆயிரம் சொற்களுக்கு மேல் இடம் பெற்றுள்ளன. சான்றாகச் சிலவற்றைக் காண்போம்.

அங்காடி என்பது முன்னொரு காலத்தில் தமிழ் நாடெங்கும் வழங்கிய சொல். இக்காலத்தில் 'பசார்' என்று சொல்லப்படும் இடமே முற்காலத்தில் அங்காடி எனப்பட்டது. பெரிய நகரங்களில் அந்தியும் பகலும் அங்காடி நடைபெற்றது. அந்தியில் நடைபெற்ற அங்காடியை அல்லங்காடி என்றும், பகலில் நடைபெற்ற அங்காடியை நாளங்காடி என்றும் அழைத்தனர். பட்டினத்தடிகள் அங்காடி என்ற சொல்லை எடுத்தாள்கின்றார்.

அங்காடி நாய்போல் அலைந்து திரிந்தேனே

என்பது அவர் பாட்டு. கன்னடத்திலும் தெலுங்கிலும் இன்றும் அங்காடி என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்திலும் அங்காடி உண்டு. தமிழ் மொழியில் அங்காடியை மீண்டும் ஆட்சியில் அமைத்தால் எத்துணை அழகாக இருக்கும்; என்று ஏக்கமுறுகிறார் பேராசிரியர். (பக். 73-74, 1955)

'எலும்பு' என்ற சொல்லை எடுத்துக்கொள்வோம். இச்சொல் தமிழ் நாடெங்கும் வழங்குகின்றது. ஆயினும், இச்சொல்லின் வேரும் பொருளும் விளக்கமாகத் தெரியவில்லை. மலையாள நாட்டில் 'எல்' என்னும் சொல் எலும்பைக் குறிக்கின்றது. 'எல்லு ஒடிச்சுவிடும்' என்பது மலையாளத்தில் ஒரு வஞ்சின மொழி. திருக்குறளில் 'என்பு' என்ற சொல் வழங்குதலைத் தமிழறிஞர்கள் அறிவார்கள், 'நோல்' என்ற வேர்ச் சொல்லடியாக 'நோன்பு' பிறந்தாற்போன்று, 'எல்' என்ற வேர் அடியாக 'என்பு' பிறந்ததென்று கருதுதல் தவறாகாது. இலக்கிய வழக்கில் 'என்பு' என்று எடுத்தாளப்பட்ட சொல்லே உலக வழக்கில் 'எலும்பு' என்றாயிற்று. ஆயினும், இச்சொற்களின் வேர் இன்று தமிழ்நாட்டில் காணப்படுவதில்லை. மலையாள நாட்டிலே காணப்படுகின்றது.

'நாற்றம்' என்பது மணத்தைக் குறித்தமையாலேயே நறுமலர், நறுநெய், நறும்புகை, நறும்புனல் முதலிய சொற்றொடர்கள் எழுந்தன. வாசமுள்ள பூவே நறுமலர் ஆகும். வாசனையுள்ள நெய்யே நறுநெய் எனப்படும். வாசனைப் புகையே நறும்புகை. வாசமுள்ள நீரே நறும்புனல். நாறங்காய் என்பது வாசமுள்ள ஒரு காயின் பெயராகத் தென்னாட்டு மொழிகளில் வழங்குகின்றது. மலையாளத்திலும் துளுவ மொழியிலும் நாறங்காய் என்று வழங்கும் சொல்லே, தமிழில் நார்த்தங்காய் என்றாயிற்று. நம் நாட்டு நாறங்காய் கப்பலேறி, மேல் நாடுகளுக்குச் சென்றபோது நாரஞ்சு எனச் சிதைந்து, ஆங்கிலத்தில் ஆரஞ்சு ஆயிற்று என்பர் ஆராய்ச்சியாளர் (ப.177, 1972). இவ்வாறு சொல்லோடு சொல்லையும், கருத்தோடு கருத்தையும் ஒப்பு நோக்கிச் சுவையும் பயனும் காணும் திறன் பேராசிரியர் அவர்களிடம் உண்டு.

## அகராதிப் பணி

தைரியநாதர் என்றும் வீரமாமுனிவர் என்றும் தமிழகத்திற் புகழ் பெற்ற இவ்வறிஞரே, தமிழ் அகராதியின்

தந்தையாவார். தமிழ் மொழியில் அமைந்த சொல்லின் பொருளை அறிந்து கொள்வதற்கு முற்காலத்தில் நிகண்டுகளே சிறந்த சாதனமாயமைந்தன. திவாகரம், பிங்கலம், சூடாமணி முதலிய பல நிகண்டுகள் தமிழ் மொழியில் விளங்கக் காணலாம். பாக்களால் அமைந்த இந்நிகண்டுகள் யாவும் கற்றோர்க்கேயன்றி மற்றோர்க்குப் பயன்படாதனவாயின என்பது சொல்லாமலே விளங்கும். கவிபாடும் புலவர்க்கும், பொருள் தேடும் அறிஞர்க்குமே இவை பெருந்துணையாயிருந்தன. கற்றோரேயன்றி மற்றோரும் தமிழின் நீர்மையறிந்து இன்பமும் பயனும் எய்த வேண்டுமென்று கருதியே வீரமாமுனிவர், "சதுர் அகராதி" என்னும் பெயரால் ஒரு சிறந்த அகராதி செய்து உதவினார். அவ்வகராதி பாக்களால் அமைந்த நிகண்டுகள் போலல்லாது, தமிழ்ச் சொற்களை அகரமுதலாக எடுத்தடுக்கிப் பொருள் விளக்கிய பான்மையால் தமிழ்ப் பெருங்கடற்கு அஃது ஓர் மரக்கலமாய்த் திகழ்ந்ததென்று அந்நூற்பாயிரம் எடுத்துரைக்கின்றது. பிற்காலத்தில் தமிழில் எழுந்த பேரகராதிகளுக்கெல்லாம், பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த பெயர், பொருள், தொகை, தொடை என்னும் நான்கு பகுப்புடையதாய் நலமுறத் திகழும் 'சதுரகராதி' கலங்கரை விளக்கம் போல நின்று நெறி காட்டும் தகைமையொன்றே அதன் பெருமைக்குப் போதிய சான்றாகும் என்று ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களே ஒரு கட்டுரையில் அகராதியின் தொடக்கம் பற்றி விளக்குகிறார். மேலும், சதுர் அகராதியை அடிப்படையாகக் கொண்டு தனித்தமிழ் அகராதிகளும், தமிழ்-ஆங்கில அகராதிகளும் எழுந்தன என்று குறிப்பிடும் பிள்ளை அவர்கள் பல்கலைக்கழக வாழ்க்கையில் 1954ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்ற "தமிழ் சுருக்க அகராதி"க்குத் துணைபுரிந்தமை இங்குக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### பதிப்புப் பணி

பேராசிரியருடைய பதிப்புகளாக நான்கு நூல்களைக் குறிப்பிடலாம். அவை, 1. கந்தபுராணத் திரட்டு, 2. பாரதியார் இன்கவித் திரட்டு 3. செஞ்சொற்கவிக்கோவை 4. தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்பனவாகும்.

முதலாவதாகிய கந்தபுராணத் திரட்டு 1934ஆம் ஆண்டில் சென்னைக் கந்த கோட்டத்தில் பிள்ளை அவர்கள் கந்தபுராண வகுப்பு நடத்திய போது அவ்வகுப்பிற்காகக் கந்த

புராணத்தில் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு பாடல்களைத் திரட்டிப் பொழிப்புரையுடன் மூன்று பகுதிகளாக வெளியிட்டார்.

இரண்டாவதாகிய **பாரதியார் இன்கவித் திரட்டு** சாகித்திய அக்காடெமி வெளியீடு; பாரதியார் பாடல்களுள் சிறந்தன பலவற்றின் தொகுப்பாய் இந்நூல் இருநூற்றுப் பதினொரு பக்கங்களில் 1957ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. மூன்றாவதாகிய **செஞ்சொற்கவிக்கோவை** தென்மொழிகள் புத்தக டிரஸ்டின் வெளியீடு; சங்கப் பாடல் தொட்டுப் பாரதியார் பாடல் ஈறாகப் பல இனிய தமிழ்ப் பாடல்களின் தொகுப்பாக நூற்று நான்கு பக்கங்களைக் கொண்ட இந்நூலும் அதே 1957ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றது.

நான்காவதாகிய **தமிழ்க் கவிதைக் களஞ்சியம்** சாகித்திய அக்காடெமி வெளியீடு. பழந்தமிழ்ப் பாட்டு முதல் மறுமலர்ச்சிக் கவிதை ஈறாக வளர்ந்து வந்துள்ள தமிழ்க் கவிதைகள் பலவற்றின் தொகுப்பாக முந்நூறு பக்கங்களைக் கொண்ட இந்நூல் 1960ஆம் ஆண்டில் வெளிவந்தது. பேராசிரியர் தொகுத்துப் பதிப்பித்துள்ள இத்தொகை நூல்களுக்கு அளித்துள்ள நீண்ட ஆராய்ச்சிகளும், விரிவான விளக்கக் குறிப்புகளும் 'செவிநுகர் கனிகளின் 'செஞ்சொற்கவியின்பம்' தேர்வார் சிந்தைக்குப் பெருவிருந்தாகும் என்கிறார் டாக்டர் ந.சஞ்சீவி (ப. 59-60, 1961).

### தனித் தமிழ் நடை

பேராசிரியரின் செந்தமிழ் நடையில் வடமொழிச் சொற்கள் நூற்றுக்கு ஒரு விழுக்காடாகக் கூட நுழைவதில்லை. இவரின் தனித்தமிழ் ஆர்வம் ஆரவாரமற்றது; திட்ப நுட்பஞ் சான்றது. "இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மக்கள் வழங்கி வருகின்ற அருமையான சொற்களில் 'வானொலி' என்பதும் ஒன்று. அச்சொல் பல ஆண்டுகளாக நம் செவியிலே விழுந்து பழைய ஓசையாய் விட்டது. இந்த நிலையில், தமிழ்நாட்டு வானொலி நிலையங்கள் சில காலமாக 'ஆகாஷ்வாணி' என்று சொல்வதைக் கேட்கின்றோம். 'வானொலி' என்ற இனிய எளிய தமிழ்ச் சொல் இருக்க, வேண்டாத வடசொல்லை வழங்குதல் முறையற்றது என்பது என் கருத்து" என்று ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார். வெள்ளையர்களைப் பற்றி, "காற்சட்டையும், மேற்சட்டையும் போட்டுக்கொண்டு, வாயிலே சுருட்டுக் கட்டையை மாட்டிக் கொண்டு, உடம்பை இங்கும் அங்கும்

ஆட்டிக் கொண்டு வந்தனர்'' என்று குறிப்பிடும் போது 'காற்சட்டை', 'மேற்சட்டை போன்ற சொற்களைப் பயன்படுத்துகின்றார். இதன் மூலம் அவரின் தனித் தமிழ் ஆர்வத்தை அறியலாம். (ப.28, 1972)

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. கால்டுவெல் ஐயர் சரித்திரத்தில் இப்பழமொழியின் கருத்தைப் பேராசிரியர் அவர்கள் 'திரைகடலோடியும் திருவினைத் தேடிய யவனரும்' என்னும் சொற்களால் குறிப்பிடக் காணலாம். நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்கும் போது வேற்றுமொழிச் சொற்களை அறியாமையாலோ ஆணவத்தாலோ பயன்படுத்தலை அறவே வெறுப்பவர் பேராசிரியர். இதற்கு அவருடைய கட்டுரைகளே தக்க சான்றாக விளங்குகின்றன.

## எதுகை மோனை நயம்

செய்யுள் நலஞ்சான்ற பேராசிரியர் அவர்கள் செந்தமிழ் உரைநடையில் கற்றார்க்கும், மற்றார்க்கும் களிப்பருளும் களிப்பாக இருப்பது, எதுகை மோனை நயமே. சான்றாக, அவருடைய நூல்களின் தலைப்புகளையும் கட்டுரைகளின் தலைப்புகளையுமே குறிக்கலாம்.

> தமிழ் இன்பம்-காதலும் கற்பும், மாதரும் மலர்ப்பொய்கையும், முருகனும் முழுமதியும், பயிர்வண்டும் படர் கொடியும், நல்லமரமும் நச்சு மரமும், காயும் கனியும், சேரனும் கீரனும், பாரியும் மாரியும், வண்மையும் வறுமையும், இறையவரும் இன்னுயிரும், ஆண்மையும் அருளும், கர்ணனும் கும்பகர்ணனும், காளத்திவேடனும் கங்கைவேடனும்.

எதுகை மோனை நயத்தோடு ஒலிநயத்தையும் எடுத்துக்காட்ட வல்லவர் பேராசிரியர் என்பதைக் கீழ்வரும் சான்றுகள் மூலம் அறியலாம்.

## வல்லின ஒலிநயம்

தமிழ் எழுத்துக்களில் வல்லினம் என்றோர் இனம் உண்டு. வீரம், கோபம் முதலிய வன்மையான உணர்ச்சிகள் உள்ளத்திலே பொங்கி எழும்பொழுது வல்லோசையுடைய சொற்கள் இயற்கையாகவே வாயிற் பிறக்கும். 'அறநெறிக்கு மாறாய் நடந்த அரசன் அழிந்தான். அதுமட்டும் போதாது. மன்னனைத் தீயநெறியிற் செலுத்திய தீயவரும் மதுரை மாநகரில் உள்ளனர்.

அவரும் ஒழிய வேண்டும்' என்று எண்ணினாள் கண்ணகி. வெடித்த சொற்களால் தன் உள்ளத் தீயை அள்ளி வீசினாள்.

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானும்ஓர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்!

என்ற வீரப் பேச்சில் டகரமும், றகரமும், தகரமும் செறிந்து வல்லோசையின் ஆற்றலைக் காட்டுகின்றன. (ப.162, 1972)

## மெல்லின ஒலிநயம்

கம்பர் கவிதையில் ஒலியோவியங்கள் நூற்றுக்கணக்காக உண்டு. பஞ்சவடிச் சாலையை நோக்கி வருகின்றாள் சூர்ப்பணகை; தன் இயற்கை உருவத்தை மறைத்து, இனிய வடிவம் புனைந்து கொண்டு, மினுக்கும் தளுக்குமாகப் பர்ணசாலையின் அருகே வருகின்றாள். அவள் நடந்து வரும் கோலத்தை ஓர் ஒலிச்சித்திரமாக எழுதிக் காட்டுகின்றார் கம்பர்.

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம்அ னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொல் இளமஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்

மெல்லோசை உடைய சொற்கள் நிறைந்து இருத்தலால் சிறந்த இன்பம் தருகின்றது இப்பாட்டு; இதனை 'மெல்லிசை வண்ணம்' என்பர் தொல்காப்பியர். (ப. 161, 1972)

## இடையின ஒலிநயம்

சிலப்பதிகாரக் கதாநாயகியாகிய கண்ணகியின் மதுரமான மழலைச் சொல்லை அவள் காதலன் வாயிலாக வியந்து புகழ்கின்றார் இளங்கோவடிகள்.

அளிய தாமே சிறுபசுங் கிளியே
குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின

'கண்ணகி! குழலின் ஒலியையும், யாழின் இசையையும், அமிழ்தின் சுவையையும் வெல்லும் இனிமை வாய்ந்தது உன் தமிழ்ச் சொல். எத்தனை நாள் முயன்றாலும் உன்னைப் போல அழகாகப் பேச இயலாதே என்ற ஏக்கத்தால் உன் கையில் உள்ள கிளிகள் வாடி

வருந்தின' என்று புகழ்கின்றான் கோவலன். தமிழ் இலக்கணத்தில் சிறப்பு ழகரம் என்று குறிக்கப்படும் இவ்விடையின ஒலியின் ஆற்றலை இப்பாடலில் காணமுடிகிறது. (ப.160, 1972)

## பழமொழி ஆளுமை

பழமொழிகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் அறியலாம். தமிழ் மக்களின் எண்ணம், உணர்ச்சி, வாழ்க்கை நெறிமுறை முதலிய அனைத்துக் கூறுகளையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பழமொழி மிகத் தெளிவாகக் காட்டிய வண்ணம் இருக்கின்றது. இப்படிப்பட்ட பழமொழியைப் பேராசிரியர் அவர்கள் தம் கட்டுரைகளில் ஆளும் தன்மையைக் காண்போம்.

உயர்ந்தது தாழும், தாழ்ந்தது உயரும். இஃது உலகத்து இயற்கை. இவ்வுண்மைக்குச் சான்றாக நிற்பன முசிறியும் கொச்சியும். ஒரு காலத்தில் உயர்ந்திருந்த முசிறி இன்று தாழ்ந்தது; தாழ்ந்திருந்த கொச்சி இன்று உயர்ந்துவிட்டது. இதை விளக்க 'உயர்வும் தாழ்வும் ஒருவழி நில்லா' என்னும் பழமொழியை எடுத்துக் காட்டுகிறார்.

அருமையான தமிழ்ச் சொற்கள் பல இருக்க, ஆங்கிலத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? இதனைப் பிறருக்கு விளக்கும் பொருட்டு, 'கரும்பிருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?' என்ற பழமொழியினைப் பயன்படுத்துகிறார்.

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பது பழமொழி. இப்பழமொழியின் கருத்தைத் 'திரை கடலோடியும் திருவினைத் தேடிய யவனரும்' என்னும் சொற்களால் குறிப்பிடுகின்றார்.

புலியின் வீரத்தை எடுத்துக்காட்ட 'புலி அடிக்கும் முன்னே கிலி அடிக்கும்' என்ற பழமொழியையும், யானையின் பெருமையை விளக்க, 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்ற பழமொழியையும், மக்கள் பாம்பைக் கண்டால் அஞ்சி நடுங்குவர் என்பதைக் குறிக்க, 'பாம்பென்றால் படையும் நடுங்கும்' என்ற பழமொழியையும் தம் கட்டுரைகளில் பயன்படுத்துகின்றார்.

இரண்டடிகளையுடைய திருக்குறளும், நான்கடிகளை உடைய நாலடியாரும் நீதி நூல்களுள் தலைசிறந்தனவென்பது தமிழ் நாட்டுக் கொள்கை. இதற்கு "ஆலும் வேலும் பல்லுக்குறுதி;

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழியே சான்றாகும் என்கிறார்.

'பைய' என்றால் 'மெல்ல' என்பது பொருள், 'பையவே சென்று பாண்டியற்கு ஆகவே' என்று தேவாரத்தில் இச்சொல் ஆளப்பட்டுள்ளது. இதனைப் 'பையச்சென்றால் வையந் தாங்கும்' என்னும் பழமொழி மூலம் எடுத்துக் காட்டுகிறார்.

உழவர் பணியைப் பற்றிய பழமொழிகள் தமிழ் நாட்டிலே பல உண்டு. 'உழுகின்ற காலத்தில் ஊர்வழி போனால் அறுவடைக் காலத்தில் ஆள்தேட வேண்டாம்' என்பது ஒரு பழமொழி, 'வயலில் மோட்டை போனால் கோட்டை போச்சு' என்பது மற்றொரு பழமொழி. கண்ணினைக் காக்கும் இமைபோல் பயிரினைக் காத்துப் பயன் விளைவிப்பவன் உழவன் என்பதை இப்பழமொழிகள் மூலம் பறை சாற்றுகிறார். மேலும் 'ஆள்பாதி ஆடைபாதி', 'ஆடையில்லாதவன் அரை மனிதன்' போன்ற ஆடைபற்றிய பழமொழிகளும், பிற பழமொழிகளும் இவரின் கட்டுரைகளில் இயல்பாகப் பயின்று வருவதை அறியலாம்.

இவ்வாறு அவருடைய இலக்கியம், மொழி ஆகிய இரண்டையுமே பயிலும் போது, இவ்விரண்டனும் தொடர்புடைய எல்லாத் துறைகளிலும் அவருக்கு ஆர்வம் உண்டு என்பதை உணர முடியும். அவருக்கு இலக்கிய ஆராய்ச்சியில் உள்ள ஆர்வம் மொழி ஆராய்ச்சியில் உண்டு; மொழி ஆராய்ச்சியில் உள்ள பற்று வரலாற்றில் உண்டு; வரலாற்றுச் செய்திகளை அறிவதில் உள்ள ஊக்கம் சமுதாய மரபுகளை உணர்வதில் உண்டு; சமுதாய மரபுகளைத் தெளிவாக உணரும் சிறப்பு காலம் கடந்து நிற்கும் இலக்கியத்தைத் துய்த்துப் பயிலும் பான்மையில் உண்டு. அறிவுத் திறனின் அடையாளமாக அவர் பெற்றுள்ள இப்பண்புகள் அனைத்தையும் அருடைய பலவகை நூல்கள் இத்தமிழகத்தில் என்றும் நிலைநாட்டும்.

இவ்வாறு தம்முடைய இலக்கியப்பணி என்றென்றும் தொடர்ந்த வண்ணம் இருக்கக் கருதியோ என்னவோ தம் நற்றாயார் பெயரால் இருபத்தையாயிரம் ரூபாய் அளித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அதே அளவு தொகை ஈந்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் தமிழாராய்ச்சிச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார். இவ்வாறு செய்துள்ளமைக்குத் தமிழுலகு என்றென்றும் மாறா நன்றி பாராட்டுங் கடப்பாடுடைது.

பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் கட்டுரைகள் நாட்டு மக்கள் நெஞ்சில் தமிழார்வத்தைப் பெருக்கியதோடு தமிழாராய்ச்சி ஆர்வத்தையும் பேரளவிற்குத் தூண்டின. எவ்வாறு ஆங்கில மோகம் கொண்ட தமிழர்களின் செவிகளையும் சிந்தையும் பேராசிரியரின் பேச்சுகள் தமிழ் மயமாக்கினவோ, அது போலவே அவர்தம் கட்டுரைகளும் தமிழ் மக்களின் கண்களையும் கருத்தையும் தமிழ் மயமாக்கின. அதன் விளைவாகத் தமிழகத்தில் புது யுகம் பூத்தது. தமிழ் மக்கள் அனைவரும் பேராசிரியரின் பைந்தமிழ்க் கட்டுரைகளைப் படித்துப் படித்துத் தமிழின்பம் கண்டனர்; தமிழ் விருந்து உண்டனர்; தமிழ் வீரம் கொண்டனர்.

## துணை நூல்கள்


1. **தமிழ் இன்பம்**, ரா.பி. சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ம.ப. 1955.
2. **பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர்**, 1961.
3. **அலையும் கலையும்**, ரா.பி. சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1972.
4. **தமிழ் வளர்த்த தமிழ்த் தொண்டர்கள்**, அறிவுச்சுடர், புவியரசி பதிப்பகம், காட்பாடி, 2002.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113

# அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீயும் மேலை அறிஞரும் | 60.00 |
| அறந்தாங்கித் தொண்டைமான்கள் | 45.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| பெரியபுராணம்-திருமுறைகளின் கவசம் | 60.00 |

---

**593 ரா.பி. சேதுப்பிள்ளை** **70.00**